.. C. R. Murugesa M... ERODE.

கொங்கேழ் சிவத்தல வரலாறு ... (4)

# திருச்செங்கோடு.

(பதினெட்டு ஆப்டோன் படங்களுடன்)



கோவை, சி. கு. நாராயணசாமி முதலியார்

தொகுத்தெழுதியது.

19...

1942



திருச்செங்கோடு புள்ளிக்காரரும், பிரபல நூல் வியாபாரியும்,
அநேக தர்மங்கள் செய்தவருமாகிய காலஞ்சென்ற
உயர்திரு. வ. வெ. கா. இராமலிங்க முதலியார் அவர்கள்.

இந்நூலை

அன்புடன் என்னைப்பெற்று அருமையாக வளர்த்து, உரிய

காலத்தில் அருந்தமிழும் ஆங்கிலமும் கற்பித்து

என்னை இந்நிலையில் இருத்திய எனது

அருமைத் தந்தையார்

உயர்திருவாளர்

**வ. வெ. கா. இராமலிங்கப் பெருந்தகை**

அவர்களின் அருஞ்செயல்களைப் பாராட்டி

அவர்தம் நினைவின் அறிகுறியாக விளங்கும் பொருட்டு

தமிழ்வல்ல புலவரைக்கொண்டு அவர்தம்

பிறப்பகமாகிய

**திருச்செங்கோட்டுத் திருத்தல வரலாற்றை**

எழுதுவித்து அச்சேற்றி அவர் தம் திருவடிகளுக்கு

**உரிமையாக்குகின்றேன்.**

வ. வெ. கா. ரா. முருகேசன்.

# முன்னுரை.

நறுமணம் கமழும் நாடு எனப்பொருள்படும் கொங்கு நாட்டுத் திரு அவிநாசி—திருமுருகன் பூண்டி—திருநணுவேனும் பவானி—கோடிமாடச் செங்குன்றூர் எனும் திருச்செங்கோடு — திருப்பாண்டிக் கொடிமுடி — வெஞ்சமாக் கூடல்—திருக்கருவூர் ஆகிய கொங்கேழ் சிவத்தலங்களிலுள்ள மூர்த்தி—தலம்—தீர்த்தங்கள்; அத்திருத்தலங்களின் இயற்பெயர், சிறப்புப்பெயர், காரணப்பெயர்கள்; அவ்வத் தலங்களுக்குரிய தேவாரம், திருப்புகழ்கள்; சிறு பிரபந்தங்கள்; புராணங்கள்; நாட்டின் சிறப்பு; மண்டலப்பெருமை, கல்வெட்டுக்கள், செப்பேடுகள் முதலியவற்றை ஆராய்ந்து, வரலாற்று முறையில் தொகுத்து, ஒவ்வொரு தலத்திற்கும் தனித்தனியாக அவ்வத்தலப் பெயர்களை முன்வைத்துச் "சிவத்தலவரலாறு" என்ற தலைப்பில், அழகான ஆப்டோன் படங்களுடன் இனிய எளிய தமிழ் நடையில், இக்கால நாகரீகத்திற்கேற்ப எழில்பெறவெழுதி, வெளியிடவேண்டுமென்ற எண்ணம் என்னுள் எழுந்தது. அதன்படி முதன் முதல் 1936ஆம்ஆண்டு திரு அவிநாசியைப்பற்றி "அவிநாசித் திருத்தலச்சிறப்பு" என்ற மகுடத்துடன் எழுதி அச்சேற்றி வெளியிட்டேன். மனதைக்கவரும் புதுமுறையான அந்நூலைப்பெற்று ஓதி மகிழ்ந்த செந்தமிழ்வல்ல புலவர்களும், தமிழ், ஆங்கிலப்பத்திரிகைகளும் மிகப்பாராட்டி மதிப்புரைகள் எழுதினார்கள். அம்மதிப்புரைகள், எனக்கு உறுதியையும், ஊக்கத்தையும் ஊட்டி, மேலும் அவ்வழியையே பின்பற்றும்படி தூண்டியது. அம்முறையிலேயே எஞ்சிய ஆறு சிவத்தலங்களையும் எழுதி முடித்தும், அவைகள் அச்சேறப்

பெருமல், காலங்கடந்து கொண்டேயிருக்கிறது. "அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்களாகா" என்னும் பொன்னுரை பொய்யுரையாமோ? சென்ற பங்குனி மாதம் யான் ஈரோடு செல்ல நேர்ந்தது. அப்பொழுது அவ்வூரில் பிரபல நூல் வர்த்தகரும், தனிகரும், சிவச்செல்வரும், செங்குந்த மரபின் சீரியருமாகிய திருமிகு. வ. வே. கா. ரா. முருகேச முதலியார் அவர்களைக்காணும் பாக்கியம் பெற்றேன். எளியோர்களின் ஏந்தலாகிய அவர்களிடம், எனது மனதில் நெடுநாள் குடிகொண்டிருந்த "திருச்செங்கோட்டுத் திருத்தலவரலாறு" அச்சேறுவதற்குப்பொருள் உதவுமாறு கோரினேன். கற்றவர்பாலன்பும், கதியளிக்கும் கந்தபிரானிடத்துக் காதலும், முருகவேளின் மன்னிய பெருமையையும், மங்கை பங்காளன் மகிமையையும் நன்கெடுத்துக் கூறும் வரலாறிடத்து மதிப்புங் கொண்ட கனம் முதலியார் அவர்கள், யாதும் மாறு கூறாது களிப்புடன் சரியென்றொப்பி, அச்சிடுவதற்காகும் பொருளைத் தாமே உதவுவதாகக் கூறி முற்றுப்பெறவும் செய்வித்தார்கள். நலமான காரியங்கட்கே நன்மைபுரியும் நலமிக்க முருகேசனார் அவர்களது அரிய உபகாரச் செயலுக்கு, எளியேன் யாது கைம்மாறு செய்ய வல்லேன்? அந்நல்லார், இன்னும் நீடூழிகாலம் இந்நிலவுலகில், அவர்தம் செல்வப்புதல்வர்களுடன் இன்பமாய் வாழ்ந்து, மேலும் தமிழ்மொழிக்குப் போதிய உதவிபுரிந்து, புள்ளிமயில் இவர்ந்த வள்ளி மணாளன் திருவருளுக்கு உரியராய் விளங்கும்படி இறைவர் தம் பொன்னார் திருவடியை மனம்-மெய்-மொழிகளால் வாழ்த்துகின்றேன்.

செங்கோட்டுத் திருத்தல வரலாற்றுள், இன்றியமையாது இடம்பெறவேண்டிய அரியதும், இனியதுமான

செய்திகளே போதிய அளவு இடம்பெறச் செய்திருக்கின்றேன். ஊரின் நடுவிலுள்ள ஸ்ரீ கயிலாசநாதர் கோயில், திருமடங்கள், சத்திரங்கள், ஊரமைப்பு, ஜனத்தொகை, சுகாதாரம், பள்ளிக்கூடங்கள், வியாபாரம் ஆகிய விஷயங்களை விவரிக்கின் விரியுமென்றஞ்சி, அவை விடப்பட்டன. அன்பர்கள் விரும்பியேற்கும் வகையில், வரலாற்றை மிகவும் சிரமப்பட்டுத் தொகுத்துள்ளேன். முத்துப்போன்ற எழுத்துக்கள்—வெண்ணிறக்கடிதம்—அச்சமைப்பு—கண்கவர் சித்திரப் படங்கள் முதலியன புத்தகத்தை அழகுபடுத்திக்கொண்டிருக்கின்றன.

இவ்வரலாற்றைத் தொகுத்தெழுதுவதற்கு எனக்குப் பெரிதும் உதவியாயிருந்தவை — திருச்செங்கோட்டுத்தல புராணம்—மான்மியம்—திருப்பணிமாலை — திருமுகவிலாசம் — திருப்புகழ்—கந்தரலங்காரம்—அநுபூதி— கல்வெட்டுக்கள் — தென்னிந்திய சாசன ஜாபிதா முதலியன. இவற்றை எனக்கு உதவிய ஆதிசைவ ஸ்ரீமத். தி. நா. நாககிரிபண்டிதர்—தி. நா. அர்த்தநாரிபண்டிதர், ம. ரா. கணபதிக்குருக்கள், சதாசிவ குருக்கள் முதலியவர்கட்கும், மதிப்புரைகள் வரைந்துதவிய தமிழறிஞர்கட்கும், நூல் அச்சேறும்போது என்னுடனிருந்து சிரமங்கருதாது புரூப் சரிபார்த்துதவிய மாடர்ன் பிரஸ் மானேஜர், திரு. S. C. பொன்னுசாமி செட்டியார் அவர்கட்கும், எனது அன்பார்ந்த வணக்கமும், நன்றியறிதலும் என்றும் உரியதாகுக.

"குற்றமே தேரிவார் குறுமாமுனி சொற்ற
பாவினு மோர்குறை சொல்வரால்"

என்றிருப்பதனால், இதில் பிழைகள் காண்பது அரிதன்று. அங்ஙனம் பிழைகளிருப்பின், அவை எனது அறியாமை என்று மன்னித்து, குணமிருப்பின் கொள்ளவேண்டுகின்றேன்.

பேரூர். சித்திரபாநு ஆண்டு
வைகாசித்திங்கள் 8ஆம் நாள்
21—5—1942.

**சி. கு. நாராயணசாமி.**

# மதிப்புரைகள்.

---

தமிழ்நாட்டுப் பழம் சாத்திரங்களை ஆராயும் கழகத்தின் அங்கத்தினரும்; மதுரை-கரந்தை-கோவைத் தமிழ்ச் சங்கங்களின் அங்கத்தினரும்; ஆதி சைவப்பரம்பரையில் வந்த

துடிலசக்கிழார் **அ. சிதம்பரனார், M.T.A.S., M.T.S., M.S.Sc.**

எழுதிய

## அணிந்துரை.

---

கொங்கு நாட்டில் பாடல் பெற்ற ஏழு தலங்களுள், திருக்கோடிமாடச் செங்குன்றூர் என்னும் திருச்செங்கோடும் ஒன்றாகும்.

தலங்களின் வரலாறுகளை மக்கள் எளிதில் படித்து உணர்ந்துகொள்ளும் முறையில் பதிப்பிக்கவேணும் என்ற (H. R. E. Board) இந்துமத அறநிலையப் பாதுகாப்பாளர் ஆணையின்படி வெளிவரும் நூல்களில் இத்தல வரலாறும் அடங்கும்.

இவ்வரலாறு எனது நண்பர் தொகுப்பாசிரியர் கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்களால் தொகுக்கப்பெற்று, ஈரோடு நூல் வணிகர் திரு. வ. வே. கா. ரா. முருகேசமுதலியார் அவர்களின் பொருள் உதவி பெற்று வெளிவந்துள்ளது.

கண்கவர் வனப்புளதாகவுள்ள பல அழகிய படங்களுடன் நூலானது மிளிர்கின்றது. இத்தல வரலாற்றை தேவாரம், திருப்புகழ், கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, கொங்குமண்டல சதகம், புறநானூறு, திருப்பணி

மாலை முதலிய நூல்களில் இருந்தும், தனிப்பாடல்களில் இருந்தும், கல்வெட்டுச் சாசனங்களில் இருந்தும், கன்னபரம்பரையாய் வரும் பெரியார் வாய்மொழியினின்றும் நண்பர் ஆசிரியர் சி. கு. நா. அவர்கள் எழுதியுள்ளதை நோக்குங்கால், ஆசிரியருடைய பரந்த நூல்களின் ஞானமும், தலங்களின் வரலாறுகள் செவ்வனே வெளிவர வேண்டுமென்ற ஆவலும், ஓயா முயற்சியும், நாட்டுக்கு உழைக்கும் நற்பண்பும் இற்றென விளங்கும்.

சேங்குன்றூர் என்று இரண்டு ஊர்கள் உள. ஒன்று கொங்கு நாட்டில் உள்ள திருச்சேங்கோடு; இன்னொன்று மலையாள நாட்டில் உள்ள விறன்மிண்ட நாயனாருடைய பிறப்பிடமாகிய "சேங்குன்றூர்". மலையாள நாட்டுச் செங்குன்றூரை வேறு பிரித்துக் காட்டவே நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தர், "திருக்கோடிமாடம்" என்னும் அடையைக் கொடுத்து, கொங்கு நாட்டுச் செங்குன்றூரை விளங்க வைத்தார். "சேங்குன்று", "சேங்கோடு", "சேங்கிரி", "சேம்மலை" என்பன ஒருபொருட் கிளவிகள். செங்கிரி என்பதே இப்போது சங்ககிரி என வழங்கக் காண்கின்றோம்.

கி. பி. **634** முதல் கி. பி. **650** வரை பதினாறு ஆண்டுகள் வாழ்ந்த திருஞானசம்பந்தர் காலத்திலேயே இத்தலமானது சிறப்புற்று இருந்தது என்பது அவருடைய பாடல்களால் இனிது விளங்குகிறது.

திருஞானசம்பந்தர் இயற்கை வருணனையைப் பாடுவதில் ஈடு அற்றவர். தாம் நேரிற் கண்டதைக் கண்டவாறே

பாடும் ஆற்றல் வாய்ந்தவர். புனேந்துரை என்பது மருந்துக்கும் அவர் பாட்டில் இல்லை. அவர் பாடியன :—

(1) கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்
(2) இளவாழை குலைமலி தண்பொழில்சூழ் ,,
(3) சீர் உறும் அந்தணர்வாழ் ,,
(4) குன்றென மாளிகை சூழ் ,,
(5) வரிக்குயில்கள் கோதிய தண்பொழில்சூழ் ,,

இப்பாடல்களால், இத்தலமானது 1300 ஆண்டுகளுக்கு முன்னர், பொழில்கள் சூழ்ந்து, குன்று அன்ன மாளிகைகளால் நிறைக்கப்பட்டு, சிறந்த அந்தணர்களாலும்-செல்வர்களாலும், அடியார்களாலும் நிறைந்து இருந்தது என்று அறிகிறோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்னர் இருந்த கடைச்சங்க நூல்களிலும், எண்ணாயிரம் ஆண்டுகளின் முன்னர் இருந்த இடைச்சங்க நூல்களிலும், பன்னீராயிரம் ஆண்டுகளின் முன்னர் இருந்த முதற்சங்க நூல்களிலும் பேசப்படுகின்ற "மோகூர்" (மோகனூர்), "போகூர்" (போக்கம்பாளையம்), "மோரூர்", பழையன் என்னும் சிற்றரசனுடைய "பழய கோட்டை", கடைஎழு வள்ளல்களில் ஒருவராகிய வல்வில் ஓரி வாழ்ந்த 'கல்' என்னும் பெயரிய "நாமக்கல்" முதலான ஊர்கள் எல்லாம் இத்தலத்தைச் சுற்றியே உள்ளன.

மேலும், கி. பி. **567** முதல் கி. பி. **648** வரை எண்பத்தொரு வயது வாழ்ந்த சமய ஆசாரியர்களில் ஒருவராகிய அப்பர் சுவாமிகள், தம் திருக்குறுந்தொகையில் கூறியுள்ள "கோங்குக்குமரி தீர்த்தம்", மோகனூரின்கண்ணே உள்ளது.

தெற்கேயுள்ள குமரி, பாண்டிநாட்டில் உள்ளது. கொங்கு நாட்டுக் குமரி தீர்த்தத்தை வேறுபடுத்திக் காட்டவே அப்பர் "கொங்குக்குமரி" என்ருர். மோகனூர் வந்த அப்பர் சுவாமிகள், சம்பந்தரால் பாடப்பெற்ற குன்றென மாளிகைகள் சூழ்ந்த திருச்செங்கோட்டுக்கு வாராமலும், பாடாமலும் இருந்திருக்கமாட்டார். அவருடைய திருச்செங்கோட்டுப் பதிகங்கள் செல் அரித்த பாடல்களில் உள்ளன போலும்!

இக் கொடிமாடச் செங்குன்றூருக்குத் "திரு ஏரகம்" என்று ஒரு பெயர் உள்ளதைத் திருப்பணிமாலை 267-ம் செய்யுளால் அறிகிருேம்.

"ஏவிளம்பி வச்சரத்தே ஏரக நாகீசருக்கு
மாவிளம்பக் கோவிலும் மண்டபமும்—பூவிளம்பக்
கண்டான் அல்லாளன் கருணை இளையான் ஆறைத்
தண்டாவு வாகை உரத்தான்."

என்பதை நோக்குங்கள். இதனுல், திருமுருகாற்றுப்படையில் குறிக்கப்பட்டிருக்கும் ஏரகந்தானே? இது என மயங்கற்க. இது வேறு, அது வேறு என்பதைச் சிலப்பதிகாரம்,

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்"

என்று ஒரே பாட்டில் செங்கோட்டையும், ஏரகத்தையும் கூறியதால், இரண்டும் வெவ்வேறு இடங்களில் உள்ளவை என்பது தெளிவாம்.

திருமுருகாற்றுப்படைக்கு உரை எழுதிய ஆசிரியர் நச்சினர்க்கினியர், "ஏரகம் — மலைநாட்டுத் திருப்பதிகளில் ஒன்று" எனக் குறித்துள்ளார். இதனுல், நீர்நாட்டில் உள்ள சுவாமி மலை, ஏரகம் அல்ல என்பதும் தெளிவாகின்றது.

ஆனல், தென்பாண்டிநாட்டுத் திருக்குற்ருலத்துக்கு அருகிலுள்ள "குமரன் கோவிலே" திருஎரகம் என்று பல பெரியார் கருதுகின்றனர்.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த திருச்செங்கோட்டுத் திருத்தலவரலாற்றினை எல்லோரும் வாங்கிப் படித்து இன்புறு வாராக.

**அ. சிதம்பரனர்.**

II

## சேலம் வாசியும், தமிழ் அறிஞரும், ஆராய்ச்சியாளரும், வழக்கறிஞருமாகிய

## ஸ்ரீ. E. R. நரசிம்ம ஐயங்கார், B. A., B. L.,

அவர்கள் எழுதியது.

எனது நண்பர், சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் ஏற்கனவே நல்ல வசன நடை எழுத்தாளரென்று பெயர் பெற்றவர் ஆனதால், அவரைப்பற்றிப் புதிதாக அதிகம் கூறவேண்டுவதில்லை. அவர் என்னை, தமது **"திருச்செங்கோட்டுத் திருத்தல வரலாறு"** என்னும் நூலுக்கு மதிப்புரை வரையுமாறு கேட்டனர். அதனல் நான் இம்முன்னுரையை மிகக்களிப்புடன் வரைய முன் வந்தேன்.

தண்டமிழ்வல்ல நூலாசிரியரை, நான் ஏழு அல்லது எட்டு ஆண்டுகளாக நன்கு அறிந்திருப்பதோடு, அவர்களால் எழுதப்பட்ட நூல்களைப் படித்துப் பயனுமடைந்துள்ளேன். இவருடைய உரைநடை, மிக எளிமையும், இனிமையும், படிப்பதற்குச் சுவையுமாயிருப்பதோடு, அழகமைந்து பிற்கால நூலாசிரியர்களுக்கு எடுத்துக்காட்டாகவும் இருக்கிறது. இவருடைய ஆராய்ச்சி, அறிவுக்குப்

பொருந்தியதாகவும், யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாக வும், பிற ஆசிரியரை வழிப்படுத்த வல்லதாகவும் உள்ளது. இவரது கல்வி, சாதாரண ஒருவசன நடையாளரிடம் எதிர்ப் பார்ப்பதைவிட மிக மேலானது. உயர்தர வசனக்கலைக்கு இவரது உரைநடை நூல்கள் எடுத்துக் காட்டாகவுள்ளன வென்று கூறுவது மிகையாகாது. ஆனதால், சிவத்தல வரலாறுகளை வரைவதற்கு இவரே தகுதி வாய்ந்தவர்.

நிறைவுள்ள ஆராய்ச்சியாளர் என்ற முறையில் இவரது எழுத்துக்கள் சீரும், ஒழுங்கும், உடையனவாகவும், மாறுதலற்ற கட்டுப்பாடுடையதாகவும் உள்ளன. செய்திகளை உள்ளது உள்ளவாறே திண்மையுடன் அதன் உண்மை நிலையைக் கண்டறியும் பரந்த மனமுடையவர். ஒரு கலையை ஆராயும் ஆராய்வுக்கண்பெற்று, தாம்பார்க்கும் காட்சிகளை ஒளிமிளிரும் வர்ணங்களில் வருணித்து, அவைகளை மனக்கண்ணின் முன் விளங்குமாறு செய்திருக்கின் றனர். இவரை, வசன நடை எழுத்தாளர் என்று புகழ் வதைவிட, கவிஞர் என்று கூறுவது பொருந்தும். இவரது உரை நடை நூல்களை, கவி வசனம் என்றே சொல்லலாம்.

இந்நூலாசிரியருக்கு கல்வெட்டுக்கலைஞானம் இருப்பது, இன்னுமொரு தகுதியுடைமையை விளக்குகின்றது. அதனை அவர் தமது செங்கோட்டுத் திருத்தல வரலாற்றுள் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளனர். பணிமலையின் அடி முதல், உச்சிவரையிலுமுள்ள ஒவ்வொரு கற்படிகளையும், மண்டபங்களையும், சிறு கோயில்களையும், கல்வெட்டுக்களையும் குகைகளையும் விடாமல் கவனத்துடன் தெளிவாக விவரித் திருக்கின்றனர். இவற்றால், இவர் உழைப்பை, ஓர் பொருளாகக் கொண்டாரில்லையென்பது புலனாகின்றது. புராதன

முடைய மலையும், ஆலயங்களுமுடைய திருச்செங்கோட்டின் புகழை மங்காமல் நிலைநிற்கச் செய்வதில் இவர் எடுத்துக்கொண்ட முயற்சி பெரிதும் பாராட்டற்குரியது. நல்லதொரு எழுத்தாளருக்கிருக்கவேண்டிய அமிசங்கள் இவரிடம் விசேடமாக அமைந்திருக்கின்றன. கண்கவர் வனப்புடைய சித்திரப் படங்களுடன் கூடிய அழகிய புத்தகத்தை வெளியிட்டதற்கு இவ்வாசிரியருக்கு நாமும், தமிழுலகும் என்றும் மறவா நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழ்மக்களுக்கும், கலைஞான விற்பனர்களுக்கும் இந் நூல், எவ்விதமாகப் பயன்படுகின்றதென்பதை என் சிற்றறிவுக்கு எட்டிய வரையில் ஒருவாறு விளக்க முற்படுகிறேன்.

**திருச்செங்கோட்டின் தொன்மை:—**

இது செங்கோட்டின் பழமையைக் குறிப்பதோடு சங்ககாலத்துப் புலவராகிய "சேங்குன்றூர்கிழாரது" பிறப்பகமும் இதுவே என்று கூறுகின்றது. சங்கம் விளங்கிய காலம், கிறிஸ்து சகாப்தத் தொடக்கத்திலோ! அல்லது சிறிது முன்னரோ இருந்ததாகக் கருதப்படுகிறது. ஆனதால், இவ்வூர், சுமார் இரண்டாயிரம் ஆண்டு, பழமையுடையதெனத் தெரிகிறது. இதற்கு, கோங்குமண்டல சதகத்தில் செங்குன்றூர்கிழாரைப்பற்றிய செய்யுள் ஆதாரமாயுள்ளது. அந் நூலாசிரியரே சிவச்செல்வராகிய விறன்மிண்டநாயனரது பிறப்பகம், கோங்கின் சேங்குன்றூரென்றே கருதுகின்றார். நாயனர், ஸ்ரீ ஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு மூந்தியவராகவும் குறித்துமிருக்கின்றனர். ஆனல்

பெரியபுராணம், 'திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள செங்குன்றூரே விறன்மிண்டநாயனர் பிறப்பகம்' என்று விளங்கவுரைக்கின்றது. பெரியபுராண ஆசிரியரின் அபிப்பிராயத்தைத் தழுவியே "அடியார்க்கு நல்லார்" திருவாங்கூரிலுள்ள செங்குன்றூரே விறன்மிண்டரது பிறந்த ஊர் என்று நிர்ணயிக்கலாயினர். இது எவ்வாருயினும், சைவ சமயாசார்யர்களுள் சிறந்தவராகிய ஆளுடையபிள்ளையாரால், இத் திருத்தலம் பாடப்பெற்றிருப்பதனுல், இத்தலத்தின் பழமையானது. கி. பி. ஏழாம் நூற்ருண்டிலேயே விளங்கியிருந்ததென்று நாம் நிச்சயிக்கலாம். ஆகவே, இற்றைக்குச் சுமார் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னரே திருச்செங்கோடு விளங்கியிருந்ததென்று உறுதிபெறுகின்றது.

**மலைமீதுள்ள ஆலயங்களின் பழைமை:—**

புலமைமிக்க இவ்வாசிரியர், மலைமீதுள்ள மாதிருக்கும்பாதியான், செங்கோட்டு வேலர் எனும் இரு கடவுளர்களுடைய ஆலயங்கள், துவாரபாலகர்கள், மண்டபங்கள், சிற்பத்தூண்கள் முதலியவற்றை மிகவும் அழகாக வருணித்திருக்கின்றனர். இவ்விரு கோயில்களிலும் அர்த்தநாரீச்சுர ஆலயமே முந்தியது. செங்கோட்டுவேலவர் கோயில் பிந்தியது. ஆனல், திருப்புகழாசிரியர் ஸ்ரீ அருணகிரிநாதர், செங்கோட்டு வேலரைத் தரிசிக்க இங்கு எழுந்தருளியபோது, ஸ்ரீ செங்கோட்டு வேலவரையே முதன்மையாகக்கொண்டு திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, கந்தரந்தாதி முதலிய பிரபந்தங்களில் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். இது, அவர் தமிழ்த் தெய்வமாகிய தனிவேன் முருகரிடத்து வைத்த மெய்யன்பே காரணம் போலும்!

இவ்வேலவருடைய ஆலயத்தைப்பற்றி கி. பி. பதின் மூன்றும் நூற்றுண்டில் அரசு செய்த "ஜடாவர்ம சுந்தர பாண்டியன்" வெட்டுவித்த கல்வெட்டினுல், இவ்வேலவர் ஆலயம், கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டுக்குப் பின்னரே பிரசித்தம் பெற்றிருக்கவேண்டுமென்று தெரிகிறது. இதற்கு முந்திய காலத்தில் இங்கு திருமுருகனைப்பற்றிய செய்தியே காணுமாறில்லை. இவ்விரு ஆலயங்களுக்கு எதிரே விளங்குகின்ற மண்டபங்கள் யாவும், பிற்காலத்திலே அதாவது 15, 16 ஆவது நூற்றுண்டுகளிலே தான் கட்டப்பட்டிருக்கவேண்டுமென்று இந்நூலில் குறிக்கப்பட்ட சாசனங்களாலும், மேற்கோட் செய்யுட்களாலும் விளக்கமாகின்றது. இனி, கருப்பக்கிருகத்தைப்பற்றி சிறிது ஆராய்வாம்:—

தென்னிந்திய கல்வெட்டின் சரித்திரத்தை ஆராய்ந்தால், கிறிஸ்து சகாப்தம் எட்டாவது நூற்றுண்டிலிருந்துதான் கோவிற் சுவர்களில் கல்வெட்டுக்கள் வெட்டுவிக்கத் தொடங்கப்பெற்றதென்று தெரியவருகிறது. ஆனதனுல், எட்டாவது நூற்றுண்டுக்கு முன்னுல் ஏற்பட்ட கோயில்களெல்லாம் செங்கல்லாலும், சுண்ணச்சாந்தினுலும் கட்டப்பட்டிருக்கவேண்டும். சம்பந்தமூர்த்தி சுவாமிகள் இங்கு எழுந்தருளியபொழுது அர்த்தநாரீச்சுர ஆலயம் செங்கற் கட்டிடமாகவே கட்டப்பட்டிருந்தது. அறுபதாம் படிக்கு அருகிலுள்ள கல்வெட்டுக்களினுலும், அதனை வெட்டுவித்தவர்களாலும், இவ்விரு கோயில்களிலுமுள்ள கல் மண்டபங்களும், சிற்பத்தூண்களும், பதின்மூன்றும் நூற்றுண்டுக்கு முன் கட்டப்படவில்லையென்பது உறுதிபெறுகின்றது. நமது தமிழரசர்கள், தாங்கள் செய்துவந்த தானதருமங்களைக் கோயில்களின் கற்சுவர்களில் வெட்டுவிப்பதை வழக்

கமாகக் கொண்டிருந்தனர். இவ்வாலயங்களுக்கு வெளியே சிறிதுதூரத்திலுள்ள கற்பாறையில் கல்வெட்டுக்கள் காணப் படுவதால், அவர்கள் காலத்தில் இக்கோயில்கள், கருங்கற் களால் கட்டப்படவில்லை. இவ் அறுபதாம்படிக்கு அரு கில் பத்து-பதினோராவது நூற்றாண்டுகளில் பிரபலமாக விளங்கிய பராந்தகன் - இராசராசன் - இராசேந்திரன் முதலிய சோழமன்னர்களுடையவும், பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கீர்த்திபெற்றிருந்த இரண்டாம் ஜடாவர்ம சுந்தரபாண்டியனுடையவும் கல்வெட்டுக்கள் காணப்படு கின்றன. மேலும், இப்பாண்டியனைப்பற்றிய கல்வெட்டுக் கள் ஓமலூர் தாலூகாவைச்சேர்ந்த தாரமங்கலத்திலும், ஆத்தூர் தாலூகா ஆறகழூரிலும் காணப்படுகின்றன. இவ் வுண்மைகளால், இவ் ஆலயங்களின் கல் மண்டபங் களாதியன, கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டுகளுக்குப் பின்னரே கட்டப்பட்டவை.

**தமிழ் எழுத்துக்கள்:—**

இந்நூலாசிரியர், பழைய காலத்தில் எம்மாதிரி எழுத் துக்கள் வழங்கி வந்தன என்பதுபற்றிக் கூறியுள்ளதை ஆராய்வோம்:- சோழ அரசர்கள் காலத்தில் வழங்கப் பட்டு வந்த எழுத்துக்களைக் கவனித்தால், தற்காலம் வழங் கும் எழுத்துக்களுக்கு முன்னர் அவ்வாறு எழுத்துக்கள் வழங்கப்பட்டனவென்று தெரியலாம். சோழர்கள் காலத்துக் கல் எழுத்துக்கள், பல்லவர்கள் வழங்கிய பல்லவ கிரந்த எழுத்துக்களினின்றும் தொகுக்கப்பட்டன. இவ் வெழுத்துக்கள், வட்டெழுத்துக்களைவிட வசதியானவை. அவர்களே கொங்கு நாட்டிலும், சோழநாட்டிலும் பல்லவ கிரந்த எழுத்துக்களை எழுதத்தலைப்பட்டார்கள். ஆனால்,

பாண்டியர்கள் அதற்கு இடந்தரவில்லை. அவர்கள் வட்டெழுத்துக்களையே கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டுகளிலும் உபயோகப்படுத்தியிருக்கின்றார்கள். ஆனால், நாளடைவில் பாண்டியநாட்டிலும் பதினான்காவது நூற்றாண்டில் வட்டெழுத்துக்கள் குறைந்து, பல்லவ கிரந்த எழுத்துக்களே பரவி, அது பதினைந்தாவது நூற்றாண்டில் முற்றும் மறைந்துவிட்டது.

**E. R. நரசிம்ம ஐயங்கார்.**

III

## ஈரோடு வாசியும், தமிழாசிரியருமாகிய
## திரு. ந. சிவபாத ஹிருதயம் பிள்ளை
அவர்கள் எழுதியது.

திருச்செங்கோட்டுத் திருத்தல வரலாற்றை யெழுதிய எனது ஆப்த நண்பர், ஸ்ரீமாந். சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களை நான் பல வருடங்களாக நன்கு அறிவேன். அவர் கல்வி, அறிவு, ஒழுக்கம், கடவுள் வழிபாடு, கற்றோர் கூட்டுறவு முதலிய நற்குணங்களையே ஆபரணமாகப் பூண்டவர். இளம்பருவமுதற்கொண்டே பெரும் புலவர்களைப்பற்றியும், அந்தந்த நாட்டைப்பற்றியும், அந்தந்த நாட்டிலுள்ள தேவாலயங்களைப்பற்றியும், கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயம், பழய ஏட்டுப்பிரதிகள் எங்கெங்கு கிடைக்கின்றனவோ அவற்றைத் தேடிக்கண்டுபிடித்து அவற்றிலுள்ள விஷயங்களைப் பலர்க்கும் பயன்படுத்தும் பெரிய பரோபகாரியென்று சொல்வது மிகையாகாது.

அப்பெரியார், கொங்கேழு சிவத்தலங்களில் ஒன்றும், திருஞானசம்பந்தப் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத் திருப்பதிகம் பாடப்பெற்றதும், அன்பர்கள் அல்

லஸ் அறவே நீக்கும் மாதொருபாகனர் மகிழ்ந்தினிதுறை யும் கோடிமாடச்செங்குன்றூரென்னும் திருச்செங்கோட்டுத் திருத்தல வரலாற்றை எழுதிய நூலைக் கண்ணுற்றேன். அதில் ஸ்ரீமான் முதலியாரவர்கள் எடுத்துக்கொண்ட முயற் சிக்கு ஓர் அளவே சொல்ல முடியாது என்பது எனது உள்ளக்கிடக்கை.

இத்திருத்தல வரலாற்றைப் படிப்பதனல், கடவுளிடத் தில் அன்புசுரக்கும். நாககிரியின் மகிமை விளங்கும். தீர்த்தங் களின் சிறப்புக்களைத் தெளிவாய் அறியலாம். பண்டைக் காலத்துப் பரோபகாரிகள், "தோன்றிற் புகழோடு தோன்றுக" என்னும் முதுமொழிக்கிணங்க, பூதவுடம்பு நீங்கினும், புக ழுடம்பு நிலைநிற்கவேண்டும் என்று செய்த சிவபுண்ணிய அறங்களையும் நன்கு அறியவும் இந்நூல், அறிவிற்சிறந்த பேராசிரியராக விளங்கும் என்பதற்கு ஐயம் இல்லை.

ஸ்ரீமான் முதலியாரவர்கள், சொன்னடை, பொருள் நடை, வாக்கிய அமைப்பு, முதலியவைகளை வரிசைப்படுத்தி எழுதியிருப்பதை ஆராய்ந்து பார்த்தால், அவர் கல்வியின் ஆற்றலும், அரனிடத்து வைத்த அன்பும் நன்கு விளங்கும். அன்பர்களே! இது போன்ற பற்பல ஆராய்ச்சி நூல்கள் எழுதுவதற்கு ஸ்ரீமான் சி. கு. நா. முதலியாரவர்கள் மிகத் திறமையுடையவர். இப்பெரியார்க்கு ஆண்டவன் நீண்ட ஆயுளும், திடகாத்திரமும், பெருஞ் செல்வமும், அன்பும் அறிவும் கொடுத்துக் காப்பாற்றுவாராக.

**சிவபாதஹிருதயம் பிள்ளை.**

## IV

### ஈரோடு மகாசன உயர்தரக்கல்லூரித் தலைமை ஆசிரியர்

### திரு. S. மீனுட்சிசுந்தர முதலியார், B. A., L. T.,

அவர்கள் எழுதியது.

தாங்கள் அன்புகூர்ந்து அனுப்பிய "திருச்செங்கோட்டுத் திருத்தலவரலாறு" என்னும் இனிய நூலொன்றுவரப்

பெற்று முழுதும் ஓதி மகிழ்ந்தேன். வரலாறு தெள்ளிய நடையில் அனைவரும் எளிதில் படித்துப் பயன் அடையு மாறு அழகுடன் எழுதப்பட்டிருக்கின்றது. அன்பார்ந்த நண்பர் திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள், வழக்கம் போல் இந்நூலையும் மிகுந்த ஆராய்ச்சி செய்து திறம்பெற எழுதியிருப்பது போற்றத்தக்கது. கன்னபரம்பரை வரலாறு கள், தலபுராணவரலாறுகள் இவைகளோடு அமையாமல், கல் வெட்டுக்கள், செப்பேடுகள், பண்டை இலக்கியங்கள் இவை களையும் பெரு முயற்சியோடு ஆராய்ந்து எழுதியிருப்பது இந்நூலுக்கு விசேட மதிப்பை அளிக்கின்றது. அழகிய ஆப்டோன் சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டிருப்பது இன் னொரு சிறந்த அமிசம். பதிப்பு மிக அழகாக விருக்கின்றது. சிறப்புயர்ந்த இந்நூலுக்குப் பொருள் உதவிபுரிந்த சிவச் செல்வர் திருமிகு. வ. வே. கா. ரா. முருகேச முதலியார் அவர் களுக்கு சைவ உலகமும், தமிழுலகமும் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறது.

**S. மீனாட்சிசுந்தரம்.**

V

திருச்செங்கோட்டுக் குமரமங்கலம் தமிழ் வித்துவான்

## திரு. ப. ஆறுமுகம் பிள்ளையவர்கள்

எழுதியது.

அன்பார்ந்த எனது ஆப்த நண்பர் கோவை, சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள், என்னை விரும்பி என்பால் தாம் தொகுத்தெழுதிய "திருச்செங்கோட்டுத் திருத்தலவர லாறு" என்னும் நூலுக்கு மதிப்புரை வரையும்படி அனுப் பினார்கள். அந்நூலை யான் மனமகிழ்ச்சியுடன் வரவேற்று, கவனமாக முழுதும்ஓதினேன். நூலின் தமிழ் நடையும், அதன் இனிய சுவையும், விஷய அமைப்பும், சாசன சர்ச்சை யும், எனது உள்ளத்தைக் கவர்ந்து உவகைக்கடலில் ஆழ்த் தியது. தொன்மைமிக்க இச்சிவத்தலம், சிவன்வேறு, சத்தி வேறுஎன்ற பேதமற்ற சமரசக்கொள்கைக்குச் சான்றாக விளங்கும் மலைக்கோவில்களில், மாண்புபெற்றதெனின்,

இதன் பெருமை அளவிடற்கரியதே. இத்தகைய திருத்தலத்தைத் தரிசிக்க விரும்பும் யாத்திரைக் காரர்கள், பிறர் உதவியின்றி, தாமே தலச்சிறப்பு – மூர்த்தி மகிமை – தீர்த்த விசேடங்கள் சுற்றுக்கோயில்கள், கோபுரத் திருப்பணி முதலியவற்றை தெளிவாக உணர்ந்து மகிழும்பொருட்டு, ஆசிரியர் வெகு சிரமப்பட்டு நூலை ஆராய்ந்து அழகுபெற வரைந்திருக்கின்றனர். இவைகொண்டு, நூலாசிரியரது இலக்கிய அறிவும், சரிதவாரய்ச்சித் திறனும், நாகரிக முறைக்கேற்பப் புது வகையில் நூலைத் தொகுக்கும் சமர்த்தும், பெரிதும் பாராட்டத் தகுதியுடையதென்பதே எனது அபிப்பிராயம்.

நலமான அச்சு – வெண்ணிறக்கடிதம், கண்கவர் சித்திரப் படங்கள் முதலியன எவர் மனதையும் வசீகரிக்கும் வனப்புடையன.

இவ்வுயரிய வரலாற்றுக்கு மனமுவந்து தாராளமாகப் பொருட்கொடை வழங்கிய செல்வர், திரு. வ. வே. கா. ரா. முருகேச முதலியாரவர்களது செம்பொருள், புண்ணியத்தால் ஈட்டிய பொருளென்பதே எனது பூர்ணமான நம்பிக்கை.

இந்நூலாசிரியர், மேலும் இதுபோன்ற வரலாற்றைக் கொங்குநாட்டில் விளங்கும் சிவதல - விஷ்ணுத்தல சுப்பிரமணியத் தலங்களனைத்திற்கும் எழுதுவாராயின், தமிழ் அன்பர்களுக்குப் பெரிதும் உதவியாயிருக்கும். ஆலயங்களின்பரிபாலகர்கள்கவனிப்பார்களென்றே நம்புகின்றேன்.

எனதுநண்பர் திரு. சி. கு. நா. முதலியாரவர்கட்கு அயில் வேலேந்திய மயில்மேற்கடவுள், ஆயுளையும், ஆரோக்கியத்தையும் மேன்மேலும் அருளுமாறு அவனது அடியிணைகளை அனவரதமும் மறவாது வந்தித்து வாழ்த்துகின்றேன். நலம்!

வெண்பா.

செஞ்சாவி முத்துதிர்க்குஞ் செங்கோட்டு வண்புகழை
மஞ்சாருங் கோவை வள்ர்மகிபன்—நெஞ்சோர்ந்து
பாரா யணம்புரியப் பாரோர்க் குதவினன்
நாரா யணசாமி நன்கு.

**ப. ஆறுமுகம்பிள்ளை.**

ஈரோடு நூல் வர்த்தகரும், செல்வருமாகிய உயர்திரு.

## வ. வெ. கா. ரா. முருகேச முதலியார்

அவர்கள் மீது

குமரமங்கலம் வித்துவான் திரு. ப. ஆறுமுகம்பிள்ளை அவர்கள்

பாடிய வாழ்த்துப்பாக்கள்.

1. திருமருவும் புவிபுகழும் திருச்செங்கோட் டம்மையப்பர்
செவ்வேள் பாதம்
கருதிநிதம் வளர்பெருமைச் செங்குந்த மரபில் வருங்
கருணை வள்ளால்!
அருமைபெறு மிராமலிங்க முதலிதவப் புதல்வனென
அவனி யோர்கள்
பெருமைபெறும் புகழ்மருவும் முருகேச முதலியெனப்
பேர்பெற் றோங்கும்.

2. கொண்டலெனும் குணசீலன் செங்கோட்டு வரலாறு
கூற வேண்டி
தண்டமிழ்தே ருலகுபுகழ் சரித்திரமே யாராய்ந்து
தக்கார் மிக்கார்,
மண்டலத்தோர் புகழ்ந்தோதப் பலதலத்து மகிமையெலாம்
வரைந்தச் சேற்றிக்
கொண்டுபுகழ் கொண்டுலகில் கோவைநா ராயணப்பேர்க்
குரிசில் தன்னை.

3. தேனருஞ் சுவைமருவச் சரிதமொன்று தெளிபொருளால்
சொல்ல வெண்ணி
வானரு மமுதமென நூலியற்றி அச்சுவா
கனமு மேற்றி

மாணரும் மடலெழுதும் வள்ளல்மிகு பொருளுதவி
வாழ்த்தி மண்ணும்
வானேரு மதிசயிப்ப வரங்கேற்றி வேணபொருள்
வழங்க வைத்தான்

4. வன்மைமிகு புராணமுநன் மான்மியமும் விரித்தபொருள்
வண்மை கண்டு
சொன்னயமும் பொருள்நயமும் பார்ப்போருக் கின்பநயச்
சுவையே தோன்ற
இந்நாளிற் செய்தமைபோல் தமிழ்நலமே இவ்வுலகி
லெங்கு மெய்த
எந்நாளும் பொருளுதவிக் கீர்த்திசுகம் பொருள்நலங்க
ளெல்லா மோங்க

5. சீராரும் அரவகிரிக் குமரேச னருண்மிகுத்துச்
செல்வ மோங்க
ஏராரு வாழ்க்கைத் துணைதனலட்சுமி யம்மைமக்க
ளின்ப நல்கும்
பேரார்சண்முகவடிவேல் கந்தசாமிப் பெயர்கொள்
பிள்ளை மக்கள்
நேராருங் குகனருளால் சோமரவி யுள்ளளவு
நிலைத்து வாழ்க.

vi

## பழநி, ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவத்தானத் தலைமைச் செயலாளர்

## திரு. ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை, B.A., B.L., அவர்கள் எழுதியது.

ஆசிரியர், திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்களது "திருச்செங்கோட்டுத் தலவரலாற்றை" மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். தமிழுலகம் அன்னாரை நன்கறியும். கோடி

மாடச்செங்குன்றூர் என்னும் திருச்செங்கோடு, கொங்கேழ் சிவத்தலங்களில் ஒன்ருகும். சமயாசாரியர் திருஞானசம்பந்த சுவாமிகள் வழிபட்டதும், அன்னூர் பாடல் பெற்றது மாகும். இக்குன்றின்மீதே இறைவன், ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு "நீலநன் மாமிடற்றுன், நீருறு செஞ்சடையான் வானில் மின்றிகழ் செஞ்சடையான்" என்ற பெயர்களுடன் விளங்குகின்றனர். மாணிக்கவாசகனர்,

"தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ."

என்று வாய்மலர்ந்த அப்பனும், அம்மையுமாகிய இருவரது கொள்கையை, ஒன்றதாய், மாதொருபாகனைக் காண்கின்ரேம். ஆதலின், இக்கோடு ஒப்பற்ற சிவத்தலங்களில் தனிச்சிறப்புடையதென்னலாம். இன்னும், இங்குறை முருகனெம்பிரானை 'அருணகிரியாரும்' வாயார வாழ்த்துகின்ருர்.

திருச்செங்கோடு அழகியதொரு செங்குன்றம். இதன் வரலாற்றை எனது நண்பர் ஆசிரியர், வனப்புற வருணிக்கின்ருர். மலைமீதும், ஊர்க் கோயிலினுமுள்ள சிற்பங்களும், கொடுங்கைகளும் சிறப்பு வாய்ந்தவை. சிற்ப நுட்பத்தின் எல்லைக்கு வரம்பாகக்கூறப்படும் கோயில்கள், தாரமங்கலம், தாடிக்கும்பு, பேரியபாளையம், பேரூர், திருச்செங்கோடு என்னும் ஐந்தனுள், இக்கோயிலும் ஒன்ருகும். இவைகளை ஆக்கித்தந்த கெட்டிமுதலியாரின் குடும்பத்தின் பெயர் என்றும் நிலைபெறும். நமது நூலாசிரியரின் அரியசெயலை, தமிழுலகம் போற்றப் பெறுவதோடு, இத்தகைய பல நூல்களை இவர்களே தொகுத்துத் தந்து, தமிழரின் மாட்சியையும், மகிமையையும் வெளியிடுமாறு ஸ்ரீ. ஞானதண்டாயுதபாணியின் அருளைச் சிந்திக்கின்றேன்.

**ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை.**



ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் உற்சவ மூர்த்தம்.

மாதிருக்கும் பாதியான் மாண்புமிகு கோலத்தை
நீதமுடன் நெஞ்சே நினை.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
சிவமியம்தி. க. சண்முகம் நூலகம்.
திருச்சிற்றம்பலம்.
தமிழியல் துறை

## கொடிமாடச் செங்குன்றூர் எனும்

# திருச்செங்கோட்டுத் திருத்தல வரலாறு.

:o:

### விநாயகர் காப்பு.

ஐங்கரச் சிந்துரத்தின் கழற் செஞ்சரண்
அஞ்சலித்துத் துதிப் பாம்.

## தோற்றுவாய்.

கொங்கு நாடு, தமிழ் வளர்த்த சங்க காலந்தொடங்கிச் சேர சோழ பாண்டிய மண்டலங்களினும் வேருகவும், ஒரு தனி நாடாகவும் கருதப்பட்டு வருகின்றது.

"மைந்த நாடிய மயங்கு பெருந்தானைக்
கொங்கு புறம் பெற்ற கொற்ற வேந்தே."

என்று பல்யானைச் செழுங்குட்டுவனை, பாலைக் கௌதமனர் பாடிய பதிற்றுப்பத்து 22-ஆம் செய்யுளால் இவ்வுண்மை உறுதி பெறுகின்றது. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ வடிகளும், இக்கொங்கு நாட்டினைத் தனி நாடாகவே பகுத்துக் கருதுவது கண்ணகிக்கிக் கோயில் எடுப்பித்து வழிபட்டபோது, தமிழ்நாட்டு மூவேந்தருடன் ஏற்றத்தாழ் வின்றிக் "கொங்கிளங் கோசர்" தோற்றமும் கூறியதாற் பெறப்படும். இதனுல், "கொங்கு நாடு" தனித்த உரிமையுடைய பெரு நாடாக எப்பொழுதும் விளங்கி இருந்ததெனக் கருதுதல் இயலாது. கொங்குநாடு 'மைசூர் மண்டலம்'

என்னும் கருநாடத்துக் கங்கவரசர்கள் ஆட்சிக் குள்ளடங்கிக் கங்கவாடியுடன் கலந்தும், சோழநாட்டுடன் மயங்கியும், ஹோய்சளர், பாண்டியர், விஜயநகரத்து வேந்தர்கள், மைசூர் மன்னர்கள் உரிமைக்குள் அடங்கியும், தனது சுதந்தரத்தை இழந்தும், நாட்டின் எல்லை சுருங்கியும் வந்திருக்கக் காண்கின்றோம். ஆயின், கொங்கு நாட்டின் இயற்கைவளம் மட்டும் குன்றாது நின்றொளிரும் புதுமை அதற்கொரு தனிப் பெருமை என்றே கொள்ளவேண்டும்.

'கோங்கு' என்பது நறுமணம் எனப்பெயர் பெறும். நாட்டுக்குப் பெயராம்பொழுது சேறு, புலால், நாற்றம் முதலியன முற்றும் நீங்கிச் செழித்தோங்கும் சோலைகளின் மலர், பூந்தாது, தேன், கனிரசம் முதலியவற்றால் நிரம்பி நாற்றிசையும் நறுமணம் வீசப்பெறுவதால், "கோங்கு நாடு" எனப்பெயராயிற்றென்று புகல்வர் பெரியார். இக்காரணங்கள் அல்லது வேறு விஷயங்கள் கொண்டு கோங்கு என்னும் பொருள் பொருந்தினும் பொருந்துக.

இத்தகைய நலங்கள் சிறந்த கொங்கு நாட்டில் பருவமறாக் காவிரி நதியின் வடகரையில், கொங்கேழ் சிவத்தலங்களுள் ஓர் எண்பெற்றும், மலைக்கோவில்களுள் மாட்சிமையுற்றும், அப்பனும், அம்மையும் ஒரே உருவில் "மாதிருக்கும் பாதியான்" "மங்கை பங்கன்" "அர்த்தநாரீச்சுரர்" என்ற சிறப்புப் பெயர்களைத்தாங்கியும், தென்னாட்டுக்கே ஓர் அதிசய மூர்த்தியாய், கோடிமாடச் செங்குன்றூர் என்னும் திருச்செங்கோட்டுத் திருத்தலத்தில் ஆலயம் கொண்டருளும் இறைவனது அற்புத மகிமைகளை விளங்கவுரைப்பதே இச்சிறு நூலின் திரண்ட கருத்து. அம்மகிமைகள் அடியில் வருமாறு:—

## தலமும்—பெயர்க்காரணமும்.

தலம் என்பது ஓர் ஊர் அல்லது இடத்தின் பெயரைக் குறிக்கும் ஓர் தமிழ்ச் சொல். இத்தலத்தைச் சிவத்தலம், விஷ்ணுத்தலம், சுப்பிரமணியத்தலம் என்றும் முப்பிரிவாகத் தமிழ் நாட்டினர் கூறுவர். இங்குக் கூறப்படுவது சிவத் தலமும், குமாரத்தலமும் ஒருங்கே கூடி உரிமைபெற்ற சிறப்பைப்பற்றியது.

மலையும், ஊரும் ஒரே பெயர் பெற்று விளங்கும் திருப் பழநி, விராலிமலை, திருப்பரங்குன்றம், சுவாமிமலை, குன்றக்குடி, தேன்சேரிமலை, சிவன்மலை, சென்னிமலை முதலிய குமாரத் தலங்கள் தமிழ் நாட்டில் மிகுதி. இஃதேபோல் மலைமீது சிவபிரான் கோயில்கொண்டருளும் சிவத்தலங்களும் தமிழ் நாட்டில் இருக்கின்றன. அவை திரிசிரன்மலை, திருஈங்கோய் மலை, திருக்கழுக்குன்றம், பிரான்மலை, இரத்தினகிரி, திருஎறும்பி யூர் என்பன. ஆயின், இச்சிவத்தலங்களுள், சிவனும், சத்தியும் ஒரே வடிவில் திருவுருவங்கொண்டு காட்சியளி வாய் மலைமேல் கோயில் கொண்டு திகழும் திருத்தலம், தென்னாட்டில் திருச்செங்கோட்டைத் தவிர வேறெங்குமே காண முடியாது. இதனால் கொங்குநாடு மாட்சிமை பெற்ற தென்றே கூறவேண்டும்.

அன்றியும், இத்திருமலையின் மற்றொருபால், குன்று தோறும் ஆடல்புரியுங்குமரவேள், மேலான சிறப்பில் கோயில் கொண்டருள்கின்றனர். சிவம், சத்தியாகிய இருவர்களின் ஆருள்பெற்ற அருங்குமரன், கொற்றமிகும் வெற்றவேலேந்திச் "செங்கோட்டு வேலன்" "செங்கோட்டு வெற்பன்" என்ற சிறப்புப்பெயர்கள் பெற்று அண்ணமலை

ஸ்ரீ அருணகிரி நாதரால் அருமையாகப் பாராட்டப் பெற்று விளங்குகின்றனெனின், இத்திருத்தலத்தின் ஒப்பற்ற சிறப்பு செப்புதற்கு அரியதேயாம்.

மாதொரு பாகனும், மால்மருகனும் ஒருங்கே கோயில் கொண்டுள்ள இப்புண்ணியப் பதிக்குத் திருச்செங்கோடு, கோடிமாடச் செங்குன்றூர், தெய்வத்திருமலை, என்ற பெயர்களேயன்றி, நாககிரி, அரவகிரி, உரகவெற்பு, கட்செவிக் குன்றம், பணிமலை, தந்திகிரி, நகபூதரம், புசகபூதரம், நாகாசலம், நாகமலை, என்ற பாம்பின் பரியாயப் பெயர்கள் மிகுதியாகத் தலபுராணம், மான்மியம், கலம்பகம், பிள்ளைத்தமிழ், மாலை, அந்தாதி முதலிய பிரபந்தங்களில் பயிலப்பெற்றுள்ளன. இப்பெயர்களால், இத்தலம், பாம்பு சம்பந்தம்பெற்றதொரு மாமலையென்று கருதவேண்டியதாகின்றது.

இனி இம்மலைக்குரிய பெயர்களின் பொருள்களைக் கவனிப்போம்:— (1) திருச்செங்கோடு என்பதற்கு—அழகு மிக்க சிவந்த நிறம் வாய்ந்த குன்று என்று பொருள். திரு = அழகு. கோடு = மலை.

(2) கோடிமாடச்செங்குன்றூர் என்பதற்கு—கொடி = விழா மலியும் இடம். மாடம்=மாடமாளிகைகள் நிறைந்தது. செங்குன்றூர் = செங்கோடு என்னும் மலை அமைந்த ஊர் என்பன பொருள்கள். செங்கோடு = சிவந்த நிறமுடைய மலை.

(3) தெய்வத்திருமலை என்பதற்கு—தெய்வம்விளங்கும் அழகுமிக்க மலையென்பது பொருள். "தெய்வச்செங்கோட்டில் வாழும் செழுஞ்சுடரே" என்பது அருணகிரிநாதர் பாடிய கந்தலங்காரம். 23-ஆம் செய்யுளின் சொற்றொடர்.

(4) நாககிரி என்பதற்கு-நாகம் = பாம்பு. கிரி = மலை. (5) அரவகிரி என்பதற்கு அரவம் = பாம்பு. கிரி = மலை என்பன பொருள்கள். (6) உரகவெற்பு என்பதற்கு— உரகம் = பாம்பு. வெற்பு = மலை என்பது பொருள். (7) கட்செவிக்குன்றம் என்பதற்கு— கட்செவி = பாம்பு. குன்றம் = மலை என்பது பொருள். (கட்செவி = கண்ணே செவியாகவுடையது) (8) பணிமலை என்பதற்கு-பணி = பாம்பு, மலை—சிகரம் என்பது பொருள். தந்தி = பாம்பு, நகம் = பாம்பு, பூதரம் = மலை, புசங்கம் = பாம்பு, பூதரம் = மலை. நாகம் = பாம்பு, அசலம் = மலை என்பன பொருள்கள். இச்சிவந்த நிறம் இம்மலை அடைவதற்குக்காரணம், ஆதிசேடனுடைய பருத்துயர்ந்த ஓர் சிரத்தில் ஒழுகிய உதிரத்தால் நனையப்பட்டதால் வந்த பெயர். இதுபற்றி வழங்கும் வரலாறுவது:—

"முன் ஒரு காலத்தில் மிகுந்த பலவானுகிய வாயுதேவனுக்கும் சர்ப்பராசனுகிய ஆதிசேடனுக்கும் தங்களுள் மிக்க பலமுடையவர்கள் யாவர்? என்பது பற்றிப்பெரியதொரு சொற்போர் நிகழ்ந்தது. இருவரும், தம்முன் நீதாழ்ந்தோன் நான் உயர்ந்தோன் எனக்குமுன் நீ எம்மாத்திரம்? என்று வாதாடினர். இவர்களுள் எவர் வல்லமையுடையவர் என்பதை நிர்ணயித்துக்கூற மத்தியஸ்தர் ஏற்பட்டு பந்தயம் வைக்கப்பட்டது. பாம்பின் அரசனுகிய ஆதிசேடன் மிக்க உயரமும் பருமனுமுள்ள இமயமலையைத்தனது ஆயிரம் சிரமுள்ள அகன்ற படத்தைவிரித்து மூடிக்கொள்வதென்றும், அங்ஙனம் மூடிய தனது பிடிப்பைத்தளத்தித் தன்னை அப்பால் கடத்தி விடுவது வாயுவின்செயலென்றும் முடிவு செய்யப்பட்டது. ஆதிசேடன் அம்மலையைத் தன் முழுப்

பலத்தையும் கொண்டு வளைத்துக்கொண்டான். வாயு தேவன் சரியென்றொப்பி, தன்பாலுள்ள பலத்தைக் கொண்டு மிக வலுவாக வீசினன். அவ்வேகத்தின் மூச்சைத் தாங்காது திணறிய சர்ப்பராசன் தனது படத்தைச் சற்றுமேலே தூக்கினன். வாயுதேவன் பேரோசையுடன் வீசிய காற்றின் வேகத்தினல் மேரு சிகரங்களிலொன்றும், ஆதிசேடன் சிரங்களிலொன்றும் பெயர்ந்து ஒன்றுடன் ஒன்று உராய்ந்ததால், பாம்பினது இரத்தம் மலைச்சிகரத்தில் பட்டுச் செந்நிறமடைந்து நாவலந்தீவின் ஒரு பகுதியாகிய தென்னுட்டுக் கொங்கு மண்டலத்தின் நிலப்பரப்பில் வந்து வீழ்ந்தது. அதனல் அம்மலை அதுமுதல் திருச்செங்கோடு என்று பெயர் வழங்கத் தொடங்கியது.

## மற்றொரு வரலாறு.

தெய்வப் பசுவாகிய 'காமதேனு' சிவபெருமானிடமிருந்து ஐந்து மலைச்சிகரங்களைப் பெற்று அவைகட்குக் (1) கஞ்சமலை என்றும்; (2) சங்ககிரி என்றும்; (3) புஷ்பகிரி என்றும்; (4) ஊராச்சிக்கோட்டைமலை என்றும்; (5) நாகமலை

---

(1) இது நீலநிறமுடைய கொடுமுடி. இதில் பல்லாயிரம் மூலிகைகளும், இரசகந்த பாஷாணங்களும், முக்கரணிகளும் நிறைந்திருக்கின்றன. (2) இது ஓமாக்கினியைக் குவித்தது போன்ற உருவமுடையது, அக்கினி நிறம். (3) இது தங்கநிற முடையது. (4) இது குண்டலாகாரமும் வெண்ணிறமுமுடையது. (5) வாயுதேவன் தனது வல்லமையால் ஆதிசேடனது விடம் பொருந்திய சிரமுடியைப் பெயர்த்தெறிய இது வந்து விழுந்ததனல் செங்கோடு என்றும், இரத்தகிரி என்றும், சோணகிரி என்றும் பெயர்களைப் பெற்றன.

அல்லது திருச்செங்கோடு என்றும் பெயர்களிட்டு அவ்வவ் இடங்களில் நிலைபெறச் செய்தன. திருச்செங்கோட்டிற்கும், சங்ககிரி ரயில் நிலயத்திற்கும் நடுவிலுள்ள புஷ்பகிரிக்கு "மோரூர் கிரி" என்ற ஓர் பெயர் வழங்கப்படுகிறது. ஊராச்சிக்கோட்டைமலை பவாநிக்கு அருகிலிருக்கிறது. கஞ்சகிரி சேலத்திற்குப் பக்கத்தேயுள்ளது. சங்ககிரி, திருச்செங்கோட்டுக்கு 7-ஆவது கல்லில் இருக்கிறது. * நாகமலை சிவசத்திகளது சேர்க்கைபெற்று அதிசயிக்கத்தக்க சிறப்புடன் தென்னாட்டுக்கே ஓர் திலகமாய் விளங்குகிறது. சர்ப்பராசனது உதிரத்துடன் கூடிய மலைச்சிகரமும், காமதேனுவினால் நிலைநிறுத்தப்பட்ட மலைச்சிகரமும் ஒன்று சேர்ந்ததென்று கூறப்படும் இத்தெய்வத் திருமலையில் மாதிருக்கும்பாதியானும், மாமுருகனும் கோயில்கொண்டு விளங்குகின்றனர்.

## மலையும் — அதன் தோற்றமும்.

சிறப்புற்ற அரவகிரியின் தோற்றம் தூரத்திலிருந்து காண்போர் கண்களுக்குக் குன்றின் உயரிய சிகரம், சிவலிங்கத்தின் திருவுருவைப் போலவும், பேருருவமுடைய ஒரு பெரும்பாம்பு, கீழ்த்திசையில் தனது பெரும்படத்தை அகலவிரித்து இருகூறுக உயர்ந்தும், தென்மேற்றிசையில் பாம்பின் உடல்போலச் சிறுத்திருப்பதுபோலவும் தெரிகின்

---

* அநாதிமல பரமபதியாகிய சிவபெருமான் ஆன்மாக்களை ஆட்கொள்ளும் பொருட்டு முழுக்கருணையோடு எவ்வுயிர்க்கும் தாமே தாய் தந்தையரென்று காட்டுவான்போலும் கொண்ட உருவத்திருமேனியாய் விளங்கும் ஒப்பற்ற ஏகாந்தத்தலம் கொங்குமண்டலத்து பூந்துறைநாட்டிலுள்ள நாகாசலம் என்பது.

றனர். இதுபற்றியே இம்மலைக்கு இடபகிரி என்றும்; நாக கிரி, நாகாசலம், பணிமலை, அரவகிரி என்றும் பெயர்கள் வழங்கப்பட்டனபோலும்! செந்நிறமாகவும், மஞ்சள் வர்ண மாகவும் தோன்றும் இத்தெய்வமலை, சூரியோதய காலத்தி லும், அஸ்தமன சமயத்திலும் ஓர் விதமான ஒளிபெற்று விளங்குவது கண்ணுக்கு இனிய காட்சியாயிருக்கிறது. மேலைத்தெருவிலிருந்து பார்த்தால் இந்நாகாசலம், பாம்புரு வத்தைப்போல் தோன்றுகிறது. இம்மலை, கீழ்ப்புறம் சமுத் திரமட்டத்துக்குமேல் 2000 அடி உயர்ந்திருக்கிறது. இத் திருச்செங்கோட்டுக்கு, மேலே குறித்த பெயர்களேயன்றி, அர்த்தநாரீச்சுராலயம், முருகாசலம், தாருகாசலம், திருவேரகம், என்றும்; † கோதைமலை, முத்தமலை, கடகமலை, துர்க்கை மலை, முத்திமலை, சித்தர்மலை, § சேடமலை, தெய்வமலை, சிவ மலை, சஞ்சீவிமலை, வாயுமலை, பொருதுமலை, வந்திமலை, அழகு மலை, தாருமலை, சூதமலை, தவமலை, அனந்தன்மலை, தங்கமலை, யோமலை, மேருமலை, கொங்குமலை, என்றும்; சுத்தகிரி, ஞான கிரி, இரத்தகிரி, சோணகிரி, பிரம்மகிரி, தீர்த்தகிரி, தர்மகிரி, கந்தகிரி, பதுமகிரி, தேநுகிரி என்றும் பெயர்கள்பெற்று அவைகள் தமிழ் நூல்களுள்ளும் இடம் பெற்றுள்ளன.

ஆதிசேடனும், வாயுவும் தங்கள் தங்கள் பலத்தைக் காட்ட நேர்ந்த சொற்போரில் இங்குவந்து வீழ்ந்த ஆண் நாகச் சிகரமும், காமதேனு, பரமேச்சுரன் அருள்பெற்றுக்

---

§ நாகராசன் நாடொறும் வணங்குவதனால், செங்குன்றூர், சேடமலை, சேடகிரி என்ற பெயர்களைப்பெற்றன. † கோதை முனிவன் வசிக்கின்ற ஆசிரமத்தை இக்கிரி சார்ந்துளதால், இது கோதைமலை என்று பெயர்பெற்றது.

கொணர்ந்த பெண்நாகச் சிகரமும் ஆகிய இவ்விரண்டும், சிவனும் உமையும்போலக் கூடிப்பிரியாதிருக்கின்றன என்பது இங்கு ஓர் ஐதிகமாகவும். (ஐதிகம்=உலகுரை.) நாககிரி பால்வண்ணமும், மற்றொருபாகம் பச்சை வண்ணமுமாக ஓர்பாகம் விளங்குவது, உமையுடையவும், சிவனுடையவும் நிறங்களைப்போலப் பிரகாசிக்கின்றன என்பது மற்றோர் ஐதிகமாகவும் வழங்கப்படுகிறது.

## நாடும்—கூற்றமும்.

பண்டைய காலந் தொட்டு, சாதி சமய ஆசாரக்கொள்கை, நீர்ப்பாசனவகை முதலியனவும் அன்றன்றறிந்து உரிமை வரம்பு கடவாது நடத்துவதற்காக நாடு என்று ஓர் பிரிவை நமது தென்னாட்டுத் தமிழரசர் பிரித்துவைத்தனர். இப்பிரிவில் ஊர் அதிகாரி, நாட்டதிகாரி என்று இருவகையினர் இருந்தனர். பல சிற்றூர்கள் சேர்ந்தது ஊர் எனப்படும். ஊர் என்பது கிராம அதிகாரி வசிக்கும் இடம். அந்த இடத்தில் சிவாலயம், விஷ்ணுவாலயம், கணேசர் ஆலயங்களும், காளி, மாரி, அங்காயி முதலிய சிறு தேவதைகள் சிற்றாலயங்களும், கிராமதேவதை, எல்லைக்கறுப்பு முதலிய கோயில்களும் விளங்கியிருக்கும். கிராமத் தலைவன், பெரிய தனக்காரன் என்னும் இவர்களது செயல்கள் நடைபெறுவதற்பொருட்டு, கணக்கன், தண்டற்காரன், மணியகாரன், ஊர் காவலர் முதலியவர்கள் அங்கு முதன்மையாக விருப்பர். அந்த ஊர்களில் "கிராமச் சாவடி" என்று ஒன்றிருக்கும். அவ்வூரார் தங்கள் வழக்குகளை அவ்வூர்த்தலைமை அதிகாரியிடம் அறிவித்து நியாயம்பெறுவர்.

இங்ஙனம் பல கிராமங்கள் சேர்ந்தது ஓர் நாடு. நாட்டைச் சேர்ந்த கிராமங்களிலுள்ள வழக்கு விசாரணைகள் நாட்டதிகாரியிடம்வரும். நாட்டதிகாரிக்கு நாட்டான் என்று பெயர். சாதி-சமய ஆசார விவகாரங்களும், நீர்ப்பாசனவகை வழக்கு முதலியனவும் நாட்டான் நடு நிலை நின்று தீர்ப்புக் கூறுவன். அந்தந்த நாட்டைச் சார்ந்த மிராசுதாரர்களுடன் கூடும் கூட்டத்துக்கு நாட்டுக்கூட்டம் என்று பெயர். பல நாட்டார்கள் ஒருங்கே கூடும் கூட்டத்துக்கு மகா நாடு என்று பெயர். ஆங்காங்கு அரசர்களால் பட்டம்பெற்ற பட்டக்காரர்கள், காங்கேயன், காமிண்டன், அகளங்கன், பல்லவராயன், வேணுடன், காளிங்கராயன், வாணராயன் என்ற விருதுப்பெயர்களைக்கொண்டு அந்த மகாநாட்டு அங்கத்தவர்களாயிருப்பார்கள். இவ்வாறு பல மகாநாடுகள் அக்காலத்தில் ஆங்காங்கு அவ்வப்போது கூடி நாட்டை நன்முறையில் பண்படுத்தி மக்களை ஒற்றுமைக்குள்ளாக்கி ஒன்றுபட வாழ்வதில் வழிசெய்திருந்தனர். இவற்ருல், அக்காலத்தில் அந்தந்த நாடுகள் உயர்ந்த சிறப்பில் மேன்மை பெற்றிருந்தன. இந்த நன்முறைகளைப் பிற்காலத்துக் கல்வெட்டுக்களிலும் ஆங்காங்கு நன்ருக விவரிக்கப்பட்டிருக்கின்றன.

தொன்மைக் காலத்தில் கொங்கு நாடு. வட கோங்கு, கீழ்க்கோங்கு, மேல் கோங்கு, மழ கோங்கு என நான்கு பிரிவுகள் பெற்றிருந்தன. காவிரி நதிக்குக் கிழக்கும், வடக்கும் கொல்லி மலையை எல்லையாகக்கொண்டு விளங்கியது வடகோங்கு, கோயமுத்தூர் பேரூர் தொடங்கியது மேல் கோங்கு, கருவூர், பழநி, கீரனூர் தென் கோங்கு, மழ கோங்கு சேலம், ஆத்தூர் முதலிய இடங்களைக்கொண்டது.

இங்ஙனமுள்ள கொங்கு நாட்டில் தான், முதன்மை யாக இருபத்து நான்கு நாடுகள் பிரிக்கப்பட்டிருந்தன. அவை :—

1. பூந்துறை நாடு. 2. தென்கரை நாடு. 3. காங்கேயநாடு. 4. பொங்கலூர் நாடு. 5. ஆறை நாடு. 6. வாரக்க நாடு. 7. திருவாவினன்குடி நாடு. 8. மண நாடு. 9. தலையநாடு. 10. தட்டய நாடு. 11. பூவாணி நாடு. 12. அறைய நாடு. 13. ஒடுவங்க நாடு, 14. வடகரை நாடு. 15. கிழங்கு நாடு. 16. நல்லுருக்க நாடு. 17. வாழவந்தி நாடு. 18. அண்ட நாடு. 19. வெங்கால நாடு. 20. காவடிக்க நாடு. 21. ஆனைமலை நாடு, 23. காஞ்சிக் கோயில் நாடு, 24. குறுப்பு நாடு என்பன. பூந்துறை நாடு, காவிரி நதியின் இடையிலேயுள்ளது. கிழக்கேயுள்ளது கீழ்கரை. இக்கீழ்கரை பூந்துறைநாட்டுக்குன்றத்தூர்க் கூற்றத்தைச் சார்ந்தது. இதுவே திருச்செங்கோடு என்ற சிவதலம். இத்தலம். கொங்கு மண்டலத்திற்கே பொதுவும் முதன்மைபெற்றதுமான "தேவநகரம்." இத்திருத்தலத்திற்கு வடகீழ்ப்புறத்தில் சுமார் ஏழு கல்லில் இருப்பதும், மலைமீது கோட்டைக்கொண்டு விளங்குவதுமான கடித்தலம், சங்ககிரி துர்க்கம் என்னும் பெயரையுடையது. (கடித்தலம்—காவல் செய்யும் இருக்கை.)

கீழ்கரைப் பூந்துறை நாடு காவிரி நதியின் இடையிலும் வடகரையிலும் உளதென்பதை, வாக்கிற்கு அருணகிரி என்று வியந்தோதப்பெற்ற திருப்புகழ்ப்பேராசிரியர் தாம்பாடிய "கந்தரலங்காரம்" என்னும் அரிய இனிய நூலில் 26-ஆம் செய்யுளில் "கரிக்கோட்டு முத்தைக்கொழித்தோடும் காவிரிச் செங்கோடன்கிலை" என்று கூறுவதால் தெளியப்படும்.

## இடமும்—வழிகளும்.

இத்திருத்தலம், சேலம் ஜில்லாவின் இரண்டாவது தாலூகா. இதுவே இத்தாலூகாவின் தலைநகரமும் ஆம். இது சேலம் எஸ். ஐ. ஆர். ரயில் நிலயத்திற்கும் (ஜங்ஷனுக்கும்) ஈரோடு ஜங்ஷனுக்கும் இடையிலுள்ள "சங்ககிரி" ரயில் நிலயத்திலிருந்து தென்கிழக்கில் ஐந்து கல்லில் இருக்கிறது. இந்தத்தலத்திற்குச் சுவாமி தரிசனத்தின் பொருட்டு யாத்திரையாக வரும் அன்பர்களுக்கு ஏழு வழிகள் நல்ல கப்பி ரோட்டுகளுடன் இருக்கின்றன. ஒன்று சேலத்திலிருந்து ஆட்டையாம்பட்டி, காளிப்பட்டி மல்ல சமுத்திரம் வழியாக வருவது. மற்றென்று, நாமக்கல், இராசிபுரத்திலிருந்து குமரமங்கலம் வழியாக வருவது. பின்னொன்று பாண்டமங்கலம் பரமத்தி வழியாக வருவது. பிரிதோன்று பவானி குமாரபாளையத்திலிருந்து வருவது. மற்றுமொன்று, இடைப்பாடி சங்ககிரியிலிருந்து வருவது, பின்னுமொன்று, கோழிக்கால்நத்தம், வையப்ப மலையின் வடகிழக்கிலிருந்து வருவது. வேறென்று ஈரோடு பள்ளிபாளையத்திலிருந்து வருவது. இவ்வழிகளிலெல்லாம் மோட்டார் பஸ்கள் எந்த நேரமும் வாடகைக்குக் கிடைக்கும். வடக்கில் சென்னை முதலிய இடங்களிலிருந்தும், தென்றிசையில், கோயமுத்தூர் போத்தனூர்களிலிருந்தும் அர்த்தநாரீச்சுரரை அன்புடன் தரிசிக்கவரும் பக்தர்கள் தென்னிந்திய இருப்புப்பாதையின் வழியில் மிக எளிதாக வரலாம். இவ்விரு வழிகளிலும் ரயில் வண்டியில் வருகின்றவர்கள், சங்ககிரி துர்க்கம் ரயில் நிலயத்தில் வந்து இறங்கவேண்டும். ஸ்டேஷனுக்கு வெளியில் குறைந்த கூலியில் குதிரை, மாடுகள் கட்டிய வண்டிகளும்,

மோட்டார்பஸ்களும் எப்பொழுதும் கிடைக்கும். பதினைந்து அல்லது இருபது நிமிஷ நேரத்தில் திருச்செங்கோடு சென்று சேரலாம்.

சங்ககிரியும் யாத்திரைத்தலமே. பார்க்கத்தகுந்தது. மலைமீது கோட்டையும், கோயில்களும் இருக்கின்றன.

## மூர்த்தியும் — பெயர்களும்.

I

"ஆதி யாயவ னருமி லாதவன்
போது சேர்புனை நீண்முடிப் புண்ணியன்
பாதி பெண்ணுரு வாகிப் பரஞ்சுடர்
சோதி யுட்சோதி யாய்நின்ற சோதியே."

—தேவாரம்.

II

"தோலுந் துகிலுங் குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய்! கோத்தும்பி."

—திருவாசகம்.

நாடும் கூற்றமுமாகிய நலங்கள் சிறந்த இச்செங்குன்றூர்த் திருமலைமீது, சேர, சோழ, பாண்டிய, தொண்டை, நடு, ஈழம் ஆகிய நாடுகளிலும், மற்றெங்கும் காணமுடியாததும், கேட்கக்கூடாததுமான புதுமை நிரம்பி அன்பு இன்ப வடிவத்தில், சிவபெருமான் கோயில் கொண்டு தம்மை

வணங்கும் அடியார்களுக்குத் தரிசனம் தந்து அருளுகின்றனர். திரு நிரம்பிய இவ் அருள் வடிவு ஆணும், பெண்ணும் ஒரு சேர இணைந்து பிணைந்து அற்புத மூர்த்தியாய் இன்ப சொரூபமாய் முழுக்கருணையுடன் எவ்வுயிர்க்கும் தாமே தாயும் தந்தையும் ஆமென விளங்குமாறு தோன்றுகின்றது. இத்திவ்விய கோலத்தை வடமொழியாளர் அர்த்தநாரீச்சுரர் என்றும், தென்மொழி வல்லார்கள் மாதிருக்கும் பாதியான், மாதொரு பாகன், உமைபங்கன், மங்கை பங்கன், மலைமகள் கூறுடையான், பெண்ணொரு பாகன், பெண்ணொரு கூறன், பணைத்தோளியோர்பாகம், "தோடுடைய செவியன்" "மடவாள் திருமார்பன்" "பந்தணவும் விரலாளொரு பாகம் அமர்ந்தருளி" "ஏலமலர்க்குழலாளொரு பாகம்" "கோத்தார் மலர்க்குழலாளொரு கூருய்" எனவரும் பெயர்களால் வழங்கப்படுகின்றனர்.

அர்த்தநாரீச்சுரர் என்பதற்கு அர்த்தம்—பாதி. நாரி—பெண். (பார்வதி) ஈச்சுரர்—கடவுள். (சிவபெருமான்) என்பது பொருள். இப்பொருளைப்போலவே, தமிழ் மொழியில் வழங்கப்படுகின்ற மாதிருக்கும்பாதியான் முதல், கொத்தார் மலர்க் குழலாளொரு கூருய் என வரும் பெயர்கள் வரை பொருள் கொள்க.

எல்லாம்வல்ல இறைவனுகிய மாதிருக்கும் பாதியான் கொண்ட திருக்கோலத்தை, காழிவள்ளல் ஸ்ரீ ஞானசம்பந்தப் பிள்ளையார், கொங்கு நாட்டுத் தலயாத்திரையில் செங்குன்றூர்க்கு எழுந்தருளி மலைமீது சென்று தரிசித்தபோது சிவபெருமான் நின்ற கோலமாய் தரிசனம் அருளிய திருவழகை நின்ற அந்தணர், நின்ற தலைமகன், நின்ற நீறூரு செஞ்

சடையன், நின்ற சேடன், நின்ற வேதியன் என்று தமிழ் மறைகமழும் தமது திருவாயால் சிறப்பித்துப்பாடியிருக்கின்றனர்.

மாதிருக்கும் பாதியானுகி அமர்ந்திருக்கும் மூலத்தானம், தென்னுட்டுச் சிவாலயங்களிலிருப்பதுபோல் இல்லாமல் மேற்றிசை நோக்கி இருக்கிறது.

இப்பெருமானது திருவுருவம், வலது பக்கம் ஆண் வடிவமாகவும், இடதுபக்கம் பெண்ணுருவமாகவும் விளங்குகின்றது. இக்கருத்துப்பற்றியே இறைவன் கோயில் கொண்டு விளங்கும் திருமலை, இருதலை நாகபாம்பு வடிவு கொண்டிருக்கின்றதுபோலும்! இவ்வுருவ அமைப்பைக் கொண்டே இம்மலைக்கு "நாகமலை, பணிமலை, அரவகிரி" என்று பெயர்கள் வழங்கத்தொடங்கியதோவெனக் கருத வேண்டியதாகின்றது. உயரமான இரண்டு சிகர வடிவில் தோன்றும் மலை, ஒரு சிகரம், ஆண்வடிவு என்றும், மற்ருெரு சிகரம், பெண்வடிவு என்றும் பெரியோர்கள் பேசுகின்றனர்.

பரந்த இவ்வுலகத்திலே மக்களுள் ஆண் உருவத்தையும், பெண்ணுருவத்தையுமே நாம் இக்கண்களில் காண்கின்ருேமேயன்றி, இங்ஙனம் திருமுடியிலிருந்து, திருவடி வரையிலும் இடதுபாகம் பெண் வடிவமாகவும், வலதுபாகம் ஆணுருவமாகவும் ஒருசேரப் பிணைந்து இருக்கும் அதிசய உருவத்தைக் கண்டோமில்லை. இங்ஙனம் எங்கும் காணுததொரு அற்புத உருவத்தை இத்தலத்தில் இறைவன் கொண்டிருப்பது என்ன புதுமை! என எவரும் எண்ணுவர்.

## ஆராய்ச்சி.

"மனித தேகத்தின் அமைப்பையும், பூதப்பிராணிகளின் பருவுடல்களின் அமைப்பையும் நாம் கவனிப்போமாயின், ஒவ்வொரு தேகமும் இருவேறு வகை ஒட்டுகளாக அமைக்கப்பெற்றிருப்பது தெளிவாகப் புலனாகும். ஆணும் பெண்ணும் கூடுகின்ற முறையிலே ஊர்வனவும், நடப்பனவும், பறப்பனவும், செயற்கொண்டிருப்பனவும் ஆகிய எவற்றிலும் வேறுபாடில்லை. இவ்வாறு சேர்க்கையிலே உண்டாகின்ற உடம்புகள் ஒவ்வொன்றும் தத்தம் தாயும், தந்தையுமாகிய இருவகை இயல்பும் இயைந்தே நிற்கவேண்டுமென்பது நெறியாகத் தெரிகின்றது. அவ்வாறேதான் பிரபஞ்சத்தி லுள்ள தேகங்கள் அனைத்தும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

மனிதர்க்கு வலதுபக்கமாகிய ஆண்பகுதியும், இடது பக்கமாகிய பெண்பகுதியும் தம்முள் இணைந்து நிற்கின்றது. என்று உடல் நூலாரும்; ஆண்மக்களுக்கு வலப்பாகத்தில் பற்றிய நோய் வலிவுடையதென்றும், இடப்பாகத்தில் பற்றிய நோய் எளிமையுடையதென்றும் அது விரைவில் குணமடையுமென்றும் மருத்துவநூலாரும் கூறுகின்றனர்.

மின்னசாரம் என்பது, ஒருவகைச்சக்தி, அஃது ஆண்-பெண் (Pasitive and Negative) என்று இருவகைப்படும். அவையிரண்டும் ஒன்றுகூடினால் மின்சார விசை (Current) ஏற்பட்டு நமக்கு ஒளி முதலிய நன்மைகளைச் செய்கின்றதென்றும், அதுவே உயிரின் நிலைக்கு உறுதியான காரணமென்றும், தத்துவநூல் வல்லார் சாற்றுவர்.

நமது தேகத்திலும், இவ்விதமான ஒருவகை மின்சார சக்தி பரவி இருக்கிறதென்றும், அதுவே உயிரின் வாழ்க்கை நிலைக்கு உறுதியுடையதென்றும் உடல்நூலாரும் உரைப்பர்.

தாங்குதற்சத்தியும், அறிதற்சத்தியுமாகிய இருவகைச் சத்திகளும் கருவிலேயே அமைந்து, நாளடைவில் உடற்கூறு முதிர்ந்து வளரத் தாமும் உடன்வளர்ந்து உடம்பிற் பரவிய உயிர்ச்சாரமாகிய மின்சாரமாய் விளங்குகின்றன. இதுவே,

"உரைசேரு மெண்பத்து நான்கு
நூருயிரமாம் யோனி பேதம்
நிரைச்சேரப் படைத்தவற்றின்
உயிர்க்குயிராய் யங்கங்கே நின்ருன்"

என்று ஸ்ரீ ஞானசம்பந்த மூர்த்திகளும்;

"பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறு மெழுந் தருளியபரனே"

என்று ஸ்ரீ மாணிக்கவாசகப்பெருமானும் அருளியவாறு இறைவன், சத்தி சமேதனுகச் சகல சீவராசிகளுக்குள்ளும் உயிர்க்கு உயிராய் நின்றியக்கும் தன்மையனுக விளங்குகின்றனன்.

இங்ஙனம் உருவத்திலும், சத்தியினுலும், ஒரு பாகம் (வலம்) ஆணும், மற்ருெருபாகம் (இடம்) பெண்ணுமாக இணைந்து பிணைந்துள்ள உடம்புகளைத் தானே நாம் அசையும் பொருள், அசையாப் பொருள்கள் அனைத்திலும் காண்கின்ருேம். தவயோகிகளும், சித்தமூர்த்திகளும், வித்தகர்களும் இப்பிரபஞ்சமெல்லாம் இறைவன் திருவுருவமாகக் கண்டு

பார்த்த இடமெல்லாம் பரவெளியாயிருப்பதைப் பார்த்து மகிழுவர். அவ்வுத்தமர்கள்தான் அனுபவத்திலே காணக் கூடியவர்கள். உலகமெல்லாம் பரமேசுவரனுடைய நிறைவே நிறைவாகவும், எல்லாம் அவனுடைய அருவமே திருவுருவமாக நிறைந்திருக்கின்றன. இவ்வாறு சகமுழுதும் தானும், தையலுமாய்ப்பரவி நிறைந்து நிற்கும் தன்மை இறைவனுக்கே உரியது. இதனைத்தான் திருமூலர் "எங்குந் திருமேனி" என்று குறிப்பிட்டனர் என்று கோவை, சிவக் கவிமணி ஸ்ரீமத் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் சென்னை, "செந்தமிழ்ச் செல்வி" மாதப் பத்திரிகையில் எழுதியிருக்கின்றனர்.

II

"மாதொருபாகங்கொண்ட மகாதேவன் வடிவத்தில் ஆண் வலத்திலும், பெண் இடத்திலும், அமைந்து நிற்க வேண்டிய காரணம் யாது? என்பதை ஒரு சிறிது ஆராய்வாம்.

மக்களுக்குள்ள கைகள் இரண்டில் ஒன்று, மற்றொன்றைவிடச் சிறப்புடையதென்று கருதப்படுகின்றது. இச்சிறப்பு யாதாயினும், ஒன்றைச் செய்யுங்கால், அவைகளிற் காணப்படும் வேற்றுமையாற் பிறப்பது. கண் இமைகளில், மேல் இமை அசையும் தன்மையுடையது; கீழ் இமையோ! அசையாமல் நிற்பது. இங்ஙனமே கைகளிலும் ஒன்று அசைந்து திரிந்து தொழில் இயற்றும், மற்றொன்று அதற்கு இசைந்து இருந்து தொழில் இயற்றும். திரிந்து செய்யும் கைக்கும், இருந்து செய்யும் கைக்கும் உள்ள வேற்றுமை விளங்கும்பொருட்டு அவைகளுக்கு

வெவ்வேறு பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன. வலக்கை என்பது வலிமையுடைய கை என்று பொருள்தரும். இடக்கை என்பது அதிகமாய் அசையாமல் தன்னிடத்தி லேயே இருக்குங்கை யென்று பொருள்கொள்ள இடந் தரும். ஆதலின், சென்று செலுத்துங்கை வலக்கை. நின்று நடத்துங்கை இடக்கை. ஒன்றின் தன்மை வன்மை எனவும், மற்றொன்றின் தன்மை மேன்மை எனவும் கூறுதல் தவருகாது. இதனால், வலதுபக்கம் ஆணும், இடதுபக்கம் பெண்ணுமாய் விளங்கும் "மங்கைபங்கன்" வடிவம் ஒரு வாறு தெளிவாக அறியப்படும்.

கணவனும் மனைவியும் வெளியில் இருவராகவும், வீட்டுள் ஒருவராகவும் இருப்பர் என்பது யாவரும் அறிந்ததோர் உண்மை. இவ்வுண்மையைப் பசுமரத்து ஆணிபோல் மனதில் பதியவைப்பதற்குப் பச்சைநிறப்பார்வதியும், பவளநிறப் பரமனும் இருபாதியாகி ஒருவர் ஆயினர்போலும்! உள்ளத்தில் நிகழும் ஒற்றுமை மாதொருபாகன் உருவத்தில் உடலிலுந் தோன்றுகின்றது. முகத்தில் கண்கொண்டு காண்பவர்க்கு கணவனும் மனைவியும் பிரிந்து இருவராகத் தோற்றுவர். அகத்தில் கண்கொண்டு நோக்கின், இருவரும் ஒருவரே என்பதில் ஐயமில்லை.

காலைச்சூரியன் கடுங்கதிர் பரப்பிக் காய்வதுபோல் ஆண்மையும், வலிமையும், சினமும் நிறைந்து பிரகாசிப்பது ஆணின் இயல்பு.

குளிர்மதியுடைய சந்திரனைப்போல் உள்ளம் குளிர்ந்து, அடங்கி விளங்குவது மங்கையர் தன்மை. பெண்ணை ஒரு

கூறுகக்கொண்ட பெருமான் உருவத்தில் சூரியன் வலக் கண்ணுகவும் சந்திரன் இடக்கண்ணுகவும் அமைந்திருக்கின் றன என்று அறிஞர் அறைவர்.

பரமன், தமது தேகத்தில் பாதியை உமையவளுக்கு ஈந்தான் என்பதனுல் ஏற்படும் பொருள் யாதென்பதைக் கவனிப்பாம்:—

ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள ஒப்பு நிலைமை "உடலிற்பாதி உமையவளுக்கீந்தான் பரமன்" என்றதனுல் விஷயம் இன்னும் தெளிவாய் விளக்கமாகின்றது.

இல்லறத்தை நல்லறமாய் நடாத்துதற்கு, தம்முள் ஒரு சிறிதும் உளத்தில் வேறுபாடின்றி ஒற்றுமை ஓங்க ஒரு தன்மையராய் உருவும், திருவும், பருவமும், குலனும், அன் பும் ஆகியவைகளில் ஒத்த நலனுடையார் இருப்பின், அவர் கள் வாழ்க்கை ஓங்கி நிற்கும் என்பது யாவரும் நன்கு அறிந்த செய்தி.

நெற்றிக்கண்ணுடைய நீலகண்டன் பவளமேனியன் ஆனதற்கும், என்றும் இளமை மாருது தீர்க்க சுமங்கலி யாய் விளங்கும் பார்ப்பதியம்மையார் பச்சைநிறமுடையவ ளாய் விளங்குதற்கும் காரணத்தைக் கவனிப்பாம்.

சிவந்தெழும் சூரியனின் சுடுகதிர் ஏழும், வேறு வேறு நிறங்கள் பெற்ற ஒளிகளால் உடையதென்பது ஒப்ப முடிந்த உண்மை. இந்த ஏழு நிறங்களில் இள நீலநிறம் இடதுபக்கத்து இறுதியிலும், சிவந்தநிறம் வலது பக்கத்து ஈற்றிலும் அமைகின்றன. இதனுலும் வலது பக்கம்

ஆணும், இடதுபக்கம் பெண்ணுமாய்த் தோன்றுகின்ற மாதிருக்கும்பாதியானது உருவத்தை அறியலாகும். சிவந்த நிறம் ஆண்தன்மையையும், இளநீலநிறம் பெண்மைத் தன்மையையும் எப்படியோ குறிப்பால் உணர்த்துகின்றன.

மற்றொன்றையும் நோக்கிக் கவனிப்போம், மரம் செடி, கொடிகளின் இலைகள் முதிராமல் இளமையாயிருக்கும்போது பசுமை நிறத்தையும், முற்றிப் பழுக்கும்போது மஞ்சள் அல்லது சிவந்தநிறத்தையும் அடைவதைக்காணும் போது இளமை பசுமை நிறத்தோடும், முதிர்ச்சியைச் செந்நிறத்தோடும் ஒப்பிடுதல் பொருந்தும். உண்மையில் இக்கருத்து நம் எல்லோருக்கும் இருக்கிறது. அறியாத குழந்தையை, "பச்சைக்குழந்தை" "பசும்பாலன்" என்றும்; வயது ஏறியவனை "பழுத்தகிழவன்" என்றும் நாம் கூறுவது இக்கருத்தை அறிந்தே. சத்திக்கும், சிவனுக்கும் இதனைப் பொருத்திப் பார்க்க உண்மை விளங்கும்" என்று, வேலூர் ஊரீஸ் காலேஜ் தலைமைத் தமிழாசிரியர் திருவாளர் க. ப. சந்தோஷம் B. A., L. T., அவர்கள் சென்னை, செந்தமிழ்ச் செல்வியில் எழுதுகிறார்.

இங்ஙனம் செங்குன்றூர்த் திருமலைமீதுள்ள திருவாலயத்தில் அமர்ந்து விளங்கும் அர்த்தநாரீச்சுரர், மேற்றிசை நோக்கி நின்ற திருக்கோலமாகவும், கொற்றமிகும் வெற்றி வேற்கடவுள் கிழக்கு முகமாகவும் இருந்து, வணங்கித் துதிக்கும் அடியவர்களுக்கு இம்மை, மறுமை இரண்டினும் புகலிடம்தந்து அருளும் சிவமூர்த்தத்தின் சிறந்த பேரழகினைச் செப்புதற்குச் செந்நா ஒன்று போதாது.

இத்திருவுருவம் கற்சிலையன்று. செம்பு, வெண்கலம், பித்தளை முதலிய லோகங்களுமன்று. மகத்தான யோகம் வல்ல சித்த மூர்த்திகளால் ஆக்கப்பட்ட ஓர்வித அமைப்பு என்று அறிஞர்கள் எண்ணுகின்றனர். அர்த்தநாரீச்சுரர் அருகில் தென்பகுதியில் அம்மையார் பூசித்த 'மரகதலிங்கம்' பேடகத்துள் இருக்கிறது. மேற்றிசை நோக்கிய திருமுக மாதலின், மகாமண்டபத்துக்கு மேற்குவாயில் அமைக்கப் படவில்லை. மேற்கு மண்டபத்துக் கற்சுவற்றில் ஒன்பது துளைகளுள்ள சித்திரப் பலகணியொன்று செதுக்கப்பட்டுள் ளது. தெற்குத் திருவாயிலினின்றும் புகுந்து வந்து இறை வனைத் தரிசிக்கவேண்டும். மேலே குறித்த பலகணியின் முன்னே, விமானம், சபாமண்டபம், நந்திமண்டபம், கோடிக் கம்பம், உயர்ந்த பலிபீடம், மேற்குத்திருவாயில், திருக்கதவு முதலியன இடையிடையே, குறுக்கும், அடைப்புமாயிருந் தும், ஆண்டின் மூன்றுநாள், செஞ்ஞாயிறின் செஞ்சுடர்க் கதிர்கள், ஒன்பது துளையுட்சென்று ஒன்பது ஒளிகளாகச் சிவந்து திருப்பாதத்தைத் தொட்டுத் திருமுடியுங் கண்டு மறைகிறது. இச்செயல், மூர்த்தியின் ஒப்பற்ற சிறப்பைச் செவ்வனே விளக்குவதாகும்.

ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருந்தகை, இறைவனைப் "பெண் ணொருகூறன்" என்று அடிக்கடி தமது தேவாரத்தில் எடுத் தோதுவதன் நுட்பம், ஈண்டு எடுத்த பொருளுக்கு இன்றிய மையாதிருப்பதன் பொருட்டேயாம். ஞானசம் பந்தர் இடையீடின்றி இந்நுட்பத்தை மேலும் வன்மை யுடன் கூறுவதன் நோக்கம் யாதெனில், உலகம், பெண் ணோடு கூடி வாழ்ந்து இயற்கை வடிவான இறையின்பத் தை உண்ணவேண்டுமென்பதே அவரது பெருநோக்கம் என்று சுருங்கச் சொல்லலாம்.

"வெந்தவெண் ணீறணிந்து விரிநூறிகழ் மார்பினல்ல
பந்தணவும் விரலாளொரு பாகம மர்ந்தருளிக்
கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
வந்தணனைத் தொழுவா ரவல மறுப்பரே"

என்பது தேவாரம்.



அருபதாம்படியின் தோற்றம்.



நாகதீர்த்த—சக்கரதீர்த்தங்களின் தோற்றம்.

## தீர்த்தங்களின் பெயர்களும், மகிமைகளும்—மூழ்கிப் பேறு பெற்றவர்களும்.

கொங்கேழ் சிவத்தலங்களுள், பவாநித்தலத்தில் காவிரியும், பவாநி நதிகளும், திருப்பாண்டிக் கோடுமுடியில் காவிரி நதியும், கருவூரில் ஆம் பிராவதி நதியும் யாத்திரைவாசிகளுக்கு குளிப்பதற்கும், நீர் அருந்துவதற்கும் மிக வசதியாயிருப்பது போல், திருச்செங்கோட்டுத் திருத்தலத்தில் இல்லை. காரணம், ஊரைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் கடினமான பாரைகள் வளர்ந்து தரை, கெட்டியாய் இரும்புகட்டப் பாரைகளுக்கும் அசையாமல் இருகியிருப்பதனுல், நீர் சுரப்பதற்குக்கூடாமல் இருப்பதே. ஊருக்கு வெளியில் ஒரு கல், அரைக்கல் தூரத்தில் தோட்டப் பயிர்களுக்கு நீர்பாய்ச்சுதற்கு ஏற்றம் இறைக்கும் கிணறுகளே இருக்கின்றன. யாத்திரைவாசிகள் அவைகளிருக்கும் இடம் தேடிச்சென்று குளிப்பது சிரமமான காரியம். அடிவாரத்தில் ஆறுமுக சுவாமி கோவிலுக்கு அருகிலுள்ள இரும்பு உருளைகளிட்ட சேந்து கிணற்றிலும், ஊருக்கு வடக்கு, சங்ககிரிக்குச் செல்லும் வழியிலுள்ள பெரிய தெப்பக் குளத்திலும் ஊரார் உண்ணுதற்கு நீர் எடுப்பதால், இவ்விரண்டிலும் கூடக் குளிப்பதற்கு வசதியற்றிருக்கிறது. இவற்ருல், பொதுவில் இத்தலத்தில் ஸ்நானபானங்களுக்கு வெளியூர் வாசிகள் மிகவும் கஷ்டப்படவேண்டியவர்களே. ஸ்நான, பான, ஜப, தபங்கள் செய்த பின்னரேயே, தெய்வத்தைத்தரிசிப்பதென்ற சித்தாந்தமுடைய யாத்திரை வாசிகள், சுமார் முக்கால் மைல் தூரமுள்ள மலைமீது சென்று அங்குள்ள விஷ்ணு தீர்த்தம், லட்சுமி தீர்த்தம், கணபதி

தீர்த்தம், குமார தீர்த்தம், எனும் இவைகளில் தங்கள் தங்கள் விருப்பத்திற்கேற்றவாறு நீராடி நியமமுடித்துக் கடவுளைத் தரிசிக்கலாம்.

இனி, அரவகிரிமீதிருக்கும் தீர்த்தங்களின் பெயர்களும் அவைகள் இருக்கும் இடங்களும், அவற்றின் மகிமைகளும் மூழ்கிப் பேறு பெற்றவர்களின் பெயர்களும், சுருக்கமாக இதன் கீழ்த்தருகின்றோம்.

திருச்செங்கோட்டு மான்மியம் தீர்த்த காண்டத்தில், மலை மீதுள்ள புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கினோர் முத்திவீட்டை அடைதற்குரிய மகிமை மிகுந்த தீர்த்தங்கள் நாற்பது இருக்கின்றனவென்று கூறப்பட்டுள்ளது. ஆயின், அம் மான்மியத்தில் குறித்தபடி அத்தீர்த்தங்கள் இப்பொழுது காணப்பெறவில்லை. தற்போது மலைமீது கண்ணுக்குக் காண்பன கணபதி தீர்த்தம், பாபநாசத்தீர்த்தம், சிவ தீர்த்தம், பைரவ தீர்த்தம், சத்தி தீர்த்தம், நாக தீர்த்தம், சண்முக தீர்த்தம், குமார தீர்த்தம், சூர்ய புஷ்கரணி, சந்திர புஷ்கரணி (பெரிய அல்லிச்சுனை) முதலிய ஒன்பது தீர்த்தங்களே. இத்தீர்த்தங்களின் சிறப்புக்கள் வருமாறு:—

(1) கணபதி தீர்த்தம்:— இது, இறைவனது இடப்பாகத்து அமர்ந்திருக்கும் உமாதேவியார், தவத்தின்பொட்டு தமது மூத்தபிள்ளை விநாயகனை, மூன்று லோகங்களிலுமுள்ள புண்ணிய தீர்த்தங்கள் அனைத்தையும் ஒருங்கே கொணர்ந்து நாகாசலத்தின்மீது நாற்புறத்தும் தேக்கிவைக்கும்படி கட்டளையிட்டனர். அதன்படி கொண்டு வரப்பட்ட தீர்த்தங்களில் ஒன்று. யாத்திரை வாசிகள் இத்தீர்த்தத்தையடுத்து, பக்தி சிரத்தையுடன் வணங்கி, 'ஐயனே!

உமது ஒப்பற்ற அருளைத் தந்தருளும்' என்று விநாயகரை நினைத்துச் சுனைவடிவிலுள்ள தீர்த்தத்தில் நீராடினால், எழு பிறப்பிலும்செய்த வல்வினைகள் நீங்கப்பெறுவதோடு, சோர்க்க லோகத்தையும் பெறலாம். மற்றும், மணி மந்திர மருந்து களும் நன்றாய்ப் பலிக்கும். இப்புனித நீரில், ஆகாயவழியில் செல்லுவோர்களாகிய சித்தமூர்த்திகளும், தேவ வைத்தியர் களாகிய அசுவனி தேவர்களும், மூழ்கித் தங்கள் இஷ்ட சித்திகளைப்பெற்றனர். அத்தீர்த்தக்கரையின் அருகிலேயே அமுதசஞ்சீவியிருக்கிறது. உமாதேவியும், தேவர்களும், முனிவர்களும் மூழ்கிப் பேறுபெற்றதால், இப்புனித நீரின் ஒப்பற்ற சிறப்பை விவரிப்பது அரிது.

(2) **பாவநாச தீர்த்தம்:—** புனிதமான இந்நீர்ச்சுனை, பணிமலையின் கற்படிகளின் வழியில் இளைப்பாறும் மண்டபத் திற்குச் சுமார் 50 அடி தூரத்தில் கிழக்குத் திசையிலிருக் கிறது. இதில் மக்கள் விதிப்படி மூழ்கி இறைவனை வணங் கினால், ஊழ்வினை இருந்தவிடம் அறியாமல் ஓடுமென்றும், தேவர், முனிவர், கந்தருவர், பதினொருகோடி ருத்திரர், அட்டவசுக்கள், கின்னரர், கிம்புருடர், கருடர், காந்தருவர் சித்தவித்தியாதரர், இயக்கர் முதலியோர் தத்தம் தேவிமார் களுடன் தீர்த்தமடைந்து அத்தீர்த்தத்தைக் கரத்தால்அள்ளி, தங்கள் சிரசின்மீது தெளித்துக்கொண்டதனாலேயே தங் கள் இஷ்ட சித்திகளைப் பெற்றார்களென்றும், ஆனதனால், புண்ணியம் ஓங்கிய இத்திருச்சுனையில் மக்கள் மூழ்கினாலும், உட்கொண்டாலும், தொட்டாலும், நீர்த்திவலை, தேகத்தின் மீது தெறித்தாலும், நித்தியானந்த மோட்சம் சித்திக்குமென் றும் "தலமான்மியம், தீர்த்தகாண்டம்" சிறப்பித்துக்கூறு கின்றது. ஆகவே, ஒவ்வொருவரும் இத்தீர்த்தத்தில் மூழ்கிப் பேறுபெறுவது நலம்.

இப்பாவநாசத் தீர்த்தக்கரையிலுள்ள ஓர் கற்பாரையின்மீது மூன்று சிரம், மூன்றுகரம், மூன்றுபாதங்களுமுடைய தெய்வ உருவம் ஒன்று, சிற்பவல்லாரைக்கொண்டு சித்திரிக்கப்பெற்றிருக்கிறது. இத்தெய்வமூர்த்தத்தை, விடாசுரத்தினல்பீடிக்கப்பட்டவர்கள், நன்மலர்கொண்டு அர்ச்சித்து வணங்கினல், அச்சுர நோய் அறவே நீங்கிவிடுகிறதென்கின்றனர்.

இவற்றையெல்லாம் நன்குணர்ந்த ஈரோட்டு வர்த்தகரும், தெய்வபக்தரும், தர்மகுண சீலரும் ஆகிய செங்குந்த குல சீரியர், ஸ்ரீமான். வ. வே. கா. ரா. முருகேச முதலியார் அவர்கள், தமது சொந்தப் பொறுப்பில், அப்பாவநாசத் தீர்த்தத் தெற்குக்கரையில் வளர்ந்துள்ளதும், சுமார் முப்பது அடி நீளமுள்ளதுமான கற்பாரை, மேடும், வழுக்கலுமாய், சிறுகுழந்தைகள், பலயீனர்கள், வயதுமுதிர்ந்த கிழவர்கள் சிறிது நழுவினல், அபாயத்தை விளைவிக்குமென்றஞ்சி, அப்பாரையை ஓர் சமனுக்கிப் படிகளை வரிசைபெறவமைத்து, ஏறிச்செல்பவர்கள் இடர்ப்படாதபடி செய்து, வடக்குப் பக்கத்தில் சுமார் 30 அடி நீளத்தில் கிழமேலில் கருங்கல்லில் ஓர் கைப்பிடிச்சுவரும் எழுப்பி நன்மை செய்திருக்கின்றனர். இதுபோன்ற பொதுநலத் திருப்பணிகள், மலைமீது அதிகமாக இருக்கின்றன. செல்வம்படைத்த ஸ்ரீமான்கள் அன்புகூர்ந்து கவனிப்பின், உபகாரமாயிருக்கும். ஆண்டவனும் அவர்களுக்கு மேலும் செல்வத்தைச் சிறக்கத்தந்தருளுவர். செல்வர்கள் கவனிப்பார்களென்றே நம்புகிறோம்.

(3) **சிவ தீர்த்தம் :—** இப்புண்ணிய தீர்த்தம், மலைமீதுள்ள கற்படிகளின்மீது வரிசையாய் இருக்கும் மண்டபங்களில் தேவரடியாள் மண்டபத்திற்குச் சுமார் இருபது

முழ தூரத்தில் வடக்கில் சுனைவடிவில் இருக்கிறது. குளிப் பதற்கேயன்றி, குடிப்பதற்கும் உபயோகமாயிருக்கிறது. ஆயின், பாசிபடர்ந்துள்ளது. இதற்குக் கோபுரவாயிலி லிருந்து வருவதற்கும், மேற்படி மண்டபத்திலிருந்து செல் வதற்கும் தனியாகச் சிற்றுருவில் கற்படிகள், பாறைமீது வெட்டப்பட்டிருக்கின்றன. வடபாகத்துப் பாறை, சரிவா னதால், அதற்கு மூன்றடி உயரத்தில் கருங்கல் கைப்பிடிச் சுவர் கட்டப்பட்டிருக்கிறது. இத்திருப்பணியை, சிவபுண் ணியத்தைக்கருதிச் செய்த சிவச்செல்வர், திருச்செங்கோட் டுக்குக் கிழக்கில் மூன்ருவது கல்லில் இருக்கும் **குமரமங்க லம்** கொங்கு வேளாளரில், **தூரகுலத்துக் கங்கைகோத்திர குலசேகரன், ஸ்ரீமான். குமரபூபதி செட்டியாக்கவுண்டன்** என் னும் பெயரினர் என்று திருச்செங்கோட்டுத் **திருப்பணி மாலை** 337, 338 ஆம் செய்யுள்கள் சிறப்பித்துக்கூறுகின் றன. இவையேயன்றி "**திருமுகப்பாசுரம்**" 39 ஆம் **கண்ணியும்**,

"—நல்லசிவ
தீர்த்தநொச்சி யைங்கரனுங் **செட்டிகவுண்டன் தூர**
னேத்தும் புழைக்கை யிறையோனும்,"

என்று கூறுகிறது.

இனி, சிவதீர்த்தத்தின் சிறப்பு வருமாறு:—

புண்ணியங்கள் நிரம்பிய இப்புனலில் உலகின்கண் ணுள்ள புனித நீர்கள் அனைத்தும் வந்து புகுமாறு சிவபெரு மான் திருவுளம்பாலித்தனர். இம்மகிமை காரணமாக மூத்த நாயனுர் முதலிய தவசிரேட்டர்கள் வந்து நீராடிப் புனிதம் அடைந்தனர். இதனை அறிந்த தருமதேவதை, 'தன்மமுனி வர்' என்ற முனிவர் உருவந்தாங்கி, கொங்கின் நாகமலை

அடைந்து, சிறப்புமிக்க சிவதீர்த்தத்தில் மூழ்கி, நியமமுற்றி வைராக்கிய நிலைநின்று, சோதிமயனாகிய சிவபெருமானது திருவடிகளைப் பூசித்து அர்ச்சித்து, நாடோறும் நன்மையான நல்ல தவத்தைச்செய்து வந்தனர். அத்தவத்திற்கு மகிழ்ந்த இறைவர் எதிர் தோன்றி, 'முனிவ! யாது விரும்பித் தவஞ் செய்கின்றனை? அதனைக்கேள் தருகிறோம்' என்றனர். தன்மமுனிவர் எம்பெருமானே! எல்லாம்வல்ல தேவரீரை எனது விழிகள் எப்பொழுதும் பார்த்தின்புறவும், எனது முதுகின்புறத்துத்தேவர் திருமேனியைச் சுமந்து கொண்டிருக்கவும், அங்ஙனம் சுமக்கும் வலிமையை எனக்கு அளிக்க அருள்சுரக்கவுமே யல்லாமல், தாங்கள் இங்குத்தோன்றிக் காட்சிதந்த இந்த தீர்த்தத்திற்குச் "சிவ தீர்த்தம்" என்று பெயர் வழங்கவும், தங்களைத் தொழுபவர்கள் என்னையும் தொழவும் வேண்டுமென்று பணிவுடன் வேண்டினர். கருணாநிதியாகிய சிவபெருமான், தன்மமுனிவர் விரும்பியவாறே தந்தருளினர். அதுமுதல் தருமதேவதையாகிய தன்மமுனிவர் வெள்ளை இடபமாய்ப் பரமேச்சுரனைச் சுமந்துகொண்டு கற்பாந்தகாலம் அழியாது வாழ்ந்தனர். அன்றுமுதல் அச்சிவதீர்த்தம் "தன்ம தீர்த்தம்," "இடப தீர்த்தம்" என்று பெயர் வழங்கப்பட்டு வருகிறது. தருமதேவதை, இச்சிவ தீர்த்தத்தில் மூழ்கிச் சிவபெருமானைத் தாங்கும் பேறுபெற்றதென்றால், இதன் பெருமைக்கு வேறு சான்றும் வேண்டுமோ?

(4) **வைரவ தீர்த்தம்:**—இப்புனித தீர்த்தம், பிர்ம்மகபாலமேந்திய வைரவக்கடவுளால், அன்புகூர்ந்து மேன்மைபெற நிலைபெறுவித்தது. இது சிவதீர்த்தத்திற்குக் கிழக்கில் இருக்கிறது. இதன் ஒப்பற்ற சிறப்பைத் தவசிரேட்டராகிய

பராசமுனிவரால் கூறக்கேட்டு அதிசயித்து மகிழ்ந்த உச்சினி அரசன் மனோவஜன், தான் நாடிழந்து வருந்துவதை முனிவர்க்கு உணர்த்த, அவர், "வைரவ தீர்த்தத்தில் மூழ்கினால் இழந்த அரசைப் பெறலாம்" என்று கூறினர். அதன்படி அவ்வரசன், முனிவர் கூறியபடி கொங்குநாட்டு நாககிரி அடைந்து, புனிதமான அப்புனலில் விதிப்படி மூழ்கி, அதன் மகிமையால் இழந்த அரசைப்பெற்று இன்புற்றான்.

மேலும், இத்தீர்த்தக்கரையில் சிவபூசை செய்தவர்களும், தான தர்மங்கள் செய்தவர்களும், ஒன்றுக்கு ஆயிரமாகிய பலன்களைப்பெறுவார்கள். பேய், பில்லி, சூனியம், பார்வை, முதலிய கிரக தோஷமுடையவர்கள் இந்நீரில் மூழ்கி, புனலை உட்கொண்டு, உமையொருபாகரைத் தரிசித்து வைரவ மூர்த்திக்கு வடமலை சாத்தினால், அவை நீங்கப் பெற்று மகிழ்வர்.

(5) **தேவதீர்த்தம்:**— இது அரவகிரிமீதுள்ள புனித தீர்த்தங்கள் அனைத்திலும் மேலான மகிமைவாய்ந்தது. இந்நீர்நிலை, பால்வண்ணத் திருமேனிகொண்டு நின்ற கோலமாய் விளங்கும் நீர்மலிவேணியன், கோயில்கொண்டிருக்கும் மூலத்தானத்தின் திருவடிக்கீழ் இருக்கிறது. சிவபரஞ்சுடரைத் தீண்டிப் பூசிக்கும் ஆதிசைவ மூர்த்திகளே அத்தீர்த்தத்தைத் தொடும் உரிமைபெற்றவர்கள். அவர்களும், புண்ணிய நிரம்பிய அத்தீர்த்தத்துளி, தமது இடைக்குக் கீழுள்ள உறுப்புகளில் விழாதபடி ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். பச்சைநிற மேனி தாங்கிய பார்ப்பதியார் தவஞ் செய்யவும், மங்கைபங்கனாகிய மகாதேவன், ஈருருவும் ஓர் உருவாய் நின்றிருப்பவும், இது இடம்பெற்றதெனின், இத் தேவதீர்த்தத்தின் சிறப்பை, யாரே எடுத்தியம்ப வல்லார்.

மேலே காட்டிய இத்தீர்த்தங்களே அல்லாமல், ஆலயத்தின் வடக்கிலுள்ள அம்பாதீர்த்தமெனும் சத்தி தீர்த்தம்; தேவதீர்த்தத்திற்குக் கிழக்கே, திருமதிலின் புறத்தேயிருக்கும் நாகதீர்த்தம்; அதற்குச் சிறிது கிழக்கில் இருக்கும் ஆறு சுனைகள் கூடிய சண்முக தீர்த்தம்; பாண்டவ தீர்த்தத்திற்குச் சிறிது கிழக்கிலிருக்கும் குமார தீர்த்தம்; பாண்டீசர் திருமுன்னிருக்கும் சூரியபுஷ்கரிணிதீர்த்தம்; மேற்குத் திருமதில் ஓரத்திற்குச் சிறிது வடமேற்கிலிருக்கும் சத்தகன்னியர் தீர்த்தத்திற்கு மேற்கிலிருக்கும் சந்திரபுஷ்கரிணிதீர்த்தம் ஆகியவைகளின் மகிமைகளும் விவரிப்பதற்கு அரிய சிறப்புடையனவேயாம். அவைகளை ஈண்டு விளக்குவதெனில், இடம் விரியுமென்றஞ்சியும், அவற்றின் வரலாறுகளை விரிவாகக் காண விரும்பும் அன்பர்கள், அச்சேறியிருக்கும் "திருச்செங்கோட்டுத் தலபுராணம்" "திருச்செங்கோட்டுத் தல மான்மியங்" களில் கண்டுகொள்ளும்படியும் கேட்டுக்கொண்டு தீர்த்தங்களின் சிறப்பை இத்துடன் நிறுத்தி மேலே செல்லுகின்றேன்.

"மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கி னர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

என்பது தாயுமானர் திருவாக்கு. அத்திருவாக்கைச் சிவநேசமிக்க செல்வர்கள் சிந்தித்து, தலம், தீர்த்தம், மூர்த்திகளை முறையாகச் சேவித்து இன்பம் எய்துவார்களாக.

## மலைமீதுள்ள கற்படிகளின் எண்ணிக்கையும்—இடையிலுள்ள மண்டபங்களின் பெயர்களும்.

" குருக்கோடு நவமணியும் நவநிதியும் நவரசமும்
கொழிக்குங் கோடு
தருக்கோடு சுரபியுஞ் சிந்தாமணியுந் தழைத்ததெய்வத்
தான மாமால்
இருக்கோடு பலகலைக ளாகமங்கள் குரவோர்க
ளிரைக்குங் கோடு
செருக்கோடு முமையரனைப் பிரியாம லினிதிருக்கும்
திருச்செங் கோடே." —திருப்பணிமாலை.

என்பது திருச்செங்கோட்டின் சிறப்பைப்பற்றி வருணித்துக் கூறும் திருப்பாட்டு. இப்பாட்டில் அமைந்துள்ள இனிய சொல்லும், பொருளும், அழகும், சந்தமும், எவ்வளவு சுவையுடையதாய் உளதென்பதைத் தமிழன்பர்கள் அறிந்து சுவைத்தின்புற விரும்புகின்றேன்.

தமிழ்த் தெய்வமாகிய திருமுருகன் மெய்யன்பர்களின் ஒருவராகிய அண்ணமலை, திருப்புகழ் ஆசிரியர் ஸ்ரீ அருணகிரிநாதர் தமது கந்தர் அலங்காரத்தில், திருச்செங்கோட்டைத் "தெய்வத்திருமலை" என்று சிறப்பித்துப் பாடியிருக்கின்றனர். அப்பெரியாரால் அங்ஙனம் சிறப்பிக்கப் பெற்ற திருமலைமீது யாத்திரைவாசிகள் ஏறுவதற்குத் தொடங்குமுன், அடிவாரத்தின் முதற்படியில் கோயில் கொண்டு விளங்கும் விநாயகரையும், ஆறுமுகத் தெய்வத்தையும் முறைப்படி வணங்கிப் பூசித்து, அவர் தம் திருமுன்னே இருகரங்களையும் சிரத்தின்மீது கூப்பி நின்று, 'நாககிரி என்னும் நற்றெய்வமே! அடியேங்கள் பிறவி கடைத்தேறும்பொருட்டு, உம்மீது கோயில்கொண்டு திகழும் ஸ்ரீ அர்த்தநாரீச்சுரரையும், ஸ்ரீ செங்கோட்டுவேலரையும் தரிசிப்பதற்கு விரும்பி வருகின்ற எங்களுடைய கால்கள், உம்மீது படும் குற்றத்திற்கு மன்னிப்புக் கோருகின்றன. அன்புகூர்ந்தருளி, எங்களுக்கு மலையின்மீது யாதொரு இன்னலும் நேராதபடி உடனின்று காத்தருளவேண்டும்' என்று பணிவுடன் இறைஞ்சி, பின்னரே மலைமீது கால் வைத்து ஏறத்தொடங்குவது நலம்.

அடிவாரத்தையடுத்துச் சிவதரிசனஞ் செய்வதற்கு மலைமீது ஏற யாத்ரீகர்கள் தொடங்குவதற்குமுன், முதன் முதல் அவர்கள் கண்களுக்குத் தென்படுவன — "சிவப்

பேறு அடைந்த சோழநாட்டுத் தஞ்சை, ஸ்ரீ குமாரசாமிப் பரதேசி என்னும் பெரியாரால், பொதுஜனங்கள் உதவி பெற்று சுமார் நாற்பதுமுழ ஆழத்திலும், கிழமேல் ஒன்பது முழ நீளத்திலும், தென்வடல் ஏழுமுழ அகலத்திலும், உள்ளூர் வெளியூர்ப் பொது ஜனங்களிடத்திலிருந்து தருமத்திற்கென வசூலிக்கப்பெற்ற பொருளைக்கொண்டு வெட்டுவிக்கப்பெற்ற உண்ணும் நன்னீர்க்கிணரும், அக்கிணத்துக்கு நாற்புறத்தும் கருங்கல்லால் கனமாக எடுக்கப்பட்ட கைப்பிடிச் சுவர்களும், இரும்புத் தாண்டவாளக் கால்கள் நிறுத்தி அவற்றின்மீது உறுதியான தாண்டவாள உத்திரங்கள் பரப்பி, எட்டு இரும்பு உருளைகளைக் கோத்துள்ள இணைப்பும், வரிசையாக வைத்து வளர்க்கப்பெற்ற இருபத்தியொரு தென்னைகளும், வாசனையுள்ள மூன்று மகிழம்பூ மரங்களும், தெய்வ புஷ்ப கைங்கரியத்திற்குரிய வாசனை மிக்க பல மலர்ச் செடி கொடிகளால் நிரம்பிய சிறு பூந்தோட்டமும், பூந்தோட்டத்திற்கு வடபால் அகன்றதொரு கற்கட்டு மேடையும், அம்மேடைமீது மேற்குமுக நோக்கி வள்ளி தெய்வயானையர்களுடன் கோயில்கொண்டிருக்கும் ஆறுமுகசுவாமி ஆலயமும், அவ்வாலயத்துக் கருப்பக்கிருக விமானமும், முன்மண்டபமும், கோடிக்கம்பமும், குறடுடன் கூடிய நாற்கால் மண்டபத்தின் நடுவிலுள்ள மயில்வாகனமும், பலிபீடமும், வடக்குமுகம் நோக்கியுள்ள இடும்பாசுரனுடைய சிற்றாலயமும், இச்சிற்றாலயத்துக்குப் பின்புறத்தில் சிறிது இடைவெளிவிட்டுத் தனித்தனியாக உயரமான கற்கால்கள் நன்னான்கு நிறுத்தி நன்றாகக் கட்டப்பட்டுள்ள ஜங்கம பண்டார உருத்திராக்க மண்டபமும், கோங்குவேளாள செல்லகூட்டத்தார் திருப்பணி மண்டபமும், இவ்விரு மண்ட

பங்களுக்கு வடகிழக்கினுப், ஆறுமுகசுவாமி ஆலயத்தை யொட்டியும் கட்டப்பெற்றுள்ள சிற்றுலயத்தில் மேற்குத் திசைநோக்கி எழுந்தருளிய விநாயகருமேயாம்". இவ்விநாயகர் பெயர், "அழகிய விநாயகர்" என்று கொங்குமண்டல சதகம் 29-ஆம் பக்கத்தில் "வளவன் எழுத்துப்படி" என்று தொடங்கும் 31-ஆம் செய்யுளில் 9-ஆம் வரியில் தடித்த எழுத்தில் வரையப்பெற்றிருக்கிறது.

இவையேயன்றி, இக்குமாரசாமிப் பரதேசியார் ஆறுமுகசுவாமி ஆலயத்துத் தெற்குப் பிரகாரத்தில் வெற்றிவேலுக்கு மேற்குமுகநோக்கி ஓர் சிற்றுலயங்கட்டி அவ்வேலை, அதில் பிரதிஷ்டை செய்வித்தும், பிரம்மோற்சவ காலத்தில் ஏழைகளுக்கு அன்னம் வழங்கியும், சம்பங்கூழ் வார்த்தும், சந்தை கூடும் செவ்வாய்க்கிழமைதோறும் தண்ணீர்ப்பந்தல் வைத்துத் தாகசாந்தி செய்வித்தும், சுவாமி தரிசனம் செய்யவரும் அன்பர்கள் தங்குவதற்கும், சமைப்பதற்கும் ஐந்து அங்கணத்தில் ஓட்டுவில்லைத் தாழ்வாரம் கட்டியும், வடக்குப் பிரகாரத்தில் பஜனைக்கூடம் எடுப்பித்தும், தருமங்கள் செய்துவந்தனர். அவருக்குப்பின் அவரால் நியமிக்கப்பெற்ற தர்மகர்த்தர்களாகிய V.V.C.R. கந்தப்ப முதலியார் முதலிய கனவான்களால் மேற்படி தருமங்கள் சரியாக நடாத்தப்பெற்று வருகிறது.

## கஜமுகப்படி விநாயகர்.

இப்பெயர்கொண்ட விநாயகர், மலையின் முதற்படியைச் சார்ந்து ஒரு கிழுவை மரத்தின் நிழலில் அமர்ந்திருக்கின்றனர். இவ்விநாயகர் இரு பக்கத்திலும் இரும்புவேல்களும் நாகர் கற்சிலைகளும் இருக்கின்றன. இங்கிருந்து

தான் மலைமீது செல்வதற்குக் கற்படிகள் தொடக்கமாகின்றது. இம்முதற்படியை இங்குள்ளார், "கஜமுகப்படி" என்கின்றனர். இங்கிருந்து மலைமீதுள்ள இராய கோபுரத்து மண்டபம் வரை மொத்தம் ஆயிரத்து இரு நூற்றியாறு (1206) படிகள் இருக்கின்றன.

கஜமுகப்படி பதினாறு, இந்தக்கற்படிகளையும் அப்படிகளின் இருபுறமுள்ள இரு கல்யானைச் சிலைகளையும், கோதையூரில் ஓர் மடத்தையும், திருச்செங்கோட்டிலிருந்த "கோல்ல எல்லன்" என்ற ஒரு தரும சீலனால் கட்டுவிக்கப் பெற்றதென்று திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை 339-ஆம் செய்யுளில் குறிக்கப்பட்டுள்ளது. அச்செய்யுள்:-

"சீறும் பணிமலையைச் சேவிக்க வேயடியார்
ஏறும் படிபதினு றீரானை—சீருடனே
செய்தான் மடஞ் சிறந்த குன்றைக் *கொல்லவெல்லன்
உய்ந்தான் இருந்தான் உகம்."

என்பது.

## முதல்—செங்குந்தர் மண்டபம்.

கஜம் அல்லது யானைமுக விநாயகர் சிற்றாலயத்து முதற்படியிலிருந்து சரியாகப் பத்துபடிகளைக் கடந்து நடந்தால் முதலில் தென்படுவதும், மூன்று அங்கண அளவுள்ளதுமான கருங்கல் மண்டபமே செங்குந்தர்களால் கட்டப்பெற்ற முதல் மண்டபம். இம்மண்டபம் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலையில் "சைவசேகரன்" என்று

* இவன், தெலுங்கு பேசும் இடையர் மரபினன். இவர்களுக்குப் பொக்கிஷக் கொல்லர் என்ற பெயரும் உண்டு.



முதல் செங்குந்தர் மண்டபம்.



ஸ்ரீ காளத்திசுவாமிகள் திருமடம்.

தொடங்கும் 340-ஆம் செய்யுளிலும் கோங்கு நாடு அடைவு இயல் என்னும் நூலின் 79-ஆம் பக்கத்திலும், தாரமங்கலம் ஆதிசைவ அந்தணர் நல்லையக் குருக்களால் கட்டப்பட்ட தென்று கூறப்பட்டுள்ளன. ஆயின், அந்த ஆதிசைவர், தமது மண்டப உரிமையைத் தாரமங்கலத்துள்ள செங்குந்த மரபினர்களிடம் ஒப்புவிக்க, தர்மம் வளர்ப்பதையே தங்களது உடப்பிறப்பும் மறவாக்கடமையுமெனக் கொள்ளும் இயல்புடைய செங்குந்தர்கள், அதனை களிப்புடன் ஏற்று, எழுகரை நாடாகிய திருச்செங்கோட்டுச் செங்குந்த முதன்மையர்களிடம் ஒப்புவித்தனர். எழுகரை நாட்டு செங்குந்த மரபினர் முன்னின்று மிகுந்த பொறுப்புடன் ஆண்டுதோறும் தவறுமல் ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் வைகாசி மாதம் பிர்ம்மோற்சவத்தில் நான்காம் நாள் சுவாமி மலையிலிருந்து அடிவாரத்திற்கு எழுந்தருளும்போது, அப்பெருமானைச் செங்குந்தர்களுக்குரிய முதல் மண்டபத்தில் எழுந்தருள்வித்து அபிஷேக அலங்காரங்கள் செய்வித்து உபசரித்து வழிவிடுகின்றனர். அச்சமயத்தில் செங்குந்தமரபினர் பெருந்திரளாகக் கூடிச் சுவாமியைத் தரிசித்து மகிழ்கின்றனர். அப்பொழுது யாவருக்கும் பானகம் வழங்கப்படுகிறது.

**காளத்தி சுவாமிகள் திருமடம்.**

இத்திருமடம் செங்குந்தமரபினர்கள் முதல் மண்டபத்திற்கு மேலுள்ளது. இத்திருமடம் மிகப்பெரியது. வடக்கு நோக்கியிருக்கிறது. கிழமேல் நீளமுடையது. வலிவான கற்றூண்கள் நிறுத்திக் கனமான மர உத்திரங்கள் பரப்பித் துலாக்கட்டைகள் அடுக்கித் தார்சு செய்து நயமான சுன்னச் சாந்தினல் நன்ருக மெழுகப்பட்டும்,

முன்சைப்பிடிச்சுவர்வைத்து அழகாக கட்டப்பெற்றுமிருக்கிறது. அகன்ற முன்வாசலும், உயரமான மேற்றிண்ணையும், நீண்ட தோர்கூடமும், தங்குவோர்க்கு வசதியாயிருக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது. கூடத்தில் கடவுளர், அடியார்கள் உருவங்கள்வரையப்பெற்ற சித்திரக்கண்ணுடிப் படங்கள் அழகுற வரிசைபெற வைத்து நாள்தோறும் காலை, மாலைகள் பூசை நடாத்த ஒருவரை ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. அவர் சிரத்தையாய் கவனித்து வருகின்றனர். ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் மலையிலிருந்து உற்சவத்தின் நான்காம் நாள் இறங்கி வரும்போது, திருமடத்தைச் சுத்தம்செய்து, மாவிலைத் தோரணங்கள், வாழை, கமுகு, இளநீர்க்குலைகள் முதலியவற்ருல் அலங்கரித்துத் திருமடத்தில் சுவாமியை எழுந்தருள்வித்து பண்டபக்சட்டளை கொண்டருளச் செய்து வழிபடுகின்றனர். இம்மடத்திற்கு நேர் எதிரில், தாகம்கொண்டவர்கள் தண்ணீர்குடிப்பதற்குத் தண்ணீர்த் தோட்டியொன்று சிமிட்டிச் சுண்ணத்தினுல் சுகாதார வசதியுடன் நன்ருகக் கட்டப்பெற்றிருக்கிறது. இத்தண்ணீர் வார்க்கும் தருமத்தைக் கண்காணிப்புடன் கவனித்து நடாத்திவரும் கனவான்கள், திருச்செங்கோட்டுச் செங்குந்தர்களில் ஸ்ரீமான் V. V. C. இராமலிங்க முதலியார் அவர்கள் சந்ததியார்கள்.

**காளத்தி சுவாமிகள் சுருக்கமான வரலாறு:-**

தொண்டை நாட்டுத் திருத்தலங்களில் ஒன்றும், சிலந்தி, பாம்பு, யானை ஆகிய இம்மூன்றும் பெருமானைப் பூசித்துப் பேறு பெற்றதனுல், "திருக்காளத்தி"யென்று பெயர் சிறந்ததுமான திருத்தலத்தைப் பிறப்பகமாகக்

கொண்டவரும், வீரசைவமரபினரும் "சிவப்பிரகாசர்" என்ற இயற்பெயரையுடையவருமான காளத்தி சுவாமிகள், இன்றைக்குச் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குமுன், திருச்செங்கோட்டுக்கு யாத்திரையாக எழுந்தருளினர். இவர் இவ்வூரிலேயே தங்கி, சில சிவ திருப்பணிகளைச்செய்து இறைவன் திருவடியை எய்தவேண்டுமென்ற எண்ணம் எழ, திருச்செங்கோட்டு வேட்டுவரது மடத்தின் ஓர் அறையை வசதி செய்துகொண்டு அதில் வசித்து வந்தார். நாள் தோறும் சுவாமி தரிசனம்செய்து வருவதை நியமமாகக் கொண்டிருந்தார். தமிழறிவும், வீரசைவமதப்பற்றும், அத்வைத ஆராய்ச்சியும், யோகப்பயிற்சியும் உடையவராயிருந்ததோடு, அநுபவ வைத்தியமும், இரசவாதமும் கற்றிருந்தார். ஜீவகாருண்யமும், தம்மைஅடுத்தோரை அன்புடன் ஆதரிக்கும் அருங்குணமும், தருமசிந்தையும், அன்னதானம் செய்யும் விருப்பமும் இவருக்கு உடம்பிறப்பாயிருந்தன. இத்தகைய நற்குணங்களையுடைய இவரிடத்து உள்ளூராரும், பிற ஊரினர்களும், அன்பும் ஆதரவும் காட்டி வந்ததுடன் அவர் சொல்லும் சொல்லைச் செவிசாய்த்துக்கேட்டு அவர் விருப்பத்தை நிறைவேற்றியும் வந்தனர். இவைகொண்டு தாம் சில திருப்பணிகள் செய்வதையும், திருமடம் கட்டுவதையும் எளிதாக்கிக்கொண்டார். இரண்டோர் ஆண்டுகளுக்குப்பின் மலைமீது ஓர் திருமடம் கட்டுவதெனத்தீர்மானித்து அக்கருத்துடன் உள்ளூர் வெளியூர்களுக்குச்சென்று வியாபாரிகளிடத்தும், செல்வர்களிடத்தும் பொருள் உதவும்படி கேட்டனர். இவர் தகுதியையும் உண்மை நிலைமையையும் உணர்ந்தவர்கள் தாராளமாகப் பொருள் உதவிபுரிந்தனர். போதுமான பொருளும் வசூலாயிற்று. அவ்வப்போது

சேரும் தொகையைக்கொண்டு கல், மண், சுண்ணும்பு, வேங்கைமரம் முதலியவற்றைச் சேகரித்து இப்பொழுது மலை வழியில் "காளத்தி சுவாமிகள் திருமடம்" என்று பெயர் வழங்கும் மடத்தை மிகுதியானப் பொருளைக்கொண்டு திருப்பணி செய்து முடித்தார். மலைமீதுள்ள திருமடத்தைக் கவனமாகப் பாதுகாக்கும் தரும குணமும், நம்பிக்கையும் உடைய சில கனவான்களை டிரஸ்டிகளாக நியமித்து ஒப்பு வித்துவிட்டு இன்றைக்குச் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் இறைவன் திருவடியைச் சென்றடைந்தனர்.

இவரது புகழுடம்பு புதைக்கப்பட்ட சமாதி திருச்செங் கோட்டிலிருந்து நாமக்கல் செல்லும் கப்பி ரோட்டில் ஏழா வது பர்லாங்கில் பொதுஜன நடைவழியையொட்டிக் கட் டப்பெற்றுள்ள நாற்கால் சிறிய கல்மண்டபத்தின் கீழிருக் கிறது. அந்த நாற்கால் மண்டபத்தின் நடுவில் சிவலிங்கமும், லிங்கத்தின் எதிரில் ஓர் நந்தி உருவமும் கருங்கல்லில் சித்த ரித்து வைக்கப்பெற்றிருக்கின்றன. அன்பர்கள் பலர் அச் சமாதியைத் தரிசித்துச் செல்கின்றனர். மேற்படி சுவாமி களுக்குப் பின்பு V. V. C. R. கந்தப்ப முதலியார் சந்ததி யாரும் மற்றவர்களும் மடத்தைப்பரிபாலித்து வருகிறார்கள்.

ஸ்ரீ காளத்தி சுவாமிகள் திருச்செங்கோட்டுக்கு முதன் முதல் எழுந்தருளியபோது தம்முடன் "தங்க அலரி" என் னும் ஓர்வகைப் புஷ்ப விதையைக் கொண்டுவந்து பல இடங்களில் நட்டுப் பயிராக்கினார். அது நன்றாக வளர்ந்து மிகுதியான மலர்களைத் தந்தன. மேற்படி மலர்ச்செடிகள் எங்கும் பரவி ஏராளமாகப் புஷ்பித்துக் காற்றினால் மோதப் பட்டு நாலுபக்கங்களிலும் சென்று வீழ்ந்தன. அங்ஙனம்



அடிவாரம் ஆறுமுகசுவாமி ஆலயம்.



அறுபதடி நீளமுள்ள நாகர் கற்சிலை.

விழ்ந்த மலர்கள், பூமியில் பொன் பூத்ததுபோல் பொன் னிறமான பொலிவுகொண்டு விளங்கின. அவ்வழகுகண்டு யாவரும் அதிசயித்து அகமகிழ்ந்தனர்.

தற்போது மலைமீதுள்ள ஸ்ரீ காளத்தி சுவாமிகள் திரு மடத்தில் ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் நிகழும் பிர்ம் மோற்சவத்தில் நான்காம் விழா நாளில் சுவாமி மலையி னின்றும் அடிவாரத்திற்கு எழுந்தருளும்போது நடைபெற வேண்டிய மண்டபக்கட்டளையை கீழ்வானி செங்குந்தர் திருவாளர் செங்கோட முதலியாரவர்கள் சிறப்பாக நடாத்தி வருகின்றனர். மேற்படி திருமடத்துப்பூசை முதலியவைகளைக் காராளர் மரபு திரு. இராசப்ப சுவாமி என்ற ஒரு பிர்ம்மசாரி செய்து வருகின்றனர்.

செங்குந்தர் முதல் மண்டபத்திலிருந்து இரண்டாவது திருமுடியார் மண்டபம் வரையிலுள்ள எண்பத்தேழு கற் படிகளில் பதின்மூன்றும் கற்படியிலும், இருபத்துமூன்றும் படியிலிருந்து இருபத்தொன்பதாம் கற்படிகள் வரையி லுள்ள எழு படிகளிலும் கல் எழுத்துக்கள் வெட்டப்பட் டிருக்கின்றன. மிகுதியான ஜனநடமாட்டத்தினால் அந்த எழுத்துக்கள் தேய்ந்து இன்ன செய்தியென்று உணரப் படாதவாறு மறைவுபட்டிருக்கின்றன.

### இரண்டாவது—திருமுடியார் மண்டபம்:—

இது, ஸ்ரீ திருக்காளத்தி சுவாமிகள் திருமடத்திற்குச் சிறிது தூரத்திற்கு மேலே மலைப்படிவழியில் திருமுடியார் களால் கட்டப்பெற்ற மூன்று அங்கண அளவுள்ளதொரு கல் மண்டபம். "திருமுடியார்" என்பவர், ஓர்வகை மரபினர்.

இவர்களுள் ஆண்மக்கள் "திருமுடிக்கவுண்டர்" என்ற பட்டப்பெயரை வைத்துக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் திருவாலயங்களில் செய்து வரும் திருத்தொழில்கள் புனிதமும், பொறுப்பும் வாய்ந்தவை. அவைகள்—ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர்—ஸ்ரீ செங்கோட்டுவேலவர் திருக்கோயில்களில் திருவூல அறைகாவலும், (திருவூலம்=பொக்கிஷம்) மெய்காவலும், தேவர் திருமேனி காவலும் காத்துவருவனவாம். இவ்வுண்மையை, திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை 87-ஆம் பக்கத்தில் "திருவகம்படிமை—திருமுடியார்" என்ற தலைப்பின் கீழ்க்காணும் ஆசிரிய விருத்தத்தில்:—

"சீர்மருவு நாககிரி வடிவேல ருமை பாகர்
திருமேனி காவலுடனே
திருமாலை கருவூலவறை யுக்கிரா ணங்கள்
திகழகம்படி யூழியம்
பார்மருவு தனியிலாண்..............

என்று வரும் பாவடிகள் தெளிவாகக் கூறுகின்றன. "திருமுடிப்பெண்கள்—திருமுடித்தாசிகள்" என்று பெயர் வைத்துக்கொண்டு தேவாலயங்களில் பூசை நிகழுங் காலங்களில் தேவர் திருமுன்னே, நெற்றியில் நிறையத் திருநீறணிந்து கும்பார்த்தி தீபமேந்தியும், வெண்சாமரை வீசியும், திருப்பாவாடை விரித்தும், திருநடனஞ்செய்தும், திரு ஆலத்தியெடுத்தும், பதுமபுஷ்பாஞ்சலி புரிந்தும், அழகுடன் நாடகங்கள் நடித்தும், முப்பத்திரண்டு இராகங்களில் இசையிசைத்தும், ஏழு தாளங்களில் பண்ணுடன் பரதநாட்டியம் புரிந்தும், தேவோபசாரம் செய்வதே இவர்களது திருத்தொழில்கள். திருமுடித்

தாசிகள் என்பவர், இத்திருச்செங்கோட்டிலும், கொடுமுடியி லுமே இருப்பதன்றி, வேறு இடங்களில் இருப்பதாக அறியக்கூடவில்லை.

இத்திருமுடியார் மண்டபத்தில் ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் மலையிலிருந்து கீழேயிறங்கி வந்து மண்டபக்கட்டளை கொண்டருளும்போது, ஊரிலுள்ள சிவநேசமிக்க அன்பர்கள் பலர் இங்குவந்து தரிசித்து, சுவாமியை ஊருக்கு எழுந்தருளுமாறு அழைப்பது தொன்று தொட்டவழக்கம். அவ்வழக்கம், இன்றும் மாருது திருச்செங்கோட்டு மலை வழியில் சீரும், சிறப்புமாக நடைபெற்று வருகிறது.

இம்மண்டபத்தைத் திருமுடித்தாசி, "சேனுபதி வேலாள்" என்பவளால் கட்டப்பட்டதென்று, திருப்பணி மாலை 341-ஆவது வெண்பா தெளிவாகக்கூறுகிறது அது:—

பன்னுதமிழ்ச் சேனு பதிவேலா ளுக வரை
மன்னுபடி வாசல் வழிமீது— மின்னுமணி
மண்டபத்தைக் கண்டாள் வணங்கினுள் மாயையெனும்
பண்டவத்தைத் தீரும் படி.

என்பது.

**மூன்ருவது—தயிலி மண்டபம்.**

இக்கல்மண்டபம், திருமுடியார் மண்டபத்திலிருந்து 113 கற்படிகளுக்கு அப்பால் இருக்கிறது. இது பதினறு கற்றூண்கள் நிறுத்தி மூன்று அங்கணத்தில் வலிவுபெறக் கட்டப்பெற்றிருக்கிறது. இம்மண்டபத்தில் பிர்ம்மோற்சவம் முடிந்து, சுவாமி மலைக்கோயிலுக்கு எழுந்தருளும் போது இந்த மண்டபம் வரையில் சிவநேசர் பின் தொடர்ந்துவந்து வழியனுப்பிச் செல்லுகின்றனர்.

இந்த மண்டபத்திற்குக் கிழக்குப்பக்கத்திலிருப்பது **வீரபத்திரசுவாமி கோயில்.** இது, இப்பொழுது ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டு வருகிறது. மூன்ருவது மண்டபமாகிய இதனை "தயிலி" என்னும் பெயருடைய அறச்செல்வியால் கட்டுவிக்கப்பெற்றதென்பதற்கு,

**"வானந்த மென்னுமொரு மண்டபத்தை யேதயிலி**
**தானந்த மென்னச் சமைத்தாளே—ஆனந்த**
**வச்சுரத்தே கோதை வருவீர பத்திரன்முன்**
**றச்சுரத்த னல்லழகாய்த் தான்."**

என்ற திருப்பணிமாலை **342**-ஆம் செய்யுள், தெளிவுறுத்துகின்றது.

தயிலி மண்டபத்திற்குச் சிறிது மேற்கிலுள்ள கருங்கல் மண்டபத்தில், தென்றிசை நோக்கியபடி படுத்திருக்கும் நந்தி உருவம், மங்கலான கல்லில் சித்தரித்து வைக்கப்பெற்றிருக்கிறது. இவ்வுருவம், சுமார் மூன்றடி உயரமும், எழு அடி நீளமும் இருக்கின்றது. ஒவ்வோர் அமாவாசை நாளிலும், அர்த்தநாரீச்சுரரைத் தரிசிக்கவரும் நூற்

றுக்கணக்கான கொங்குநாட்டு வேளாளர்களுள் சிலர், தங்கள் தங்கள் தகுதிக்கேற்றபடி வெண்ணெய்கொண்டு வந்து நந்தியின் முகம், கோம்பு, திமிழ், முதுகு முதலிய இடங்களில் வைத்துக்கும்பிடுகின்றனர். இங்ஙனம் அவர்கள் வெண்ணெய் கொண்டுவந்து நந்தியின் அங்கங்களில் வைத்தும் வணங்கும் கருத்து, தங்கள் பண்ணைகளிலுள்ள பசுக் கூட்டங்களும், எருமைமாடுகளும் மிகுதியான பால்களையும், வெண்ணெய்களையும் கொடுக்குமென்ற நம்பிக்கை கொண்டே. இந்நந்தி உருவக் கற்சிலையை "மல்லுடையார்" என்ற சிவநேசரால், செய்து வைக்கப்பட்டதெனக் கூறுகின்றனர். செங்கோட்டுமலை ஒரு சிவலிங்கம் எனக் கருதப்படுவதால், இந்நந்தி, மலையையே பார்த்துக்கொண்டிருக்கிறது.

இந்நந்திமண்டபத்திற்கு எதிரில், நிழலுக்காக 8-6-36 ஆம் ஆண்டில், சிவநேசரும், பழ வியாபாரியுமான திருச்செங்கோட்டுக் குயவர்மரபினர், திருவாளர். நாராயணசாமி செட்டியார் அவர்கள், இரும்புத் தாண்டவாளக் கால்கள் நான்கு நிறுத்திப் பந்தல் போட்டிருப்பதோடு, நடைவழியில், மேடாயுள்ள கற்பாறைகளைச் சமநிலைப்படுத்தியும், சரிவுள்ள இடத்திற்கு அழகான கைப்பிடிச்சுவர்கள் கட்டியும், ஏறியிறங்குவதற்கு வசதியான கற்படிகள் அமைத்தும், கிழமேல் பத்தேமுக்கால் முழமும், தென்வடல் எட்டு முழமும் வழியை அகலப் படுத்திக் கைப்பிடிச்சுவர் எடுத்தும், அழகுபடுத்தியிருக்கின்றனர். இத்தரும சீலரைப் போலவே பணம்படைத்த செல்வர்கள், மலைமீது அவசியமாகச்செய்தாகவேண்டிய மக்கள் வசதிகளுக்குரிய திருப்பணிகளைக் கவனித்துச் செய்யின், பேருபகாரமாயிருக்கும்.

இந்நந்தி மண்டபத்திலிருந்து 28-படிகளைக் கடந்து சென்றால், அகன்று பரந்து விரிந்து காணப்படும் கற்பாறையின்மீது, அறுபதடி நீளத்தில் பெரியதோர் உருவில், ஐந்து தலைப் பாம்பு ஒன்று, சிற்றுளியினால் சிற்பம் வல்ல கல் தச்சரைக்கொண்டு, அழகும், கம்பீரமுமாகச் சித்தரித்து வைக்கப்பட்டிருக்கிறது. அகலமாயுள்ள பாம்பின் படத்தின் நடுவில், ஆவுடையாருடன் கூடிய "சிவலிங்கம்" சீராகச் செதுக்கப்பட்டிருக்கிறது. இச்சிற்ப சித்திரத்தின் கருத்து, 'இந்த மலையே நாகமலையாகவும், பாம்பின் படத்திலுள்ள சிவலிங்கமே சிவசொரூபமாகவும், முற்கூறிய நந்தியே சிவபெருமான் வாகனமாகிய இடபமாகவும் காண்போர் கருத வேண்டுமென்று எண்ணிப்போலும்!' பேருருவமுடைய இப்பாம்புச் சிலையை, பெரும் பொருட்செலவில் சிற்ப முறை வழுவாமல் செதுக்குவித்த செல்வர், சேலம் ஜில்லா காளிப்பட்டிக் கந்தசுவாமி கோவிலுக்கு அடுத்துள்ள "மல்ல சமுத்திரம்" என்ற சிற்றூரின் கணக்கர், திருவாளர் திருக்கைவேல் பிள்ளை அவர்கள் திருக்குமாரர், திரு. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் எனத் தெரிகிறது.

கல்லுருவாகிய இப்பாம்புச் சிலைக்குக் கொங்குநாட்டுள்ள வேளாளர்களும், பேதைமதியுடைய பிறரும், கோழிச்சேவலை அறுத்துப் பொங்கலிட்டு வழிபடுகின்றனர். இங்ஙனம் அவர்கள் செய்வது, இருட்டுக் காலங்களில் காட்டில் திரியும் தங்களுக்கு, பாம்புகளால் எவ்விதத் தீங்கும் நேரிடாதிருக்க வேண்டுமென்றே. இது ஒருவகைக் குருட்டு பத்தியென்றே கொள்ளவேண்டும்.

**நான்காவது—செங்குந்த சின்னமுதலியார் மண்டபம்.**

நாகச்சிலைக்குக் கீழுள்ள நாற்கால் சிறு மண்டபத்திலிருந்து 189 படிகளைக் கடந்து வந்தால் காண்பது, இராசி

புரத்துச் சேங்குந்தர்களில், திருவாளர். சின்னமுதலியார் என்பரால் கட்டுவிக்கப்பெற்ற கல்மண்டபம். இம்மண்டபம், மூன்று அங்கண அளவையும், பதினறு கற்றூண்களையும் உடையது. மிகவும் வலுவுள்ளது. இம்மண்டபத்து மேற்குப்பாகத்தின் நடுவில், யானைமுகப்பிள்ளையார் சிலையும், மண்டபச் சுவற்றில் நவவீரர் உருவங்களும் நன்ருகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. இம்மண்டபத்தையொட்டி ஓங்கி உருண்டை வடிவில் நன்ருக வளர்ந்துள்ள பெரும்பாறை, தன்கீழ் 50, 60 மக்கள் நிழலுக்கும், மழைக்கும் வசதியாய் ஒதுங்குவதற்குப்போதுமான வழிவிட்டு, மேலே ஒரு பெருங் குடைபோல் அகலமாகக் கவிந்து நிற்கின்றது. பாறை சமதரைபோல் தங்கியிருப்பதற்கும், படுத்துறங்குவதற்கும் வசதியாயிருப்பதால், வெயிலால் களைத்து வெயர்த்து வருகின்றவர்கள், இங்குச் சில மணிநேரம் தங்கி இளைப்பாறுகின்றனர். குளிர்ந்ததான மந்தமாருதம் அந்தமாகவீசி, களைப்பை நீக்கி இன்பத்தையூட்டுகிறது.

இந்தப்பாறையைப்போலவே, இதற்கு நேர் வடக்கில் வளர்ந்து குடைபோல் கவிந்துள்ள மற்ருெரு பாறையும், மக்கள் தங்கி இளைப்பாறுவதற்கு வசதியாய், குளிர்ந்த நிலையைத்தந்து இன்பக்காற்றை வீசி மகிழ்ச்சியைத்தருகின்றது. இவ்விரண்டு பாறைகளின்கீழ் சமதரையில் கல் எழுத்துகள் அகல நீளமாக வெட்டப்பட்டிருக்கின்றன. மக்களின் அதிகமான நடமாட்டத்தினல் தேய்ந்து, இன்ன செய்தியென்று உணரக்கூடாமல் இருக்கிறது. இந்த மண்டபம், சேங்குந்தமரபுச் சின்னமுதலியார் அவர்களால் கட்டுவிக்கப் பெற்றதென்பதற்குச் சான்று, திருப்பணிமாலை 344-ம் இனிய செய்யுள் சுவைபெறக் கூறுகின்றது. அது,

"பாருலகெண் கோதைப் படிப்பேழைக் கல்லருகே
சீருலவு மண்டபமுஞ் செய்தானே—ஏருலவு
சின்னன் குகனடியான் செங்குந்தன் ராசைவரு
மன்னும் புகழபிரா மன்."

என்பது. அபிராமன் = அழகுடையவன்.

மற்றும்,

"—கோதிலாச்

செங்குந்தர் மண்டபத்திற் செயவீர ரொன்பதின்மர்
அங்குசபா சங்கொண்ட வைங்கரனும்."

என்ற திருமுகப் பாசுரத்துக் கண்ணியில், செங்குந்தர் திரு மண்டபத்தில் ஐங்கரக் கடவுளும், ஜயவீரமிக்க நவவீரர்கள் ஒன்பதின்மர் திருவுருவங்களும், சித்தரிக்கப்பெற்றிருப்பதை அழகுபெற விவரிக்கப்பட்டிருப்பதும் சான்ருகக் கொள்ளற்குரியது.

## ஐந்தாவது—சிங்கத்தூண் மண்டபம்.

செங்குந்தர் மண்டபத்திலிருந்து 157 படிகளைக்கடந்து சென்ருல், தென்படுவது "சிங்கத்தூண் மண்டபம்." இது **மோரூர் நாட்டார்களின் சிறிய வகையாருடையது.** மண்டபத்தின் இருபக்கத்துத் தூண்களிலும் **சிங்கம், யாளி** முதலிய சித்திரங்கள் செதுக்கப்பட்டிருப்பதால், **"சிங்கத்தூண் மண்டபம்"** என்று இது பெயர்பெற்றது. இதுவும் மூன்று அங்கண அளவுடையதே. உயர்ந்ததான சிற்பங்கள் செதுக்கப்பெற்ற சித்திரத் தூண்கள், இம் மண்டபத்தை அழகுபடுத்திக்கொண்டிருக்கின்றன. தங்கிச் செல்வதற்கும் வசதியுடையது. இதில், மேலும், ஆதியில் இம்மண்டபத்தைக் கட்டிவைத்தவர்கள் எனக் கருதப்படும் தருமசீலர்களின் உருவங்களும், கற்றூண்களின் சித்தரிக்கப்பெற்றிருக்கின்றன.

நாட்டுக்கவுண்டர்கள் சிங்கத்தூண் மண்டபத்தினின் றும் 62 படிகள் ஏறிச்சென்றால், எதிரே தெரிவது வழக்குக் குடையவர்கள் சத்தியஞ்செய்யும் அறுபதாம் படியின் ஆரம்பம். இவ்வறுபதாம் படியின் ஆரம்பத்திலுள்ள ஓர் மரத்தின்கீழ் பாறையில் வெட்டப்பட்டிருக்கும் சிவலிங் கத்தை "மாதேசலிங்கர்" என்றும், சிலர், "மகாதேசிகர்" என் றும் கூறுகின்றனர்.

"—சித்திபெறு
மாதேச லிங்கம் வருபிணியெ லாந்தீர்க்கு
மாதர்மகிழ் காங்கேயர் மண்டபமும்"

என்ற திருமுகப் பாசுரத்தின் 44-ஆம் கண்ணியால், இந்த இலிங்கத்தின் பெயர் "மாதேசலிங்கம்" என்றே உறுதிபெறு கின்றது. 'மாதர்மகிழ் காங்கேயர்' என்ற சொற்றொடரால், சிங்கத்தூண் மண்டபம் 'காங்கேயர்' 'கங்கைமைந்தர்' என்ற சிறப்பிற்குரிய வேளாளர் திருமண்டபம் என்றேகொள்வ தற்குச் சாதகமாயிருக்கிறது.

**அறுபதாம்படியெனும் சத்தியப்படிகள்.**

இப்படிகள், உயரமான ஓர் பாறையின்மீது கணக் காக அறுபது வெட்டப்பட்டிருக்கின்றன. மக்களுள் 'பண லேவாதேவி' அல்லது 'கோடுக்கல் வாங்கல்'களில் தகராற் ஏற்பட்டால், இரு கட்சிக்காரர்களும் இங்கு வந்து இப்படிகளிலிருந்து சத்தியம்செய்து வழக்கை முடிவுசெய்து கொள்ளுகின்றனர். இது தொன்றுதொட்ட வழக்கம். இப் படிமீதிருந்து செய்யப்பட்ட சத்தியத்தைச் சென்னை ஹைக்கோர்ட்டாரும் அங்கீகாரம் செய்துகொள்ளுகின்ற னர். சத்தியம் செய்கிறவர், திருச்செங்கோட்டு ஸ்ரீ அர்த்த நாரீச்சுரசுவாமி தேவத்தானத்துக்குக் காணிக்கை செலுத்தி

ஊரார் அறிய மேளதாளத்துடன் வந்து பிரமாணம் செய்ய வேண்டும். அப்பொழுது அப்படிகளில் இருபக்கங்களிலு முள்ள வட்டமான சிறு குழிகளில் திரியிட்டு எண்ணெய் வார்த்து விளக்கேற்றி வைக்கின்றனர். தர்மசாட்சியாய் அறுபதாம் படியில் எழுந்தருளியுள்ள மயில்வாகன முருகக் கடவுள் சிலையையும், அறுபது கற்படிகளையும் வெட்டுவித்த வர்கள், திருச்செங்கோடு தாலுகாவிலுள்ள மோழைக் கவுண்டன்பாளையம் காட்டு வேட்டுவர்கள் என்கின்றனர். ஆனதால், அவர்களே மற்றவர்களினும் விசேடமாக வந்து பத்தி சிரத்தையுடன் வணங்கிப் பூசிக்கின்றார்கள். இச்சத்தியச்செய்தியை, இன்றைக்கு 470 ஆண்டுகளுக்கு முன், அண்ணுமலையில், பிரபலமாகத் திருப்புகழ்ப் பேராசிரியர் எனப் பெயர்சிறந்து விளங்கிய ஸ்ரீ அருணகிரிநாதர் இங்குத்தலயாத்திரையாக எழுந்தருளியபோது, தாம்பாடிய திருப்புகழில் குறித்திருக்கின்றனர். அது,

“அத்த வேட்கைப் பற்றி நோக்கத்
தத்தை மார்க்குத் தமராயன்-
பற்றகூட்டத் திற்ப ராக்குற்
றச்சு தோட்பற் றியவோடும்:
சித்த மீட்டுப் பொய்த்த வாழ்க்கைச்
சிக்கை நீக்கித் திணிதாய
சித்ர வாக்குப் பெற்று வாழ்த்திச்
செச்சை சாத்தப் பெறுவேனோ;
கொத்து நூற்றுப் பத்து நாட்டக்
கொற்ற வேத்துக் கரசாய-
குக்கு டாத்தச் §சர்ப்ப கோத்ரப்
பொற்ப வேற்கைக் குமரேசா;

§ சர்ப்பகோத்திரம்=நாகமலை; கோத்திரம்=மலை.

தத்வ நாற்பத் தெட்டு நாற்பத்
தெட்டு மேற்றுத் திடமேவும்-
தர்க்க சாத்ரத் தக்க மார்க்கச்
சத்ய வாக்யப் பெருமாளே." (17)

என்பது.

இச்சத்தியப்படிக்குக் கிழக்கில் சிறிது தூரத்தில் சோழமன்னர்களால் வெட்டுவிக்கப்பட்ட கல் எழுத்துக்கள் இருக்கின்றன. அவைகள் *"பரகேசரிவர்மன்" என்ற சோழ வேந்தனது ஆட்சியின் இருபதாம் ஆண்டில், "ஒரு நந்தா விளக்குவைப்பதற்குப் பொன் கொடுத்தசெய்தி வெட்டப்பட்டிருக்கிறது. (1905 ஆம் ஆண்டு, 630 ஆம் எண்ணுள்ள கல்வெட்டு)

அதே கல்லில், பரகேசரிவர்மன் இருபத்தியேழாம் ஆண்டில் அந்தணர்களுக்கு அன்னம் அளிப்பதற்குக் கொடுத்த பொன்னைப்பற்றிய செய்தி வெட்டப்பட்டிருக்கிறது. இதில் "புகழியூர்" என்று பெயர் குறிப்பிட்டுள்ளது. (1905 A. D. No. 631.)

மேற்படி கல்லின்மீதே, மதுரைகொண்ட பரகேசரிவர்மனது முப்பத்தியேழாம்ஆண்டில், திருவிளக்கு ஏற்றுவதற்குப் பொன் கொடுத்த செய்தி குறிப்பிட்டுள்ளது. (கல்வெட்டுச் சிதைந்திருக்கிறது) (1905 A. D. No 632)

* இச்சோழன், தஞ்சை விஜயால சோழனுடைய பேரன், ஆதித்த சோழனுடைய மகன். இவன் கி. பி. 907-ம் ஆண்டில் சோழ சிம்மாசனத்திருந்து திருமுடி புனைந்துகொண்டான். அவன் நாற்பத்தியோராண்டு அரசு செய்தான். அதாவது கி. பி, 947-ஆம் ஆண்டு வரை.

மேற்படி கல்லிலேயே, மதுரைகொண்ட பரகேசரிவர்மன் இருபதாம் ஆண்டு நூற்றி ஏழாம் எண்ணுடைய சாசனம். இதில் "திருப்பிடவூர்" குறிக்கப்பெற்றுள்ளது. இவ்வூர், திரிசிராப்பள்ளி ஜில்லா முசிறிக்குப் பக்கத்தேயிருக்கிறது. (1905 A. D. No. 633)

மேற்படி கல்லின்மீதே, பரகேசரிவர்மன் ஒன்பதாவது ஆண்டில், ஈரோடைவாசி ஒருவரால், பிராமணர் சிலருக்குச் சோறிடுவதன் பொருட்டு, சில பொன்கள் கொடுக்கப்பட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது. (1905 A D. No. 632)

மேற்படி அதே கல்லின்மீதே மதுரைகொண்ட பரகேசரிவர்மனது இருபத்தியேழாம் ஆண்டில், கிழார்கூற்றத்தைச் சார்ந்த கிளிநெல்லூர்வாசி ஒருவர், திருச்செங்கோட்டுச் †சபையா

† சோழ அரசாட்சிக் காலத்தில் தருமங்களைத் தவறாமல் கிரமமாகநடாத்துதற்கென்றே பேரியோர்கள் கூடியசபைகளிருந்தன. அச்சபையார்க்குக் "கணப்பெருமக்கள்" என்று பெயர். அச்சபைகளிலும் பல பிரிவுகளுண்டு. திருவாதிரையை நடாத்துபவர்களுக்கு "திருவாதிரைக் கணப்பெருமக்கள்" என்றும், துவாதசியை நடத்துபவர்களுக்கு "துவாதசி கணப்பெருமக்கள்" என்றும் பெயர்கள் வழங்கப்பட்டன. இப்பெயர்களுடைய சபைகளும் இருந்தன. இவைபோலவே, திருவிளக்கேற்றும் கூட்டத்தினருக்கும் ஓர் சபை இருந்தது. அதுவே மேற்குறித்த திருச்செங்கோட்டுச்சபை. இச்சபையாரிடத்துச் சேரும் பணத்தை வட்டிக்குக்கொடுத்து, வரும் இலாபத்தைக்கொண்டு குறித்த தருமங்களைக் குறைவற நடாத்திவந்தனர்.

இச்சாசனங்களில், 'நந்தாவிளக்குக்குப்பொன்' 'ஆரணம் ஓதும் அந்தணர்களுக்கு அன்னம் அளிக்கப் பொன்' என்றுள்ள கற்சாசனச் சொற்றொடர்கள் 'திருச்செங்கோட்டுத் திருவாதிரைக் கணப்பெருமக்கள், திருவாதிரைதோறும் திங்கள் இருபது பிராமணர்களுக்கு சந்திராரித்தர்வரை அன்னம் ஊட்டுவதாக, 'அமுதனூர் திருச்செங்கோட்டு ஆள்வார்க்கு நந்தாவிளக்கு வைப்பதாக' என்பனவற்றை விளக்குவனவாம்.

ரிடம் திருவிளக்கேற்றுவதற்காகப் பொன் கொடுக்கப்பட்ட தாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த தானத்தைப் பதி னெட்டு நாட்டாரும் போற்றவேண்டுமென்றும் குறிக்கப்பட் டிருக்கிறது. (105 A. D. No. 640) என்பன.

அறுபதாம்படியில் கோயில் கொண்டுள்ள சுப்பிர மணிய சுவாமிக்குப் பின்பக்கத்தில் சுமார் 7, 8 பனைமர உய ரத்தில், வானமளாவ வளர்ந்திருக்கும் நெடியதொரு பாறை, வான மண்டலத்திற்குச் செல்ல இங்கு நிறுத்தப்பட்டதோ! வெனக்கருதக்கூடிய நெடிய ஏணிபோலிருக்கிறது. இந் நெடும் பாறையிலேயே நாகபாம்பின் விரிந்த படத்தின் நடு வில்சிவலிங்கம் ஆவுடையாருடன் வெட்டப்பட்டிருக்கிறது.

**ஆறுவது—அறுபதாம்படி மண்டபம்.**

இது, மோரூர் கொங்கு வேளாளர்களில் "கண்ண குலம்" என்னும் ஓர் பிரிவினரால் கட்டுவிக்கப்பட்டது. என்ன காரணமோ? அவர்கள் பிற்காலத்தில் சாணார் அல் லது சான்றார் (நாடார்) என்னும் சாதியினர்க்கு உரிமை யாகும்படி விட்டுவிட்டனர். இம்மண்டபமும் மூன்று அங்கண அளவுடையதே. இம்மண்டபத்தின் தெற்குப் பாகத்தில் யானைமுகக் கடவுளும், வள்ளி தெய்வானையர் களுடன் மயில் வாகனத்தில் அமர்ந்த சுப்பிரமணிய சுவாமி யும், கற்சிலையில் வெட்டுவிக்கப்பட்டிருக்கின்றன. மேற் குப்பகுதியின் வெளியில், பாறையில் இராமதூதன் அநுமா னது உருவம் சித்தரிக்கப்பெற்றிருக்கிறது. "பாண்டவர் குன்று" என்று பெயர் கூறப்படும் மிகப்பெரிய உருண்ட வடிவுள்ள பாறையின் கீழ், இம்மண்டபம் கட்டப்பட்டிருக்

கிறது. முன் நாளில், இப்பாறைமீது கோட்டை கட்டப் பட்டிருந்ததாம். அதனால், அதற்குக் "கோட்டை வாசல்" என்றுபெயர். அது இப்பொழுதும்வழங்கப்பட்டுவருகிறது.

இக் கோட்டை வாயிலையொட்டிக் கிழக்குத் திக்கில் உயரமான கற்பீடத்தின்மீது வடக்குமுகநோக்கி விநாயகர் எழுந்தருளியிருக்கின்றனர். அவர் அருகில் ஐந்து தலையு டைய நாகர் கற்சிலையும், எதிரில் நந்தி உருவமும், வைக்கப் பட்டிருக்கின்றன. சிற்றுருவில் மேற்கு நோக்கிய வைர வர் சிலையும் அவ்விடத்திலேயே நிறுத்தப்பட்டிருக்கிறது. விநாயகருக்கு எதிரில் நீளமான கோமுக நீர்த்தாரைக் கல் லொன்றும் இருக்கிறது. மழைகாலத்தில் வைரவ தீர்த்தச் சுனையிலும், வேறு நீர் நிலயங்களிலிருந்தும் நீர் பெருகி வழிகின்றது. இங்கு இவைகள் இருக்கின்றன வென்ப தைத் "திருமுகப்பாசுரம்" நாற்பதாம் கண்ணி தெளிவாகக் கூறுகிறது. அது,

"—கீர்த்திபெறு
கோட்டைவா சற்படியுங் குகையுங் கணபதியும்
வாட்டவா துற்ற வயிரவனும்"

என்பது.

மலைமீதுள்ள ஸ்ரீ அர்த்தநாரீசுரர் ஆலயத்தின் முன் மண்டபத்தின் தேற்குச் சுவற்றில், கீழ்க் கரைப் பூந்துறை நாட்டைச் சார்ந்த மோரூர் வாசி ஒருவர், சகம் 1549 விபவ ஆண்டில், மண்டபம் ஒன்று கட்டியதாக 1905-ஆம் ஆண்டு 647-ஆம், எண்ணுள்ள கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக் கிறது அது. இவ் அறுபதாம்படி மண்டபமாயிருக்கலா மோ! வெனக்கருதுகின்றேன்.

அறுபதாம்படி மண்டபத்திலிருந்து சிறிது தூரம் மேலேசென்றால், அதாவது பத்தாம்படியிலிருந்து இருபத்தியோராம்படிவரையிலுள்ள இடையிலிருக்கும் சதுரமான பாறைமீது வட்டெழுத்தில் இரண்டு கற்சாசனங்கள் வெட்டப்பட்டுள்ளன. அவற்றில் 'ஜடாவர்ம சுந்தரபாண்டிய தேவர்' பத்தாம் ஆண்டில் பூமிதானம் செய்யப்பட்ட செய்தி காணப்படுவதோடு, செங்கோட்டு வேலவரை, "சுப்பிரமணியப்பிள்ளையார்" என்றும் குறிக்கப்பட்டுள்ளது. சிதைந்திருப்பதால், முழுவாசகமும் அறியக்கூடவில்லை. (1905 A. D. No. 641)

மோரூர் என்பது, கீழ்க்கரைப் பூந்துறை நாட்டு ஊர்களுக்குத் தலைமையுடையது. இது திருச்செங்கோட்டுக்கும், இராசத்தானமான குன்றத்தூர்க்கூற்றம் சங்கிகிரிதுர்க்கத்துக்கும், இடையில் "அறுபது தண்டிகையும்," "எழுபது காங்கேயர்களும்" சிறந்து விளங்கிய சீரூர். சரித்திரப்பிரசித்தம் பெற்றது. கங்கை குலத்தவரான வேளாளர் தலைவருக்குக் "காங்கேயன்" என்ற பட்டம் அளிப்பதுண்டு. "கங்காபுத்ரஸ்ய காங்கேய:" என்ற நியாயம்பற்றி.

**ஏழாவது † செட்டிக்கவுண்டன் மண்டபம்.**

இதனை, திருச்செங்கோட்டுக்கு அடுத்துள்ள குமாரபாளையம் என்கின்ற மண்டபப்பாளையத்தில் வசித்துவந்த குமரமங்கலம் கொங்குவேளாளர் தூரகுலத்து மசவேலகவுண்டன் மனைவி, வள்ளியம்மாள் என்பவள், அரவகிரிமீதுள்ள

---

† செட்டி என்பது = முருகக்கடவுளுக்கு வழங்கும் பெயர்களுள் ஒன்று. கவுண்டர் = கொங்கு வேளாளருக்கு வழங்கும் மரபுப்பெயர்.

கற்படி வழியில் கருங்கல்லில் கட்டத்தொடங்கினள் ஆயின், வேலை முற்றுப்பெறவில்லை. இதனையறிந்த கங்கை மரபினனும், தூரகுலத்தினனும், குமரமங்கலத்தினனுமான சிவநேசர், குமரபூபதிசெட்டிக்கவுண்டன் என்பவர், இம் மண்டபத் திருப்பணியை முற்றுப்பெறுவித்தனர். இதனால், இம் மண்டபத்திற்கு அவர் பெயரே வழங்குவதற்கு ஆயிற்று. இச்செய்தியைத் திருப்பணிமாலை 338-ஆம் செய்யுள் தெளிவாக விவரிக்கிறது. அச்செய்யுள்,

> கோதைக்கிரியிற் சிவதீர்த்தக் குணபாற் சித்ரகூடமென
> மாதர்க்கரசி மசவேலன் வள்ளிதொடுத்த மண்டபத்திற்
> பாதிக்குறடு சுவர்பிடை செம்பாதிக்குறடு மேல்வேலை
> நீதிக்குமர புரித்தூரன் நேயன்செட்டி புண்ணியமே"

என்பது. இத்திருப்பணியேயன்றி இச்செல்வர், மலைமீதுள்ள விநாயகருக்கும், நடராசருக்கும் திருமேடைகளும், சிவதீர்த்தத்திற்குத் தெற்கில் நூறு கற்படிகளையும், வைரவதீர்த்தத்தின் மேற்குக்கரையையும் சிவபுண்ணியத்தைக் கருதித் திருப்பணி செய்வித்தனர். இவ்விவரத்தையும் திருப்பணிமாலை 337-ஆம் ஆசிரியவிருத்தம் தெளிவாகக் கூறுகிறது. விரியுமென்றஞ்சி இங்கு அவ்விருத்தம் விடப்பட்டது.

இம்மண்டபத்தின் பின்புறத்தில் வடதிசையில், "காங்கேய தீர்த்தம்" என்றதோர் சுனையுள்ளது. அது குளிப்பதற்கும், குடிப்பதற்கும்உபயோகமாயிருக்கின்றது. ஆயின், கவனிப்பாரில்லாததனால், பாசிபடர்ந்து அசுத்தமாயிருக்கிறது. இத்தீர்த்தம், இங்குளதென்பதற்கு,

> "—மீட்டமிகு
> தீர்த்த மபிஷேகஞ் செய்யும் சிவலிங்கங்
> கார்த்திகே யன்சுனையெக் காலமுமே"

என்ற, திருமுகப்பாசுரம் 41-ஆவது கண்ணி சான்றாம்.

**எட்டாவது தேவரடியாள் மண்டபம்.**

குமரபூபதி செட்டிக்கவுண்டன் மண்டபத்திலிருந்து 78 கற்படிகள் ஏறிச்சென்ருல் தென்படுவது, "தேவரடியார் மண்டபம்." இவர்கள் தங்களை, உருத்திர கணிகையர் என்று கூறிக்கொள்ளுகின்றனர். மூன்று அங்கண அளவும், கருங்கல் பத்துத் தூண்களுமுடைய மண்டபத்தைக் கட்டிவித்த கணிகையின் பெயர், "குருவம்ம மாணிக்கம்" என்பது. இவள், திருச்செங்கோட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவள். தருமசிந்தையுடைய இக்கணிகையே, இம் மண்டபத்தைச் சிவபுண்ணியம் பெறக் கட்டிவைத்தாள் என்பதற்கு, திருப்பணிமாலை 345-ஆம் செய்யுளில் ஆதாரம் இருக்கிறது. அது,

வெண்பா.

"அன்புநெடுஞ் சேடகிரி யாதிசிவ தீர்த்தமிசை
தென்புறமோர் மண்டபமுஞ் செய்தாளே—இன்பநெறி
யாருமெதி ராதகுரு வம்மமா ணிக்கிடை
மேருகிரி யைப்போல வே"

என்பது. மேற்படி, திருப்பணிமாலை 83-ஆம் பக்கம் "திருமுடித்தாசி சேனபதி வேலாள்" என்ற தலைப்பின்கீழ் ஓர் வெண்பாக் காணப்படுகிறது. அவ்வெண்பா:—

"பன்னுதமிழ்ச் சேன பதிவேலா ளுகவரை
மன்னுபடி வாசல் வழிமீது—மின்னுமணி
மண்டபத்தைக் கண்டாள் வணங்கினாள் மாயையெனும்
பண்டவத்தைத் தீரும் படி."

என்பது.

இவ்வெண்பாவில் குறிக்கப்பட்ட, 'மின்னுமணி மண்டபம்' யாதென அறியுமாறில்லை. 'கண்டாள்', 'வணங்கினாள்' என்ற சொற்றொடர்களால், தன் இனத்தாள் குருவம்ம மாணிக்கம் என்பாள், சிவபணிக்கெனக் கட்டிவைத்த மண்டபத்தைக் கண்டு மகிழ்ந்து வணங்கினாளென்றே கருதுகின்றேன். உண்மை ஆராய்தற்குரியது.

**ஒன்பதாவது இளைப்பாறு மண்டபம்.**

தேவரடியார் மண்டபத்திலிருந்து நூற்றியேழு கற்படிகளைக் கடந்து வந்தால் காணப்படுவது, "இளைப்பாறும் மண்டபம்" என்னும் பெயருடையது. இதில், ஆண்டுதோறும் நிகழும் வைகாசித்திங்கள் அர்த்தநாரீச்சுரர், திருத்தேர் விழாக் காலத்தில், நான்காம்விழாக் காலையில் மாதொருபாகர் மண்டபப்படி கொண்டருள்கின்றனர். இக்கல் மண்டபம், மேலே குறித்த எட்டு மண்டபங்களிலும் பெரியது. சுற்றிலும் பன்னிரண்டு தூண்களும், நடுவில், சுவாமி எழுந்தருள்வதற்கு நான்கு தூண்களால் எடுக்கப்பெற்ற மேடையும் கூடியது. இம் மண்டபத்திற்குத் தெற்கில் யானைமுகக் கடவுளுக்கு ஓர் சிற்றாலயம் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலத்தானத்திற்கு மேலே அழகான விமானம் ஒன்று புதுக்கப்பட்டிருக்கிறது. பிள்ளையார் கோவில் மண்டபம் சிறிது உயரமாயிருப்பதால், வணங்கும் அடியார்கள், மேலே ஏறிச்சென்று தரிசிப்பதற்கு வசதியாக ஏழு கற்படிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்விளைப்பாறு மண்டபத்தைக் கட்டுவித்த சிவச்செல்வர்,

"நான் மறைப்பண் கேட்டுருகு நல்லான் மடிவழியும்
பான் மடையீதைய! பலகலைதேர்—வான்புலவர்
மாருகத் தாற்கடைய வாய்க்கா லெனப் பெருகு
மோரூரா மென்றூர் முனம்"

என்று சிறப்பித் தோதப்பெற்ற மோரூர், "நல்லதம்பிக் காங்கேயர்" என்னும் பெயரினரென்று, திருமுகவிலாசம், 38-ஆம் கண்ணி கூறுகிறது. அது,

"—இம்முடிகொள்
நல்லதம்பிக் காங்கேய னண்ணுமிளைப் பாறவிசை
புல்லுமண்ட பத்தங்கைப் புத்தேளும்"

என்பது. (அங்கைப்புத்தேள்—தும்பிக்கையுடைய விநாயகர்) இப்பொழுது பெரியவகையார் என்பவர்கள் இங்கு மண்டப படிக்கட்டளை நடாத்திவருகின்றனர்.

**பத்தாவது கோபுரவாசல் மண்டபம்.**

இளைப்பாறு மண்டபத்திலிருந்து தொண்ணூற்றேன்பது படிகள் ஏறிச்சென்றால், நமது கண்ணுக்குப் புலனாவது "கோபுரவாசல் மண்டபம்." இம் மண்டபத்தை, கி. பி. 1654-ஆம் ஆண்டில் சீயாலகட்டி முதலியாரால் திருப்பணி தொடங்கப்பட்டு, சேலம், இராசிபுரம் விழியகுலத்தாரால் பூர்த்தி செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இது, பன்னிரண்டு கற்றூண்கள் நிறுத்தி அகலமும் நீளமும், அந்தமும் அமைப்புமாகக் கட்டப்பெற்றிருக்கிறது. மண்டபத்தின் மேற்குப்பாகத்தில், பெரியதும் சிறியதுமான விநாயக மூர்த்தம் இரண்டு வடக்குநோக்கி எழுந்தருளச் செய்திருக்கின்றனர். விநாயகர்கள் கற்சிலைகளுக்கு எதிரில் பெருச்சாளி வாகனமும், வைக்கப்பட்டிருக்கிறது. இம்மண்டபத்தில் மலைமேல் நிகழும் பூஜாகாலங்களை அறிவிக்கும் ஓசை மிகுந்த வேண்கலச் சேகண்டி யொன்றும் தொங்கவிடப்பட்டிருக்கிறது. இவ்வளவே, மலைவழிப்படிகளிலுள்ள கல் மண்டபங்கள்.

## மலைமீதுள்ள கோபுர விமான - மண்டபங்களும்- ஆலயச் சிற்ப சித்திரங்களும்.

அடிவாரம் அல்லது தாழ்வரை கஜமுகப்படியிலிருந்து மேலே, ஆயிரத்திருநூற்றியாறு கற்படிகளுக்கு அப்பாலேயிருக்கும் இராயகோபுர முன் மண்டபம் வரையிலுள்ள படிகள், மண்டபங்கள், இளைப்பாறும் இடங்கள், கல்வெட்டுக்கள், கோட்டைவாயில், தீர்த்தச்சுனைகள் முதலியன. இதுகாறும் விவரிக்கப்பட்டவை. இவைகளை, எனது ஆராய்ச்சியாலும், நேரிலும், நூல்களிலும், ஆன்றோர் வாயிலும் கேட்டு அறியப்பட்டவைகள். இவைகளை யாத்திரை செய்யும் சிவநேசர்களும், சிவதரிசனஞ்செய்ய விரும்பும் அன்பர்களும் அவசியம் அறியத்தக்கவை. என்னல் அறியப்படாமல் மறைவுபட்டிருக்கும் விஷயங்கள் மலைமீதும், படிகளிலும், கோயில் மண்டபங்களிலும், தீர்த்தச்சுனைகளிலும் சிலவிருக்கக்கூடும். அவைகள் எனது அறிவுக்கு அகப்படாமல் போனவைகள்.

இனி, இப்பத்தாவது மண்டபத்தின் முன்னுள்ளதும், ஸ்தூல லிங்கமாக விளங்குவதுமான இராயகோபுரம் அல்லது பெருந்திருவாயிலின் முன் கோபுரத்தையும், திருமதில்களையுமேயன்றி, ஆலயத்தின்கண் விளங்கும் அழகிய மண்டபங்கள், சிற்பத்தூண்கள், சிற்றாலயங்கள், சுற்றுக் கோயில்கள், திருவாயில்கள், தலவிருக்ஷம் முதலியவைகளையும், வரலாற்று நூல்கள், மண்டல சதகம், திருப்பணிமாலை, கல்வெட்டுகள், தாம்பிரப் பட்டயங்கள் முதலியவற்றின் துணைகொண்டு ஒருவாறு விளக்கத் தொடங்குகிறேன்.

யாத்திரை செய்பவர்கள், தலவரலாறு, மூர்த்தி மகிமை, தீர்த்த விசேடம், விழாக்களின் சிறப்பு, ஆன்ருேர் அரிய வரவால் நிகழ்ந்த அற்புதங்கள், அவர்களது இனிய செய்திகள், திருப்பணி விவரங்கள், செய்வித்த சிவச்செல்வர்களின் அருமை பெருமைகள், அவர்கள் வாழ்ந்த இடங்கள், கல்வெட்டுக்கள், சிற்பத்திறங்கள், நாட்டு வரலாறுகள், ஆதியவற்றை நன்ருக அறிந்து மகிழவேண்டும். அம்மகிழ்ச்சியே அவர்கள் சிவ தலயாத்திரையில் அடையக்கூடிய பயன்களில் முதன்மை யானது. இப்பயனே அறிந்தே, சென்னே, இந்துமத அறநிலேப் பாதுகாப்புக் கழகத்தார்கள், தென்ஞட்டில் ஆங்காங்கு விளங்கும் சிவாலய விஷ்ணுவாலயங்களின் வரலாறுகளேத் தமிழ்ப் புலவர்களேக்கொண்டு எழுதுவித்துத் தலப்படங்களே ஆப்டோன் படங்களாகத் தயாரித்து அச்சேற்றி வெளி யிடும்படி ஆலய பரிபாலர்களுக்கு ஆணையிட்டனர். இம் முறையில் இதுகாறும் பல வரலாறுகள் வெளிவந்துள்ளன.

**இராயகோபுரம்:—**

செங்கோட்டு மலேமீது, முதல் திருவாயிலின் திருநிலேக் கோபுரமாக விளங்கும் இராயகோபுரம், கொங்கேழ் சிவத் தலங்களுள் திரு அவிநாசி, திருமுருகன்பூண்டி, பவாநி, திருப் பாண்டிக் கொடுமுடி, திருக்கருவூர், வெஞ்சமாக்கூடல் ஆகியவற்றில் நிலேகொண்டுள்ள கோபுரங்களில் அதிகமான உயரமும் அழகும் அமைப்பும், கம்பீரத் தோற் றமும், சிற்ப சித்திர உயர்வும் உடையது. ஆயின், இது, பலகாலம் பல திருப்பணியாளர்களது அரிய உதவிகளா லும், சலியா முயற்சியாலும் முடிக்கப்பெற்றது. ஐந்து நிலேகளேயுடைய இக்கோபுரத்தின் திருவாயிலுக்குப் பெரிய

தோர் திருக்கதவு, சித்திரிக்கப்பெற்ற மரத்தினுல் நிறுத்தப் பட்டிருக்கிறது. உயரமான இம்மலையின் உச்சியில் இத் தகைய பெருங் கோபுரத்தைக் கட்டி முடிப்பதென்ருல் சாமானியமான காரியமன்று. இதனை முட்டின்றி முற்றுப் பெறுவித்த பரோபகாரிகளின் அறச்செயல் பெரிதும் போற்றத்தக்கது.

கோபுரத்தைக் கும்பிட்டுக் கோயிலுக்குள் செல்வதற் குக் கோபுரத்தின் திருநிலையத்திலிருந்து இருபது கற்படி களினின்றும் கீழே இறங்கவேண்டும். கோபுரத்தின் திருநிலையத்திலிருந்து கோவில்தாழ்ந்த பள்ளத்திலிருக்கிறது. கோபுரப்படிகளினின்றும் கீழேயிறங்கினுல் முதலில் தென் படுவது, சிற்பசிங்காரங்கள் நிரம்பிய, சிங்கம், யாளி, குதிரை முதலிய உருவங்கள் சித்தரிக்கப்பெற்ற சித்திரத் தூண்கள், ஸ்ரீ செங்கோட்டுவேலவர் திருக்கோயிலையும், நிருத்த மண்டபத்தையும் அலங்கரித்துக்கொண்டிருக்கின் றன. இக்கோயிலையும், இம்மண்டபத்தையும் இப்பொழுது விட்டு, பின்னர் விவரிக்கின்றேன். முதலில், முறைதழுவி விவரிக்கவேண்டுவது, மலையின்மேல் முதன்மைக்கடவுளாக விளங்கும் அர்த்தநாரீச்சுரர் ஆலயத்தையே. அது வருமாறு:—

**அர்த்தநாரீச்சுரர் ஆலயம்:—**

ஸ்ரீ செங்கோட்டு வேலர் நிருத்தமண்டபத்துத் திரு நிலையின் தெற்கில் நிற்கும் துவாரபாலகர் சிலையையொட் டித் தென்பக்கத்தில் சிறு கற்கட்டு மேடைமீது எழுந் தருளியிருக்கும் "சித்தி விநாயகர், முத்தி விநாயகர்களை"

வணங்கி, நவக்கிரக மண்டபத்தைக்கடந்து, கிழக்கிலுள்ள திருவாயிலில் நுழைந்து, நாரிகணபதியைக் குறை தீர கும்பிட்டுத் தெற்கு நோக்கிய சிறுவாயிலில் புகுந்து, அர்த்த நாரீச்சுரர் உற்சவர் எழுந்தருளியிருக்கும் திருமண்டபத்திற்குச்சென்றால், "மாதிருக்கும் பாதியான்" கோயில்கொண்டு விளங்கும் மூலத்தானத்தைத் தரிசிக்கலாம். அவ்வுற்சவர் மண்டபம், சூரிய வெளிச்சம் ஆலயத்துள் நுழையாததனால், இருட்டாகவே இருக்கிறது. ஆயின், மூலத்தானத்தில் இரவு பகல் ஓயாமல் நந்தாவிளக்குச் சுடருடன் எரிந்து கொண்டிருப்பதால், மங்கையொருபாகனை மனங்குளிரத் துதித்து மகிழலாம். அர்ச்சகர் கற்பூர தீபம் ஏற்றிக்காட்டும் போது மேலும் மூர்த்திசொரூபம் நன்றாகத் தெரிகிறது. "பந்தணவும் விரலாளோருபாகங்கோண்ட பரமன்" நின்ற கோலமாய் எழுந்தருளியிருக்கின்றனர். இக்கோலத்தை நயம்பெற வருணிக்கும் செய்யுள்:—

"பணிமலையி லெழுந்தருளிப் பரைக்கொருபா கங்கொடுத்த
  பரிசின் றோற்றம்
அணிமணித்தண் டுச்சியின் மூன்றங்குலியை வளைத்தமைத்த
  வனத்துக்கொப்பா
மணிவரைமா துமையிடத்து வைத்தணைத்து மகரகுழை
  வலத்தே நாலத்
தணிவிலொளி தயங்கியதண் டாளமணித் தோடிருபா
  லாகித் தானே" —திருச்செங்கோட்டுப்புராணம்.

என்பது.

கருப்பக்கிரகத்தின் எதிரிலுள்ள உற்சவமூர்த்த மண்டபத்தில் அதாவது மகாமண்டபத்தில், அர்த்தநாரீச்சுர உற்சவர் ஓர் மேடையின்மீது சப்பிரத்தின் நடுவில் கோயில்கொண்

டிருக்கின்றனர். அவரை, கற்பூரதீபம் அல்லது தீப்பந்தத்தின் உதவிகொண்டுதான் தரிசிக்கவேண்டும். மாதொருபாகன், மேற்குமுக நோக்கியிருப்பதனுல், மேற்குத் திருவாயில் இல்லை. அதற்குப்பதிலாக மேற்கிலுள்ள மதில் சுவற்றில் ஒன்பது துவாரங்களுள்ள பலகணிவைக்கப்பட்டிருக்கிறது. தெற்கு வாயிலில் புகுந்து வெளியேவந்து அர்த்தநாரீச்சுரர் சபா மண்டபத்திலுள்ள துவாரபாலகர்கள் கற்சிலைகளின் இடையில் நின்று, பலகணியின் துளைகளில் பெருமானைத் தரிசிக்கவேண்டும்.

அர்த்தநாரீச்சுரருக்கு முதன்முதல் மலையின்மீது கருப்பக்கிரகம், அல்லது மூலத்தானத்தைக் கற்கோயிலாகக் கட்டுவித்த புண்ணிய சீலர், இன்னர் என அறியக்கூடவில்லை. ஆயின், அறுபதாம் படிக்குக் கிழக்கிலுள்ள ஓர் பாறையில் வெட்டப்பட்டுள்ள கற்சாசனத்தில், தஞ்சை மாநகர் விஜயாலச் சோழனது பேரனும், முதலாம் ஆதித்தன் புதல்வனுமான மதுரைகோண்ட பரகேசரிவர்மனது பெயர் காணப்படுகிறது. அதனுல், அவனது அதிகாரத்தில் கொங்கு நாடும், அதனுள்ளடங்கிய இத்திருச்செங்கோடும் அடங்கியிருக்கவேண்டுமெனக் கருத இடமிருக்கிறது. அச்சோழன் ஆட்சிக்காலம், கி. பி. 907 ஆம் ஆண்டு முதல் 947 ஆம் ஆண்டுவரை எனத் திருவாரூர் இலக்கண விளக்கப்பரம்பரை திரு. S. சோமசுந்தரதேசிகர் அவர்கள், ஆராய்ந்து அறுதியிடுகின்றனர். அங்ஙனமாயின், அச்சோழன் காலம் இன்றைக்கு (995) ஆண்டுகளாகின்றது. வஅனுக்குமுன் சீர்காழியில் அவதரித்த ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள், தமது கொங்கு நாட்டுத் தலயாத்திரையில் திருச்செங்கோடு அடைந்து, மலைமேற்சென்று மாதிருக்கும்



ஸ்ரீ அர்த்தநாரீச்சுர உற்சவ அலங்கார மூர்த்தி.



ஈரோடு திருவாளர் V. V. C. R. முருகேச முதலியார் அவர்களால் வெட்டுவிக்கப்பட்ட படிகள்.

பாதியானே "நின்ற அந்தணன்" "நின்ற தலைமகன்" என்று தமது தேவாரத்தில் சிறப்பித்துப் பாடியிருக்கின்றனர். இவர் காலம் கி. பி. 630—650 ஆண்டுகள். அக்காலம், இன்றைக்கு 1292 ஆண்டுகள் ஆகின்றது. இவ்விருவர் காலத்தையும் கூட்டிக்கணக்கிட்டால், கூடும் ஆண்டு 1292 ஆகவே, செங்கோட்டு "மங்கைபங்கன்" திருக்கோயில் மிகப்பழமையுடையதாகின்றது. மூலத்தானத்தில்ஆண்டவன் எழுந்தருளி, அவர் மகிமையை மக்கள் சிறிது சிறிதாக புணர்ந்த பின்னரேயே அவருக்கு அர்த்தமண்டபம் (அர்த்தம்=பாதி அதாவது மகாமண்டபத்தில் பாதி) மகா மண்டபம், நாரிகணபதி மண்டபம், தாண்டவபத்திரை விலாசம், சபாமண்டபம் முதலிய மண்டபங்களைப்பெரும்பொருட் செலவில் கொங்கு நாட்டு வேளாளப் பிரபுக்களாலும், வேறு சில ஸ்ரீமான்களாலும் அறத்தின்பொருட்டுக் கட்டுவிக்கப்பட்டன.

**நிருத்தமண்டபம்:—** இம்மண்டபம், அர்த்தநாரீச்சுரர் ஆலயத்திற்கு நேர் எதிரில் மேற்கில் இருக்கிறது. இதனைச் சபாமண்டபம் என்றும் சிலர் கூறுகின்றனர். இம்மண்டபத்தை, கி. பி. 1559 ஆம் ஆண்டு, அதாவது இன்றைக்கு 383 ஆண்டுகளுக்கு முன்னே சிறப்பச் செல்வம் சிறந்து விளங்கவும், அழகு பூரித்து இன்ப நிலயமாய் இலங்கவும், கண்டோர் வியந்து களிப்புடன் பேசவும், காணாதார் காதல்கொண்டு விரும்பவும் கட்டுவித்த வேளாண் செல்வர், "அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன்" என்னும் பெயரினர். கங்கை குலத்தார்க்குக் "காங்கேயன்" என்ற பட்டம் உண்டு. "ஆட்கொண்ட காங்கேயன்" "புதுவைக்காங்கேயன்', "போப்பண்ண காங்கேயன்" "மோரூர்க்

காங்கேயன்" என்ற செல்வர்கள், அப்பட்டத்துடன் புகழ் பெருக விளங்கியிருந்தனர். அத்தப்ப காங்கேயன் பிறந்து பெருகிய ஊர், "மோரூர்" என்னும் பெயருடையது. இது, திருச்செங்கோட்டுக்கு நான்கு மைலுக்கு வடக்குத்திசையில் இருக்கிறது. கீழ்க்கரை முப்பத்திரண்டு கிராமத்து வேளாளர்களுள், கண்ணகுலத்தார் என்பவர்கள், இங்கு மிகுதியாக வசித்திருந்தனர். இவர்களுள் காங்கேயப்பட்டம்பெற்ற சிலர், எழுகரை நாட்டுக்கு அதிகாரிகளாய் இசை பெற வாழ்த்திருந்தனர். அப்புகழாளர்களில் ஒருவரேமேற் குறித்த அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயராவர். அவரால் கட்டுவிக்கப்பெற்ற அம்மண்டபத்தின் சிற்பத்தூண்கள், கண்விருந்தூட்டும் கவினுடையன. அர்த்தநாரீச்சுரர் ஆலயம் கீழ்மேல் **170** அடி நீளமும், தென்வடல் **95** அடி அகலமும் உடையது. அத்தூண்கள் எட்டு. அவைகளின் உச்சியில் வாழைப்பூக்கள் நுனியில் தொங்கும் சித்திரப் போதிகைகளும், அப்போதிகைகளின்கீழ் மிருகேந்திரன் தனது அகன்ற வாயைத் திறந்து, முதுகைவளைத்து மண்டபத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் பாவனையைப்போல், தூண்கள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த எட்டு தூண்களின் முகப்புக்களில் வடபகுதியிலுள்ள நான்கு தூண்களில், இம்மண்டபத்தைத் திருப்பணி செய்வித்த நல்லதம்பிக் காங்கேயனும், அவன் மனைவியும், கூப்பிய கைகளுடன் நின்ற பாவனையிலும், அகோர வீரபத்திரரும், கரும்புவில்லும், மலரம்பும் ஏந்திய மன்மதனும், நல்லதம்பிக்காங்கேயன் சகோதரன், அவனது மூன்று மனைவிமார்களுடனும்; தென்பகுதியிலுள்ள நான்கு தூண்களில், சிவச்செல்வராகிய மோரூர் இம்முடிக்காங்கேயர்கள் வகையருக்களும், சத்தி அம்சங்களில் ஓர் அம்சமான இரௌத்திராகாரக்காளியும், மன்மதன்

திருத்தேவி இரதியும், திருக்கோவில் சிவப்பணி புரியும் தேவ ரடியாள், ஆண்டவனுக்கு சாமரை அசைக்கும் உருவமும் அழகாகச் சித்தரிக்கப் பெற்றிருக்கின்றன. மண்டபத்து நான்கு பக்கத்து உத்திரங்களிலும், அதன்பக்க வாட்டுக் களிலும், சிவபுராணக்கதைகள் சித்தரிக்கப்பெற்றுள்ளன. மண்டபத்து மேல் விதானத்தின் நடுவில், தாமரை மலர், தனது இதழ்களை அகலவிரித்து மூன்று அடுக்குகளுடன் விளங்குவதுபோல் சிற்பித் தன்கைத்திறம் விளங்க அருமை யாகச் சித்தரித்திருக்கின்றனன். அதன் நடுவரிசை இதழில் கிளிகள் காலூன்றி முதல்வரிசைப் பூவிதழை மூக்கினுல் கொத்துவது போலவும், அதன் வால் வெளிவரிசை இதழ் களில் முட்டிக்கொண்டிருப்பதுபோலவும் செதுக்கப்பட் டிருக்கின்றன. விரிந்த இதழ்களின் நடுவில் பூவின்மொட்டு மிருக்கிறது. அதன் காம்பு அடியில் ஒரு வளையம் அமைக் கப்பட்டிருக்கிறது. அவ்வளையத்தை இயக்கினுல், கமலம் சுற்றுகிறது. மலரிலுள்ள மொட்டு, இதழ், கிளி, முதலிய வைகள், ஏதோ ஒரு லோகத்தால் வார்த்து வைத்திருப்பது போல் கண்ணுக்குத்தோன்றுகின்றது. அத்தாமரைப்பூ வட்டத்தைச் சுற்றி ஓர் நாற்சதுரம் காட்டி, அதன்நான்கு மூலைகளிலும் மன்மதன், ரதி, கரும்புவில், புஷ்பபாணம், மாதர்சேனை முதலியவற்றை இயற்கையழகு சிறக்க வெகு நுட்பமாகச்சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் நான்கு மூலைகளிலும் இயற்கையான இரும்புச் சங்கிலியைப் போல் கற்சங்கிலிகள் தொங்கவிடப் பட்டிருக்கின்றன. இவற்றின் வேலை வியக்கத்தக்க வித்தகமுடையது. இத் துணை அருமையாக அந்த இயந்திரத்தைச் செய்த சிற்பி யின் பெயர், "பிச்சையண்ண ஆச்சாரி" என்கின்றனர்.

இவ்வெட்டுத் தூண்களேயன்றி, வடபக்கத்தில் இருபிரிவாகப் பன்னிரண்டு தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அவைகள் சாமானியம்.

இக்கமலத்தின்கீழ், கருங்கல்லில் தளஞ்செய்யப்பெற்ற தரையில், விமானம் ஒன்று உச்சியில் தூபியுடன் ஆதிகூர்மம் (கூர்மம் = ஆமை) எட்டு நாகம், எட்டு யானை, வித்யாதரர் எண்மர், ஆகியவைகளுடன் விளங்கும் பீடத்தில் நான்கு சித்திரக் கால்களின்மீது விமான தேவதைகள் சிறப்புடனிருக்க, மரத்தினுல் நேர்த்தியாகச் சித்திரிக்கப்பெற்ற அழகான பூப்பெட்டியுள் வில்வைத்த யந்திரம் பிணைக்கப்பட்டிருக்கிறது. இப் பூப்பெட்டியின் சிறு துளைகளுள், பத்திர புஷ்பங்களைக்கொட்டி, யந்திரத்துக்குக் கட்டியுள்ள கயிற்றை அசைத்தால், உள்ளே அமைத்துள்ள இயந்திர சக்தியால், அதிலுள்ள துவாரங்களின் வழியாக அர்ச்சகர் சுவாமிக்கு அர்ச்சனை செய்யும்பொழுது ஒவ்வொரு புஷ்பங்களாக ஆங்கு எழுந்தருளி உற்சவங் கொண்டருளும் மூர்த்தியின்மீது விழுகின்றன. அக்காட்சியைக் கண்டு அன்பர்கள் ஆனந்தம் அடைகின்றனர். இது, கொங்கு நாட்டில் எங்கும் காணுத அதிசயம்.

இவ்விமானத்துக்குப் பின்னுல், பரமனைத் தரிசிக்கும் பலகணியும், இருக்கிறது. துவாரபாலர்களும் நிற்கின்றனர்.

நிருத்தமண்டபத்தின் மேற்குக் கோடியில் நாற்கால் மண்டபத்தின் நடுவில், அர்த்தநாரீச்சுரர் இடபவாகனம் அமர்ந்திருக்கிறது. இவ்விடபதேவர், இராயவேலூர், விரூபாட்சராயரது அரசுக்காலத்தில் தஞ்சை ஜில்லா திருவாவடு



அர்த்தநாரீச்சுரர் நிருத்தமண்டபம்.



செங்கோட்டுவேலர் நிருத்தமண்டபம்.

துறையில் துறவுபெற்று, சிவஞான சித்திபெற்ற சிவப்பிரகாசர் திருப்பாட்டுக்கு உயிர்பெற்றெழுந்து, எதிரிகள் வைத்த கடலையைத் தின்ற தென்பர். இதன் விரிந்த வரலாற்றை மற்ருேரிடத்திற் காண்க. இடபதேவருக்குப் பின்னுல், பலிபீடமும், கோடிக்கம்பமும் இருக்கின்றன. இம்மண்டபத்தின் மேற்கிலும், வடக்கிலும் வரிசையாக சிங்கம், யாளி, குதிரைகளும், இவைகள்மீது அவைகளை அடக்கியாளும் வீரர்களும் வீற்றிருந்து, சேவகம் செலுத்துகின்ற மாதிரி கற்றூண்கள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. சிற்ப விற்பனத்தைச்சிறப்பித்துப் பாராட்டும் அறிஞர்கள், அவற்றின் அழகைக்கண்டு மகிழ விரும்புகின்றேன்.

இத்தகைய அழகும், சிற்பச் செல்வமும் சிறந்து விளங்கும்படி இந்திருத்த மண்டபத்தை இம்மலைமீது பெரும் பொருட்செலவில் கட்டிய செல்வரது கல்வெட்டு அடியில் வருமாறு:—

சேங்கோட்டு வேலவர் அர்த்த மண்டபத்தின்மேல் கற்சுவற்றிலுள்ள கல்வெட்டின் வாசகம், பதினேருவரிகளில் வெட்டப்பட்டிருக்கிறது. அது, "ஸ்வதிஸ்ரீ சகாப்தம் **1521** இதன்மேல் செல்லாநின்ற சார்வரி ஆண்டு, சித்திரை மாதம், கீழ்க்கரைப்பூந்துறை நாட்டில் மோரூரில் இருக்கும் வேளாளர் கண்ணர்களில், திருமலை அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் உபயம். பேரியாண்டவர் சந்நிதி, நிருத்தமண்டபம், அணியோட்டிக்கால் எட்டு சித்திரக் கண்டக்கால் எட்டு. இவற்றிற்கு வேண்டுவதான பாவுகல், தளவரிசை உள்பட முற்றுப்பெறுவித்தனர். அநேகதர்மம்." என்பது.

**தாண்டவபத்திரைவிலாச மண்டபம்:—**

இப்பெயருடைய மண்டபம், செங்கோட்டுவேலர் நிருத்தமண்டபத்துக்குத் தெற்கிலும், அர்த்தநாரீச்சுரர் நிருத்தமண்டபத்துக்கு மேற்கிலும் இருக்கிறது. இத்திரு மண்டபத்தை, கி. பி. 1627-ஆம் ஆண்டில், அதாவது இன் றைக்கு 315 ஆண்டுகளுக்கு முன், மோரூரில் கண்ண குலத்தில் வேளாண்மரபில் புத்தியிலும், பத்தியிலும், அதி காரத்திலும், ஆண்மையிலும், சீரிலும், செல்வத்திலும் மிக் குயர்ந்து விளங்கிய குமாரசாமிக் காங்கேயனுல் கட்டுவிக்கப் பட்டது. இவன், அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் உடன்பிறந்த சகோதரன். இப்புண்ணியன், ஏரி, குளம், ஊரார் உண்ணும் நன்னீர்க் கிணறுகள், தர்ம சத்திரங்கள் முதலியவற்றைப் பிறர் நன்மைக்காகக் கட்டுவித்துப் புகழ் சிறந்தவன். இம்மண்டபத்தை இருபத்திநான்கு கற்றூண் கள் தாங்கிக்கொண்டிருக்கின்றன. இவற்றில், சிங்கம், யாளி, குதிரை முதலிய உருவங்கள் சித்தரிக்கப்பெற்ற தூண்கள் எட்டு. இவைகள் அருமையான சிற்பவேலைகள் நிறைந்தவை. அதிசயிக்கத்தக்க அழகுடையவை. மற் றைய நான்கு தூண்களில், எதிரெதிரே நிற்கும் இரண்டு தூண்களில் ஒன்றில், நாட்டியம் புரிவதில் இவ்வுலகத்தி லேயே தனக்கு நிகரானவர்கள் எவருமேயில்லையென்று மிகுதியான கருவத்துடன் தலைக்கோலமும், நாட்டிய உடை யையும் தரித்து நடிக்கும் திருவாலங்காட்டுக்காளி உருவமும்; மற்றொன்றில், அவளது கருவம் குலைந்து வெட்கித் தலை குனியும்படி நாட்டியம் செய்வதே தமது ஆடலின் திறன் என்பதை எண்ணி நடிக்கும் தில்லை, ஸ்ரீ நடராசரது திருவுரு வமும் சித்திரிக்கப்பெற்றிருக்கின்றன. இவ்விரண்டு

உருவங்களில் ஆடவல்ல பிரான், ஓர் ஆடல்கருதித் தமது இறுதியாடலில், வலக்காலைச் சிரசுக்குமேல் உயரும்படி மேலே தூக்கி ஆடிய கோலமும்; அங்ஙனம் தன்னுல் ஆடல்புரிய ஆலங்காட்டுக் காளியால் ஆகாததனுல், தனது தோல்வியை ஒப்புக்கொண்டதன் குறிப்பை, தான் நாணத்தால் வெட்கிச் சிரங்குனிந்து தரையை நோக்கி நிற்கும் காளியின் நிலையும், எதிரெதிரே விளங்கும்படி சிற்றுளி கொண்டு வெகு நுணுக்கமாகச் சித்தரித்த சிற்பின் மனோ பாவத்தையும், கைவன்மையையும், புராணக் கருத்தையும், பத்திக்கலையையும் எவ்வாறு வருணிப்பது? (மனோபாவம்= எண்ணமுதிர்ச்சி) இவ்விரு சிற்பங்கள் சிற்றுளித் திற மையா? மந்திரக்கோலின் தந்திரமா? என்று வியக்கக் கூடியதாய் இருக்கின்றன.

மற்றைய தூண்களில் பழங்கால நாகரீகத்தையும், அக் காலத்து ஆடவர், பெண்டிர் அணியும் ஆடையாபரணங்களை யும், தலைமயிர் முடியும் விதத்தையும், விளக்கிக்காட்டும் பெண்கள் உருவங்களும், இம்மண்டபத்தை அளவற்ற தனக்குவியலைக்கொண்டு திருப்பணி செய்த குமாரசாமிக் காங்கேயன், தனது மனைவிமார் நால்வர்களுடன் நின்றிருக் கும் சிலையும், பிறவும், சித்திரிக்கப்பட்டுள்ளன.

ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியும், ஆலங்காட்டுக்காளி யும் எதிரெதிரே நின்று நடிப்பதால், இம்மண்டபத்திற்குத் "தாண்டவபத்திரை விலாசம்" என்ற பெயர் ஏற்பட்டது. இங்குள்ள மற்ருெரு நடுத்தூணில், சேலம் ஜில்லாவில் கி.பி. 1823-ஆம் ஆண்டில் கலெக்டர் உத்தியோகம் செய்த மிஸ்டர் டேவிஸ் துரையவர்களின் (Mr. W. D. Davis)

உருவம் தொப்பியுடன் சித்திரிக்கப்பெற்றிருக்கிறது. இத்துரை, இம்மண்டபம் அபாய நிலையிலிருப்பதை அகற்றினராம். தர்மசிந்தையுள்ள இத்துரையவர்கள், சேலம், சுகவனநாதர் திருக்கோயிலிலும் ஒரு மண்டபத்தைத் தன் பெயர் விளங்கக் கட்டியிருக்கின்றனர். இம்மண்டபத்தில் கிழக்கு நோக்கித் தென்மேற்கில் ஐங்கரக்கடவுள் ஆலயங்கொண்டிருக்கின்றனர். அவருக்குப் பின்பக்கத்தில் ஏழு கன்னியர் கோயிலிருக்கிறது.

தாண்டவபத்திரை விலாசத்தைக் கட்டுவித்த சிவச்செல்வர் கல்வெட்டு வருமாறு:—

இது, செங்கோட்டுவேலவர் அர்த்த மண்டபத்தின் தென்சுவற்றில் வெட்டப்பட்டுள்ளது. அது:—

ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் **1546** இதன்மேல் செல்லாநின்ற விபவ ஆண்டு சித்திரை மாதம், கீழ்க்கரைப்பூந்துறை நாட்டில் மோரூரில் இருக்கும் வேளாளர் கண்ணர்களில், திருமலை அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் குமாரன், அத்தப்ப இம்முடி நல்லதம்பிக் காங்கேயன் தம்பி, குமாரசாமிக் காங்கேயன் உபயம். நாரிகணபதியார் மண்டபமும், இதற்கு தெற்குவாசல் கதவும், தாண்டவவிலாச மண்டபமும், சிங்கக்கால்களும், தாண்டவத்தூண் பன்னிரண்டும், சித்திரக்கால்கள் எட்டும், பாவுகல், தளவரிசையுடன் முற்றுப்பெறுவித்தான். சொல்லால், தருமத்தால், அரிச்சந்திரன்போல் இருந்தான். என்பது.

**நாரிகணபதியார் மண்டபம்:—**

இம்மண்டபம், தாண்டவ விலாசத்துக்கு மிக நெருங்கி வடக்குத்திசையிலிருக்கிறது. இம்மண்டபத்தையும், மோரூர்

குமாரசாமிக் காங்கேயனே கட்டுவித்தான். இம்மண்டபத்தை எட்டுக் கற்றூண்கள் சுமந்துகொண்டிருக்கின்றன. அகலமும், நீளமும் உடையது.

செங்கோட்டுவேலவர் நிருத்த மண்டபத்திற்குச் செல்ல, கிழக்கு நோக்கிய ஒரு திருவாயிலும், தாண்டவ விலாசத்திற்கு வருவதற்குத் தெற்குநோக்கிய ஒரு திருவாயிலுமாக இரண்டு வாயில்கள் இம்மண்டபத்திற்கு இருக்கின்றன. மேற்குக் கோடியில் ஓர் கற்கட்டு மேடைமீது கிழக்குநோக்கிய திருமுகத்துடன் "நாரிகணபதியார்" கோயில்கொண்டிருக்கின்றனர். இவரது நான்கு திருக்கரங்களில், வலதுபக்கமுள்ள இருகரங்களின் ஒன்றில், அங்குசமும், மற்றொன்றில் தந்தமும்; இடதுபக்கமுள்ள மற்றிரு கரங்களின் ஒன்றில் பாசமும், மற்றொன்றில் கோத்துடன்கூடிய மாங்கனியும், (சிலர் மாதுளங்கனியென்கின்றனர்) எஞ்சிய தும்பிக்கையில் மோதகமும் இருக்கின்றன. சிற்பமுறை வழுவாத சிறந்த மூர்த்தம். இவரைத் "தலவிநாயகர்" என்கின்றனர். விநாயகருக்கு அருகில், நாகர் கற்சிலை உருவங்கள் இருக்கின்றன.

**அர்த்தநாரீச்சுரர் மகா மண்டபம்:—**

இம்மண்டபம், நாரிகணபதியார் மண்டபத்திற்கு மிகச் சமீபத்தில் வடக்குத் திக்கிலும், அர்த்தநாரீச்சுரர் ஆலயத்து அர்த்த மண்டபத்துத் திருநிலைக்கு எதிரிலும் இருக்கிறது. இதற்கு மேற்குவாயில் இல்லாததனால், தெற்குவாயில் வழியில்தான் பக்தகோடிகள் போக்குவரத்துச் செய்கின்றனர். இம்மண்டபத்திலேயே அர்த்தநாரீச்சுரர் உற்சவவிக்கிரகத்தை எழுந்தருளச்செய்திருக்கின்றனர்.

இம்மண்டபத்தின் நடுவில் இடபதேவர் அமர்ந்திருக்கின்றனர். இம்மண்டபத்திற்குள் வெளிச்சம் புகாததினுல், இருட்டாகவே இருக்கிறது. மாதந்தோறும் வரும் அமாவாசைநாளில் மட்டும் சுவாமி தரிசனத்திற்கு மிகுதியான கூட்டம் வருவதால், அன்று பக்தர்களின் நன்மைகருதி பெட்ரோமாக்ஸ் லைட் ஒன்று, இம்மகாமண்டபத்தில் ஈரோடு நூல் வர்த்தகர் திருவாளர் V. V. C. R. முருகேச முதலியாரவர்களால் ஏற்றுவிக்கப்பெறுகிறது. இம் மண்டபத்தை இராஜஸ்தானமாகிய சங்ககிரி துர்க்கத்தில் தமிழ்ச் சிற்றரசர் கவர்னராகவிருந்த சம்போஜி அவர்களால் கட்டுவதற்கு ஆரம்பித்து முடிவுபெருமல், கி. பி. 1684-ஆம் ஆண்டில் சேலம் ஜில்லா தாரமங்கலத்தில் சிற்றரசும், பிரபுவுமாய் விளங்கிய சீயாலகட்டி முதலியாரால் முற்றுப்பெற்றது.

**விசாலாட்சியுடன் கூடிய விசுவநாதர் கோயில்:—**

இக்கோவில் தாண்டவபத்திரை விலாசத்திற்குத் தெற்கில் இருக்கிறது. மூலத்தானத்திற்குத் தூபியுடன்கூடிய சிறிய கோபுரம் எடுக்கப்பெற்றிருக்கிறது. தேவரும், தேவியும் கிழக்குமுக நோக்கிக் கோயில்கொண்டிருக்கின்றனர். ஆவுடையாருடன் கூடிய இலிங்கம் மூலத்தானத்தில் இருக்கிறது. அர்த்த மண்டபத்தின் நடுவில் நந்தி உருவம் அமர்ந்திருக்கிறது. ஆலயத்திற்கு எதிரில் அகல நீளமான கற்கட்டு மண்டபம் ஒன்று இருபத்து நான்கு கற்றூண்களுடன் எடுப்பிக்கப்பெற்றிருக்கிறது. இத்திருப்பணியை, பாண்டி நாட்டுத்தமிழ் மதுரையில் அரசு செய்திருந்த விசுவநாத சோக்கலிங்க அரசனது பிரதிநிதியாகக் கொங்குநாட்டைப்பாதுகாக்கும் அதிகாரம் பெற்றிருந்த

சேஷாத்திரி பிள்ளையெனும் பிரபுவினது ஆதரணையிலிருந்த "நல்ல மகிபன்" என்னும் புண்ணியவானுல் செய்விக்கப் பெற்றது. இவ்வுண்மையை, "திருப்பணிமாலை" 150 ஆம் திருவிருத்தம் தெளிவாக விவரிக்கின்றது. அது:—

"கலைமேவு தமிழ்மதுரை விசுவநாதச் சொக்
  கலிங்க பூபதி மகிழவே
காசினிபுரக்க வரு **சேஷாத்திரி பூபதி**
  கனத்த புண்ணியமாக வே
நலமேவு புகழுர்த்த நாரீச பண்டிதன்
  நல்கவருக் கல்விமுகிலாம்
நம்பினவர் தம்பமென அன்புபுரி கும்பமுனி
  **நல்லமகீ பாலகன்**
குலமேவு மரவகிரி யாலயந் தன்னில்
  வடக்கோபுரத் தென்மேலையின்
குமார **விசுவேசுரர் விசாலாட்சி** நந்தீசன்
  குஞ்சர முகேசர் தமையும்
தவமேவு மண்டப் முடித்ததி லிருத்தியே
  தாபனஞ் செய்வித்தனன்
தாரணியி னீடுழி யசமானனுக் கதிக
  தருமந் தழைத்தேறவே." *

என்பது.

---

* இவ்வுண்மையிருக்க திருமதிலின் தெற்கு வாசலுக்கு அருகிலிருக்கும் **விசுவேசுரர், விசாலாட்சி, நந்தி, கணபதி** இவர்கட்கு மண்டபம்கட்டி நிறைவேற்றியவன், மதுரை நாய்க்க மன்னர்களில் **விசுவநாத தருமேந்திரனது** பிரதிநிதியாகக் **கொங்கு நாட்டிலிருந்த கஸ்தூரி ரங்கபூபதியுடைய குமாரன் முத்தியாலு நாய்க்கன்** என்று திருப்பணிமாலை 175 ஆம் கவி கூறுகிறது. இது ஐயத்திற்கு இடந்தருகிறது, ஆயின், நல்ல மகிபாலகனுடன் முத்தியாலுப்பிரபுவும் சேர்ந்து மேற்படி மண்டபத் திருப்பணியை நிறைவேற்றினர் போலும்.

இம்மண்டபத்திற்குத் தெற்கில் திருவமுது செய்யும் திருமடைப்பள்ளியிருக்கிறது. இம்மடைப்பள்ளிக்கு மேற்கில்தான் அர்த்தநாரீச்சுரர் ஆலயத்துத் தெற்குத்திருவாயிலும் அவ்வாயிலின்மீது திருக்கோபுரமொன்றும் எடுப்பிக்கப்பெற்றிருக்கிறது.

**ஆதிகேசவப் பெருமாள் ஆலயம்:—**

காத்தற்கடவுளாகிய இத்திருமால் கோயில், விசுவநாதர், விசாலாட்சி கோயில்களுக்குப் பின்னால் மேற்குத் திசையில் இருக்கிறது. நீளாதேவி, பூதேவி என்னும் இரு தேவிமார்களுடன் ஆதிகேசவர் ஆலயங்கொண்டிருக்கின்றனர். நான்கு கற்றூண்களுடைய சிற்றாலயம். மூலவர் கற்சிலையாகவும், உற்சவர் உலோகத்தாலும் நின்ற கோலத்துடன் சேவை சாதிக்கின்றனர். மூலத்தானத்தின் சிற்றுருவில் திருக்கோபுரம் ஒன்று கட்டப்பெற்றிருக்கிறது. மூர்த்திக்கெதிரில் பலிபீடமும், கோடிக்கம்பம் இருக்கின்றன. அநுமானும், கருடாழ்வானும் அங்கேயே அமர்ந்திருக்கின்றனர்.

**ஸ்ரீ நாகேச்சுரர் கோயில்:—**

இக்கோயில், அர்த்தநாரீச்சுரர் நிருத்தமண்டபத்தை யொட்டித் தெற்குத் திசையிலும், ஆதிகேசுவப்பெருமாள் ஆலயத்துக்கு வடக்கிலும் இருக்கிறது. அழகான சிற்ப சித்திரங்கள் நிரம்பிய திருக்கோவில். முன்மண்டபம், பத்துச் சித்திரக்கற்றூண்களைக்கொண்டு அழகும், அமைப்புமாய் விளங்குகிறது. இவற்றில், ஆறு தூண்கள் சிங்கம், யாளி, குதிரைகள் முதலிய உருவங்கள் செதுக்கப்பெற்று அழ



ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் ஆலயம்.



மலைமீதுள்ள முன் திருவாயில் கோபுரம்.

கொழுகும் அதிசயத்தூண்கள். தும்பிக்கையுடைய யாளிகள், தங்களது முன் வாயிலில் நீண்டுதொங்கும் தும்பிக்கைகளைக்கீழே தொங்கவிட்டு, தங்கள்கால்களின்கீழ் மிதிபட்டு, அஞ்சிப்படுத்திருக்கும் யானைகளின் நீண்ட தும்பிக்கைகளை வலியப்பிடித்து மேலே தூக்கும் பாவனையில் செதுக்கிய சித்திரத்தூண்கள் மண்டபத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கின்றன. இவைகளின் வேலைப்பாடுகள் மிக அருமையுடையவை. இந்த அற்புதச் சிற்பத்தைக் கல்லில் சித்தரித்ததைக் கதையென்று கூறினால் போதாது. கல்லிற் செதுக்கிய கவிதையேன்றுதான் சொல்லவேண்டும்.

நாகேச்சுரர் கோயிலின் கருப்பக்கிரகத்தை, நாற்புறமும் சுற்றிச்சுற்றி வரிசை வரிசையாகச் சித்தரித்திருக்கும் சிற்ப ஜாலங்களின் அழகுதான் என்ன கொஞ்சமா? கல் தச்சர்கள் அருமையாகத் தங்கள் கைவன்மை சிறக்கச் செதுக்கியச் சிற்பச் செல்வங்கள் என்று கூறின், அது மிகையாகாது. இம்மகா மண்டபத்தின் தெற்குச் சுவற்றையொட்டி, தனி அடியார் அறுபத்துமூவர் கற்சிலைகள் வரிசைபெற வைக்கப்பெற்றிருக்கின்றன. மூலத்தானத்தில் கோயில்கொண்டு விளங்கும் இலிங்கம் சுயம்புமூர்த்தியெனக் கூறுகின்றனர். (சுயம்பு=தானே தோன்றியது) மூர்த்தி, வெண்மை நிறமாக விளங்குகின்றனர். சிற்பம் விளங்கும் பெட்டகம்போன்ற திருக்கோயிலின் கருப்பக்கிரகத்தின்மீது செங்கல்லும், சுண்ணச் சாந்தும் கூட்டிக் கட்டிய சிறியதொரு விமானம் சிகரத்துடன் திகழ்கின்றது. மூலத்தானத்தின் பிற்பாகத்தில் புன்னைமரம் நிழலைத்தந்துகொண்டிருக்கிறது. மண்டபத்தின் நடுவில் இடபம் அமர்ந்திருக்கிறது. அருமை மிகுந்த இந்த ஆலயத்தைப் பரமத்

திக்கு அடுத்த வடகரை ஆற்றூரிலிருந்த இம்முடி இளையா நாய்க்கன் என்னும் வேட்டுவத்தலைவனால் கட்டுவிக்கப்பெற்றது. வடகரை ஆற்றூரினின்றும் பிரிகின்ற இராசவாய்க் காலும் இவனாலேயே வெட்டுவிக்கப்பெற்றது. இவ்வாய்க் காலை இளையாநாய்க்கனே வெட்டுவித்தான் என்பதற்கு:—

"மூவருக்கும் அகத்தியமா முனிவருக்கும் அரசிருந்த
முன்னை யோர்க்கும்
தேவருக்கும் திரும்பாத காவிரியைக் கொங்கேற்றித்
திறை கொண்டாயே!
பூவிருக்கும் முரமாயன், கடலடைத்தான் அவன்
வேடம் புனைந்தவாறே!
யாவருக்கும் இளையானே! யல்லாள! திருமலையா!
ஈகை யோனே."

என்றுள்ள திருப்பணிமாலை 226 ஆம் செய்யுள் தக்க சான்றாம்.

இவ்வுண்மையை, திருப்பணிமாலை, 267 ஆம் வெண் பாவும் உறுதிப்படுத்துகின்றது. இது:—

"ஏவிளம்பி வச்சரத்தே யேரகநா கீசருக்கு
மாவிளம்பக் கோவிலுமா மண்டபமும்—பூ விளம்பக்
கண்டா னல்லாளன் கருணையிளை யானுறைத்
தண்டாவு வாகையுரத் தான்."

என்பது.

**செங்கோட்டுவேலவர் திருக்கோயில்:—**

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றம்
ஏரகமும் நீங்கா இறைவன்." —சிலப்பதிகாரம்.

திருமலையினுள்ள இராய கோபுரத்தைக் கடந்ததும் யாத்திரை வாசிகளுக்கு முதன் முதல் தென்படுவது இவ்

வாலயமே யென்று முன்னரே மொழிந்துள்ளேன். இக் கோயில் மிகவும் பழைமை வாய்ந்தது. கண்கண்ட தெய்வமும், கலியுகவரதனும், தமிழ் விரகனுமாகிய முருகக்கடவுள் குன்றுதோறும் ஆடல்புரியும் குறிஞ்சிநிலக் கடவுளானதால், அவர், இம்மலையிலும், அடியவர்களை ஆட்கொண்டருளும் பொருட்டு ஆலயங்கொண்டிருக்கின்றனர். "சேங்கோடு" என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திற் கூறியது, கொங்கு நாட்டில் அமைந்த முருகப் பதிகளுள் தலைசிறந்த திருச்சேங்கோடு என்னும் திருமலையையேயாம். தெய்வப் பதியாகிய இத்திருமலை, தேவாரத் திருப்பாசுரத்தில் "கோடி மாடச் செங்குன்றூர்" என்று குறிக்கப்படுவதால், செந்நிறம் வாய்ந்த இக்குன்றின்மீது செல்வ நெடுமாடங்கள், சிறப்பு விளங்கிய தன்மை நன்கு அறியப்படும். மாட்சிமை மிகுந்த மாமலையில், பக்தகோடிகள், ஆண்டவனை பக்தியுடன் நாடொறும் வணங்கும் காட்சி, கல்மனத்தையும் உருக்கும் கவினுடையது. சிவந்ததாகிய இக்குன்றின்மீது செஞ்ஞாயிறு நிறமுடைய சேவலங்கொடியோன் கோயில்கொண்டு திகழ்வதால், "சேங்கோட்டு வேலன், சேங்கோட்டு வேற்பன்" என்ற பெயர்களைப் பெற்றனன் போலும்! ஆயிர நாமமுடைய இவ்வள்ளலுக்கு இப்பெயர்களும் பொருத்தமுடையதே. திருப்பரங்குன்றத்தில் தெய்வயானையை மணந்த திருக்கோலத்துடனும்; ஏரகமெனும் சுவாமிமலையில் தந்தைக்குப் பிரணவோபதேசஞ் செய்த ஞானபண்டிதனுகவும்; செட்டிநாட்டுக் குன்றக்குடியிலுள்ள கோயிலில் குழந்தை வடிவேலனுகவும், தென் திருப்பழநியில் காவியுடையணிந்த பண்டார மூர்த்தியாகவும், தொண்டைநாட்டுத் திண்டிவனத்துத் திருமயிலத்தில் மயில்வாகனனுகவும், விளங்கும் திருக்குமரன், இத்திருச்செங்கோட்டில் பால சுப்பிர

மணியனுகக் காட்சியளிக்கின்றனர். தன்னந்தனியனுய், வேலேந்திய கையனுய், நின்ற நிலையில் தரிசனம் தந்தருளும் அத்திவ்ய மங்கள வடிவும், அழகுவழிந்தொழுகும் அவ் வற்புத மூர்த்தியின் கருணை பொழியும் திருமுகத்தின் திருப் பொலிவும், கண்டோர் கவனத்தைக் கவரும் காந்தசக்தி மிகுந்த குளிர்ந்த பார்வையும், சந்நிதியின் திருமுன்னே நின்று கூர்ந்து நோக்குபவரைக் கணத்தில் பெரிதும் இன்புறுத்தவல்ல இனிய செயலும் வேறு எத்தலத்தும் காண்பதரிது. இவ்வுண்மையை திருமுருகனையன்றிப் பிற தெய்வங்களைப் பாடியறியாத சந்தக் கவிச்சிங்க வேறுகிய ஸ்ரீ அண்ணுமலை அருணகிரிநாத சுவாமிகள்,

"மாலோன் மருகனை மன்ருடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைக் சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே" (90)

என்று வியந்து பாடுவதால் தெளியப்படும். இச் செய்யு ளால், செங்கோட்டு வேலவர், அருணகிரிநாதர் கண்ணுக் கும் கருத்துக்கும் அடங்காத அத்தகைய கவின்கொண்டு விளங்கினர் போலும்! என்னே! அத் தமிழ்ப்புலவர்பால் அவர் கொண்ட அன்பின் பெருக்கு. புலவர்தானே புலவர் தம் புலமையை அறிந்து மகிழக்கூடியவர்.

மன்ருடிமைந்தன் = ஸ்ரீ நடராசர் புதல்வன்.

"திருமாலுக்கு மருகனை, சிவகுமாரனை, தேவர்களுக் கும் மேலான தேவனை, மெய்ஞ்ஞான தேவதையை, உலக கத்தில் சேல்மீன்கள் நிறைந்த வயல்களுடன், சோலைகளும் சூழ்ந்த திருச்செங்கோடனை, போய்க் கண்டு வணங்க, அந் தப் பிரமன் நாலாயிரம் கண்களைப் படைத்தானில்லையே" என்பது. பாட்டின் பொருள்.

அருணகிரிநாத அடிகளுக்கு அருண் மூர்த்தியாகிய அறுமீன்காதலனிடத்து அளவிறந்த காதலுண்டென்பதற்கு அவர் கந்தரலங்காரத்தில்,

"சுழித்தோடு மாற்றிற் பெருக்கா னதுசெல்வந் துன்ப மின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டு முத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே." (36)

"மனமே! சுழித்துக்கொண்டு ஓடுகிற ஒரு நதியில் வெள்ளம்போன்றது செல்வமாகும். ஆதலால், துன்பம் இன்பங்களைத் தாண்டி ஓடுவது எக்காலம்? யானைக்கொம்பிலுண்டான முத்துக்களை வீசிக்கொண்டு ஓடுகிற காவிரியாற்றுக் கரையிலுள்ள திருச்செங்கோடனே! என்று உச்சரிக்கவில்லை; அட்டகுல மலைகளையும் பிளந்துகொண்டு ஓடுகிற வேற்படையே! என்றுபிரார்த்திக்கவில்லை; (இவ்வாறு இருக்கும் எனக்கு) முத்தி கிட்டுவது எவ்வாறு?" என்பது.

"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங்கோடன் மயூரமுமே." (70)

"கண்களுக்குத் துணையாவது அழகாகிய மெல்லிய தாமரை மலர்போலுந் திருவடிகள்; உண்மையாகிய சொல்லுக்குத் துணையாவது, முருகா வென்கின்ற திருநாமங்கள்; முற்பிறப்பிற் செய்த பாவத்துக்குத் துணையாவது அவனது பன்னிரண்டு புயங்களும்; அஞ்சின தனிவழிக்குத் துணையா

வது திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளின் வடிந்த வேலாயுதமும், மயிலுமேயாம்" என்பது. மயூரம் = மயில் என்னும் பொருள்தருவதோர் வடசொல்.

"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே." (72)

"செந்நிறத்தையுடையவனை, கந்தவேளை, திருச்செங்கோட்டு மலையில் எழுந்தருளியிருப்பவனை, செவ்வொளியுடைய வேற்படை ஏந்திய அரசனை, செந்தமிழ் மொழியைப் பரவச்செய்தவனை, பிரகாசிக்கின்ற வள்ளியம்மைக்கு நாயகனை, மணமுள்ள கடம்பமலர் மாலையை அணிந்தவனை, கறுத்த மயில்வாகனத்தை உடையவனை, இறக்குந்தருணத்திலாவது மறவாதிருப்பவர்க்கு ஒரு குறைவுமில்லை" என்பது.

"செங்கோட்டுப் பெருமானது திவ்ய ஓலக்க விசேடம் இத்தன்மைத்து என இச்செய்யுள் விளக்குகிறது. இதனு லன்றோ, "சேங்கோடமர்ந்த பெருமாளே—சேன்றே யிடங்கள் கந்தா எனும்போ செஞ்சேவல் கோண்டு வரவேணும்" என்றூர் திருப்புகழ் 367-ஆம் கவியில்,

வெற்பு—மலை. நூல் என்றது மொழியை. காந்தன் = வடசொல். துணை—எல்லை, அளவு.

"கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவு கொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேல னைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே." (9)

"கரிய மாலுக்கு மருகனை, வள்ளிநாயகியைக் களவில் எடுத்துக்கொண்டுவந்த வேடனை, சேவலைக் கைக்கொண்டிருப்பவனை, விண்ணுலகத்தார் பிழைக்கும்படி போர் செய்யவந்த மாமரத்தைப் பிளந்த முருகவேலனை, இளமையாகிய கமுகமரங்களோடு கற்பகத்தருவானது அழகாகச் சேர்கின்ற திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருப்பவனை, வாழ்த்துதல் மிகவும் நல்லது" என்பது.

கருமான், செம்மான், ஆசுலன், கைக்கோளன், வேலன் என்பன சாதிப் பெயர்கள். இவைகளின் பத சாதுர்யம் கவனிக்கற்பாலது.

"தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே!
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே." (23)

"தெய்விகம் அமைந்த திருமலையாகிய திருச்செங்கோட்டில் வாழ்கின்ற செழிய தீபமே! கூர்மையுள்ள வேலாயுதத்தையுடைய தேவனே! உன்னை நான் மறக்கமாட்டேன்; ஐவருக்கும் இடமுண்டாயிருக்க இருகால்களை நட்டு, அதன்கண் இரண்டு கையமைத்த வீடு அழியுமுன்னே எழுந்தருளி என்னைக் காத்தருளக் கடவை" என்பது.

சுடரே! என்பதற்குச் சூரியனே என்று உரைத்தலும் ஆம். ஐவர் = ஐம்புலன்கள்.

"செங்கே ழடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ் செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேயென் முன்வந் தெதிர் நிற்பனே," (104)

"தாமரை மலர்கள் மணத்தையும், முத்தையும் சொரி தற்கிடமாகிய செங்கோடைக் குமரவேளே! யென்று எங்கே நினைக்கினும், செந்நிறம் பொருந்திய சிவன் ஆதியில் அருளின வேற்படையும், திருமுகமும், பக்கத்தில் வரிசை யாயுள்ள அழகிய பன்னிரண்டு புயங்களும், கொண்டு அங்கே என் முன்வந்து எதிரே நிற்பார்" என்பது.

"சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தனந்தன் பணாமுடி தாக்க அதிர்ந் ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே." (97)

"சேல்மீன்களால் விளங்குகிற வயல்சூழ்ந்த செங் கோடை வெற்பன் முருகவேளின் செழுமயிலானது, ஆர வாரஞ்செய்து ஆதிசேடனது பணாமகுடத்திற் மிதிக்க, அதிர்ந்து மாணிக்கத் தொகுதியும், உலகத்தைக் காக்கின்ற திருமாலும், அவன் சக்கிராயுதமும், சங்கும், அதன் காலின் கீழ்க் கிடப்பதற்காயின" என்பது.

கலபி=மயில். அது கலாபத்தையுடையது. கலாபம்= தோகை. பணாமுடி=படங்களையுடைய தலை. ராசி=கூட் டம். ஆலல்=மயிலின் குரல். ஆடல்=ஒலித்தல்.

என்று வரும் இன்பப்பாடல்களை இனிது பாடியிருப்ப தால், தெளியப்படும். கந்தர் அலங்காரம் என்பது, திரு வடிமுதல், திருமுகம்வரையும் உள்ள அங்கங்களின் சிறப் பையும், அவர் வாகனமாகிய மயில், படையாகிய வேல், கொடியாகிய சேவல், இவைகளின் பெருமைகளை எடுத்து விவரிக்கின்ற நூல் ஆதலால், அதற்கு அப்பெயர் ஏற் பட்டது.

"அடலருணைத்திருக் கோபுரத்தே அந்தவாயிலுக்கு வடவருகிற் சென்றுகண்டுகொண்டேன்" என்றுள்ள விநாயகவணக்கக் காப்புச்செய்யுளால், கந்தலங்கார நூல், திருவண்ணமலையிலிருந்தே பாடியிருத்தல் வேண்டுமென்று தோன்றுகிறது.

"பேராதரிக்கும் அடியவர்தம் பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்கவரும் பிள்ளைப் பெருமா னென்னும் பேராளர்" கந்தப்பெருமான் ஆனதால், அவர் அருணகிரி நாதரை, அண்ணமலையில் ஆட்கொண்ட பின்னரேயே அடிகள் இந்நூலைப் பாடியிருத்தல்வேண்டுமென்பது,

"பேற்றைத் தவஞ்சற்றுமில்லாத என்னைப் பிரபஞ்ச மென்னும்
சேற்றைக் கழிய வழிவிட்டவா." (1)

"வெறுந்தனியைத் தெளிய விளம்பியவா! முகமாறு டைத்
தேசிகனே."

"வள்ளிகோ னன்றெனக் குபதேசித்த தொன்றுண்டு" (9)

"எல்லா மிழந்து சும்மா இருக்கும் எல்லையுட் செல்ல எனை
விட்டவா!" (10)

எனவரும் அருணகிரியாரது அருமைத் திருவாக்குகளால் தெளிவாகப் புலனுகின்றது.

"செங்கோடனைச்சென்று கண்டுதொழ நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான்முகனே!" என்பது, செங்கோட்டுவேலவர் திவ்ய சொரூபத்தை அருணகிரியார் நேரில் தரிசித்துச் சொல்லியதாதலின், திருச்செங்கோட்டைத் தரிசனம் செய்து விடைபெற்று மீண்டபின்னரே, அருணையிற்சென்று அடிகள் அலங்காரத்தைப் பாமாலையாற் சித்தரித் திருத்தல் வேண்டும்.

கந்தர் அலங்காரச் செய்யுட்களேயன்றி, கந்தரநுபூதி, கந்தரந்தாதி, திருப்புகழ் முதலிய பிரபந்தங்களிலும், செங்கோட்டுவேலரைச் சிறப்பித்திருக்கின்றனர். அவைகள்:—

"நாகாசல வேலவ! நாலுகவித்
தியாகா! சுரலோக சிகாமணியே" (11)

கந்தரநுபூதி.

"ஆரணத்தந்திநகர்" (**23**) "கட்செவிக்குன்ற!" (**26**) "அரவக்குன்றில் கந்தா!" (**41**) "செங்கோட்டினன்" (**42**) "நகபூதர" (**67**) "கோத்ரிபுர" (**78**) "தென்றலையம் புசக பூதர!" (**82**) (கந்தரந்தாதி)

"செங்கோடமர்ந்த பெருமாளே!" (**1**) "செங்கோடுறை பெருமாளே!" (**6**) செங்கோடை நகர்வாழவந்த தம்பிரானே!" (**8**) "செங்குவட்டிற் றங்குபெருமாளே" (**9**) "நாகமாமலை சோற்பெற நிற்பதோர் பெருமாளே" (**13**) நாலுமறைப்பொருளான நாககிரிப்பெருமாளே!" (**14**) "நீணுகாவாய்காளக்கிரிப் பெருமாளே" (**15**) "உரகசிகரி" (**16**) "சர்ப்பகோத்ரப் பொற்ப" (**17**) "சர்ப்பகிரீச்சுரப் பெருமாளே?" (**19**) "சர்ப்பப்பொற்றைட்குட் சொக்கப்பெருமாளே" (**20**) பணிசயில விதரண" (**21**) என்பன. (திருப்புகழ்)

கந்தரநுபூதி என்பதற்கு, முருகக்கடவுள் அருள்மொழி அல்லது அறிவுரையின் சிறப்பையும், அக்கடவுள் அன்புகூர்ந்து காட்டிய அருளிரக்கத்தின் பெருமையையும், பேசும் நூலென்பது பொருள். அநுபூதி = மெய்யறிவு. கந்தப்பிரான் தம்மைத்தடுத்தாட்கொண்டு, திருவடிசூட்டி, மௌன உபதேசஞ் செய்த பிறகே கந்தரநுபூதியை அருணகிரிநாதர்

இசைத்தனர் என்பது *"எனையாண்ட இடந்தானே பொருளாவது" (3) "மெய்ப்பொருள் பேசியவா" (8) "முருகன்........ சும்மா இரு, சொல்லற என்றலுமே" (12) "உபதேசம் உணர்த்தியவா" (20) எனவரும் திருவாக்குகளால் அறியக்கிடக்கின்றது. இந்நூல் ஐம்பத்தொரு செய்யுள்கள்கொண்ட அற்புதச்சிறு நூல். பொருட் சிறப்பில் இந்நூலுக்கிணையாம் நூல் பிறயில்லை என்பது உண்மை.

இந்நூல் முழுவதையும் நித்திய பாராயணத்துக்கு வைத்துக்கொள்ளுவது மிக மேலானதென்று ஆன்றோர் அறைவர். 'பேசா அநுபூதி' பெற்றவுடனே பாடியது கந்தரநுபூதியென்றும், திருப்புகழ்பாடி, முருகன் திருவருள் பெரிதும் ஊறியூறிப் பேரானந்தம் முதிர்ந்து ததும்பின நிலையிற்பாடினது கந்தலங்காரம் என்றும், கொள்ளுதற்கு இடம் ஏற்படுகிறது. கிளிரூபம் பெற்றபின் இவ்வநுபூதி பாடினர் என்னும் கொள்கைக்கு இடம் ஒன்றும் நூலில் ஏற்படவில்லை. கிளிரூபம் பெற்றபின் "திருவகுப்புப் பாடினர்" என்பதற்கு சான்று உளது.

## ஸ்ரீ செங்கோட்டுவேலர் மூலத்தானம்:—

பார்ப்பவர்களது பஞ்சப்புலன்களுக்குப் பரவசத்தைத் தந்து, பேரானந்தத்தைப் பெருக்கும் மகிமை மிக்க பாலசுப்பிரமணியப் பெருமானது மூலத்தானம், சிற்றுருவை

---

* இது, நினைக்க முத்தியளிக்குந்தலமாகிய திருவண்ணமலை. இத்திருத்தலத்திலேதான் ஸ்ரீ அருணகிரிநாதர் பேரின்ப நிலையமாகிய திருவடி சூட்டப்பெற்று, மௌனோபதேசமும் பெற்றனர். இவ்வுண்மையை "அருணையிற் சித்தித்தெனக்குத் தெளிவருள் பெருமாளே" (550) என்றுள்ள திருப்புகழிற்காண்க.

உடையது. ஆயின், கனத்த கருங்கற் கட்டிடம். கருப்பக் கிரகத்தின்மீது விமானம் தூபியுடன் கூடியிருக்கிறது. சிற்பம் வல்லாரால் சிறப்பாகச் சித்தரிக்கப்பெற்றிருக்கிறது. சிற்பக்கலைவல்ல சிற்பாச்சாரியால் முறைவழுவாது சித்தரிக்கப்பெற்ற மூலவர் கற்சிலை, அழகுமலிந்த அமைப்புடன் விளங்குகின்றது. மூர்த்தி கிழக்குமுகம்நோக்கி நின்று, தம்மைத் தரிசித்து வணங்கும் அடியவர்கட்கு ஆனந்தக் காட்சி அளித்துக்கொண்டிருக்கின்றனர். அவரது வலது கரத்தில் நீண்டதோர் வேற்படையும், இடதுகரத்தில், கோழிக் கொடியும் இலங்குகின்றன.

பரவசம் = தன்னுணர்வின்மை.

மூலத்தானம், அர்த்தமண்டபம், அணியோட்டி மண்டபம் முதலிய திருப்பணிகளை, மோரூர், அத்தப்ப இம்முடி நல்ல தம்பிக் காங்கேயனே செய்ததாகக் கல்வெட்டுக் கூறுகிறது. அக்கல்வெட்டு, சுப்பிரமணிய சுவாமி கோயில் அர்த்த மண்டபத்தின் வடசுவற்றில் வெட்டப்பட்டிருக்கிறது, அது:—

"ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் **1541** ஒன்றின்மேல் செல்லா நின்ற சித்தார்த்தி ஆண்டு சித்திரைத் திங்கள் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் மோரூரில் இருக்கும், வேளாளர் கண்ணர் குலத்தில் திருமலை அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் குமாரன், அத்தப்ப இம்முடி நல்லதம்பிக் காங்கேய கவுண்டன் உபயம். குமாரசாமியார் மண்டபமும், இதற்கு வடபுறம் சிறந்த பத்தி, பெரியாண்டவர் சந்நிதி, கூடம், சிங்கக்கால், குதிரைக்கால் இருபத்திரண்டு, சக்கரக்கண்டக்கால் பன்னிரண்டு, இதற்குண்டான பாவுகல், தளவரிசை உள்பட முற்றுப்பெறுவித்தான். புண்ணியத்தினுல், அன்னதான சோமன் என இருந்தான்" என்பது.

**நிருத்தமண்டபம் அல்லது சபாமண்டபம்:—**

இதனை, "முன்மண்டபம் என்றும், சித்திர மண்டபம்" என்றும் கூறுகின்றனர். இது, தென்வடலில் இருபதுமுழ அகலமும், கிழமேல் இருபத்தியேழுமுழ நீளமும் இருக்கின்றன. மொத்தத்தூண்கள் இருபது. இவற்றில் விசேடமான சிற்பத்தூண்கள் பத்தும், சாதாரண சிற்பத்தூண்கள் பத்தும் மண்டபத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கின்றன. இவைகளேயன்றிச் சிற்பச்செல்வம் நிரம்பிய சிங்கம், யாளித்தூண்கள் பல மண்டபத்தின் முகப்பை, வடக்கிலும், கிழக்கிலும் அழகுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

தெற்குநோக்கி வடக்கு வரிசையில் நிற்கின்ற மூன்று பெருந்தூண்களில், மேற்குக்கோடியின் முதல் தூணில், வனப்புள்ள ஆடவனும், பெண்ணும், அன்பு ததும்பும் உள்ளத்தராய், புன்னகையரும்பும் முகவிலாசத்துடன் ஆடவன் தோள்மீது பெண்கரமும், பெண்ணின் தோளின்மீது ஆடவன் கரமும் அணைத்துக்கொண்டு, உல்லாசமாய் நிற்கும் பாவனையுள்ள உருவமும்; அதற்கடுத்த இரண்டாவது நடுத்தூணில், தக்கயாக சங்கார மூர்த்தியாகிய அகோர வீரபத்திரர், உருத்திராகாரமாய், கோபக்கனல் கொழுந்துவிட்டெரிய, தக்கயாகத்திற்கு உதவியாயிருந்த வலிய அரக்கனைத் தரையில் மல்லாந்து விழும்படி வாரிவீழ்த்தி, அவன்மார்பின் மீதும், புயத்தின்மீதும், தமது கால்கள் அழுந்த மிதித்துக் கொண்டு, அரக்கன் மார்பின் நடுவே தமது கையிலிருக்கும் நெடிய சூலாயுதத்தால் ஊடுருவக்குத்தி உயிர்வாங்கும் கோரமும், காண்போர் உள்ளத்தைத் திடுக்கிடச்செய்யும் பயங்கரத்தையுடையன. வீரபத்திரர் கைகளிலுள்ள ஆயுதங்கள்

பத்தும், வரிசையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. உரத்திற் பாய்ந்து ஊடுருவிய சூலாயுதத்தின் கூர், வெளியில் தெரிவதுபோலவும், வீரபத்திரர் சிரத்திலுள்ள சடைமுடியில் பாம்பு, தேள் முதலிய விஷ ஜந்துக்கள் ஊறிக்கொண்டிருப்பதுபோலவும் விளங்கும் சிற்பங்கள் அதிசயமும், அதிநுட்பமும் உடையவை.

மூன்ருவது தூணில், நிருத்தமண்டபத்தை உண்டாக்குவித்த இருபுலி (இருப்பிலி) என்னும் ஊர்ப்பிரபு இளையாக்கவுண்டருடைய சகோதரர் ஒருவரது கற்சிலையும்;

இதற்கு அடுத்து வடகிழக்கு மூலையிலுள்ளது, இரட்டைப்பெருந்தூண். இது, மூன்று குந்து சிங்கங்களின்மீதுபற் பல செடிகொடிகளால் அலங்கரிக்கப்பட்ட சித்திரத்தூண்.

இதற்கு அடுத்து சந்நிதிக்கு நேர் மேற்கில் நிறுத்தப்பட்டிருக்கும் இரு தூண்களில், வலது பக்கத்துத் தூணில் இளையாக்கவுண்டர் சகோதரரில் மற்ருெரு சகோதரரது உருவமும்; இடது பக்கத்துத் தூணில் இளையாக்கவுண்டரும், அவர் மனைவியும், கூப்பிய கரத்தாய் நிற்கும் உருவமும்;

இதற்கு அடுத்துத் தென்கிழக்குமூலையிலிருப்பது, இரட்டைப்பெருந்தூண். இதுவும் மேற்கூறியபடியே அலங்கரிக்கப்பெற்றது.

## தெற்கு வரிசை.

தெற்குவரிசையில் வடக்குநோக்கி நிற்கும் மூன்று தூண்களில், மேற்குக் கோடியிலுள்ள முதல் தூணில், இளையாக்கவுண்டர் சகோதரருள் பின்ருெருவர் உருவமும், அதற்கடுத்த

நடுத்தூணில், இளையாக்கவுண்டர் தாய், தந்தையர்களின் உருவங்களும் அதற்கடுத்த ஓரத்தூணில் வீணையைக் கைகளிலேந்தித் தேவாரத் திருப்பண் பாடும் திருக்கோவில் கணிகை உருவமும் சித்தரிக்கப் பட்டிருக்கிறது.

செங்கோட்டுவேலர் மகாமண்டபத்து முன் திருவாயிலில், இரு பக்கத்திலும் துவாரபாலகர்கள் இருவர் கற்சிலைகள், கம்பீரமான தோற்றத்துடன் விளங்குகின்றன. துவாரபாலகர்கள் சிற்பங்கள், அற்புதமான சிற்றுளித் திறமை வாய்ந்தவை. அவ்வாயில் காப்போரின் மார்பிலுள்ள மணிவடங்களின் ஒவ்வொரு மணியிலும், வெகு லேசான இலண்டன் ஊசியை நுழையவிட்டால், செல்லக் கூடிய அவ்வளவு நுண்ணியதான துளைகள் உள்ளன.

சிற்பமேன்மையும், சிற்றுளித்திறமையும்மிக்க இவ்வாயில்காப்போர்களின் கற்சிலைகளை, பெரும்பொருட்செலவில் திருப்பணி செய்துவித்த செல்வர்கள், நகரத்துச் சேட்டிகள் திருமரபில் தோன்றிய "நல்லகட்டி—சேங்கோடன்" என்னும் பெயரினர்கள் ஆவர்.

அர்த்தநாரீச்சுரர் ஆலயத்து நிருத்தமண்டபத்தின் மேலுள்ளதளத்தின்மீது செதுக்கப்பட்டுள்ள தாமரைமலர்த் தளவரிசைகளில் — கிளிகள்—கற்சங்கிலிக் கொலுசுகள் போலவே உருவிலும் அளவிலும், அழகிலும் ஒரு சிறிதுங் குறையாதவாறு இம்மண்டபத்தின் மேல் தளத்து உள் விதானத்தின் மீதும் சித்தரிக்கப்பெற்றிருப்பதால், அவை பற்றி இங்கு மேலும் விவரிப்பது மிகையாகுமென்று விடப்பட்டது.

இம்மண்டபத்துத் தூண்களின் உத்திரங்களின் பக்கங்களின் நாற்புறத்தும், கந்தபுராணக்கதைகளை வரிசையாகச்

சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இம்மண்டபத்துக் கிழக்குத் திசையின் நடுவில், செங்கோட்டுவேலரது மயிலுக்கு ஓர் கற்சிலை சித்தரித்தும், நாற்கால் மண்டபம் எடுப்பித்தும், பிரதிட்டை செய்வித்தும் புண்ணியம் பெற்றவர், தாரமங்கலம் இம்முடிகட்டி முதலியார் குமாரர் சீயாலகட்டி முதலியார் அவர்கள். இங்ஙனம் ஆண்டவனுக்கு மயில் வாகனத்தையும், மண்டபத்தையும் சிறப்பாகச் செய்வித்த காலம், கலியுக சகாப்தம் **1570**ன் மேல் விஜய ஆண்டு பங்குனித் திங்கள் **19**-ஆம் நாள், பூர்வபட்சத் தசமியும் வெள்ளிக்கிழமையும் கூடிய நன்னுள். இவ்வுண்மை, திருப்பணிமாலை 258 ஆம் செய்யுளில் தெளிவாகத் தெரிகிறது. அது:—

"ஏருலவு செங்கோடை வருதிருவிளங் கோவி
    லெழிலான வேலர் திருமுன்
இயல்பான மயில்வா கனந்தனைப் பிரதிட்டை
    யினிதாகவே செய்தனன்
தாருலவு மார்பினன் மங்கையிம் முடிகட்டி
    தந்த சீயால கட்டி
சற்புத்தி ராதிகளுடன் முறை நடத்தியே
    சந்ததமும் மிகவாழ்கவே,"

என்பது.

மங்கை=தாரமங்கலம். இம்முடி=இம்மடியென்பதன் திரிபு, இம்மடி=இரண்டு. கட்டி=கட்டி முதலியார்.

**மற்ருெருசபா மண்டபம்:—**

நிருத்த மண்டபத்திற்கு மிக நெருங்கித் தெற்கிலிருக்கும் கருங்கல் மண்டபத்திற்குச் சபாமண்டபம் என்றே பெயர் கூறுகின்றனர். இது, நிருத்த மண்டபத்துக்கு முன்

னரே குறிக்கப்பட்ட அகல நீளங்களுக்குச் சிறிது அளவில் குறைவுபட்டது. இம்மண்டபத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் இருபத்திரண்டு கற்றூண்களில், சிற்பச்செல்வமும் சிறந்த அழகும் நிரம்பிய சித்திரத்தூண்கள் நான்கு. எஞ்சிய தூண்களில், அருச்சுனன் தபசு, அருச்சுனனும் சிவவேடரும் செய்யும் மற்போர், சிவபெருமான் உமாதேவியுடன் இடபாரூடராய்க் காட்சியளித்துப் பாசுபத அத்திரம் அளித்தல் முதலிய சித்திரங்களும், வேறுபலவும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இம்மண்டபத்தின் மேல் தளத்து நடுவிலும், தாமரை மலர் மொட்டுடன் சித்தரிக்கப்பட்டிருக்கின்றது. இவையேயன்றி, போதிகைகள், உத்திரங்கள் முதலியனவும் சித்திரமயமாகவே இருக்கின்றன.

சபாமண்டபத்தின் கிழக்குக்கோடியில் குமரேச்சுரர் ஆவுடையாருடன் கூடிய இலிங்கவடிவில் கோயில்கொண்டிருக்கின்றனர். மேற்கு நோக்கிய சந்நிதி. மண்டப மையத்தில் மூன்றடி உயரத்திலும், கிழமேல் ஐந்துமுழ அகலத்திலும், தென்வடல் ஐந்துமுழ நீளத்திலும், சித்திரம்நிரம்பிய அழகான கற்கட்டு மேடையொன்றிருக்கிறது. இந்த மேடைமீது உற்சவ காலங்களில், உற்சவமூர்த்தி எழுந்தருளி உற்சவம் கொண்டருள்கின்றனர்.

வடக்கு நோக்கியுள்ள நான்கு சித்திரத் தூண்களில் தென்கீழ்க்கோடியிலுள்ள முதல் தூணில், சைவகோலத்தில் இருகைகூப்பி நிற்கும் கற்சிலையே, ஸ்ரீ வேதநாயகக் குருக்கள் அவர்களின் திருவுருவம். இவர், இருபுலியூர், கொங்குவேளாள செல்லகூட்டத்து இளையாக்கவுண்டரவர்களுடைய குலகுரு. நல்ல சைவமேனி. அவரது நல்லுருவம், இயற்

கையான அவரது அழகை நன்ருகக் காட்டிக்கொண்டிருக்கின்றது. இவ்வுருவைச் சமைப்பதில் சிற்பி, தனது சிறந்த கைவன்மையைக் காட்டியிருக்கின்றனன். இரண்டாவது தூணில், வேடுவனது நிஜவடிவம். மெய்யாகவே காண்போர் கண்டுவியக்கும்படி அற்புதமாகச் சித்திரிக்கப்பெற்றிருக்கிறது. வேடுவன், அன்று வேட்டையில் கிடைத்த ஓர் புருவை, தனது வலையில் அடைத்துத் தோளில் மாட்டிக்கொண்டிருக்கின்றனன். அப்புரு அவ்வலையினின்றும் தனதுதலையை வெளியில் நீட்டிக்கொண்டிருக்கிறது. இடது கையில்வேட்டை வில்லும், வலதுகையில் அம்பும், மற்ருெரு தோளில் பிரம்பைக்கொண்டு நயமாகப் பின்னப்பட்ட சிறு கூடையும், கோணல் கொண்டைக்கட்டும், கோரப்பார்வையும், பீறல் உடையும், பிரத்யட்சமாய் விளங்கிக்கொண்டிருக்கின்றன. இயற்கைமாருத கூடைப்பின்னலின் அழகைப் பார்ப்பவர்கள், கடினமான கருங்கல்லிலுங்கூட இத்துணை நயந்தோன்றக் கல்லுளியில் சித்திரிக்கும் கல்தச்சனும் அக்காலத்திலிருந்தானு? என்று அதிசயப்படாமல் இரார். வலையில் அகப்பட்ட ஏழைப்புரு, தப்பி ஓடுவதற்கு யாதுசெய்வதென ஆலோசிக்கும் விதமும் நன்ருகவேயிருக்கிறது.

மூன்ருவது தூணிலுள்ள உருவம், வேடுவச்சி. அவள் தனது தலையில் அணிந்துகொண்டிருக்கும் அணிகளும்; பின்புறம் தோளில் தொங்கும் அவளது கனத்த கொண்டையும் கட்டுக்கடங்காது வெளியில் துருத்திக்கொண்டிருக்கும் பருந்துயர்ந்த தனங்களும், பருத்த இடையும், கருத்த தேகக்கட்டும்; இடுப்பில் கட்டிய வரிகூடிய முரட்டு நூலால்செய்த வரட்டுச்சேலையும், தோழில் தொங்கிக்கொண்டிருக்கும்பிரம்புக்கூடை, சோற்றுக்கலயம், பழந்துணி மூட்டை, இரு

கைகளினுல், ஏணையிலேந்தியுள்ள பாலுண்ணும் பச்சைக் குழந்தை ஆகிய இவைகள், அப்படியே பார்ப்போர்க்கு விளங்கும்படி சித்தரித்த சிற்பியின் அற்புதக் கைத்திறம் செப்புந்தரமல்ல. ஏணை = புடவைத் தொட்டில்.

நான்காவது தூணின் உருவம், பகைவருக் கஞ்சாதபழங் காலத்து வில்விரனது இயற்கைவடிவம். அவ்வடிவத்தில் அவனது வலியதோற்றம், முறுக்கு மீசை, கோணல் தலைப் பாகை, உருட்டிவிளிக்கும் பயங்கரக் கண்கள், இடையில் தொங்கும் உடைவாள், குத்தீட்டி, காலில் அணிந்த வீரக் கழல் முதலியன அப்படியே பிறர்மனதில் பதியும்படி அழகுபெறச் செதுக்கிய சிற்பியின் கைத்திறமும் அற்புத மானதே.

செங்கோட்டுவேலர் நிருத்தமண்டபமும், மற்ருேரு சபா மண்டபமும், அர்த்தநாரீச்சுரர் நிருத்தமண்டபமும், நாகேச்சுரர் திருக்கோவில் கருப்பக்கிருக அர்த்த மண்டபங்களும், திரு வாயில் காப்போர் கற்சிலைகளும், அற்புதமானதோர் சிற்பக் காவியமேன்றே தோன்றுகின்றது. கலைவன்மையும், கைவன் மையும் நன்குகற்றறிந்த கல்தச்சர்கள், தாங்கள் பலகால் கற்றுணர்ந்த சிற்ப நுட்பங்களை, இச்செங்கோட்டுத் திருக் கோயிலில் விரிவாகக்காட்டி ஓர் சிற்ப நிலையமாகச்செய்து விடவெண்ணிச் சித்தரிக்கப்பெற்ற சிற்ப ஜாலங்களோ! வெனக் கருதக்கூடியதாயிருக்கின்றன.

சிற்ப ஜாலங்கள் = சிற்பத்தொகுதிகள்.

சிற்பச் செல்வமும், பெருமையும் வாய்ந்த செங்கோட் டுத்திருக்கோயில்கள், வனப்பிலும் மாட்சிமையிலுமேயன்றி, பழந்தமிழர்களின் நாகரீக மகிமைக்கும் சிறந்த சாட்சியாய் விளங்குகின்றன.

ஊன்றிக்கவனிக்கும் அறிஞர்கள், கடினமான கருங் கல்லுங் கனிந்து, பக்திக்கு உருவங்கள் தந்துவிட்டனவோ வென்று கருதி மகிழாதிரார்கள்.

சிற்பவனப்புக்கள் நிறைந்த செங்கோட்டுவேலர் நிருத்த மண்டபத்தையும், சபாமண்டபத்தையும் திருப்பணி செய்வித்த சிவச்செல்வர், திருச்செங்கோட்டுக்குக் கிழக்கில் சுமார் ஏழுகல் தூரத்திலிருக்கும் இருபுலியூரில், கொங்கு வேளாளர்களுள், செல்லகுலத்துக் காணியாளராகிய மாபெருந் தனிகர், இளையாக்கவுண்டர் என்னும் பெயரினர். இவரே, இவைகளைத் திருப்பணி செய்வித்தார் என்பதற்குக் கல் வெட்டேயன்றி, திருப்பணிமாலை வெண்பாக்களும் சான்று கூறுகின்றன. அவைகள்:—

## வெண்பா.

"தென்னுலவு நாககிரி சித்திர மண்டபத்தை
மன்னு வடி வேலவர்முன் வைத்தானே—பன்னுதமிழ்ச்
சொல்லி லிளையான் சுமுகன் விகாரிதனிற்
பல்லுலகும் போற்றும் படி." (326)

நாகமலைக் கோவிலுக்கு நாயகமென்றே முருகர்க்
காகவொரு மண்டபமுண் டாக்கினான்—பேகன்
இளையா னிழலி லிமையவரு மாருங்
களையாற வேபணிவார் கள்." (327)

பேகன்=கடையெழுவள்ளல்களில் ஒருவன்.

## ஆசிரிய விருத்தம்,

"மங்கை வரு கட்டிரத வடகீழ் விடாயாற்றி மண்டப
மகா பூசையும்
மலைமீது காலை சந்தியினாறு படியரிசி பட
மாலை நந்தவனமும்
துங்கரவ கிரிவேல னிர்த்த மண்டப வணிகள் சூழ்
சித்திர கண்டமுடனே
தூய குமரீசர் சந்நிதி மண்டபங்கிரி துலங்குமட
மன தானமுந்

திங்களணி யர்த்த நாரீச பண்டிதருடைய
திருமாளிகைக் கட்டமுஞ்
செழுமறை சொலுஞ் சதாசிவ பண்டிதர்க்கினிய
தேசிகப் பிரதிட்டையும்
பொங்கு புகழ்சேர் குலோத்துங்க பட்டன் றுணைவர்
பூணு நூலோடு வதுவையும்
புண்ணிய குமாரனிளை யானிரும்பையை யுடைய
பூமிபாலக னுபயமே.'' (329)

என்பன.

**சுற்றுக்கோயில்கள்:—**

### தெற்குப் பிரகாரம்.

தெற்குப்பிரகாரத்தில் தென் திருவாயிலும், சிறு கோபுரமுமன்றி, வேறு கோயில்கள் இல்லை.

### மேற்குப் பிரகாரம்.

மேற்குத்திசையில் தென்கோடியில் விநாயகரும், பஞ்ச லிங்கங்களும், இடபதேவர்களும் சிற்றாலயங் கொண்டிருக்கின்றனர். மேற்குப் பிரகாரத்திற்கு, விமானமில்லாத திருவாயில்மட்டும் இருக்கிறது. திருவாயிலையொட்டி ஒரு தீர்த்தமும், மூன்று மண்டபங்களும் திறந்த வெளியிலிருக்கின்றன.

### வடக்குப் பிரகாரம்.

வடமேற்குத் திசையில், சகஸ்ர (ஆயிரம்) லிங்கர் கோயில் கொண்டிருக்கின்றனர். வடக்குத் திருமதிலையொட்டிக் கற்கட்டுமேடைமீது, கற்சிலையில் ஜேஷ்டாதேவி திருக்கோயில் கொண்டுள்ளனர். இச்சிலையை, சங்ககிரியி

லிருந்து காசிக்கு யாத்திரைசென்ற ஒரு பக்த சிரேஷ்டரால் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்யப்பட்டதென்ப. இவ்விடத்திலேயே ஒரு மேடைமீது பருத்துயர்ந்த இலுப்பைமரம் நீண்டபல கிளைகளுடன் குளிர்ந்த நிழலைத்தந்து கொண்டிருக்கிறது. இதனைத் "தலவிருக்ஷம்" என்கின்றனர். சகஸ்ரலிங்கர் எதிரில், நந்தியின் கற்சிலையும் இருக்கிறது. இதற்கு அடுத்து விளங்குவதே வைரவதேவர் கோயில். கீழ் வடகோடியில், சூரியதேவர், கோயில் கொண்டிருக்கின்றனர். வடக்குத் திருவாயிலில் விளங்குவது இராயகோபுரம் என்று முன்னரே கூறியிருக்கிறேன். இக்கோபுரத்துக்குப் பின்பக்கத்திலுள்ள கனத்ததோர் பாறையில், நாககன்னியர்கள் உருவங்களும், ஐந்து தலைகளையும், அகன்றுவிரிந்த படத்தையுமுடைய ஆதிசேடனது நடுப்படத்தில் சிவலிங்கத்தின் உருவம் நன்றாகச் சித்தரிக்கப் பெற்றதுமான கற்சிலையும், ஓர் கல்மண்டபத்தில் கோயில்கொண்டு விளங்குகின்றன. கலியுகத்தில் ஆதிசேடன் பூசைபுரிந்த தலமானதால், இங்கு பக்தகோடிகள் இச்சிலைகளுக்குக் குங்கும அர்ச்சனை செய்விக்கின்றனர்.

## கிழக்குப் பிரகாரம்.

இங்கு, உயர்ந்த பாறைமீது, தட்சணாமூர்த்தி ஆலயங்கொண்டு அமர்ந்திருக்கின்றனர். அதற்கு அடுத்த பாகத்தில், கேதார ஈச்சுரர் கோயில் கொண்டிருக்கின்றனர். இவர் உற்சவத்திற்கு எழுந்தருளுவதுண்டு.

இவ்வளவே, திருமலைமீதுள்ள சுற்றுக்கோயில்கள். திருமதிலின் வெளிச்சுவர் கிழமேல் 260 அடியும், தென்வடலில் 198 அடியும் இருக்கின்றன.

**வெளிப்பிரகாரம்:—**

தென்கிழக்கிலிருப்பது, "பிராமணவைதீகர் மண்டபம்." இங்குள்ள குகையை, குப்பண்ணப்பரதேசி குகையென்றுகூறுகின்றனர். இது, தனியேயிருந்து தவசு செய்வதற்குத்தகுதியான இடம். ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர், வைகாசிப்பெருந்திருவிழாக்கொடியேற்றத்தன்று, இம்மண்டபத்திற்கு எழுந்தருளுவர். "சுப்பராயர்" என்ற நியோகிப்பிராமணர் மண்டபம் கட்டி மண்டபக்கட்டளைக்குச் சுவாமி எழுந்தருளுவதை, திருச்செங்கோடு நாககிரிப்பண்டிதர் வழியாக நடாத்திவந்தார். இப்பொழுது ஸ்ரீ. T. S. வேங்கடரமணையரவர்கள் மண்டபப்படிக்கட்டளையை நடாத்திவருகின்றனர். குப்பண்ணப்பரதேசி இளமையிலே துறவுகொண்டவர். மெய்த்தொண்டர், தெய்வ அருள்பெற்றவர்.

வடகிழக்கு மண்டபம், வட்டூர் சேங்குன்னி குலத்தார் கட்டுவித்தது. ஆண்டுதோறும் இம்மண்டபத்திலும், விழாக்காலத்தில் சுவாமி எழுந்தருளுகின்றனர்.

**பாண்டீசர் கோயில்:—**

இக்கோயில், தாள்வரையின் தரையிலிருந்து சுமார் 2000 அடி உயரத்தில் செங்குத்தாக ஓங்கிவளர்ந்த நெடும் பாறையின் உச்சியிலிருக்கிறது. இதுவே, அங்குள்ள சிகரங்களிலெல்லாம் மிகவும் உயர்ந்து, வான மண்டலத்தை யெட்டிப்பிடிக்க எழுந்து நின்றுகொண்டிருப்பது போல் இருக்கிறது. இச்சிகரத்தை நாரதர் சொற்படி சூரன் ஒருவன், இமயமலையினின்றும் தூக்கிக் கொணர்ந்ததாகக் கூறுகின்றனர். இம்மலை உச்சியிலுள்ள சமநிலத்துப்

பாறையின்மீது எடுக்கப்பெற்ற ஓர் சிற்ருலயத்தில் சிவபெருமான், இலிங்கவுருவில் கோயில் கொண்டிருக்கின்றனர். இவர் பெயர், "பாண்டீச்சுரர்" எனப்படுகிறது. கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டில் கோங்கர்கள், பாண்டியர் மீது படையெடுத்து வெற்றிபெற்றதன் நினைவாகப் "பாண்டீச்சுரர்" என்று பெயர் சூட்டப்பட்டது.

வேறு சிலர், இந்த இலிங்கமூர்த்தியை * "வந்தீச்சுரர்" என்றும், இவர் உறையும் கொடுமுடிக்கு "வந்தியாபாடன சிகரம்" என்றும் பெயர்கள் கூறுகின்றனர். இது, மலடிகட்கு வைப்புநிதிபோல் சந்தானத்தைத் தரவல்ல மகிமையுடையதெனக்கருதி, பிரமதேவர், சிவபெருமானை வணங்கி இமயமலையினின்றும் கொணர்ந்து பூசித்ததென்கின்றனர்.

புத்திரசந்தானம் பெறவிரும்புகின்றவர்கள் வெள்ளிக்கிழமை, கார்த்திகை நட்சத்திரம் கூடிய நன்னாளில், இங்கு வந்து, இக்கோயிலின் கீழுள்ள குமாரதீர்த்தத்தில் மூழ்கி உறுதியுடன் பக்திசெய்து பூசித்தால், மகப்பேறு வாய்க்கின்றதாம்.

வந்தி = மலடி. பாடனம் = சொல். சிகரம் = மலை.

பாண்டீசர் அல்லது வந்தீசர் கோயிலுக்குக் கஷ்டமின்றித் தரிசிக்கச்செல்லும் யாத்திரைக்காரர்களின் நன்மை கருதி, மிகச்சமீப காலத்தில் பன்னிரு அன்பர்கள் சேர்ந்து

---

* வந்தீச்சுரர் என்பதற்கு—மலடிக்கு மகவருளும் கடவுள் என்பது பொருள்.

† வந்திபாடனசிகரம் என்பதற்கு—மலடிகட்கு மகப்பேறு தரவல்ல மகிமையுள்ளதென்று கூறப்படுகிற மலையென்பது பொருள்.



மலை உச்சி பாண்டீச்சுரர் கோயில்.



சிற்பத்தூண் வரிசைகள்.

தமது பொருட் செலவில் **161** படிகளைப் புதிதாக வெட்டி வைத்திருக்கின்றனர். குமார தீர்த்தத்தில் மூழ்கிப் படிகளை மெதுவாகவும், மிக ஜாக்கிரதையாகவும் ஏறிச்சென்றால் அக்கோயிலை அடைந்து இறைவனைத் தரிசிக்கலாம்.

இக்கோயிலைச் சுற்றிவருவதற்குக் குறுகலான சிறு வழியிருக்கிறது. மூன்றுதரம் சுற்றி வருபவர்களின் கஷ்டமறிந்து கடவுள் அவர்கள் இஷ்டத்தை நிறைவேற்றச்செய்கின்றனர். ஆயின், அங்ஙனம் அவ்வாலயத்தைச் சுற்றுவது அபாயமானது. அபாயத்தைப் பொருட்படுத்தாமல் உயிரைத் துரும்பெனக் கருதும் தைரியமுடையவர்கள் மட்டும் அங்ஙனம் ஆலயத்தை வலம் வரலாம். தெற்கு பாகத்தில் காலடி வைப்பதற்குமட்டும் இடமிருக்கிறது. கைப்பிடிக்கு யாதொரு ஆதரவுமில்லை. வடக்குப்பக்கத்திலும் அபாயம். எனினும், தெற்குப் பக்கத்திலுள்ள கொடிய அபாயம் போலில்லை. சுற்றும்போது தும்மல் அல்லது இருமல்வரினும், அசதியில் கீழ் நோக்கிப்பார்த்து விடினும், தலை சுற்றி, நிலைதளர்ந்து, தலைகீழாகச் சுமார் 800 அடி கீழே பாறையில் புரண்டுவந்து பாதலத்தில் விழவேண்டுவதுதான். எலும்புகள் பொடிப்பொடியாய் நொறுங்கித் தூளாவதில் சந்தேகமில்லை. யாத்திரைவர்சிகள் அங்குபோகாதிருத்தல் நலம்.

பிள்ளைப்பேறுபெறும்பேதமை காரணமாகப் பலர் இங்குவந்து உயிரைமாய்த்துக்கொள்வதில் இரக்கங்கொண்ட சேலம் ஜில்லா கலெக்டராயிருந்த கனம் **"Langly"** (லாங்கிலி) துரையவர்கள், அந்த இடத்திற்கு ஓர் இரும்பு வேலிபோட்டுத் தடுத்து யாரையும் அங்குச்செல்லாதிருக்க உத்திரவும் செய்திருக்கின்றனர்.

## மலைமேல் நின்று காணும் காட்சிகளும்–தோற்றங்களும்.

வானமண்டலம் போல் விளங்கும் மலையின் உச்சியில் நின்று, கீழே நான்கு புறத்திலும் சுற்றிக்கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் பார்த்தால், காணும்காட்சி நேர்த்திரானந்தமாய் இருக்கின்றது. பூமியின்மீது ஒரே பரப்பாய்ப் பசுமையாக வளர்ந்த நெற்பயிர் நிலங்கள், மேலிருந்து காணும்கண்களுக்குத் தரையில் பெரியதோர் பச்சைக்கம்பளம் விரித்தாற்போல் தெரிகின்றது. வாழைக்கொல்லைகள், கரும்புத்தோட்டங்கள், தென்னந்தோப்புகள், சிற்றாறுகள், ஏரிகள், குளங்கள், குட்டைகள் ஆகிய இவையனைத்தும், ஓர் புதுமை படைத்து அதிசயமான அழகுடன் கண்விருந்தளிக்கின்றன. கோதையூரென்கிற திருச்செங்குன்றூரைச் சூழ்ந்த சிற்றூர்களான நாட்டுப்புறங்கள், நவீன எழில்பெற்று இன்பக்காட்சியை இனிதளிக்கின்றன. இன்னும் சற்று தூரம்கூர்ந்து கவனித்தால், காங்கிரஸ்கட்சி அதிகாரத்திலிருந்தபோது, சென்னை இராசாங்கத்து அமைச்சர்களில் கல்வி இலாகாவுக்கு அமைச்சராயிருந்த டாக்டர், ஸ்ரீ. P. சுப்பராயன் அவர்கள் பிறப்பகமாகிய குமரமங்கலமும், திருச்செங்கோட்டுக் குமரவேள் அர்த்தமண்டபத்தையும், சபாமண்டபத்தையும், திருப்பணிசெய்த கொங்கு வேளாளர் செல்லக்குலத்துச் செல்வர், இளையாக்கவுண்டவர்களுடைய இருபுலியூரும், (தற்காலம் இதனை இளேப்பிலி என்கின்றனர்) தோன்றுவதைக்காணலாம். இவற்றைவிட்டு வடக்கு நோக்கினல், திருச்செங்குன்றூரும், அதன் வீடுகளும், கடைத்தெருக்களும், வீதிகளும், தேர் நிலையும், தெப்பக்குளமும், கயிலாசநாதர் கோயிலும், செங்கோட்டுச் செங்குந்த மரபின்

செல்வர்களில், ஸ்ரீமான். **V. V. C. R.** வையாபுரி முதலியாரவர்களின் பஞ்சாலையும், சேலம், நாட்டாண்மைக் கழகத்து உயர்தரக்கலாசாலையும்; திருச்செங்கோட்டு மலைக்கோயில்களுக்கு அழியாத சிற்பச் செல்வங்களைச் சீருடன் அளித்த கொங்கு வேளாளர் கண்ணகுலத்து இம்முடி அத்தப்பநல்லதம்பிக் காங்கேயன் சந்ததியார்வாழும் மோரூரும், சங்ககிரி துர்க்கமும், (துர்க்கம் = மலைமேல் கோட்டை) அருமையான அழகுடன் ஆனந்தத்தை அளிக்கின்றன.

ஊர்க்காட்சிகளும், தெருக்களின் அழகுகளும், குளம், குட்டை, இரட்டைக்கரடு முதலியவைகளும் தன்னைச் சூழ்ந்திருக்க, இவற்றிற்கெல்லாம் நான் நடுநாயகமாய்க் கிரீடம்போன்று அழகுபொலிய விளங்குகின்றேன் என்று பெருமை பேசுவதுபோல் 'சர்ப்பகிரி' திகழ்கின்றது. இத்தகைய அழகுகளையெல்லாம் பத்திக்கண்ணுற்கண்டு களிப்பவர்கள், இம்மலைமீது கோயில்கொண்டு விளங்கும் இறைவனுக்கு "மாதிருக்கும் பாதியான்" என்ற பெயர், மிகப் பொருந்திய பெயரென்றே பேசுவர். ஏன்? தாம்வேறு, சத்திவேறு என்ற பேதமின்றி எல்லாம் ஒன்றே என்ற சமரசக்கொள்கை இங்கே விளங்குவது கொண்டென்க.

மலைமேல் நின்று காணும் காட்சிகளைக் கண்விருந்தாக நுகர்ந்துகொண்டிருக்கும்போது, அங்கு நாலாபக்கங்களினின்றும் வெகு மிருதுவாக வீசும் இன்பக்காற்று, மேனியின்மீது பட்டு மட்டற்ற மகிழ்ச்சியையும், ஆரோக்கியத்தையும், ஜீவசக்தியையும் அளிக்கின்றன.

பக்தி அதிகமாகவும், பாவம் குறைவாகவும் இருந்த நாயன்மார் காலத்திலும், பக்தியும், பாவமும் சமநிலையாயிருந்த பிற்காலத்திலும், பக்தி குறைந்து பாவமே ஓங்கி

யிருக்கும் இக்காலத்திலும்கூட இற்கையன்னை, இங்கே செயற்கை அழகுபெற்று, சிந்தைகளிக்க உங்களைப் பெரு வேட்கை கொள்ளச்செய்கின்றாள். (வேட்கை = ஆசை). சமயாச்சாரியார் நால்வருள் ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமானும், சந்தக்கவி சிங்கவேறாகிய ஸ்ரீ அருணகிரிநாதரும் இங்கு எழுந் தருளி ஆண்டவனைத் தரிசித்து அவர்களது ஒப்பற்றதெய்வ அழகிலே பெரிதும் ஈடுபட்டுச் சொக்கிப்போயினர்.

திருச்செங்கோடு தூய்மையானதோர் அழகு நிலையம். இங்கு இயற்கை அன்னை, இன்றும், அன்பும், அழகுமாகவே கோலங்காட்டிக் குதூகலித்துக் கொண்டாலடித்து கொண் டிருக்கின்றாள். உமையைப் பரமன், தமது இடபாகத்தில் ஒரு கூறாகக்கொண்டு காதல் செய்யும் தெய்வீக அழகு கண்பெற்றவர்கள் கண்டுகளிக்கும் திருவுடையது. பக்தி மிகுந்தவர்கள் பாக்கியசாலிகளே.

தென்னாட்டிலுள்ள கொங்கு நாட்டில், பெயர் சிறந்த சிவஸ்தலமாகிய திருச்செங்கோடு, சைவர்களைமட்டுமல்ல, மற்றைய மதத்தர்களையும், மதநம்பிக்கையற்ற வரலாற்று ஆராய்ச்சிக்காரர்களையும், வசீகரிக்கக்கூடிய வனப்பு மிகுந் தது. தீர்த்தயாத்திரைக்காரர்களையே யன்றி, அழகுக் காட்சி களைக்கண்டு ஆனந்திக்க விரும்பும் தலயாத்திரைக்காரர்களை யும், தம்பால் இழுக்கவல்ல தமிழ் நாட்டு அழகு நிலயங் களில், இதுவும் ஒன்றாக ஏற்றம்பெற்றது.

பரபரப்பும், கலவரமும் நிறைந்த நவநாகரீக உள்ளங் கள் இங்கேவரின், அவை சாந்திபெறும்.

நரகம் எப்படியிருக்கிறதென்று தற்காலத்தான் ஒருவனை வினவினால், அவன், தற்காலநகரம்போலிருக்கிறதென்று விடைதருவன். இங்ஙனம்கூறும் நகரவாசிகளுக்கும் சொர்க்



பரமத்திரோட்டிலிருந்து காணும் தோற்றம்.



வேலவர் நிருத்தமண்டப மேல்தளத்திலிருந்து காணும் தோற்றம்.

கமாக விளங்குவது திருச்செங்கோட்டுச் சிவத்தலம். இங்கு எழுந்தருளும்போது அவர்கள், வீண் நினைவுகளையும் விவகாரப்புத்திகளையும் அறவே விட்டொழித்து ஆண்டவனைத் தரிசிக்கும் ஆசையொன்றுடன் மட்டும் வருதல் நலம்.

இவ்வளவே, மலைமீதுள்ள ஆலயங்களும், அற்புத அதிசயமண்டபச் சிற்ப நிலையங்களுமாம்.

## கற்சாசனங்களும்—செப்புப்பட்டயங்களும்:—

### இன்னதெய்வம் என்று விளங்காத கல்வெட்டு.

"ஸ்வஸ்தி ஸ்ரீ. கோ ராசகேசரிபன்மற்கு யாண்டு பதினன் காவது, இவ்வாண்டு திருச்செங்கோட்டுத் திருவாதிரைக் கணப்பெருமக்கள் கையில், சேங்கோனடிகள் தேவியார் முரிக்காமக்கண்ணூர் ஏகவீரதிவாகர தேவரே சாத்திவைத்த செம்பொன், செட்டாங்கல்லால் இருபதின்கழஞ்சு. இப்பொன்னின் பலிசைகொண்டு திருவாதிரைதோறும் திங்களிருபது பிராமணரைச் சந்திராதித்தர்வரை ஊட்டுவதாக. இப்படிக்குத் திருவாதிரைக் கணப்பெருமக்களோம்."

### சோழன் பரகேசரிவன்மன் காலத்தது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ. கோப்பரகேசரி பன்மற்குச் செல்லா நின்றயாண்டு இருபத்தியெட்டாவது, இவ்வாண்டு திருச்செங்கோட்டுத் திருமலைமேல் துவாதசிக்கும், திருவாதிரை, திருவோணத்துக்கு மாகச் சந்திராதித்தர்வரை ஊட்டுவதாக நாங்கள்வைத்த செம்பொன் முக்கழஞ்சு. இப்பொன் பலிசை கொண்டு இருகலம் ஊட்டுவோம். மூன்று கணப் பெருமக்கள் ரக்ஷை."

**நாகர்குன்றுக்கல்லின் மேற்பக்கமுள்ளது.**

"ஸ்வஸ்தி ஸ்ரீ. கோவிராசகேசரி பன்மற்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற யாண்டு பதிஞன்காவது, இவ்வாண்டு திருச்செங்கோட்டுப் பன்னிரண்டு நாட்டுப்பெருமக்கள் கையில், இளங்கோனடிகள் தேவியார் மு................ர் அமுதஞர், திருச்செங்கோட்டு ஆள்வார்க்கு நந்தா விளக்கொன்று எரிப்பதாக வைத்தசெம்பொன், செட்டாங்கல்லால் பதினைந்து கழஞ்சு. இப்பொன்னின் பலிசைகொண்டு சந்திராதித்தர்வரை நந்தாவிளக்கு எரிப்பதாக என்ருேம்."

"கோவிராசகேசரிபன்மற்கு யாண்டு பதின்மூன்ருவது திருச்செங்கோட்டுப் பன்னிரண்டு நாட்டு...........மக்கள் கோயிலில் இளங்கோவடிகள் தேவியார் மக்கஞர் திருவேகாதசிக் கணத்துக்குக் கொடுத்த செம்பொன் (க) செட்டாங்கல்லால் இருபதின் கழஞ்சு. இப்பொன்னின் பலிசை கொண்டு சந்திராதித்தர்வரை யூட்டுவதாக........திருவேகாதசிக் கணப்பெருமக்களோம்."

"ஸ்வஸ்தி ஸ்ரீ. கோப் பரகேசரிபன்மற்குச் செல்லாநின்ற யாண்டு பன்னிரண்டாவது திருச்செங்கோட்டுச் சோணுட்டுப்பெருமக்........இ...,...ட்டிலிருக்கும் உத்தமன் கணபதிவைத்த போன் இருபதின்கழஞ்சு. இப்பொன்னின் பலிசைகொண்டு இரு........ந்த நாழிமாழிசி திருமடை நாள் மலையில், சிவப்பிராமணர்க்குப் போசனம் சந்திராதித்தர் வரை செய்வதாக என்ருேம். சோணுட்டுப்பெருமக்களில் உத்தமன் கணபதி."

"ஸ்வஸ்தி ஸ்ரீ. கோப்பரகேசரிபன்மராகிய ஸ்ரீ ராசேந்திர சோழ தேவர்க்கு யாண்டு பதினெட்டாவது திருச்செங்கோட்டுத்தேவர்க்குத் திருப்பள்ளி எழுச்சி, இவ்வாண்டு

முதற்கொண்டு சந்திராதித்தர்வரை கொட்டுவதாகக் கொண்டு........தாரா........வங்கலது இத்தேவர்........உடைய உவச்சர்.........பெருவார்த்தரை.........நித்துக்கு இடவழிப்ப ........ழைஞ்சு வார ஒழுக்கு நெல் முக்கால்...........மாவும் கொண்டு திருப்பள்ளி எழுச்சிகொண்ட..........................

இக்கல்வெட்டைக்கவனித்தால், இத்தலத்து, முற்காலத்தில், ஆலயங்களில் மேளங்கொட்டும் தொழிலை உவச்சர்கள் என்னும் சாதியார் செய்து வந்ததாகத்தெரிகிறது. உவச்சர்கள் காளிகோயில் பூசகர்கள். இச்சாதியார், திருநெல்வேலி ஜில்லாவில் பெருங்கூட்டத்தினர், "கம்பர்" என்ற பட்டப்பெயர்பெற்று மேளம் வாசிப்பதையே ஜீவனமாகக் கொண்டு வாழ்கின்றனர். எக்காரணத்தால் அச்சாதியார் இத்திருச்செங்கோட்டுச் சந்நிதியினின்றும் மறைந்தனர்களோ! அறியக்கூடவில்லை. இப்பொழுது இக்கோயிலில் மேளம்கொட்டுபவர் வேறோர்வகையினராயிருக்கின்றனர்.

**குமரர் கோயில் வடக்குக்குக் குமுதவரி.**

கலியுகாதி சாலிவாகன சகாப்தம் 1442 ல் விஜயநகரம் ஸ்ரீ கிருஷ்ணதேவமகாராயர், கொங்கின் வீரசோழ மண்டலத்துக்குன்றத்தூர் துர்க்கத்தைச் சூழ்ந்த பன்னிரண்டு பற்றுத் திரியம்பக உடையார், கீழ்க்கரைப்பூந்துறை நாட்டில், ஸ்ரீ. அர்த்தநாரீச்சுரமுடைய தம்பிரானுருக்கு உத்திராட நக்ஷத்திரத்தில் துவஜாரோகணமும், ரேவதி நக்ஷத்திரத்தில் தெப்பத்திருநாளும் நடத்தத்தக்கதாகச் சந்தையிலுண்டான சுங்கம், தரகு, மகிமை முதலியவைகளைத் தாரைவார்த்துக் கொடுத்ததாக........இந்த தர்மத்தைக் குன்றத்தூர்த் துர்க்கத்துக்குவந்த அரசர்களும், இத்தானத்துக்குவந்த அதிகாரிகளும், இந்தநாட்டாண்மைக்காரக்கவுண்டர்களும், நடாத்திவைக்க................"

**கருப்பக்கிரகத்திலுள்ளது.**

"நரசிம்மராய உடையார் காரியத்துக் கடவோமாக. உடையார் கொங்கின் வீரசோழமண்டலத்துக் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுத் திருச்செங்கோட்டுத் திருமலைமேல் எழுந்தருளிய அர்த்தநாரீச்சுரருக்கும், சுப்பிரமணியருக்கும் தர்மதானப்பிரமாணம் பண்ணிக்கொடுத்த பரிசாவது, இந்த நாட்டுச் சூரப்பள்ளியான் அகரமும், நத்தமும் உள்ளாக நான்கு எல்லைக்கும் உட்பட்ட மேனோக்கிய மரமும், கீழ் நோக்கிய கிணறும் நஞ்சை, புஞ்சையாவும் தர்மமாகக் கொடுத்தோம்."

"சுபமஸ்து ஸ்ரீ. சாலிவாகனசகாப்தம் 1580 ன் மேல் செல்லா நின்ற கீலக ஆண்டு மாசி மாதம் பதின்மூன்றும் நாள் ஸ்ரீமது காசிப கோத்திரம் விசுவநாத நாய்க்கர், திருமலை நாய்க்கர், முத்துவீரப்ப நாய்க்கர், குமார சோக்கநாத நாய்க்கர் திருச்செங்கோட்டுத் தானத்தாருக்கு விஞ்ஞாபனம். திருச்செங்கோடு அர்த்தநாரீச்சுர சுவாமிக்கும், விசுவநாதருக்கும் ................................"

**உற்சவர் ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் பிரபையிலுள்ளது.**

"ஸ்ரீ. அர்த்தநாரீச்சுர சுவாமியாருக்கு, பூந்துறைநாட்டுக் கணக்கு அர்த்தநாரியன் வேலையன் குமாரன் பெரிய அய்யன் தர்மம். சதாசேவை. அக்ஷய வருடம் தை மாதம் 13-தேதி. சாலிவாகன சகாப்தம் 1556 ல் ஸ்ரீ அர்த்தநாரீச்சுரமுடைய தம்பிரானாலயத்தில் வேதவொலி சிறந்து ஓங்குமாறு மாம்பூண்டியை அக்கிராகாரமாக அரசனது புண்ணியமென்று தானம் செய்தனன்,"

விமான உத்திரத்திலுள்ளது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ. சகாப்தம் 1550 இதன்மேல் செல்லா நின்ற பிரசோற்பத்தி ஆண்டு ஆடி மாதம் குமாரசாமி காங்கேயன் காரியத்துக்குக்கர்த்தரான சுப்ப நாய்க்கன் மகன், சாமண்ணன் உபயம் (சத்தனக் குறடு.)

மோரூர் கண்ணகுலம் வேலபூபதி சந்ததி, குமார நல்ல தம்பி வெற்றிக்குமார சுவாமி சாலிவாகன சகாப்தம் **1599** நள வருடத்தில், ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் கோயில்முன், கிழக்கிலே விசுவேச்சுரர், விசாலாட்சியம்மை, நந்தி, பலிபீடம் முதலியன பிரதிட்டித்தான்."

645—1905 ஆம் ஆண்டு ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் கோயில் தென் சுவற்றில் பூர்த்திபெறாத கல்வெட்டில் நரசிம்மராய உடையாரின் ஏஜண்டு திம்மரசு உடையார் கொடுத்த தானம். அர்த்தநாரீச்சுரருக்கும், சுப்பிரமணிய சுவாமிக்கும். இது கீழ்க் கரைப் பூந்துறை, கொங்கு அல்லது 'வீரசோழ மண்டலத்தின் பிற்பகுதியென்று குறிக்கப்பட்டுள்ளது.

646—1905 ஆம் ஆண்டு மேற்படி கோயிலின் முன் மண்டபத்தின் மேல் புறம் சுவற்றில், சகம் 1521ல் சார்வரியில், "மண்டபம் கட்டி முடிந்தது" என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

647—1905 ஆம் ஆண்டு அதே மண்டபத்தின் தேன் சுவரில் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டைச்சார்ந்த மோரூர்வாசி ஒருவர், சகம் 1549 ல் விபவ ஆண்டில் மண்டபம் கட்டிய செய்தி குறிக்கப்பட்டிருக்கிறது.

649—1905 ஆம் ஆண்டு சுப்பிரமணிய சுவாமி கோயில் முன் மண்டபத்து வடசுவற்றில் சகம் 1588 ஆம்

ஆண்டு கீலக ஆண்டு மதுரைச் சோக்கநாத நாய்க்கர் ஆட்சியில் நிலதானம் செய்யப்பெற்றதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. (கீலக ஆண்டு என்பது தவறு.)

650—1905 ஆம் ஆண்டு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் அதே வடபுறம் சுவரில் வீரவிசுவநாததிருமலை நாய்க்கர் ஆட்சி, ஆண்டு சகம் 1581 ல் விளம்பி ஆண்டில் ஒரு கிராமதானம் செய்யப்பட்டது. அத்தானம் பருத்திப்பள்ளி நாட்டிலுள்ள "கோளங்கண்டை" என்னும் கிராமம் குமார முத்து திருமலை நாய்க்கருக்கு அளிக்கப்பட்டது.

651—1905 ஆம் ஆண்டு மேற்படி மண்டபத்தின் அடிவரிசை பூர்த்திபெருத ஒரு சாசனம். விஜயநகர அரசர் வீரப்பிரதாப கிருஷ்ணதேவமகராயர் ஆட்சி ஆண்டு சகம் 1444 ல் சித்திரபானில் சில திருவிழா நடாத்துதற்கு வரி வசூலித்துக்கொள்ளும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. இதில், குன்றத்தூர் துர்க்கம் கொங்கு அல்லது வீரசோழ மண்டலத்தில் உள்ளதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

653—1905 ஆம் ஆண்டு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில் வடபுறம்சுவரில் காளயுக்தி ஆண்டில் சுப்பிரமணியர் ஆலயம் வடகரை நாட்டு ஆண்டியூர் வாசியால், கட்டப்பட்டதெனக் குறிக்கப்பட்டுள்ளது.

645-1905 ஆம் ஆண்டு சகம் 1585 சோபன ஆண்டு மலைமீதுள்ள காசிவிசுவேச்சுரர் கோவிலும், கோபுரமும் கட்டப்பட்ட செய்தி, மேல்தளவரிசையில் வெட்டப்பட்டிருக்கிறது. இவ்வளவே, திருச்செங்கோடுபற்றி யான் அறிந்த கல்வெட்டுக்கள்,

**செப்பேடுகள்.**

ஒரு சிவராம பண்டிதரிடம் இருக்கின்ற ஒரு செப்பேட்டில் மலைமேலுள்ள கோயிலுக்காக மைசூர் கிருஷ்ண ராஜ உடையார் கொடுத்த நிலதானம் குறிக்கப்பட்டுள்ளது.

வேறொரு செப்பேடு திரு. தி. அ. முத்துசாமிக்கோனார் அவர்களிடம் இருக்கின்றது. அதில் இராசராசன் பத்தாம் ஆண்டில், கோல்லிமழவன், பிரதிகண்டசுந்தர சோழன் என்னும் மழவரையன், தூசியூர் வியாபாரிகள் மீது அவர்கள் செய்த குற்றத்திற்காக வரிகளும், தண்டங்களும் விதித்ததாகவும், அதில் வசூலான தொகையை, உள்ளூர் பரமேச்சுரர் கோயிலுக்கு அளித்ததாகவும், ஒரு கிணறுவெட்டி உபயம் செய்ததாகவும், ஈழத்தில் இறந்துபோன தன் தந்தைக்காக வென்றும் வெட்டப்பட்டுள்ளன.

முசிரித் தாலூக்காவுக்கு மழவநாடு என்று பெயர். தூசியூர், நாமக்கல் தாலூக்காவில் இருக்கிறது.

மேற்படியாரிடமுள்ள மற்றொரு செப்பேட்டில் இராசராசன் ஐந்தாம் ஆண்டில், ஒற்றியூரான் என்பவன் தூசியூர்த் திருமூலத்தானம் உடையாருக்குச் சில நிலங்களும், தடாகம், கணபதிநல்லூர் என்கிற அமண்குடி கிராமம் ஆகியவற்றையும் அளித்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. பிறகு அத்தானங்கள் அக்கோவிலில் செய்யும் "பஞ்ச ஓசைகளுக்காக" உவச்சகர்களுக்கு அளிக்கப்பட்டது. "பஞ்ச ஓசை" என்பது ஓர்வகை வாத்தியம். இவ்வாத்தியம் அக்காலத்தில் தூசியூர் திருமூலத்தானத்துச் சிவன் கோவிலில் வாசிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இச்சாசனங்களும். செப்பேடுகளும் "தேன்னிந்திய சாசனஜாப்தா" இரண்டாவது வால்யம் 1919 ஆம் ஆண்டில் ஸ்ரீ V. இரங்காச்சாரியார் M. A., L. T., அவர்களால் வெளியிட்ட புத்தகத்தில் கண்டவை. The South India Incription Book-Volume II.

## திருவருட்டிறத்தால் செங்கோட்டில் நிகழ்ந்த தெய்வீகச் சம்பவங்கள்:—

**முதலாவது:– பிருங்கிமுனிவர் முக்கால்பெற்றது.**

பசுக்கள் என்னும் ஆன்மாக்களுக்குப் பதியாயுள்ள தலைவர் சிவபிரான், அவர், ஒடுக்கம், இன்பம், தலைமை என்னும் மூன்று நிலையில், முறையே வல்லமை, தொழில், சேயல் ஆகிய தொழில் வேறுபாடுபற்றி, சிவன், சதாசிவன் மகேசன் என்னும்பெயருடைய அருவம், அருஉருவம் உருவம் என்னும் பொதுவியல் குறிகளையும், அமைதித்தன்மை, மனவெழுச்சி, தாழ்த்தல் என்னும் முக்குணங்களையும் கடந்து முதலும் ஈறுமின்றிப் பெரியதாய், நுண்ணியதாய், பேருணர்வாய், ஆனந்தப்பிழம்பாய், யாண்டும் ஒரேமுதலாய் நாசமற்றதாய், ஓங்கொளியாய் நிறைந்து, பரவி விரிந்து ஆன்மாக்கள்தோறும் மறைந்திருந்து விரவித் தொழிற்படுத்தி அறிவை விளக்கி நிற்பது, அச்சிவமாகிய பதிப்பொருளே. இப்பதிப்பொருள், சொரூப நிலையிலே பராசத்தி அருட்குணங்களினின்றும் பிரியாது குணப்பொருளாய் இருப்பினும், இடபாரூடர் முதலிய பொதுவியல், மகேச்சுரமூர்த்தங்களிலே சத்தியைவிட்டுச் சிவபிரான் பிரிந்திருத்தல் பிரத்யட்சமாக அறியப்படுவதனாலும், சக்தியையும், சிவனையும் நாயகி நாயகபாவனையாய்ப் பார்க்குமிடத்தும், தலைவியினும்

தலைவராகிய சிவபெருமானுக்கே தலைமை கூறப்படுவதென்றும், பெண்பாற்பட்ட சத்தியாகிய உமையம்மையாரை விடுத்துப், புருடர்பாற்பட்ட சிவபெருமான் ஒருவரை வழிபட்டால், எண்ணிய யாவும் இனிதெய்துமாதலால், சிவபிரானையன்றிப் பிறதெய்வத்தைப் பணிதல்கூடாதென்று தீர்மானித்த *பிருங்கி முனிவர், அச்சிவபெருமானைப்பணிந்து தொழுது, ஆனந்த பரவசத்தால் ஆடிப்பாடி நின்றார். முனிவனது செயலையும், எண்ணத்தையும் அறிந்த இறைவி, புன்னகையரும்பி, 'முக்கட்பெரும! திருமால், நான்முகன், இந்திராதி தேவர்கள், முனிவர், கணநாதர் ஆதியோர், தங்களையும், என்னையும் வணங்கிச் செல்வதாயிருக்க, இம்முனிவன் மட்டும் வணங்காது உம்மைமட்டும் வணங்குவதென்?' என்று வினவினர். இறைவர், தேவி! இது விஷயத்தில் நீ இவ்வளவு கவனித்தல் வேண்டுமா? என்றனர். அம்மையார், 'அமலனே! இந்திரனை வணங்குவோர் சசிதேவியையும், பிரமனைவணங்குவோர் நாமகளையும், திருமாலை வணங்குவோர் இலட்சுமியையும் வணங்குவது முறையாயிருக்க, இம்முனிவன்மட்டும் ஒவ்வோர் முறையும் இவ்வாறேசெய்து வருகின்றனன். ஆனதனால், விடையருளவேண்டுமென்று' வேண்டினள். சிவபிரான், 'உமையே! என்னின்றும் உன்னை வேருக நினையாமல் அபேதம் பாராட்டி வணங்குகின்றான் முனிவன்' என்றனர். 'பெரும! அதே பாவனையில் வணங்கலாமென்றால், நீவிர்மட்டும் இவ்விடத்தில் இராமல் உமது பக்கத்து என்னையும் வைத்திருப்பதெதற்கு? அபேதமாய் நினைக்கின்றவன் என்னைமாத்திரம் வணங்கி உம்மை வணங்காதிருந்தாலென்? அவனது உண்மையை அறியவேண்டும். ஆதலின், நாம் இருவரும் இடைவெளியின்றி ஒன்றியிருப்போ'மென்று ஓர் உருக்கொண்டு விளங்கினர். மறுநாள், வழக்கப்படி தேவர்கள் அனைவரும் வலம் வந்து வணங்கிச் சென்றனர். பிருங்கிமுனிவனும் வந்து சிவனைமட்டும் ஒரு பக்கமாகவிருந்து வணங்கி அம்மையும், அப்பரும் இடைவெளியின்றி ஒன்றியிருப்பதை

* பிருங்கம்=வண்டு.

உணர்ந்து, என் செய்வதென்று தோன்றாது மயங்கித்தியங்கித் தோத்திரம்பாடி ஓர் வண்டு உருவங்கொண்டு பறந்து சென்று, கண்டத்தின் வழியாகத் துளைத்துக்கொண்டு, புராரியைமட்டும் வலம்வந்து அவர் திருமுன் நின்று அரகரமகாதேவ! சம்போ! சங்கர! கிருபாநிதே! சகல வேதாகமங்களாலும் துதிக்கப்பட்டவராய், என்றும் அழிவில்லாத மோட்ச சாம்ராச்சியத்தை அருளவல்ல வேறொருவர் இருக்கப் பெறாதவராயுமுள்ள, தேவரீருடைய திருத்தாமரைத் தாள்களிலன்றி என்மனமாகிய வண்டு, பிறவிடங்களில் இறங்காது என்றுகூறி ஆனந்தக் கூத்தாடினர்.

இதனைக்கேட்ட லோகநாயகி, 'பிருங்கி முனிவ! முத்தி வீட்டை அளிக்கும் வல்லமையற்றவள் என்று என்னைக் கருதியன்றோ! நீ இவ்வாறு செய்தனை?' நன்று! உனது தேகத்துள்ள தசை முதலியன வாய எமது கூறினை, நீ கழித்துவிடு என்றனர். உடனே அவை நீங்கிவிட, முனிவர் சக்தியற்று கீழே விழ்தலைக்கண்ட பரமன், அம்முனிவனுக்கு வலிமையுள்ள ஒரு காலினை அருளினர். அம்முனிவர் மகிழ்ந்து முக்கால் முனிவராக நின்றனர். அங்ஙனம் தம் எதிரே நிற்கும் முனிவனை முக்கண்ணர் நோக்கி, பிருங்கியே! நீ வேதாகமங்களின் கருத்தை நன்கு அறிந்திருந்தும் நமது சத்தியின் இரகசியத்தை உணராமல் அழகிழந்தனை. சூரிய விம்பம்போற் சிவமும், கிரணம்போற் சத்தியும், நிலையுறுதலின், சூரிய விம்பமின்றிக்கிரணமில்லை; கிரணமின்றிச்சூரிய விம்பம் இல்லை. அங்ஙனமாயினும், சத்தியின் சகாயத்தினால் சேதனா சேதனப்பிரபஞ்சம் யாவும் நிலைபெற்று இயங்குகின்றனவென்று இதோபதேசம் செய்தனர். அவ்வுபதேசத்தால் முனிவர் சிந்தைதெளிந்து, ஊழ்காரணமாக பேதமைகொண்டு அறிவிழந்தேன் என்று, பெரிதும் இரங்கி, மன்னித்தருளப் பிரார்த்தித்து இறைவனையும், இறைவியையும் ஒரு சேர வணங்கினர். மதிமயக்கம் தெளிந்ததையறிந்த இறைவி, முனிவனது குற்றத்தை மன்னித்துக் கருணைபாலித்தனர்.

இதுவே, முக்கால்பெற்ற முனிவர் வரலாறு.

அமலன் = தூயோன்; கடவுள். அபேதம் = வேற்றுமையின்மை. விம்பம் = உருவம். கிரணம் = ஒளி. சேதனம் = அறிவுப்பொருள். அசேதனம் = அறிவில் பொருள். பிரபஞ்சம் = உலகம்.

**இரண்டாவது—கல்லிடபம் எழுந்து கடலைத்தின்றது.**

மாயூரத்துக்கு மேற்குப் பத்துக்கல் தூரத்திலுள்ளதும், தென்னிந்திய ரயில் வழி நரசிங்கன்பேட்டை ரயில் நிலயத்துக்குக் கிழக்கே ஒன்றரை மைல் தூரத்திலிருப்பதும், திருமூல நாயனார், ஆண்டுக்கு ஒவ்வோர் பாடலாக மூவாயிரம் திருப்பாடல்களால் "திருமந்திரம்" என்னும் அருமையான நூலை இயற்றியருளிய திருத்தலமும், திருஞானசம்பந்த சுவாமிகள், தமது தந்தையார், மகம் செய்யும்பொருட்டு "இதுவோ வெமையாளுமா றீவதொன்றெமக்கில்லையே, லதுவோ வுன தின்னரு ளாவடு துறையானே" என்று திருப்பதிகம்பாடிப் பொற்கிழிபெற்றதும், "காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க்கம்பொன், ஆயிரம்கொடுப்பர்போலும் ஆவடு துறையனாரே" என்று அப்பமூர்த்திகளால், திருவாவடுதுறை நேரிசைப் பதிகத்தில் பாராட்டப்பெற்றதுமான திருவாவடுதுறையில் அவ்வாதீனத்துப் பண்டார மூர்த்திகள், ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் அவர்களிடத்து ஞான தீக்ஷைபெற்று, சிவஞானம் ஓங்கிய *சிவப்பிரகாசர் என்னும் சிவச்செல்வர், மாதிருக் கும்பாதியான் உறையும் திருச்செங்கோட்டுக்கு எழுந்தருளினர். இவர் வருகையையும், இவர் தமது தலயாத்திரையில் ஆங்காங்கு நிகழ்த்திய அற்புதங்களையும், கேள்வியால் அறிந்த சிலபேதைகள், ஆணவத்தடிப்பால் ஆன்றோர் என்ற எண்ணமின்றி வாய்மதம் கொண்ட அவர்கள், இவ்வடிகளார் அற்புதங்கள் செய்திருப்பது உண்மையா

---

* இவர், துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாசரினும்; தமிழ் நூல்கள் பலவற்றிற்கு ஆசிரியராய், காஞ்சிபுரம் ஸ்ரீ குமார தேசிகர்க்குத் திருமகனாய்த்தோன்றிய சிவப்பிரகாசரினும், மதுரை வாசியும், சுத்தசைவரும், சைவசித்தாந்த சாத்திரமாகிய சிவப்பிரகாசத்திற்கு ஓர் உரை வரைந்தவருமாகிய சிவப்பிரகாசரினும் வேறானவர்.

யின், ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் நிருத்தமண்டபத்தில் அமர்ந்திருக்கும் இந்தக் கல் இடபம் எழுந்து, நாங்கள் அதன் முன் வைக்கும் கடலையை, உண்ணும்படி செய்வது சிறப்பாகும் என்றனர். சிவப்பிரகாசர் உடன் வந்த சிலர், சுவாமிகள் மிகவல்லவரே. அங்ஙனம் செய்தால், நீவிர் அனைவரும் யாது செய்துகொள்ளுகிறீர்கள் என்று வினவினர்?

சேங்குன்றூர் அந்தணர்கள், 'யாங்கள் யாவரும் ஒருசேரச் சுவாமிகளுக்கு அடிமையாகின்றோம்' என்றனர்.

இச்சபதமொழியினைக்கேட்ட ஸ்ரீ சிவப்பிரகாசரது திருக்கூட்டத்தினரும், சுவாமி தரிசனைக்காக வந்திருந்த அறிஞர் சிலரும் வருந்தி, எம்பிரான் இன்னருள்பெற்றவர்கள் எதனையும் தாங்கள் இச்சைப்படி நிறைவேற்றுவர். அவர்கட்கு இது ஒரு பெரிதன்று. ஸ்ரீ ஞானசம்பந்தர் சொல்லுக்கு எலும்பு பெண்ணாகவில்லையா? ஸ்ரீ சுந்தரர் மொழிக்கு முதலையுண்ட மதலை மூன்றாண்டின் பின் உயிர்பெற்று எழவில்லையா? ஸ்ரீ அப்பர் ஆணைக்கு அரவுதீண்டியபிள்ளை பிழைத்தெழவில்லையா? மாணிக்கவாசகனார் ஊமைப்பெண்ணை பேசுவிக்கவில்லையா? தேனூறும் மொழிக்கு வாயூறி நிற்பவர் சிவபெருமானாயிற்றே. அவனது மெய்யடியார் நினைவு எதுவாயினும் அக்கணமே நிறைவேற்றுவதும் அவனது அருளுடைமையன்றோ! என்று எடுத்துமொழிந்து, அவர்கள் சிவப்பிரகாச சுவாமிகள் திருவடிகளில்வீழ்ந்து வணங்கி, இந்தக்கல் இடபத்தைக் கடலையுண்ணும்படி கருணைபுரிதல்வேண்டுமென்று தாழ்ந்து இறைஞ்சினர். அதுகண்ட அடிகளார், நம்மை ஒருவர் வைதாலென்? வாழ்த்தினாலென்? நமக்கு இரண்டும் ஒன்றுதானே! இவ்விதப் பரீக்ஷைகாட்டி எந்த காரியத்தைச் சாதித்துக்கொள்ளவேண்டும் என்று மறுத்தனர். மீண்டும் அவர்கள் அடியார் இணையடிகளில் தாழவீழ்ந்து சுவாமீ! சந்நிதானத்துக்கு ஒன்றும் ஆகவேண்டியதில்லை. எனினும், முற்காலத்திலேதான் பரமேசுரவர கிருபை விளங்கிற்று. இக்கலியில் அது ஒன்றும் நடவாதென்பாரும், ஆஸ்திகபுத்தியற்ற நாஸ்திகரும், பத்திகொண்டு வழிபாடு



கயிலாசநாதர் இருபதுகால் மண்டபம்.



கடலைதின்ற கல் இடபம்.

புரிந்து நற்கதி பெற்றுய்தற்பொருட்டேனும் அருள்பாலித்தல்வேண்டுமென்று உருக்கமாக வேண்டினர். சிவப்பிரகாசர், அவர்கள் விருப்பத்திற்கிணங்கி திருவருளுண்டேல், இது ஒரு பெரிய காரியமன்று என்று கூறி, மாதிருக்கும் பாதியானை மனதிலிருத்தி அவன் திருமுன் கூப்பியகரத்தராய் நின்று தியானித்து,

"வில்லார் பொதுச் சபையில் வித்தகா! நீயுமுனங்
கல்லானைக் கிக்கருத்திக் காட்டியவுன் —வல்லாண்மை
கட்டுரையே யாயினிந்தக் கல்லேறெழீ இக்கடலை
இட்ட இவர் முன்றினச்செய் யே." —அத்துவிதவெண்பா.

என்ற வெண்பாவைப் பாடினர். அக்கணமே சந்நிதி முன் கல்லுருவாய்க் கிடந்த இடபம், முக்காரமிட்டு வாலை நிமிர்த்திக் காலைத்தூக்கி எழுந்து நின்று தன் முன்வைத்த கடலை முழுதையும் உண்டது. இத்தெய்வீகத்தைக்கண்ட யாவரும் வியப்புற்று, அரகர! சம்போ! சதாசிவ! என வாய்விட்டுக்கூறி அஞ்சலிபுரிந்து ஆரவாரித்தார்கள். ஆணவங்கொண்டு வாய்மதம் பேசிய அந்தணர்கள் வாயடங்கினர்.

இவ்வுண்மையைத் "திருச்செங்கோடு குறவஞ்சி"யும் ஆதரித்துக் கூறுகின்றது அது:—

"பொன்னின் மழை பொழிந்த தெங்கள்நாடு—வண்ணப்
பூமலரின் மாரிமிகப் பொழிந்த தெங்கள் நாடு
கன்னி யுமைக்கிடம் பகர்ந்த நாடு —நல்ல
கல்லிடபங் கடலைதின்று சொல்லுயர்ந்த நாடு,"

என்பது.

மற்றும், கொங்குமண்டல சதகத்திலும் இச்செய்தி காணப்படுகிறது. அது:—

"பண்பார் சிவப்பிரகாசனைத்துட்டர் பழிக்கவவர்
கண்பார்க்க 'வில்லார் பொதுச்சபையின் வித்தகா'
—வெனவோர்
வெண்பா சொலக்கல் லிடபங் கடலையை மென்றுதின்னும்
வண்பா வலர்வரு செங்கோடை யுங்கொங்குமண்டலமே."

என்பது.

வேலூரிலிருந்த விரூபாட்சிராயரது அமைச்சரைக்காணும் பொருட்டு, சிவப்பிரகாசர் வீரசைவதீக்ஷை பெற்றதாக அத்வைத வெண்பா வரலாற்றுள், செய்தி காணப்படுகிறது. இதனுல், இச்சம்பவம் நிகழ்ந்த காலம், கி. பி. 1467-க்கும் 1487-க்கும் இடைப்பட்ட காலமாய் இருக்கலாமென அறிஞர் கருதுகின்றனர்.

**மூன்ருவது—ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள், நளிர்சுரம் நாட்டை விட்டோடத் திருப்பதிகம் பாடியது.**

சைவவுலகம் தழைத்தோங்க, கி. பி. 630–650 ஆம் ஆண்டில் சோழ நாட்டுச் சீர்காழிப்பதியில் தோன்றிய ஸ்ரீ ஞானசம்பந்தப்பிள்ளையார், தமது கொங்கு நாட்டுத் தலயாத்திரையில் காவிரிக்குத் தென்கரையிலுள்ள பவானி முதலிய சிவதலங்களைத் தரிசித்துக்கொண்டு, காவிரி ஆற்றைக் கடந்து வடகரையிலுள்ள திருக்கொடிமாடச் செங்குன்றூரெனும் திருத்தலத்தைக் கண்டுகளிக்கத் தமது பரிசனங்கள் சூழ அத்தலத்தை அவ்வூர் அடியார்கள் எதிர் சென்றழைக்கச் சேர்ந்தனர். அங்ஙனம் சேர்ந்த ஆளுடைய பிள்ளையார் தமது அடியவர்களுடன் மலைமீது சென்று ஆலயத்தை வலம்வந்து சந்நிதியிற் தாழ்ந்தெழுந்து மாதிருக்கும் பாதியானைக் கண்களிப்பத் தெரிசித்து, நெஞ்சம் நெகிழ்ந்துருகி ஆனந்தப்பெருக்கால் "வெந்தவெண்ணீறணிந்து" என்னும் தொடக்கத்ததான பதிகம்பத்தோதி மலைவிட்டிறங்கி மங்கைபங்கனைவிட்டுப்பிரிய மனமின்றி, அத்தலத்திலேயே சுவாமி

கள் சிறிது காலம் தம்முடன் வந்த ஆயிரக்கணக்கான அடியார் திருக்கூட்டத்துடன் தங்கியிருந்தனர். அப்பொழுது சூல்கொண்டமேகங்கள், பெய்தலான கார்காலம் நீங்கிற்று. சூரிய கிரணம் தாக்காமையால், அலைகளால் ஒலிக்கின்ற நீர் நிலைகளெல்லாம் விறுவிறுப்புற்று, வெவ்விய மலையிடங்களெல்லாம் குளிர் நிறைந்திருந்தது. செழிப்பாக மலர்ந்திருந்த தாமரைப்பூக்கள் முகம் வாட்டமுற்றதால், அதிலிருந்து தேன் உண்ட வண்டினங்கள், தேன் இல்லாமையால் சுழன்று சென்றன. அறுகம்புல்லில் தங்கிய பனித்துளிகள் வரிசையாக விருப்பது, பளிங்குமணிகளை மரகதக் கொடியிற் கோத்திருப்பதுபோலும், மூடுபனியால் மலைகள் மறைந்திருப்பது, அக்காலத்துக் குளிரைச் சகியாமல், மலைகள் வெண்போர்வை போர்த்திருப்பது போலும் விளங்க, மிகுந்த குளிரோடு வாடைக் காற்றும் வீசுதலால், இலையுதிரும் மெல்லியசோலைகள் நிலைகுலைந்தாடவும், நடுக்கம் விளைக்கும் குளிரால் கையை நீட்டி நீட்டிப்பார்த்தும் நீட்ட முடியாமல், சூரியன் குறுகிக்கொள்வது போலத் தோன்றவுமான பனிக்காலம் வந்தெய்தியது.

வாட்டந்தரும் வாடைப்பனியால் அந்நாட்டினர் ஆண்டுதோறும் குளிர் சுரத்தால் அவதிப்படுவர். அந் நளிர்சுரம் அந்நாடு முழுதும் வியாபித்து மக்களைப்பெரிதும் துன்புறுத்தி வந்தது. அச்சுரம் அடியார்கள் திருக்கூட்டத்துள்ளும் பைய நுழைந்து பாதைப்படுத்திற்று. அந்நாட்டார் ஆண்டுதோறும் அத்தீயநோயால் வருந்துவதையும், அது புதிதாகவந்து தங்கிய திருக்கூட்டத்தாரையும் பற்றித் துயர்படுத்துவதையும், சிவபிரான் மெய்யன்பராகிய ஆளுடைய பிள்ளையாரிடத்து அடியவரும், அவ்வூராரும் கூட்டமாகச்சென்று நளிர்சுரம் நாடுவிட்டு நீங்கத்திருவருள் சுரத்தல்வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள்.

அதுகேட்ட காழிவள்ளல், இவ்வாறு குளிர்சுரம் இந்நிலத்தின் இயல்பாக விருப்பினும், முன்செய்த வினைக்கீடாகப் பீடைகள் வந்து பற்றுமென்றுலும், பாலைசாய, நெய்தலாம்படி பாடியதும், பாம்பின் படுவிஷமிறங்கப்பாடி

யதும், காலனை அன்றேவி, கராப்பற்றிய பாலன் உயிர் மீளப் பாடியதும், மரணந்தவிரப் பாடியதும், அடியவர்கள் நலத்தின் பொருட்டானதனுல், இதுவும் அவ்வகையுடையதே என்று அடிகளார், வியாழக் குறிஞ்சிப்பண் இசையில் "அவ்வினைக்கிவ்வினை" என்று தொடங்கும் "திருநீலக்கண்டப்பதிகம்" பதினென்றுபாடித் "தீவினை தீண்டப்பெறு" என்று ஆணையிட்டருளினுர். அன்றே அந்நாடு முழுமையும் அப்பிணி அறவே நீங்க, மக்கள் இன்புற்றனர். இதனை,

"மின்னுர் நெடுவெற்பகங் கொங்கில் வீழ்பனிநோய்
தன்னுர்வழி கெட்டழிந் தமை சொல்லுவர்"
—ஆளுடைய பிள்—திருவந்தாதி.

"தாம் பொழில்சூழ், கொங்கிற் பனிநோய்
பரிசனத்தைத் தீர்ப்பித்தும்" —ஆளு பிள்—திருவுலாமாலை.

என்று பலவாறு நம்பிகள் பாராட்டினர்.

கோங்குமண்டல சதகத்திலும், "நளிர்சுரம் நீங்கியது" என்ற தலைப்பின்கீழ்,

"திருக்கூட்டத் தாரையுஞ் சேர்ந்த நளிர்சுரந் தீரவன்பின்
பெருக்காக "வவ்வினைக் கிவ்வினையாமெனப்" பீடுபெறத்
திருக்காழிப் பிள்ளையார் நற்றமிழ் பாடவத் தேயமுற்றும்
வருத்தாதந் நோயின்று நீங்கிய துங் கொங்குமண்டலமே."

என்ற செய்யுளொன்று காணப்படுகிறது.

இன்றைக்கும் அத்திருப்பதிகத்தை நியமமாகப் பாராயணம் செய்தால், சுரம் முதலிய நோய்கள் நீங்கப்பெறுதல் பிரத்யட்சம். அப்பதிகம்:—

"அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழலை போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறுதிரு நீலகண்டம்."

—திருநீலகண்டம். பண் வியாழக்குறிஞ்சி.

என்பது.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னரும் ஆளுடைய பிள்ளையார் அங்குத் தங்கியிருந்து, கொங்கின் ஏனைய சிவத்தலங்களையும் தரிசித்து, மாதிருக்கும் பாதியானிடம் பிரியாவிடைபெற்று கொங்கு நாடு நீங்கினர்.

இதுவே, ஸ்ரீ ஞானசம்பந்தப் பிள்ளையார், திருச்செங் கோட்டுக்கு எழுந்தருளிய காலத்து நிகழ்ந்த சம்பவம்.

கரா=முதலை. நியமம்=முறை.

**நான்காவது-தலவித்துவான் பொருட்டுச் செங்கோட்டுவேலர், மாடு மேய்ப்போனுகத்தோன்றி, பிரதிவாதி பயங்கரனை விரட்டியது:—**

செந்தமிழ் வளர்ந்த தென்பாண்டி நாட்டுத் திருக்குரு கூரில், "பிரதிவாதி பயங்கரன்" என்ற புலவர் ஒருவர், சிறப் பும் புகழும் பெருக வாழ்ந்திருந்தார். அவர், தனிகர் விளங் கும் பல நாடுகளுக்குஞ் சென்று, ஆங்காங்குள்ள பிரபுக் களைக்கண்டு, தமது கல்வித்திறத்தைத் காட்டிப் பல்வகைப் பரிசுகள் பெற்றும், தம்மையெதிர்த்த புலவர்களிடம் பல மாக வாதம் புரிந்து, அவர்களைத் தோல்வியுறச் செய்தும், யாரும் தமக்கு எதிரில்லையென்ற இறுமாப்புடன் கொங்கு நாட்டையும் அடைந்து, திருச்செங்கோட்டு எல்லையில்வந்து தம் எதிரில் பாம்பு வடிவமாக விளங்கும் நாகாசலத்தை நோக்கிப் பல்லக்கில் இருந்தபடியே,

> **"சமர முகத்திருச் செங்கோடு சர்ப்ப சயிலமென**
> **வமரிற் படம்விரித் தாடாத தென்னை?"**

என்ற இரண்டு அடிகளைப்பாடி எஞ்சிய இரண்டடி களைப் பாடவாராமல், வாக்குத்தடைப்பட்டு மயக்கமேற் படுவதைக் கண்டனர். இப்பிரதிவாதி பயங்கரன் திருச் செங்கோட்டுக்கு வருவதற்கு முன்னரேயே, அத்தலத்தில் முருகக்கடவுளையே முழுதும் நம்பி, அவர் திருவடியே தஞ்சமென்று வழிபட்டு வந்த "குண சீலன்" என்னும் பெயருடைய புலவன், அப்புலவர் தனக்கு, முன் எச்சரிக்கையாக விடுத்தவோலையைக்கண்டஞ்சி, செங்கோட்டு

வேலர்திருவடியைத்துதித்து நித்திரைகொண்டனன். அவன் கனவில், தமிழ் விரகனாகிய தனிவேன் முருகன், வித்துவானாகத்தோன்றி, 'அன்பனே! அஞ்சாதே! பிரதிவாதி பயங்கரனைப் பயமுறுத்தி இவ்வெல்லையில் நில்லாது ஓடிவிடும்படி செய்துவிடுகிறேன்' என்றுகூறிமறைந்தனர். அதன்படியே மாடு மேய்ப்போன் வடிவுதாங்கி, மயக்கமுற்று வருந்திக் கொண்டிருந்த பாண்டிய நாட்டுப் பயங்கரன் முன்னே நின்று,

—அஃதாய்ந்திலையே!

நமரின் குறவள்ளி பங்க னெழுகரை நாட்டுயர்ந்த
குமரன் திருமரு கன்மயில் வாகனங் கொத்துமென்றே.''

என்று பாடிச் செய்யுளைப்பூர்த்தி செய்தனர். இப்பாவடிகளைக்கேட்ட பாண்டிய நாட்டுப்புலவர் ஒன்றுந்தோன்றாது திகைப்புற்றுக் கருவம் அடங்கி, பல்லக்கினின்றும் தட்டென்று கீழே இறங்கி, நாம் மனத்தில் நினைத்த கலித்துறையை, ஓர் கணத்தில் பொருள் சிறக்கப்பாடி முடித்தனனே இவன், தெய்வக் கவிஞன்போலும்! தொழில் மாடுமேய்ப்பதாயிருக்கிறது. இவன் முகத்தில் கலைமகள் களிநடம்புரிகின்றாளென்றெல்லாம் எண்ணி, இறுதியாக, 'நீ யார்? உன் வரலாறென்ன? கூறுக' என்றனர். அதற்கு அம்மாட்டிடையன், புலவீர்! 'யான் மாதிருக்கும் பாதியான் மாண்புடன் விளங்கும் இவ்வரவகிரியில் குணசீலன் என்னும் வித்துவானின் கடைமாணவன்; கண்டசுத்திபாடுவதில் தாமதமுடையவன்' என்றனன். நீ நன்கு கற்ற புலவனாகவிருந்தும் கால்நடை மேய்க்கும் தொழிலை மேற்கொண்டதென்னை? என்றனன். புலவீர்! 'உலகத்துள்ள உயிர்வகைகளில் பசுக்களைப்போன்ற உபகாரமுடைய உயர்ந்த பிறவி வேறில்லை. தேவர்களும், புண்ணிய நதிகளும், பசுவின் தேகத்தில் விளங்குகின்றனர். அதன் கோமயமும், சாணமும், பரிசுத்தம் செய்யத்தக்க தகுதியுடையவை என்பதை நீவிர் அறிந்திலீர்போலும்!' எனப்புகன்றனன். இவ்வுரைகளைக்கேட்ட பிரதிவாதி பயங்கரன் மனம் நடுங்கி, இவனே இவ்வளவு ஆகமசாத்திர ஆராய்ச்சியும், எண்ணியதை இனி

தறியும் ஆற்றலும் உடையவனுயின், இவனது ஆசிரியர் எத்தன்மையராக இருப்பாரோ? என்றெண்ணி, பல்லக்கைத் திருப்பும்படிகூறி விரைந்த கதியில் அவ்வெல்லையைவிட்டு அப்பாற் சென்றனன். இச்செய்தியைக் குமாரக்கடவுள் தம் அடியனுகிய குணசீலன் உணருமாறு செய்தனர். அப்புலவன், அறுமுகவன் அன்புக்கு வியந்து மகிழ்ந்தனன்.

இச்செய்தி, கோங்குமண்டல சதகத்தில், "வேலவன் மேய்ப்போனுக வந்தது" என்ற தலைப்பின்கீழ் ஒரு செய்யுள் காணப்படுகிறது. அது:—

"பெருமை மிகு"மர வச்சிலம் பாமெனிற் பெட்புறுமவ்
வரவு படம்விரித் தாடாததென்" னென்றகத் துனுமோர்
கருவி வெருக்கொள வாமேய்ப் பவனுகக் கனிந்துதிரு
மருகன் மயில்கொத்து மென்றெனச் சொல் கொங்கு
மண்டலமே."

என்பது.

"இது நாகமலையானுல், இந்தநாகம் படத்தை விரித்து ஆடாமலிருக்கக்காரணமென்ன? என்று, அகங்காரங் கொண்டுவந்த புலவன் திடுக்கிடும்படி, (செங்கோட்டு வேலவர்) மாடுமேய்ப்போனுக நின்று, இலக்குமியின் மருமகனுகிய முருகக்கடவுளது வாகனமாகிய மயில், மலையின் மீதிருப்பதால், கொத்திவிடுமென்று அஞ்சி ஆடாமலிருக்கிறது என்று விடையீந்ததும் கொங்குமண்டலம்" என்பது பாட்டின்பொருள்.

## ஐந்தாவது – மலைகாவலர் கோயில் :—

இக்கோவில், ஊரின்தெற்கில் பரமத்திபாண்டமங்கலம் செல்லும் நடைவழியில் ஒதுக்கானதோர் இடத்தில் இருக்கிறது. ஒரு காலத்தில் ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் ஆலயத்துள்ள அரும்பொருள்களைக் கொள்ளைகொண்டு செல்லும் கொடிய நோக்கத்துடன் படைப்பலமும், மனத்துணிவுமுடைய வடநாட்டுத் துருக்கர்கள் சிலர், திருச்செங்கோடு அடைந்து

கொள்ளையடிக்கத் துணிந்தார்கள். அப்பொழுது உமை யொருபாகர் திருவடியிலும், அறுமுகத்திறைவர் அடியிணை களிலும், அன்பும் பக்தியும் மிகுந்த "வீமணன், ஓவணன், இரங்கணன்" என்னும் மூவர்வீரர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் அங்குத் தங்கியிருந்தனர்.

அப்பொழுது வடநாட்டு முரட்டுத்துலுக்கர்கள் அநீதமாக ஆலயத்துட் புகுந்து பொருள்களைக் கொள்ளை கொள்ளுவதைக்கண்டு பொறுத அம்மூவர்களும், அப்பகை வர்களை, கத்தி, கேடயம், குத்தீட்டி, வில், அம்பு முதலிய ஆயுதங்களேந்தி அக்கூட்டத்தாரைப் பெரிதும் துன்பு றுத்தி வதைத்தனர். அவற்றைப்பொறுத அத்துடுக்கர்கள் மிகச்சினந்து, அம்மூவரையும் வெட்டிவிட்டனர்.

சமயம் கெடாமலும், பொருள் அழியாமலும் பாதுகாக் கும்பொருட்டு வீராவேசத்துடன் எதிர்த்து உயிர்விடுத்த வீரர்மூவரையும் அநுக்கிரகிக்க நினைத்த உமையொருபாகன் அவர்கள் எதிரே தோன்றி அவர்களை எழுந்து வருமாறு அழைத்தனர். அவர்கள், உயிர்பெற்றெழுந்து வணங்கி நின் றனர். அவர்கட்கு இறைவர், அடியார்களைப் பீடிக்கும், பேய், பிசாசு, பில்லி, சூனியம் ஆகியவினைகளை நீக்கவல்ல ஆற்றலைத்தந்து இந்நாகாசலத்தின் தென்பகுதியில் "பணிமலை காவலராக விருந்துவாழும்படி அருள்பாலித்து மறைந்தனர். அங்ஙனம் அநுக்கிரகம்பெற்ற அவர்கள் ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர், அரவகிரி வேலர் திருவருட்கு வைப் பிடம் என்று பிறர் கூறிப்புகழ்ந்து கொண்டாடும்படி கோயில்கொண்டனர்.

மலைகாவலர் கோயிலின் கற்சிலைகளுக்கு அருகில் ஒரு சிறு சமாது இருக்கிறது. அதனைப் 'பங்கடு சுல்தான்' என்று மகம்மதியர் கொண்டாடுகின்றார்கள். அவர்யோக ஞானியாம். நரபதி என்பவர், 'தட்டான் குட்டை' என் னும் இடத்தில் கோயில் கொண்டிருக்கின்றனர். என்று ஊரார் கூறுகின்றார்கள். பில்லி, சூனியம், வைப்பு, பேய், பிசாசு முதலிய நோய்களால் துன்பம் அடைகிறவர், இவ்

வாலயத்திற்கு வந்தால் நீங்கிவிடுகிறதென்கின்றனர். பிசாசு பிடித்தவர்கள் இங்கு வந்தால், ஓடுகிறேன்! ஓடுகிறேன்!! என்று கூறி பிசாசு ஓடுகிறது. வரமுடியாத பிசாசு, குடியேறியுள்ள வீட்டுக்காரர்களுக்கு இக்கோவில் பூசாரி, மந்திரம் எழுதிய பனை ஓலைத்துண்டுகளைக்கொடுக்கின்ருன், அவைகளிலிருந்து அர்த்தநாரீச்சுரது ஆணையின்படி பிசாசுகள் ஓடிவிடுகிறதாம். ஆயின், பூசாரிக்குக் கட்டுக்காணிக்கை கொடுக்கவேண்டும். மலைகாவலர் பெயர் சொன்னல், வெள்ளாட்டுக் கடாக்கள், உயரமாக வளர்கின்றதென்கின்றனர். அது உண்மையான காட்சிப்பிரமாணம்.

**செங்குன்றூர் என்பது கொங்கு நாட்டுத்தல மல்ல. அது கேரள நாட்டுத்திருத்தலம். அது பற்றியதோர் விளக்கக்குறிப்பாவது:—**

பெரிய புராணத்தில் வருகிற, தனிஅடியார் அறுபத்து மூவரில் ஒருவரான விறன்மிண்ட நாயனர், திருச்செங்கோட்டைப் பிறப்பகமாகக் கொண்டவர் என்று கொங்கு மண்டல சதகம் கூறுகின்றது. அது பிழை என்பதற்கு கோவை சிவக்கவிமணி C. K. சுப்பிரமணியமுதலியார், B.A., அவர்கள், தமது பெரிய புராண விரிவுரையில் 632 ஆம் பக்கத்து, விறன்மிண்ட நாயனர் புராணம், தில்லைவாழ் அந்தணர் சருக்கம், "தலவிசேடம்" என்ற தலைப்பின் கீழுள்ள செய்தியை ஆதாரமாகக்கொள்க என்று குறித்துள்ளனர். அது:—

"இத்தலம் திருவாங்கூர் இராச்சியத்திலே 'கோல்லம்' என்ற மேல்கடற் றுறைமுக நிலயத்திலிருந்து கிழக்கே பத்து நாழிகை அளவிலும், தென்காசியிலிருந்து 48 நாழிகையிலும் உள்ளது. "கோட்டாரக்கரை" என்ற இருப்புப்பாதை நிலயத்தினின்றும் வடக்கே போகும் பெருவழி (Central Trunk Road) என்ற கற்சாலை வழியாய் 25 நாழிகையளவில் இது அடையத்தக்கது. கோட்டயத்துக்கும், கோட்டாரக்கரைக்கும் இடையில் உள்ளது. வடக்கிலிருந்து கோச்சி வழியாய் வருகின்றவர்கள், எர்ணுகுளம் என்ற இருப்புப்பாதை நிலயத்திலிருந்து தெற்கில், மேற்குறித்த

பெருவழியிலே "ஏற்றமானூர்" (ஏற்றின்மேல்—இடபத்தின் மேல் வரும் சிவனூர்) கோட்டயம், செங்கணச்சேரி, திருவில்லா" என்ற ஊர்களைக்கடந்து திருச்செங்குன்றூரை அடையலாம். எர்ணாகுளத்திலிருந்து ஏறக்குறைய 55 நாழிகையளவு தூரமுண்டு. இருவழியும் மோட்டார், பஸ் வசதியுண்டு. பரசிராமர்கண்டு வேதியர்க்களித்த இந்த நாட்டு **64** ஊர்களில் இவ்வூர் தெற்குக்கோடியில் உள்ளது. இதனை இப்பொழுது "செங்கண்ணூர்" என மலையாளர் வழங்குவர். சிவாலயமும் அதில் உள்ள பகவதி என்ற அம்மையார் ஆலயமும் பிரசித்தம். விரிவுகள் திருவிதாங்கூர்சமஸ்தான வெளியீட்டில் (Travancore State Manual) கண்டுகொள்க என்பது.

இது, ஒரு வைப்புத்தலம் என்பது "கொடுங்களூர், அஞ்சைக்களம்" என்ற மலை நாட்டுத் தலங்களை வரிசைப் படுத்தி அப்பமூர்த்திகள் க்ஷேத்திர திருத்தாண்டகத்தில் கூறியது காண்க.

## திருவிழாக்களும் — நிகழுங்காலங்களும்.

சித்திரை:— விஷு புண்யகாலம் உற்சவம், தேவஸ்தானத்தாருடையது. நடராஜர் அபிஷேகம், திருநாவுக்கரசர் குரு பூஜை, பொது உபயம்.

வைகாசி:— பிர்ம்மோற்சவம். திரு ஞானசம்பந்தர் குருபூஜை, உபயம்.

ஆனி:— திருமஞ்சன உற்சவம், மாணிக்கவாசகர் குருபூஜை, பொது உபயம்.

ஆடி:— ஆடிப்பூரம், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குரு பூஜை, பொது உபயம்.

ஆவணி:— ஆவணிமூலம், விட்டம்பாளையம் ஜமீன்தார் உபயம். விநயகசதுர்த்தி, குருக்கள்விட்டு அம்மாப்பெண் அம்மாளுடைய பண்டிவிருந்தும்; ஸ்ரீ. நீலகண்ட சிவாச்

சாரிய சைவ பாஷ்ய கர்த்தாவின் குருபூஜை, ஆதிசைவ மகாசபையாராலும் நடைபெறுகின்றன.

புரட்டாசி:— ஸ்ரீ கேதாரேச்சுரவிரதம் பார்வதி தபசு 21 நாள் உற்சவம். மாளய அமாவாசை தினம் ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் திவ்விய காக்ஷி. நவராத்திரி வைபவம் அம்பு போடுதல் தேவஸ்தானத்தாருடையது.

ஐப்பசி:— கந்தசஷ்டி உற்சவம். செங்குந்தர் உபயம்.

கார்த்திகை:— தீபோற்சவம் தேவஸ்தானத்தாருடையது. சோமவார உற்சவம், நான்கு வாரங்களும், விட்டம் பாளையம் ஜமீன்தாரரும், ஈரோடு நூல் வர்த்தகர் V. V. C. R. முருகேச முதலியார் அவர்களும், பலமெய்யன்பர்களும்கூடிச் சங்காபிஷேகமும், பஞ்சமூர்த்திகளை ஊர்வலத்திற்கு எழுந்தருளச் செய்தலும் உபயமாக நடாத்தி வருகின்றனர்.

மார்கழி:— திருவெம்பாவை ஆருத்திரா உற்சவம், நகரத்து வைசிய ஸ்ரீ பொன்னப்ப செட்டியார் குடும்பப் பண்டிலிருந்து நடைபெறுகிறது.

தை:— விஷு புண்யகாலம். தேவஸ்தானத்தாருடையது. ஸ்ரீ கைலாசநாதர், ஸ்ரீ சண்முகர் இரதோற்சவம் பதி மூன்று நாளும் நகர, சிவாலயத் தேவஸ்தானம். சண்முகர் உற்சவம், செட்டியார் குடும்பக்கடை வாடகை.

மாசி:— மகா சிவராத்திரி, பல மெய்யன்பர்கள்கூடி உபயமாகச் செய்கின்றனர்.

பங்குனி:— ஸ்ரீ செங்கோடை ஆறுமுகருக்கு உத்திர நாள் வைபவம். காவடி உபயம்.

(தர்மகர்த்தாக்கள்) விட்டம்பாளையம் ஜமீன்தார்களிற் ஒருவரும், போக்கம்பாளையம் ஜமீன்தார்களில் ஒருவரும், உள்ளூர் வாசிகளில் ஒருவரும் ஆக மூவர்கள்.

## ஆலய வரவுகள்.

| | |
|---|---|
| வருஷ வருமானம் தஸ்தீக் துகை, ரூபாய் | 2000 |
| மற்றும் சகல வகையிலும் வரவு ரூபாய் | 2000 |
| ஆக மொத்தம் ரூபாய் | 4000 |

## செலவுகள்.

இத்தொகை-சம்பளம், படித்தரம், ரிப்பேர், உத்ஸவ வகைகளுக்குமாக இந்நாலாயிர ரூபாயும் செலவு ஆகிறது.

## ஆந்திர நாட்டுக் கல்வெட்டு.

விஜயநகர சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த ஸ்ரீ சைலம் நாட்டதிகாரிகளில் ஒருவர், திருச்செங்கோட்டுத் திருவாலயத்துக்கு போன்னல் ஓர் இடபத்தையும், பிருங்கரிஷியின் உருவத்தையும் தானம் வழங்கியதாக "தென்னிந்திய ஸ்தலங்கள்" என்னும் புத்தகம் 567-ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுளது.

## ஸ்ரீ கருணீகர் மண்டபம்.

இது, மலைமீதுள்ள இராய கோபுரத்தின் உட்புறத்து வலது பக்கத்தில் ஸ்ரீ நடராசர் சிற்றாலயத்துக்கு அருகிலிருக்கிறது. அக்கல் மண்டபத்தில், சென்ற பத்தாண்டுகளாக அர்த்தநாரீச்சுரர் வைகாசி பிர்ம்மோற்சவத்தில் மூன்றும் நாள் ஸ்ரீ கருணீக மரபினர்களால் நடாத்தப்பெறும் மண்டபக்கட்டளைக்கு எழுந்தருளுகின்றனர். இம்மண்டபக்கட்டளையை இப்பொழுது முன் நின்று நடாத்துபவர், திரு. M. S. அர்த்தநாரிப்பிள்ளை அவர்கள்.



ஸ்ரீ கயிலாசநாதர் முன் கோபுரம்.



ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் திருத்தேர்.

# பிழையும் திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 11 | 16 | பாரை | பாறை. |
| 16 | 19 | மின்னசாரம் | மின்சாரம். |
| 22 | 2 | லோகங்கள் | உலோகங்கள். |
| 26 | 10 | வ. வே. கா. ரா. | வ. வெ. கா. ரா. |
| ,, | 12 | தெற்குக்கரை | வடக்குக்கரை. |
| 29 | 1 | பராசமுனி | பராசர முனி. |
| ,, | 2 | மனோவஜன் | மனோஜவன். |
| ,, | 13 | வடமலை | வடமாலை. |
| 33 | 5 | இருநூற்றியாறு | இருநூற்றாறு. |
| 37 | 16 | குயவர் | தெலுங்குச் செட்டி. |
| 39 | 19 | நிலலை | நீழலை. |
| 50 | 8 | நூற்றியேழு | நூற்றேழு. |
| 56 | 25 | வ அனுக்கு | அவ னுக்கு. |
| 57 | 19 | 1559 | 1599. |
| ,, | 20 | 383 | 343. |
| 58 | 7 | வசித்திருந்தனர் | வசிக்கின்றனர். |
| 91 | 13 | வடகிழக்கு | தென்கிழக்கு. |
| ,, | 2 | பிராமண வைதீகர் மண்டபம் | குப்பண்ணப்பரதேசி குகை மண்டபம். |
| 93 | 5 | கோயிலை | குன்றை. |
| ,, | 8 | அக்கோயிலை | அக்குன்றை. |
| ,, | 11 | ஆலயத்தை | குன்றை. |
| ,, | 26 | இரும்புவேலி | செங்கற்சுவர். |
| 108 | | 20 கால் மண்டபம் | 40 கால் மண்டபம். |

69-ம் பக்கம் 26-வது வரியில் மலைமீதுள்ள புன்னைமர நீழலில் சமயாசாரியார் நால்வர், சிற்றாலயத்தில் கோயில் கொண்டிருக்கின்றனர்.

# அநுபந்தம்.

**கீழ்க்கோயில் என்று வழங்கும் ஸ்ரீ கயிலாசநாதர் ஆலயம்.**

"திருக்கோடிமாடச் செங்குன்றூர்" என்றும், கோதையூர்" என்றும் பெயர்கள் வழங்கப்படும் திருச்செங்கோட்டு ஊரின் நடுவில், பேரழகுடன் விளங்கும் ஸ்ரீ கயிலாயநாதர் ஆலயம் அழகான அமைப்புடனும், கம்பீரமான தோற்றத்துடனும் திகழ்கின்றது. இத்திருக்கோயிலே, மலைமீதுள்ள "மாதிருக்கும் பாதியான்" கோயிலுக்கு இரண்டாவதாக மக்களாலும், பக்திமான்களாலும் மதிக்கப்பெற்றும், போற்றப்பட்டும் வருகிறது. ஸ்ரீ கயிலாயநாதர் கோயில் நாற்புறத்துமுள்ள கருங்கற் சுவர்கள், சுமார் தென்வடல் 250 அடி நீளமும், கிழமேல் 250 அடி அகலமும், இக்கோயிலின் முன் அணியில் பேருருவமாக விளங்கும் திருப்பெருங் கோபுரத்து முன்னுள்ள பெருந்திருவாயில் 76 அடி உயரமும் இருக்கின்றன.

"ஸ்ரீ கயிலாயநாதர் முன்கோபுரப் பெருவாயில் நிலவின் மேல் ஓர் கல்லில், ஸ்வஸ்திஸ்ரீ கலியுக சகாப்தம் 1585-ன் மேல் செல்லாநின்ற சோபகிருது ஆண்டு ஆவணி மாதம் மதுரை நாயக்கமன்னர் ஸ்ரீ விசுவநாதசோக்கலிங்க நாயக்கரவர்கள் இராச்சிய பரிபாலனம் செய்து வருகையில்" என்று எழுதி அதன்பின்,

நணிய கயிலாய நாதருக்குப் பூசை
அணிகிளருங் கோபுரமுண் டாக்கிப்—பணிமலைமேல்
காசி விசுவ நாதருக்குக் கற்கோ யிலும்பணித்தான்
தேசருணற் சேஷாத் திரி."

என்ற இந்த வெண்பாவும் வெட்டப்பட்டிருக்கிறது.

இப்பெருந்திருக் கோபுரத்து முன்திருவாயிலின் எழு பத்தாரடி உயரமுள்ள திருநிலைக்கு உறுதியும் பலமுமான இரட்டை மரக்கதவுகள் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. இக் கோபுரம், ஐந்து நிலைகளும், சிற்ப சித்திரங்களும் கூடிப் பேரழகுடன் விளங்குகின்றது.

ஸ்ரீ கயிலாயநாதர் கோபுரத்திற்குக் கிழக்கில் நேர் எதிரில் சுமார் 30, 40 முழ தூரத்தில் நாற்கால்தூண் கல்மண்டபத்தின் நடுவில் உயரமான விளக்குத்தூண் ஒரே கருங்கல்லை நயம்படச் செதுக்கி முப்பத்தொரு பட்டை தீர்க்கப் பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. இக்கற்றூண், அடியிலிருந்து நுனிவரையில் சுமார் 75, 80 அடி உயரமுள்ளதாயிருக்கிறது. இவ்விளக்குத்தூணை திருச்செங்கோட்டுக்கு மேற்கில் சுமார் ஒரு கல் தூரத்திலும், சந்தைக்கு தெற்குப் பாகத்திலுமுள்ள சிறிய மலையிலிருந்து வெகு பிரயாசத்துடனும், பலமாத முயற்சியிலும் மிகுதியான பொருட்செலவிலும் வெட்டியெடுத்துச் சதுரித்துக் கொணரப்பெற்றது. இங்ஙனம் கொண்டுவரப்பட்ட கற்றூண் நிலையாக நின்று விளங்கும்படி கடவுளைப் பிரார்த்தித்து ஓர் கனவானல் நிறுத்தப்பட்டதென்று கூறுகின்றனர்.

இவ்விளக்குத்தூணையெடுத்து உயரமாக நிறுத்தியதன் சம்பந்தமாகத் திருச்செங்கோட்டிலும், அதன் சுற்றுப்புற ஊர்களிலும் கன்னபரம்பரையாக வழங்கப்படும் கதையாவது:—

"திருச்செங்கோட்டுப் பறைச்சேரியில் கற்பு நிலை குன்றுத பொற்புறு செல்வி வேள்ளையத்தோட்டி மகள்

"பாவாய்" என்பவள், கலியாணமில்லாதகன்னிப்பெண்ணுக விருந்தாள். பல்லாயிரமணங்கு கனமும், மிகவும் நீண்டது மான பெரிய விளக்குக் கற்கம்பத்தை ஆலய அதிகாரிகள் பன்முறை பன்னூறு ஆட்களைக்கூட்டிமுயன்றும் முற்றுப் பெருமலே நின்றுவிட்டது. அதன்பிறகு அத்தோட்டி மகள் பாவாய்மீது தேவ ஆவேசம்தோன்றி அருளுடன் அப்பெருங்கூட்டத்தில் நுழைந்து அரகரா! மகாதேவ! சம் போ! சங்கரா! என்று உரத்த மொழிகள் கூறி ஊங்காரத் துடன் அக்கற்கம்பத்தில் கட்டியிருந்த கயிற்றைக் கைப் பற்றி இழுத்தனள். கம்பம் தங்கு தடையின்றி உயர்ந்து அதன் சரியான நிலையில் சென்று நின்றது. யாரும் அச் செய்கைக்கு அதிசயித்து மகிழ்ந்தனர். இப்பொழுதும் அக்கற்கம்பத்தின் மேற்குப்பாகத்தில் ஸ்ரீ கயிலாய நாதர் சந்நிதியை நோக்கி சிரசின்மீது இரு கைகளைக்கூப்பி நின்ற பாவனையில் சித்தரிக்கப்பெற்றிருக்கும் உருவச்சிலை அப்பாவா யின் உருவமேயாம். மேற்படி வமிசத்தாருக்கு கோதை யூர் ஈசானிய மூலையில் "பறையன்பாளி" என்றஓர் தீர்த்தக் கிணரும், கிணற்றைச் சார்ந்த இடத்திலுள்ள திருமஞ்சனப் பாறையும், அதற்குக்கீழ்புறம் அவர்களுக்கு மடம்கட்ட நிலமும், மானியமாகக் கொடுத்ததாக வயதுமுதிர்ந்த கிழவர் களால் கூறப்படுகின்றது." என்பது.

மேற்படி "பறையன்பாளி" தற்போது திருச்செங் கோடு யூனியன் மேற்பார்வையிலிருக்கிறது. இதற்கு நாற்புறமும் கைப்பிடிச்சுவர்கள் எழுப்பி உருளைகள் கோர்த்து ஊரார் உண்ணும் நன்னீராக உபயோகப்பட்டு வருகிறது. மழைகாலத்தில் தண்ணீர் மிகுதி.

இவ்விளக்குத்தூணில் உச்சியிலுள்ள திருவிளக்கு, கார்த்திகை மாதத்தில் வரும் பரணி, கார்த்திகை நாட்களில் அகல் நிறைய எண்ணெய் வார்த்துப் பெரிய திரியிட்டு தீபமேற்றுகின்றனர். திருவிளக்கேற்றுவதற்கு "ஏணி அளவு" என்று நாற்பதுகால் மண்டபத்தின் அருகே கல் நட்டு கற்சாசனம் வெட்டப்பட்டிருக்கிறது. அந்த அள வின்படி ஏணி வரைந்தால், மேற்படி தீபத்தம்பத்து அகில் விளக்குக்குச் சரியாயிருக்கிறது என்கின்றனர்.

விளக்குத் தூணுக்கு நேர் எதிரில் கிழக்குப்பாகத்தில் பெரிய கல் மண்டபமாக விளங்குவதே "நாற்பதுகால் மண் டபம்." இம்மண்டபத்தின் உருவத்தைப் போட்டோ எடுத்து ஆப்டோன் பிளாக்செய்து இப்புத்தகத்தின் 108-ஆவது பக்கத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

திருக்கோபுரத்துத் திருமுன் பெருந்திருவாயில் இரு புறத்தும், யானைமுகக் கடவுளும், சுப்பிரமணியதேவரும் சிற்றாலயங்களில் கோயில்கொண்டிருக்கின்றனர். ஸ்ரீ கயி லாய நாதர் திருவாலயம் கிழக்கு நோக்கிய சந்நிதி.

## நந்தி மண்டபம்.

இனி, திருக்கோபுரத்துத் திருக்கோயிலைக் கடந்து உள்ளே சென்றால், முதலில் நமது கண்களுக்குத் தென்படு வது பலிபீடத்துடன் கூடிய பித்தளைக் கொடிக்கம்பமும், நந்தி மண்டபமுமேயாம். சிற்பச்செல்வம் நிரம்பிய சித் திரத்தூண்களும் அழகான உத்திரங்களும், சித்திரங்கள் மிகுந்த போதிகைகளுடன்கூடிய இக்கல்மண்டபம், எழில் பெற விளங்குகின்றது. சிவபெருமானார் வாகனமாகிய

இடபதேவர் கற்சிலை, கைதேர்ந்த சிற்பாச்சாரியாரால் அவரது கைத்திறமும், சிற்பத்திறமும், சிற்றுளித்திறமும் சிறந்து விளங்க அற்புதமாய்ச் சித்தரிக்கப்பெற்றிருக்கிறது. இதனுடன் இடபதேவர் எழுந்தருளியுள்ள மண்டபத்தின் மேல்விதானத்தின் நடுவில், செந்தாமரை மலர், மூன்றடுக்காகத் தன் இதழ்களை விரித்து மலர்ந்திருப்பதுபோலவும், அதன் நுனியிலுள்ள கூர்மையான மொட்டு இயற்கைக்கு மாறின்றி காண்போர்களித்து வியக்கும்படியும் விளங்குவது உண்மையிலேயே சிற்பி, உற்றுநோக்குவோர் ஒவ்வொருவருடைய கண்களுக்கும், மனதுக்கும் நல்விருந்தூட்ட வேண்டுமென்று கருதியே மிகுந்த கவனத்துடனும், கருத்துடனும் சித்தரித்தான்போலும் என்று எண்ணக்கூடியதாயிருக்கின்றது. ஆறு வளையங்களுடைய கற்சங்கிலிகளின் சிற்றுளித்திறமை செப்புந்தரமன்று. மண்டபத்தின் மேல் கொடிக்கம்பத்தையொட்டி வெண்மையான பெரிய கண்ணாடி மூடுமுடைய பிரகாசமுள்ள காந்தவிளக்குத்தூண், ஜோதிமயமான குளிர்ந்த நல்லொளியுடன் அம்மண்டபத்தையும், கோபுரத்தையும் அழகுபடுத்திக் கொண்டிருக்கிறது. இந்தக் காந்தவிளக்குத்தூணை உபயமாகச் செய்து உதவியவர் திரு. V. V. C. R. முருகேச முதலியார் அவர்கள்.

## நிருத்தமண்டபம்.

நந்தி மண்டபத்திற்கு நேர் எதிரில் விளங்குவதே ஸ்ரீ கயிலாயநாதர் நிருத்தமண்டபம். இப்பெரிய மண்டபத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் கனமான கருங்கல் கற்றூண்கள் மொத்தம் ஐம்பத்துநான்கு. அவற்றுள் முன்வரிசையில் சிற்ப சித்திரங்கள் மிக அழகாகவும், எடுப்பாகவும்

அமைந்த சிங்கத்தூண்கள் ஆறும், நாற்சதுர வடிவுள்ள நன்ஞன்கு சிற்றூண்கள் இரண்டும், இரு பக்கவாட்டிலும் நின்று நிருத்தமண்டபத்தை அழகுபடுத்திக்கொண்டிருக்கின்றன. இம்மண்டபத்தின் நடுப்பாகத்து அளவுமட்டும், தென்வடல் முப்பத்தைந்துமுழ அகலமும், கிழமேல் நீளம் முப்பத்தோரு முழமும் இருக்கின்றன. மண்டபத்து மேல்விதானத்தில் எந்தவிதமான சித்திரங்களுமில்லை. பக்கவாட்டுக்களிலுள்ள மேற்கல் உத்திரங்களில், சிவலீலைகள் மட்டும் சித்தரிக்கப்பெற்றிருக்கின்றன. மண்டபத்தின் தரை, கருங்கல்லைக் கொண்டு அழகாகத் தளவரிசை செய்யப்பெற்றும், சிறு கற்கட்டு மேடையொன்று சுவாமி எழுந்தருள்வதற்குக்கட்டப்பட்டும் இருக்கின்றன.

## துவாரபாலகர்கள்.

இம்மண்டபத்தின் மேற்குக்கோடியில் மகாமண்டபத்தின் திருவாயிலையொட்டி துவாரபாலகர்கள் இருவர், உயரமான கற்சிலையில் சிற்ப சித்திரங்கள் விளங்கக் கம்பீரமாக நின்று காவல் புரிகின்றனர். இவர்களது வலப்பாக இடப்பாகங்களில் ஆலய சம்பிரதாயங்களையொட்டி விநாயகரையும், சுப்பிரமணியரையும் கற்கட்டுமேடைமீது கோயில் கொள்ளச் செய்திருக்கின்றனர். இம்மண்டபத்திலேயே சமயாசார்யர் நால்வர்களது கற்சிலைத் திருவுருவங்களும் வைக்கப்பெற்றிருக்கின்றன. வடக்குப்பாகத்தில் நவக்கிரகங்கள் உயரமான கற்கட்டு மேடைமீது கோயில்கொண்டிருக்கின்றனர். இதற்கு அடுத்தே ஸ்ரீ செங்கோட்டு வேலவர் உற்சவ விக்கிரக அறையும், இரும்புக் கேட்டுக்கள் வைத்துப் பூட்டப்பட்டிருக்கிறது. இம்மண்டபத்தின் ஓர் பாகத்தில் வெண்கலத்தினுல் வார்க்கப்பெற்ற ஓசைமிக்கு

டைய பெரிய சண்டாமணியொன்று தொங்கவிடப்பட்டிருக்கிறது. தெற்குப் பாகத்து மண்டபத்தின் கற்சுவற்றையொட்டி சிற்றுருவில் கட்டப்பெற்ற அறையில் தேவஸ்தான ஆபீஸ் இருக்கிறது.

## ஸ்ரீ கயிலாயநாதருக்கு வழங்கும் பெயர்கள்.

திருக்கோயில் மூலத்தானத்தில் கோயில்கொண்டு விளங்கும் ஆவுடையாருடன் கூடிய லிங்காகாரப் பெருமானுக்கு "ஸ்ரீ கயிலாய நாதர்" என்று பெயர். இப்பெயரேயன்றி இக்கடவுளுக்கு விக்கிரம பாண்டீச்சுரர் என்ற பெயரும் வழங்கப்பட்டதாக "கோங்கு நாடு அடைவு" 120-ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது அது:—

"இக்கயிலாய நாதர் கோயில் எடுப்பித்த விக்கிரம பாண்டியன் என்பவனுக்குப் "புவனேகவீரன்" என்ற விருதுப்பெயர் வழங்கியதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. (புவனேகவீரன்=உலகத்திற்கே ஒருவனேனும் பராக்கிரமம் உடையவன்) பேராண்மை படைத்த இப்பெருவீரன், காஞ்சீபுரத்தைத் தன் அதிகாரத்தின்கீழ் ஆக்கிக்கொண்டானென்று சிதம்பரத்துக் கல்வேட்டுக்களும், வேணாட்டு அரசனையும், காகதீய கணபதி அரசனையும், விஜய கண்ட கோபாலனையும் வெற்றி கண்டானென்று வேறு கல்வெட்டுக்களும் கூறுகின்றன. இவ்விக்கிரம பாண்டியன் தன்பெயர்விளங்கும்பொருட்டே இத்தலக்கடவுளுக்கு "விக்கிரம பாண்டீச்சுரர்" என்று தன் பெயரையும், கோதையூர்க்கு அணித்தாயுள்ள இளையபெருமாள் மலைக்கு "திருவிக்கிரமாசலம்" என்ற பெயரையும் வைத்தானென்று கருத

வேண்டியதாயிருக்கிறது. திருவிக்கிரமாசலத்திற்கு இப்பொழுது "கோரைக்குட்டை"யென்று பெயர் வழங்கப்படுகிறது." என்பது.

## அம்மன் ஆலயம்.

இவ்வாலயம் ஸ்ரீ கயிலாய நாதர் ஆலயத்திற்குச் சிறிது வடக்குப் பக்கத்தில் இருக்கிறது. இத்தேவியார் திருப்பெயர் "பரிமளவல்லியார்" என்று திருப்பணிமாலைச் செய்யுள்கள் கூறுகின்றன. இவர் எழுந்தருளியுள்ள கற்கோயிலின் கருப்பக்கிருகமும், அர்த்தமண்டபமும், மகாமண்டபமும், நிருத்த மண்டபமும், பள்ளியறையும், நடைமாளிகையும், சந்நிதி வீதியின் தெற்கு பக்கத்து நடமாளிகையும், பாற்பசுவு நூறும், அந்தணர்களுக்கு அக்கிராகாரமும், நந்தவனமும், கிணறும் ஓர் சிவச்செல்வர் உபயமாக உண்டாக்கி வைத்தாரென்று திருப்பணிமாலை கூறுகின்றது.

இத்திருக்கோவிலின் நிருத்த மண்டபம், ஸ்ரீ கயிலாய நாதர் மண்டபத்தைவிட சிறியது. மொத்தம் ஐம்பத்து நான்கு கற்றூண்கள், உறுதியாக நின்று மண்டபத்தைத் தாங்கிக்கொண்டிருக்கின்றன. வடக்குப்பாகத்தில் மர வாகனங்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. மேல் விதானம் அழகின்றியும் சிற்பசித்திர அலங்காரங்களின்றியும் உள்ளது. அடித்தளம் கருங்கல்வரிசை செய்யப்பட்டிருக்கிறது. மகாமண்டபமும், அர்த்தமண்டபமும், மூலஸ்தானமும் சிறிய அளவுகளையுடையவை. கருப்பக்கிருக வெளியில் தென்வடல் அகலம் முழம் ஏழரையும், கிழமேல் நீளம் முழம் ஏழரையும் இருக்கின்றன. கருப்ப விமானம்



ஸ்ரீ செங்கோட்டுவேலவர் உற்சவ மூர்த்தம்.

"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச்
செஞ்சுடர் வேல்
வேந்தனைச் செந்தமிழ்நூல் விரித்தோனை
விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில்
வாகன னைச்
சாந்துணைப் போதும் மறவாதவர்க் கொரு
தாழ்வில் லையே"

—கந்தரலங்காரம்.

நாற்சதுரவடிவும் தங்க முலாம்பூசிய தூபியும் உள்ளன. செங்கல்லும், சுன்னச் சாந்தும் சேர்ந்துசெய்த சித்திரப்பதுமைகள் விமானத்தைச்சுற்றி அழகுசெய்து கொண்டிருக்கின்றன.

அம்மனுடைய கருப்பக்கிருகத்துள் விளங்கும் தேவியின் கற்சிலை, அழகும் அமைப்புமாய், கம்பீரத்தோற்றத்துடன் கண்விருந்தாய் மிளிர்கின்றது. இத்தேவிக்கு, "சுகுந்த கூந்தலாம்பிகை" என்ற திருப்பெயரும் உண்டு.

## ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில்.

இக்கோயில், ஸ்ரீ கயிலாய நாதர் ஆலயத்திற்கும், ஸ்ரீ பரிமளவல்லிதேவியார் திருக்கோவிலுக்கும் நடுவில் இருக்கிறது. ஆயின், மிகச் சிற்றாலயம். மூலவர் கற்சிலை ஒருமுகமுடையது. சிரசில் திருமுடியும், திருக்கரத்தில் வேலும் தாங்கி, கிழக்குத்திசை நோக்கி நின்ற கோலமாய் விளங்குகின்றனர். மகாமண்டபம், முப்பத்திரண்டு தூண்களையுடையது. கருப்பவிமானம், செங்கல்லும், சுண்ணச் சாந்தும் கூட்டிச் சித்தரிக்கப் பெற்றிருக்கின்றது. விமானத்தைச் சுற்றிய ஆறு பட்டைகளில் சுப்பிரமணிய தேவருடைய பன்னிருவித திருக்கோலங்களைப் புராண வரலாற்றையொட்டி அழகாகச் சித்தரிக்கப்பெற்றிருக்கின்றன. விமானத்து உச்சியில் தங்க முலாம்பூசிய தூபி, பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

## பிரகாரமும் — சுற்றுக்கோயில்களும்.

திருக்கோயில் கொடிக்கம்பத்தினின்றும் சென்றால், தெற்குப்பிரகாரத்தில் தென்கிழக்கு மூலையில் கருங்கல் மண்டபமே சுவாமிக்குத் திருவமுது செய்யும் "திருமடைப்பள்ளி".

பிரகாரத்தின் நாற்புரத்தும் **98** கற்றூண்கள் நிறுத்தி வலிவாகக் கட்டப்பட்டுள்ள நீராழிமண்டபம், பார்ப்பதற்கு அழகாகவிருக்கிறது. திருக்கோயிலைச் சுற்றிலும் வரிசையாகத் தென்னை மரங்கள் வைத்து வளர்க்கப்பெற்றிருக்கின்றன. தெற்குப்பிரகாரத்தின் நடுவில் தரையில், சிறு கற்கட்டுமேடைமீது முக்கூட்டு விநாயகர் அல்லது பட்டிவிநாயகர் மூவர் கோயில்கொண்டிருக்கின்றனர். மார்கழித்திருவாதிரையில் ஸ்ரீ நடராஜர் இவ்விநாயகர்களைப்பட்டி சுற்றுவதால், இவ்விநாயகர்களுக்குப் "பட்டி விநாயகர்" என்று பெயர் ஏற்பட்டது. இவ்விநாயகர்களுக்குப் பின்பாகத்தில் சிறிது தூரத்தில் "ஞாயிறு மண்டபம்" அல்லது உற்சவ மூர்த்தங்கள் எழுந்தருளும் மண்டபம். இம்மண்டபத்தில் சோமாஸ்கந்தர் சந்நிதியும், அச்சந்நிதியின் தென்பகுதியில், விநாயகர், பெருச்சாளி வாகனராய் வீற்றிருக்கும் கற்சிலையும்; தெற்குத் திருமதிலையோட்டி தனி அடியார் அறுபத்து மூவரும், விநாயகர் சமயாசாரியார் நால்வர்களும் கற்சிலைகளில் கற்கட்டு மேடைமீது கோயில்கொண்டிருக்கின்றனர். ஞாயிறு மண்டபத்துக்கு நேர் எதிரில் சித்தரிக்கப்பெற்ற எட்டு கற்றூண் மண்டபத்தில் தட்சணாமூர்த்தி கோயில் கொண்டுள்ளனர். மேற்குக் கோடியிலும் ஒரு விநாயகர் கோயில் கொண்டிருக்கின்றனர்.

## மேற்குப்பிரகாரம்.

மேற்குப்பிரகாரத்திலுள்ள நீராழி மண்டபத்தைத் தடுத்து கட்டப்பெற்ற ஐந்து அறைகளில் பஞ்சலிங்கங்கள் ஆவுடையார்களுடனும், நந்திகளுடனும் கோயில்கொண்டிருக்கின்றனர். ஸ்ரீ கயிலாய நாதர் கருப்பக்கிருகத்தின்

பின்புறத்தில் அண்ணுமலையார், அண்டங்களை ஊடுருவியும், பாதலங்களில் காலூன்றியும் நிற்கும் கற்சிலையும், பிரமனும், திருமாலும், அன்னமும், பன்றியுமாக உருக்கொண்டு அடிமுடிகளைத்தேடுவதுபோன்ற உருவங்களும், சிறு கோயிலொன்றில் எழுந்தருள்வித்திருக்கின்றனர். இம்மூர்த்தத்தைச் சென்று தரிசிக்கும் அன்பர்கள் நலத்தையெண்ணி ஐந்து கற்படிகள் கட்டுவித்து வாயில் இருபுறத்தும் கல்லுருவத்தில் இரண்டு யானைகள் சித்தரித்து வைக்கப்பெற்ற சிறு மண்டபமும் இருக்கிறது.

இதற்கு நேரில் மேற்குத்திருவாயில், சிறு கோபுரத்துடன் இருக்கிறது. இக்கோபுரத்தைத்தென்மதுரையில் கி.பி. 1663ம் ஆண்டில், அரசு செய்திருந்த சொக்கநாத நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதென்று சேலம் ஜில்லா கஜட்டீயர் இரண்டாவது வால்யத்தில் 290-ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ கயிலாயநாதர் அர்த்தமண்டபத்து வெளிமதிற் சுவற்றையொட்டிச் சிற்ருலயங்களை பிரமதேவருக்கும், துர்க்காதேவிக்கும், சண்டீச்சுரருக்கும் கட்டப்பட்டு, அவ்வாலயங்களில் அவர்களை கோயில் கொள்ளச்செய்திருக்கின்றனர். இம்மேற்குப் பிரகாரத்திலேயே தல விருக்ஷமாகிய வில்வ மரங்கள் இருக்கின்றன.

### வடக்குப்பிரகாரம்.

இதில் வைரவக்கடவுளுக்குமட்டும் ஓர் சிற்ருலம் இருக்கிறது.

### கிழக்குப்பிரகாரம்.

இப்பிரகாரத்தில் வடக்கிழக்கு மூலையில் யாக மண்டபம் எடுக்கப்பட்டிருக்கிறது. இம்மண்டபத்தின் கற்றூண்களில் விநாயகர் உருவமும் நயினுத்தை முதலியார் எனும் சிவநேசச்

செல்வரின் திருவுருவமும் சித்தரிக்கப்பெற்றிருக்கின்றன. இம்மண்டபத்திலேயே மற்ருேர் பகுதியில், 'மல்லிக்கார்ச்சுன ஈச்சுரர்' இலிங்காகாரமாய் ஆவுடையாருடனும், நந்தியுடனும் கோயில்கொண்டிருக்கின்றனர். மற்றும் சிற்றறைகள் நான்கும், கிழக்குத்திருநிலை யொட்டிக் கட்டப்பட்டிருக்கின்றன.

## நந்திகூபம்.

கிழக்குப்பிரகாரத்தின் நடுவிலும், நாற்கால் நந்தி மண்டபத்திற்குச் சிறிது வடக்கில் செங்கற்களால் பேருருவமாகச் சித்தரிக்கப்பெற்ற நந்தி உருவத்தின் நடு மார்பில், இறங்குவதற்குச் சிறுவாயில் வைத்து இருபத்தாறு கற்படிகள் வெட்டப்பெற்ற "நந்திகூபம்" என்ற பெயரில் ஓர் இறங்குகிணர் தோண்டப்பெற்றிருக்கிறது. இதனைப் பிரம்மதீர்த்தம் என்கின்றனர். இத்தீர்த்தம் சுவாமிக்குத் திருமஞ்சனம் ஆட்டுவதற்கும், திருமேனியை முழுக்காட்டுவதற்கும் உபயோகப்படுகிறது.

இத்தீர்த்தக்கிணற்றை வெட்டுவித்த செல்வர் பெயர் இன்னதென அறியுமாறில்லை. ஆயின், இக்கிணற்றுக்கு மேற்கவசமாகவிருக்கும் செங்கல் நந்தியுருவத்திற்குச் சிறந்த சுண்ணச் சாந்தைக்கொண்டு சீராக மெழுகுவித்து அழகாக விளங்கும்படி செய்யப்பெற்றிருக்கிறது.

இவ்வளவே, ஸ்ரீ கயிலாயநாதர் கோயிலைப்பற்றிச் சுருக்கமாகக் கூறத்தக்கன.

## ஸ்ரீ கயிலாயநாதர் ஆலயத்திலுள்ள வெள்ளிவாகனங்களின் விவரம்.

1. வெள்ளி இடபவாகனம்:- இது வேளாஞ் செட்டி திரு. வேங்கடாசலம் செட்டியார் அவர்களால் உபயம்.

2. பிரதோஷ இடபவாகனம்:- திருச்செங்கோடு, செங்குந்த மரபினரும், நூல் வர்த்தகருமாகிய V. V. C. இராமலிங்க முதலியார் அவர்களால் உபயம். 3. யானை வாகனம்:- திரு. நமச்சிவாய முதலியார் அவர்களால் உபயம். 4. குதிரைவாகனம்:- ஜமீன்தாரணி ஸ்ரீமதி நல்லாயம்மாள் உபயம். 5. அன்ன வாகனம்:- எண்ணெய் வாணிய மரபினர் உபயம். 6. மூஷிக வாகனம்:- ஸ்ரீ அப்பண்ணக் குருக்கள் மனைவி ஸ்ரீமதி அம்மாப்பெண் அம்மாள் உபயம். 7. மயில்வாகனம்:- கஸ்பா திரு. தம்பாஞ் செட்டியார் அவர்கள் உபயம். 8. கருடவாகனம்:- பலசரக்கு மளிகை திரு. ஆ. கு. இலட்சுமணஞ் செட்டியார் அவர்கள் உபயம்.

## மரவாகன வகைகள்.

1. ஸ்ரீ கயிலாய வாகனம். 2. பூதவாகனம். 3. சிங்கவாகனம். 4. குதிரை வாகனம். 5. ஆட்டுக்கடாவாகனம். 6. சேஷவாகனம், (சேஷம்=பாம்பு.) 7. பல்லக்கு. 8. விமானம்.

## பொன், வெள்ளி, வைரம், கெம்புக்கல் ஆபரணங்கள்.

(1) கற்கள் இழைத்த மாங்காய் மாலை 1. (2) தங்கம் அல்லது பொற்காசுமாலை 1. (3) தங்கக்காசுமாலை 1. (4) கற்கள் இழைத்த மார்பணிபதக்கமாலை 1. (5) சொர்ணக்கிரீடங்கள் 3. (6) மகரக்குழைக்காதணிகள் (7) தங்க ஒட்டியாணம் 1. (8) கற்கள் இழைத்த தங்கவேல் 1. (9) வெள்ளிச் சேவற்கொடி 1. (10) தங்கமுலாமிட்ட கவாய்கள் 2. (சுப்பிரமணியருக்கும், ஸ்ரீ அர்த்தநாரீச் சுரருக்கும் தனித்தனி.) இன்னும் பற்பல ஆபரணங்களும் இருக்கின்றன.

## திருமடங்கள் அல்லது சத்திரங்கள்.

"கோதையூர்" என்னும் திருச்செங்கோட்டுத் திருத் தலத்தில் பல மரபினர்களுக்கும் தனித்தனியாக மடங் கள் கட்டப்பெற்றிருக்கின்றன. அவைகளில் பெரும் பான்மை அவ்வவ்மரபினர்களே தங்கியிருப்பர். யாத்திரை வாசிகளாகவும், சுவாமி தரிசனம் செய்ய வருகின்றவர்க ளாயுமுள்ளவர்களுக்கு இடமும், வேண்டுவனவும் உதவு வதற்கு ஒவ்வோர் மடத்திலும் பண்டாரங்கள் தத்தம் குடும் பங்களுடன் குடியிருந்து வருகிறார்கள். இவர்களே அம் மடங்களைக் கண்காணித்துக் காரியம் பார்த்து வருபவர்கள். இத்தலத்தில், கோயில்களுக்கு ஏற்படுத்தியுள்ள மாலை, சந் தனம், தீபம் முதலியவைகளை இவர்களே கவனித்துக்கொள் ளுவார்கள். இவையன்றி, தேவத்தானத்து நித்திய கட்டளை களான மாலை, சந்தனம் முதலியவைகளும், கோபுரவாயில், அறுபதாம்படி, வரடிகல் முதலிய இடங்களுக்குத் தீபங்கள் ஏற்றுவதும் இவர்களுடையனவே. இக்காரியங்களுக்கு இவர்களுக்கு தேவஸ்தானத்தில் சம்பளம் உண்டு.

இவர்கள், இலிங்கந்தரிக்கும் வீரசைவர்கள். ஸ்ரீ பச்சைக் கந்தை உடையார், கேதார உடையார் ஆதீனங்களைச் சேர்ந் தவர்கள். கும்பகோணம், சிவப்பிரகாச சுவாமிகள் ஆதீன மும் இவர்களுக்குரியதே.

### மடங்களின் பெயர்கள்.

1. கொங்கு வேளாளக்கவுண்டர்கள் மடம் (பெரியவகை) (சின்னவகை.) 2. மோரூர் கண்ணர்குல வேளாளர் மடம் 3. இராசிபுரம் வேளிய குலத்தார் மடம். 4. செட்டிகள், 5. எண்ணெய் வாணியர், 6. ரெட்டியார்கள், 7. வேட்டு

வர்கள், **8.** புள்ளியர் மடங்கள், (*அதாவது படையாச்சிகள்.*) **9.** புலவர் ஜாதியர் மடம். **10.** சான்றார் மடம் (*மரம் மேறும் குலத்தார்*) **11.** வண்ணார் மடம். **12** நாவிதர் மடம். **13.** குலாலர் (*குயவர்*) மடம். **14.** கைக்கோள்வர் மடம். **15.** கணக்கர் (*ஸ்ரீ கருணீகர்*) மடம். **16.** ஜோகியர் (பண்டாரங்கள் மடம்.) **17.** தேவேந்திரப்பள்ளர் மடம்.

## ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் வைகாசிப் பெருந்திருவிழாவும்—ஊர்வலம் மண்டபக்கட்டளை முதலிய விவரங்களும்.

*பிரம்மோற்சவத்திற்கு முதல் நாள் இரவு முறைப்படி* கிரமசாந்தியும், *பெருவிழா முதல்நாள் அதாவது அப்பொழுது ஏற்படும்* வாரம், நாள், திதி, நக்ஷத்திரம் கூடும் சுபதினத்தில் *நன்னேரத்தில் காலை வேலையில்* கொடியேற்றும் தொடக்கவிழாவும், அம்முதல் நாள் *வட்டூர்க் கவுண்டர்கள், குப்பண்ணப்பரதேசி குகை மண்டபக்கட்டளையும், பிராமண மண்டபக்கட்டளையும்,* இரண்டாம்நாள் *கோபுர* வாயில் *நெய்க்காரப்பட்டி* கைலாசம்பாளையம் கவுண்டர் *மண்டபக் கட்டளையும், நகரத்துச் செட்டியார்கள் மண்டபக்கட்டளையும்;* மூன்றாம் நாள்:— *உச்சிகால மண்டபம் சீர்* கருணீகர் திரு. *அம்பலவேல் பிள்ளை வகையரு கட்டளை,* இரவு *வெள்ளாளஞ் செட்டிமார்கள் மண்டபக்கட்டளை.*

நான்காம் நாள்:— *இவ்விழாநாள் மலைமீது கோயில் கொண்டிருக்கும்* ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாளுக்குக் கோடியேற்றம் *எனினும், அர்த்தநாரீச்சுரருக்கு புருஷ சக்தியும், பரிவாரதேவதையுமானதால், முதல் மூன்று விழாக்களிலும்* சுவாமி *புறப்படும்பொழுதெல்லாம் ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாளும் அலங்காரத்துடனே புறப்பட்டு உடன்* வருகின்

றனர். ஸ்ரீ செங்கோட்டுவேலவர் உற்சவர் கீழ்க்கோயிலில் எழுந்தருளியிருக்கின்றனர். யாகசாலையும் ஸ்ரீ கயிலாயநாதர் கோயிலிலேயே இருக்கிறது. நான்காம்நாள் காலையில் நன் மூர்த்தவேளையில் சுவாமி மலையைவிட்டு இறங்கத்தொடங்கி வரிசையாக முறையுடன் முதலில் இராசிபுரம் கவுண்டர்கள் கோபுரவாசல் மண்டபக்கட்டளை, இளப்பாத்தி மண்டபக் கட்டளை, செட்டியாக்கவுண்டர் வகையரு மண்டபம், வழிநடை மண்டபக் கட்டளைகள், சான்றூர் மண்டபக் கட்டளை ஆகிய மண்டபக்கட்டளைகளையெல்லாம் முடித்துக் கொண்டு மாலை 6-மணிக்கு மேல் திருமுடியாக்கவுண்டர் வகையரு மண்டபத்திற்கு வந்து சேருவர். அப்பொழுது அங்கு அன்பர்களெல்லாம் திரண்டுவந்து சுவாமியை தரிசித்து ஊருக்கு எழுந்தருளுமாறு அழைப்பார்கள். அதன்பின் ஸ்ரீ காளத்தி சுவாமிகள் திருமடத்தில் மண்டபக்கட்டளை. இதனை, கீழ்வானி செங்குந்தர் திரு. செங்கோட முதலியார் செய்கின்றனர். செங்குந்தர் முதல் மண்டபக்கட்டளை. இங்கு பானகம் மக்களுக்கு வழங்கப்படுகிறது. ஜங்கம பண்டாரம் ருத்திராக்ஷமண்டப தீபாராதனை, இம்மண்டபத்திற்கு மூத்தபிள்ளையாகிய விநாய கரும், இளையவராகிய சுப்பிரமணியரும், சண்டிகேசருடன் கூடி கோயிலினின்றும் பக்தகோடிகள் திரண்டுவர வாத்திய கோஷங்கள் முழங்கவந்து, பலநாள் தங்களைவிட்டுப் பிரிந் திருக்கும் தாய் தந்தையர்களைக் காண்பதற்கு வந்தவர்களைப் போலவந்து காண்பார்கள். இம்மூவரும் இங்ஙனம் நம் பெருமானைக்கண்டுகளிக்கும் காட்சியை, பதினாயிரக் கணக் கான அன்பர் குழாங்களும் கண்களிப்பக்கண்டு ஆனந்தம் பொங்க நிற்பர். அதன் பின், செல்லகுலத்தாருடைய

நாற்கால் மண்டபத்துக்குச் சுவாமி எழுந்தருளி வருவதும், மூன்றுபிள்ளைகளும், சுவாமியை வலம்வந்து எதிரேநிற்பார்கள். தம்மைப்பிரிந்து நெருங்கிய பிள்ளைகளைக்கண்டு மகிழ்தல் போல சுவாமியிடமிருந்து புது ஆடை, புஷ்பமாலை முதலி யன வழங்குவர். அவற்றை அவர்களுக்கு அணிவிப்பர். தீபாராதனை முடித்து இரவு 10-மணிக்கு விமானக்காக்ஷி நடைபெறும். இரவு 3-மணிக்கு கனம் மைசூர் மகாராஜா அவர்களுடைய மண்டபக்கட்டளை. வெள்ளி இடப வாகனம், வெள்ளி மயில் வாசனம், வெள்ளி கருட வாகனம், வெள்ளி மூஷிக வாகனம், வெள்ளி சின்ன இடப வாகனம், இவை களில், ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர், விநாயகர், சுப்பிரமணியர், சண் டீச்சுரர், ஆதிகேசவப் பெருமாள் ஆகிய கடவுளர்கள் எழுந்தருளி ஸ்ரீ முத்துக்குருக்களால் போடப்பட்டுள்ள கோபுர வாசல் கொட்டகையில் நைவேத்தியம், தீபாராதனை கள் நடாத்தி, ஸ்ரீ கயிலாய நாதர், கோவிலுள் எழுந்தருளு வர். அரைக்கட்டளை தீபாராதனை நடைபெறும்.

ஐந்தாம் நாள்:– காலை விழா மிரவணை, விட்டம்பாளையம் ஜமீன்தார் நடாத்தும் மௌளசியர் மண்டபக் கட்டளை. இரவு பூதவாகனம், சேம்மறிக்கடா வாகனம், அநுமார் வாகனம், முஷிக வாகனம் அரைக்கட்டளை. கைலாய நாதர் கோவில் மேற்குச்சந்நிதியிலுள்ள எழு மாத்தூர் பனங்காட குலத்தார் வகையரு மண்டபக்கட்டளை.

ஆறும் நாள்:– காலை விழா மிரவணை கிரிபிரதட்சணம். சாலிவாகனர்கள் மண்டபக் கட்டளை. சாலப்பாளையம் மாப் பிள்ளைக் கவுண்டருடைய மண்டபக்கட்டளை. மலையடிக் குட்டை நகரத்துச் செட்டிமார்கள் மண்டபக்கட்டளை.

கரட்டுப்பாளையமண்டபம் நாககிரி பண்டிதருடைய கட்டளை. வன்னியகுலக்ஷத்திரியர்களுடைய மண்டபக்கட்டளை. தெலுங்குச் செட்டிமார்கள் மண்டபக்கட்டளை. தேரோடும் திருவீதியில் ஈசானிய மூலையிலிருக்கும் திருமண்டபத்தில் செங்குந்த முதலிமார்கள் திருவிழாக்கட்டளையும், திரு. நமசிவாய முதலியார் அவர்களால் உபயமாகச்செய்து வைக்கப்பெற்ற ஐராவதம் என்கிற வெள்ளியானைவாகனம், ஆட்டுக்கடா வாகனம், புலிவாகனம், முதலிய வாகனக்கட்டளையும், திருஞான சம்பந்தப்பிள்ளையாருக்குத் திருமுலைப்பாலருளும் திருச்சடங்கும் அரைக்கட்டளை தீபாராதனையும்.

ஏழாம் நாள்:— கருச்சிபாளையம் செங்குந்தர் புள்ளிக்காரரால் செய்யப்பெற்ற பல்லக்கில் காலை விழா பிரவணை. குமரமங்கலம் ஜமீன்தார் மண்டபக்கட்டளை. வெள்ளிக் குதிரைவாகன பிரவணை. தொண்டைமண்டல முதலிமார்கள் கனகசபை மண்டபக்கட்டளை. விஸ்வகர்ம மரபினர் பழக்கடை மண்டபக்கட்டளை. வெள்ளாஞ் செட்டிமார் மண்டபக் கட்டளை. அர்த்தநாரீச்சுரருக்கும், ஆதிகேசவருக்கும், சிங்கவாகனங்கள். சுப்பிரமணிய சுவாமிக்கு வெள்ளி இடப வாகனம். அரைக்கட்டளை தீபாராதனைகள்.

எட்டாம் நாள்:— காலைவிழா, சுவாமி அக்கிரகாரம் வழியாகக் கூறை கூட்டத்தாருடைய பெரிய தெப்பக்குள மண்டபக்கட்டளை. விஸ்வகர்மர்களுடைய நந்தவனச் சாவடி மண்டபக்கட்டளை. வேட்டுவக்கவுண்டர்கள் மண்டபக்கட்டளை. கவரையர்கள் மண்டபக்கட்டளை. கயிலாய வாகனம், ஜங்கம பண்டாரங்களால் கலியாண உற்சவம்.

ஒன்பதாம் நாள்:— காலை, இரதோற்சவ விளக்கப் பத்திரிகையில் குறித்த சுபகால வேளையில் பஞ்சமூர்த்தங்களும் இரதாரோகணம் செய்தல். ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாளுக்குத் திருக்கலியாண உற்சவம்.

பத்தாம் நாள்:— ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் திருத்தேர்க்கு எழுந்தருளுதல். செல்லக்கூட்டத்தார் தேரடிமண்டபக் கட்டளை. வேடுபரி. இரவு குதிரை வாகனம்.

பதினோராம் நாள்:— எண்ணெய் வாணியர் மண்டபக் கட்டளை. அன்ன வாகனம்.

பன்னிரண்டாம் நாள்:— தரிசனம். கணக்குப்பிள்ளை அவர்கள் மண்டபம், கொல்லர் மூத்துநாயகர் மண்டபக் கட்டளைகள். இரக்ஷாபந்தன விசர்ச்சன துவஜா அவரோகணம், ஊசல், சேஷவாகனம்.

பதின்மூன்றாம் நாள்:— நெய்க்காரப்பட்டி மண்டபக் கட்டளை. எம். இராஜாக் கவுண்டர் மண்டபக்கட்டளை. சர்க்கார் நந்தவனச்சாவடி மண்டபக்கட்டளை. பாண வேடிக்கை. தெப்போற்சவமும், வசந்தோற்சவமும்.

பதினான்காம் நாள்:- திருவிழா முடிந்து சுவாமி திருமலைக்கு எழுந்தருள்வதற்கு அடிவாரம் செல்லுதல். பக்தகோடிகள் பெருந்திரளாகப் பின்தொடர நடந்து, ஜங்கமர் மண்டபத்திற்கு வந்தவுடன் யானைமுகர், மயில் வாகனர், சண்டீச்சுரர் ஆகிய மூவரும், அர்த்தநாரீச்சுரரை வலம்வந்து எதிரே நிற்பார்கள். அப்பொழுது தாய் தந்தையர்களைப் பிரிதல் காரணமாகச் சுவாமியிடமிருந்து வஸ்திரம், மாலை முதலியன

வருவதை அவர்கள் பணிவாக ஏற்கின்றனர். அப்பொழுது பக்த கோடிகள் வாய்விட்டு 'அரகரமகாதேவா!' என்று கூறும் சிவநாம முழக்கமும், கரகோஷமும் வானைப்பிளந்து விண்ணுலகம் எட்டுவது போலிருக்கிறது. அதனுடன் சுவாமி பிரிந்து செல்கின்றாரென்று, ஆண், பெண் அடங்கலாகக்கூடியுள்ள பதினாயிரம் பேர்களும் மனம் வருந்துகின்றனர். சுவாமி, சர்ப்பகிரியிலிருந்து இறங்கிவரும்பொழுதும், திரும்பி ஏறிச்செல்லுங்காலத்தும் பக்தகோடிகள் மனத்தை "அம்மையப்பர்" இழுத்துக்கொண்டு செல்கின்றனர். இந்த இரண்டு சமயங்களும் ஆண்டவன்பால் மெய்யன்புள்ள அன்பர்கள் அவசியம் காண்பதற்குரியன. பிறகு விநாயகர், சுப்பிரமணியர், சண்டேச்சுரர் ஆகிய மூவர்களும், பக்த ஜனங்களும் மனஞ்சோர்ந்து வாடிய முகத்துடன் திரும்புகின்றனர். விழாவும் பூர்த்தி பெறுகின்றது.

## திருச்செங்கோட்டுச் செங்குந்தர்கள், தெய்வசம்பந்தமாகச் செய்துவரும் திருப்பணிச்செயல்கள்:—

சிவபுண்ணிய சீலமிக்க செங்குந்தர்கள், ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் பிரம்மோற்சவ காலத்தில் நான்காவது, ஆறாவது விழா நாட்களில், செங்குந்தர்கட்குரிய அடிவாரத்து முதல் மண்டபத்திலும், நடுமலை நவவீரர் மண்டபத்திலும், தேரோடும் திருவீதியின் வடக்கீழ்ப்பாலுள்ள மண்டபத்திலும் (இதனை நெல்லுக்குத்து மண்டபம் என்றும் வழங்குவர்.) செய்கின்ற மண்டபக்கட்டளைகள் முதலியனவேயன்றி, ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர், ஸ்ரீ கயிலாய நாதர், பரிமளவல்லித் தேவியார், ஸ்ரீ செங்கோட்டு வேலவர், ஆறுமுக சுவாமி முதலிய தேவர்களுக்கு விழாக்காலங்களில் திருக்கோடி ஆடை

அளிக்கும் திருப்பணியையும், ஸ்ரீ கயிலாயநாதர் ஆலயத்தில் நடந்துவரும் பிரதோஷத்தன்று காப்பரிசி வழங்கும் கட்டளையைச்செங்குந்தர்களும்; உமாமகேச்சுரரை அன்று, திரு. வ. வே. கா. இராமலிங்க முதலியார் அவர்களால் உபயமாகச் செய்து வைக்கப்பெற்ற பிரதோஷ சிறிய வேள்ளி வாகனத்தின்மீது எழுந்தருள்விக்கும் வாகனக் கட்டளையைக் கிரமமாகவும் பக்திசிரத்தையுடனும் V. V. C. R. M. அவர்கள் குடும்பத்தினர்களாலும் செய்யப்பெற்றுவருகிறது.

## சாவார் கற்சிலைகளும்—செங்குந்தர் வழிபாடும்.

"சாவான்கள்" என்பதைவிட "சாவார்" என்று கூறுவதே சரியான பொருள். இச்சாவார், "வேளைக்காரர்" என்ற பெயரில் அரசர் சமஸ்தானங்களில் மெய்க்காப்பாளராய் அரசர் அருகிலேயே உடைவாளை ஏந்தியபடி நின்று காவல்புரியும் வீரர்களாய் விளங்கியிருந்தனர். மற்றும், "வேளைக்காரர்" என்னும் சொல்லுக்கு, இராசத்துரோகம் செய்தவரை நலியும் சேவகர்கள் என்று ஸ்ரீ வசனபூஷண வியாக்கியானம் கூறுகிறது.

இங்ஙனம் இவர்கள் வேளைக்காரர்களாய் அமர்ந்திருந்தது பண்டைக்காலத்தில் மாத்திரமன்று. இன்றைக்கு நூறு ஆண்டுகள் வரையிலும் மலைநாட்டில் அமர்ந்திருந்தனர். வீரமிகுந்த இவ்வேளைக்காரர்களின் ஞாபகார்த்தக் கற்சிலைகளை நமது கொங்குநாட்டில் "சாவான்கள்" என்று கூறுகின்றனர். அதிலும் சேலம் ஜில்லா திருச்செங்கோடு முதலான இடங்களில் இப்பெயர்களே செங்குந்தர்களில் மிகுதியாகக் பயிலப்படுகிறது.

சாவார் என்பவர்களுடைய கற்சிலைகளின் உண்மைப் பொருள் யாதெனில்,

என்றும் இறவாதார் என்று பொருள்தரும் சாவார் என்பவர்கள், "கோற்றவை, காடுகிழாள்" என்று வஞ்சினமிக்குடைய மறவரால் தொழப்படும் வனதுர்க்கையின் கோயில் முன் நின்று 'அஃமே! நமது அரசனுக்கு வெற்றியைத் தருவாயாக. அரசன் வெற்றிபெறின், யான் என் அங்கங்களை வெட்டிக் குருதிப்பலி நினக்கிடுவேன்' என்றும்; 'என் தலையை வெட்டி உயிர்ப்பலியிடுவேன்' என்றும் வேண்டிக் கொள்வர். இங்ஙனம் இவர்கள் செய்யும் பிரதிக்கினையைத் தமிழில் "வஞ்சினம்" என்பர். இக்கருத்துடன் சாவார்கள், சத்தியின் அமிசமாகிய, காளி, மாரி, மகமாயி, அங்காளம்மை முதலிய துர்க்கையின் முன்னிலையில் ஒருவர் அல்லது இருவர் வீரர்கள் தம் முடியை ஒரு கையாற்பற்றி மற்றொரு கையால் தமது ஊட்டியை அறுப்பதற்குக் கழுத்தில் கத்திவைத்திருப்பதாகச் சிற்பி சித்திரித்திருப்பதைக் காணலாம். இவ் வஞ்சினம் அறியாத சில ஆங்கிலர்களும், இந்தியர்களும், தமிழ்ப் பண்டிதர்களும் இச்சிற்பங்களில் காணும் வீரர்கள் தம் தலைமுடியை அறுத்துத் தேவிக்கு அற்பிக்கிறார்களென்று எண்ணிவிட்டார்கள்.

இங்ஙனம் வஞ்சினமொழியும் கருத்துடைய கல்லுருவச் சிற்பங்களே காளி முதலிய கோயில்களின் திருவாயில்களின் முன்னரும், கோட்டைவாயில்களிலும், மலைகளின் தாழ்வரைப் படிகளின் அருகினும், ஊரின் எல்லைகளிலுமே நின்று விளங்குவனவாம்.

இது, தோல்காப்பியப் பொருளதிகாரத்தில் உரையாசிரியர்:— "இன்னது பிழைப்பின் இதுவாகியரென இத்தன்

மைய தொன்றினைச் செய்தல் ஆற்றேனாயின், இன்னவாறு ஆகக்கடவேன்'' எனக்கூறிய வஞ்சினக்காஞ்சியானும், 'அது தான் செய்யக்கருதியது பொய்த்துத் தனக்கு வருங் குற்றத்தால் உயிர் முதலியன துறப்பேன் என்றல்' என்று விளக்கியிருப்பதாலும் தெளிவாம்.

வேளைக்காரர் அல்லது சாவார் என்பவர்கள் இராஜ பக்தி நிரம்பியவர்கள். அரசர்க்குக் கேடுநேர்ந்த காலத்துத் தாம் அரசரோடு இறத்தற்கு ஒருப்பட்டவர்கள் என்பது தெளிவாம்.

நமது தென்னாட்டில் பலமுள்ளவர்களும், பராக்கிரம சாலிகளுமான சில ஜாதியார், போரில் விருப்பமிக்கவர்கள். அவர்களுள், செங்குந்த மரபினரும் ஒருவர். இவர்கள், உயிரில் ஒரு சிறிதும் அபிமானம் கொள்ளாதவர் என்பது ஈட்டியெழுபது என்னும் பிரபந்தத்திற்கு ஆயிரந்தலைகள் அறுத்து ஒட்டக்கூத்தரிடம் சமர்ப்பித்ததால் தெளியப்படும்.

அடிவாரத்துள்ள செங்குந்தர் முதல் மண்டபத்துக்கு அருகிலுள்ள சிறிய கல் மண்டபத்தில் இருக்கும் மலையடிச் சாவார் சிலை. மற்றொன்று, சேலம் செல்லும் பொதுஜன கப்பி ரோட்டுக்கு மேற்கில் செங்குந்தர் பாவு தோய்கின்ற இடத்திலுள்ள பாவடிச் சாவார் சிலை. பின்னொன்று, நகர நடுவிலிருக்கும் மாரியம்மன் கோவிலுக்கு வடபுறமிருக்கும் முத்துக்குமார சுவாமி கோவிலிலுள்ள சாவார் சிலை. ஆக மூன்று. எழுகரை நாடாகிய இத்திருச்செங்கோட்டுக்கு மோரூர் காணியானதால், மோரூர் நல்லபுள்ளியம்மன் கோயிலிலும் ஓர் சாவார் கல்வெட்டிருக்கிறது. ஆண்டுதோறும் நிகழும் வைகாசி மாதத்துப் பிர்ம்மோற்சவத்திற்கும், புரட்

டாசி மாதத்திய மாளய அமாவாசைக்கும்வரும் செங்குந்தர்கள், அச்சாவார்கள் கற்சிலைகளைக்கண்டு கொண்டாடிப் புகழ்ந்து பேசுகின்றனர். (மாளயம்—புரட்டாசி மாதத்திற் பண்ணும் பொது சிரார்த்தம்.) மகாநாட்டில் முத்துக்குமார சுவாமிக்கு உற்சவம் நிகழும் காலத்தில் மேற்காட்டிய சாவார்களுக்குச் செங்குந்தர்கள், படைக்கலன்களுடனும், மேளதாளங்களுடனும் சென்று பூசிக்கின்றார்கள்.

சீர்பாதம் தாங்கும் சேவடி உரிமை, சுமார் எண்பது ஆண்டுகளுக்குமுன் திருச்செங்கோடு தர்மகர்த்தர்களுக்கும், பாவடிச் செங்குந்தர்களுக்கும் ஏற்பட்ட மனத்தாபங் காரணமாக தவறிவிட்டது. தற்காலம் அவ்வுரிமையை வீரசங்கமர், வன்னியர், கங்கை குலத்தார்கள் ஆகிய மூவகைக்குலத்தினர் கைக்கொண்டிருக்கின்றனர்.

## கேதார கௌரி விரதம்.

இது ஆண்டுதோறும் வரும் புரட்டாசி மாதத்தில் மாளய அமாவாசைக்கு முன் இருபத்தியொருநாளும் இந்நோன்பு திருச்செங்கோட்டுத் திருத்தலத்துத் திருமலைமீது பக்தி சிரத்தையுடன் சிவாலயத்தில் கொண்டாடப்பெற்று வருகிறது. "கேதாரேச்சுர விரதம்" என்பது மிகவும் புனிதமானது. ஸ்ரீ பார்வதி தேவியார் இவ்விரதத்தை இருபத்தோராயிரம் ஆண்டுகள் செய்து சிவபிரான் இடப்பாகந்தரப் பெற்றனர். இவ்விரதவரலாறு ஸ்காந்தம், விரத கற்பங்கள், ஆகமங்கள் முதலியவற்றுள் விரித்துக்கூறப்பட்டிருக்கின்றன. இவ்வரிய விரதத்தை விதிப்படி நோற்று விரும்பிய பயன்களைப்பெற்று இகலோகத்தில் இன்புற்று இறுதியில் சிவலோகப்பதவியையும் பெற்ற பெரியோர்கள்

மிகப்பலர். விரதம் என்பது ஆகமாதிகள் விதித்தவாறு உணவைவெறுத்து உடலை வறுத்திச்சிவலோகநாதனை நேசித்துப்பூசித்தலாகும். ஸ்ரீ பார்வதி தேவியார் கௌரிவிரதத்திற்கு நாள் ஒன்றுக்கு ஒருவகைப் பட்சணமாக இருபத்தியொரு நாட்களுக்கும் இருபத்தியொருவகை பட்சணங்கள் செய்து ஆகமவிதிப்படி அர்ச்சகர் பூசித்துவருவர். இவ்விரத விழாவுக்கு ஏற்படும் பொருட்செலவை. திருச்செங்கோடு பலசரக்கு மளிகை, திருவாளர் ஆ. கு. இட்சுமணஞ் செட்டியார் ஏற்றுக்கொண்டு சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாக நடாத்தி வருகின்றனர். இருபத்தியோராம் நாள் மாளய அமாவாசையன்று பகலில் அம்பாளுக்கு இறைவர் காட்சியளித்து இடபாகம் தந்ததை, யாவரும் கண்டுகளிக்கும் பொருட்டு மலைமீது வெளிப்பிரகாரத்தில் வெள்ளிச் சப்பிரத்தில் சுவாமி எழுந்தருளி வலம் வருகின்றனர்.

## திருச்செங்கோடு சைவ சமயாசாரிகள் திருக்கூட்டந்தார் முன்னின்று நடாத்திவரும் நால்வர் குருபூசை விவரம்.

(1) சித்திரை மாதம் 27-ம் தேதி சதயநட்சத்திரத்தில் வரும் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூசை திருச்செங்கோடு சைவசமயாசாரியர்கள் திருக்கூட்டத்தாராலும்;

(2) வைகாசி மாதம் 18-ஆம் தேதி மூலநட்சத்திரத்தில் வரும் ஸ்ரீ ஞானசம்பந்த பிள்ளையார் குருபூசை திரு. சி. வ. கந்தப்ப முதலியார் அவர்களாலும்; (இக்குருபூசைத் தொடக்கம் 1920 ஆம் ஆண்டு.)

(3) ஆனி மாதம் 5-ஆம் தேதி மக நட்சத்திரத்தில் வரும் ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூசை உஞ்சனைக் கவுண்டம் பாளையம் திரு. க. செங்கோட முதலியார் அவர்களாலும்,

(சென்ற நான்காண்டுகளாக மேற்படி திருக்கூட்டத்தாரிடமிருந்து திருப்பணியைத்தாம் ஏற்றுசெய்து வருகிறார்.)

(4) ஆடி மாதம் 6-ஆம் தேதி சுவாதி நட்சத்திரத்தில் வரும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை. மேற்படி கூட்டத்தாராலும் நடாத்தப்பட்டு வருகின்றன.

## காமதேனு தீர்த்தம்.

இத்தீர்த்தம் இப்பொழுது "பாலூற்று" என்ற பெயரால் வழங்கப்படுகிறது. தெய்வப்பசுவாகிய காமதேனுவால் உண்டாக்கப்பெற்றதால் இப்பெயர் பெற்றது. இது பணிமலையின் மேற்குப்பக்கத்து மலைச்சரிவில் இருக்கிறது. அந்நன்னீர் பன்னீர் போலவும், பால் நிறத்துடனும் இருக்கிறது. பருகுவதற்கு விருப்பத்தையும், சுவையும் தருகிறது. ஆரோக்கியமுடையது. இதுபோன்ற சுவையுடைய உண்ணீர், இவ்வூரில் எவ்விடத்திலும் காண்பதற்கு அரிது. யூனியன் மேற்பார்வையில் நாற்புறமும் கைப்பிடிச் சுவர் கட்டி இரும்புக்கால்கள் நட்டு, இரும்புருளையிட்டு ஊரார் உண்ணுதற்குத் தாம்புக்கயிறு போட்டுச் சேந்திக்கொண்டு செல்லுவதற்கு வசதி செய்யப்பெற்றிருக்கிறது. இத்தீர்த்தத்தை அசுத்தம் செய்யாதிருப்பதற்குக் காவலும் போட்டிருக்கிறார்கள். மழை காலத்தில் நீர் அதிகமாகவிருக்கிறது.

## ஊர் அமைப்பும் — ஜனத்தொகையும்.

கொங்கேழ் சிவத்தலங்களின் நான்காவது எண்ணுடையதும், ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் திவ்ய திருவடிகள் தோயப்பெற்றதும், முருகன் அடியார்களில் சிறந்தாரும், அண்ணமலையைப் பிறப்பகமாகக் கொண்டவருமான

ஸ்ரீ அருணகிரிநாதர் அருமைத் திருப்புகழ்ப் பாடல்கள் பெற்றதும் "கோடிமாடச் செங்குன்றூர்" என்று பெயர் சிறந்ததுமான திருச்செங்கோடு, சிவனடியார்களுக்கும் யாத்திரைவாசிகளுக்கும் கண்டுகளிக்கத்தக்கதோர் புனிதப்பதி. ஸ்ரீ அர்த்தநாரீச்சுரரும், ஸ்ரீ செங்கோட்டு வேலவரும் கோயில்கொண்டு விளங்கும் "சர்ப்பகிரி" ஊருக்குப்பக்கத்தில் தென் கிழக்கில் இருக்கிறது. எத்திசையினின்று பார்த்தாலும் அம்மலையின் உயரமும், பருமனும் அதில் அழகே உருக்கொண்டமைந்து உயர்ந்த பெருங்கோபுரமும் காண்போரை அருகில் வாருங்கள்! அருகில் வாருங்கள்!! என்று அன்புடன் விரும்பி அழைப்பதுபோல் நீலநிற வானத்தில் கோலமாய் நிற்கின்றன. அவற்றை உற்றுநோக்குவார்க்கு ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலத்தின் நாகரீகத்தை அந்தரங்கமாய் அறிவிப்பதுபோலவும் தோன்றுகின்றது. அடிவாரத்தின் வடக்குப்பாகத்தில் விளங்கும் சிற்றூருக்குக் "கோதையூர்" என்று பெயர். இது ஸ்ரீ கயிலாயநாதர் ஆலயத்தை நடுவிற்கொண்டு அதனைச் சுற்றி நாற்புறமும் சதுர்வடிவில் அகல நீளங்களுடன் தேரோடும் நான்கு திருவீதிகளையும், இராசீபுரம், நாமக்கல், பரமத்தி, பாண்டமங்கலம், ஆனங்கூர், பள்ளிபாளையம், சங்ககிரி, இடைப்பாடி, இராமாபுரம், சேலம் கோழிக்கால்நத்தம் முதலிய ஊர்களுக்குப்பிரிந்து செல்லும் பொதுஜன நடைவழிகளையும்; ஸ்ரீ அர்த்தநாரீச்சுரரும், ஸ்ரீ செங்கோட்டு வேலவரும், ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாளும் விழாக்கொண்டருளும் திருத்தேர் நிலையையும் தன்னுட்கொண்டு விளங்கும் பெருமையுடையது. மற்றும், ஊரின் பகுதிகளில் மூசாபரிபங்களாவும், ஆஸ்பத்திரியும், லோகல் பண்டு சத்திரமும்,

தாலூகா விவசாய ஆபீசும், பஞ்சாயத்துக் கோர்ட்டும், கடைத்தெருக்களும், காப்பிகிளப்புகளும், சாப்பாடு விடுதிகளும், சப் ரிஜிஸ்தர் ஆபீசும், நெல்லறைக்கும் இயந்திர சாலைகளும், பஞ்சறைக்கும் ஆலைகளும், **V. V. C. R.** வையாபுரி முதலியார் மானேஜ்மேண்டிலுள்ள புள்ளிக்கார நூல் மில்லும், ஜில்லா போர்டு உயர்தர பாடசாலையும்; மோட்டார் பஸ் ஸ்டாண்டும், ஊரார் நன்னீர் எடுக்கும் பெரிய தெப்பக்குளமும், மரக்கடை, மூங்கில், இரும்புக்கடைகளும், தங்கம், வெள்ளிவிற்கும் ஷராப் கடைகளும், பட்டு, நூல், ஜரிகை ஜவுளிக்கடைகளும், கூட்டுறவு கைத்தறி நெசவுச்சாலைகளும், அச்சாபீசுகளும், தனவணிகர் பண வரவு செய்யும் வட்டிக்கடைகளும், போர்டு பெண் பாடசாலையும், எலிமெண்டரி, எய்டெட்ஸ்கூல்களும், தாலூகா கஜானு கச்சேரியும், ஸ்டேஷனெரி சப்மாஜிஸ்திரேட் கோர்ட்டும், போலீஸ் ஸ்டேஷனும், கால்நடை வைத்திய சாலை, சிசு பரிபாலனசாலை, வாசகசாலைகள், தமிழ்ச்சங்கம், பஜனைக் கூடங்கள், ஊர்ப்பொது ஜனங்கள் குளிக்கும் மேற்குப்பெரிய தெப்பக்குளமும், வியாழக்கிழமை வாரச் சந்தையும், குறுக்கும், நெடுக்குமுள்ள சிறுபெருந் தெருக்களும், குறுகலான சந்துக்களும், பற்பலஜாதியார் நெருங்கி வசிக்கும் பன்னூறு வீடுகளும்; மழைக்காலத்தில் நீர் நிறைந்திருக்கும் பெரியதோர் ஏரியையும் உடையதாய் விளங்கும் சேலம் ஜில்லாவின் ஐந்தாம் தாலூகா. இதுவே, திருச்செங்கோடு தாலூகாவின் முக்கிய பட்டணமும் ஆம்.

மேலும், பழமையும், புதிதாயும் ஏற்பட்ட அழகு நாச்சியம்மன் கோயில், மாரியம்மன்கோயில், அங்காளம்மன் கோயில், முத்துக்குமாரசாமி கோயில்களும்; ஊருக்கு

வெளியில் பரிவேட்டைப் பொதுமண்டபங்களும், மலையைச் சுற்றி வலம்வருகிற ரோட்டுகளும், பிறவும் அமைந்து அழகு சிறப்பனவுமாம். இத்தகைய சிறப்புக்களுடைய இவ்வூரின் ஜனத்தோகை 1940-ஆம் ஆண்டில் சர்க்காரால் எடுக்கப் பட்ட ஜனகணிதப்படி மொத்தம் ஆண்—பெண்—சிசுக்கள் அடங்கலும் இருபதினாயிரம். இவற்றுள், நெசவுத்தொழில் செய்யும் கைக்கொள்வர் எனும் செங்குந்த மரபினர் ஜனத் தோகை மட்டும் மூவாயிரம். அவர்களுடைய நெசவுத்தறிகள் **1200** என்றும் கணக்குக் கூறப்படுகிறது. இவ்வூரில் பாவு தோய்கின்ற பாவடிகளில் மேற்கில் சூரியப் பாளையத்துக்குச் செல்லுகின்ற வழியிலுள்ள சிறியபாவடியைவிட, சேலம் செல்லுகின்ற வழியிலுள்ள கிழக்குப் பாவடியே மிகப்பெரியதும், அகலநீளமும் போதுமான வசதியும் உடையது. இத்திருச்செங்கோட்டில் பெருந்தொகையினர்களாக வசிக்கும்செங்குந்த மரபினர்களாலேயே சேலை, வேட்டிகள் நெய்யும் நெசவுத்தொழில் மிகுதியாக நடைபெறுகிறது. ஜங்கம பண்டாரம் என்னும் சாதியாரால் குருந்தக்கல்வேட்டி, ராவி, துளையிடும் தொழிலும் நடைபெறுகிறது.

பொதுவாக இவ்வூரை ஆரோக்கியமான சுகாதார ஸ்தலமென்றே கூறலாம். தற்கால ஆங்கில அரசாட்சியின் நவநாகரிகச் சின்னமான மின்சார விளக்குகள் ஊர் முழுமையும் போடப்பட்டிருக்கின்றன. இரண்டு சினிமாக் கொட்டகைகளும் இருக்கின்றன.

## வாழ்த்துச் செய்யுள்.

திருவாழ்க கலைவாழ்க கௌரிவாழ்க
தினந்தினமு மண்மடந்தை சிறந்துவாழ்க
குருவாழ்க பணிமலையுங் குகனும்வாழ்க
கோதையுமைபாகர் திருக்கோயில் வாழ்க
தருவாருமரசர் கருணிக்கர் வாழ்க
தானமுடன் குரவோருந் தழைத்து வாழ்க
மருவாருமகம் படிமைத் தலியினோரும்
வாய்த்தசெங் குந்தருமே வாழ்க! வாழ்க!

அவ்வை

சர்மா பங்களா